கழக வெளியீடு: அகூக

தென்னாட்டுப் பழங்கதைகள்

SOUTH INDIAN FOLK-LORE

[இரண்டாம் புத்தகம்]

திரு. சு. அ. இராமசாமிப்புலவர்
திருத்தியமைத்தது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. : : சென்னை-1.

First Edition: June, 1957.

THENNATTUP PAZHANG KATHAIGAL
Vol. II

Published by,

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 1200.

முன்னுரை

கலைகள் தோன்றிய காலத்திலேயே கதைகளுந் தோன்றத்தொடங்கின. கதைகள் இலக்கியங்களிலே தனியிடம் பெற்று விளங்குகின்றன. கதைகள் எதற்காகத் தோன்றின என்று ஆராயப் புகின், இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிவதற்காகவும், மக்கள் இனிமையாகப் பொழுது போக்குவதற்காக வும், நீதி நெறிகளை மக்களுக்கு எளிய முறையில் புகட்டுவதற்காகவும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். நன்னெறிகளை மக்களுக்குக் கற்பித்து அவர்களுக்கு அறிவும் ஊட்டுவதற்குக் கதைகள் சிறந்த கருவிகள். பழங்கால மக்கள் தம் பிள்ளைகளுக் குக் கதைகளைக் கூறியே அறிவுநலத்தையும் அற நெறி மாண்பையும் புகட்டினார்கள். கலைகள் மிகுதிப் படாத அல்லது நன்கு வளர்ச்சியடையாத அந் நாளில் இவைகளே கலைகளாகத் திகழ்ந்தன.

நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சியை அடிப்படை யாகக் கொண்டு இல்லாதன பலவுங் கூட்டி மிக வளர்த்து நம்பத்தகாதவாறு இட்டுக்கட்டுவதனா லேயே கதைகள் தோன்றுகின்றன. இந் நாளினுஞ் சிலர் சிறு நிகழ்ச்சிகள் பலவற்றைப் பெருங்கதைக ளாக விரித்தெழுதுதலைக் காண்கிறோம். இத்தகைய கதைகளில் உண்மை வரலாறு மிகுதியாக இடம் பெறின் வரலாற்றுக் கதைகள் என்று பெயர் பெறவுங் கூடும்.

கதைகள் இலக்கியங்களிலே இடம்பெற்று விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகப் புராண இலக்கியங்களில் கணக்குவழக்கின்றிப் புகுத்தப்பட்டிருக்குங் கதைகளைக் குறிப்பிடலாம். பல புராணங்கள் முற்றிலுமே கதைகளாக அமைந்தவை என்றும் பலர் கருதுகின்றனர்.

இலக்கியங்களிலோ அல்லது தனி நூலாகவோ இடம்பெருமல் பல கதைகள் வெகுகாலமாகவே செவிவழிச் செய்தியாக வழங்கி நின்றன. இன்றும் வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய ஐம்பதாண்டுகட்கு முன் இத்தகைய செவிவழிக் கதைகள் நூற்றுக் கணக்கில் வழங்கிக்கொண்டிருந்தன. அக் கதைகள் நாளடைவில் ஒவ்வொன்ருக மறைந்து கொண்டு வந்தன. காலஞ்சென்ற பண்டித நடேச சாத்திரியார் இந்த நாடோடிக் கதைகள் பலவற்றைத் தொகுத்து, திராவிடர் பூர்வகாலக் கதைகள், திராவிடர் மத்தியகாலக் கதைகள், தக்காணத்துப் பூர்வ கதைகள் என்னும் பெயர்களோடு புத்தக வடிவமாக வெளியிட்டார். மற்றும் கதாரத்நாவளி, கதாமஞ்சரி, கதாசிந்தாமணி, தெனுலிராமன் கதை என்னும் பெயர்களோடும் பல கதைகள் வெளிவந்தன. இப் புத்தகங்களில் வெளிவந்தனவும் வராதனவுமான பல கதைகள் முன்னர் வெளிவந்த சனவிநோதினி, விவேக சிந்தாமணி முதலிய சில திங்கள்வெளியீடுகளிலும் வெளிவந்தன. திங்கள்வெளியீடுகளில் வெளியான கதைகள் அக் காலத்திலேயே மறையத் தொடங்கி விட்டன. புத்தக வடிவமாக வெளிவந்த பல கதைகளுங்கூடக் காலப்போக்கில் மறைந்தொழியத்தக்க நிலையை எட்டிப் பிடித்துவிட்டன.

புதுமையை நாடுவதைவிடப் பழமையைப் போற்றுதல் பண்புடைமையாகும். இக் காலத்தில் எத்தனையோ கட்டுக்கதைகள் எத்தகைய கருத்துஞ் சுவையும் இல்லாமல் வெறுஞ் சொற்கோவைகளாக வெளிவந்து மக்களுடைய அரிய பொழுதையும் பொருளையும் வீணாக்குவதைப் பார்க்கிறோம். மக்கட்கு அறிவு ஒழுக்கம் முதலிய உறுதி பயக்கத்தக்க கதைகளைப் போற்றிப் பாதுகாத்தல் சிறிய கடமையாகும்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் பழமையைப் பாதுகாக்க வேண்டுமென்னும் சிறிய பண்பினர். அவர்கள் இந்தப் பழங்கதைகள் மறைந்தொழியவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்றும்; இவைகளை அந் நாளில் எழுதப் பட்ட உரைநடைப் போக்கைவிட்டுத் தற்காலத்திற் கேற்ற இனிய நடையில் காலப்போக்கிற்கேற்ப வேண்டிய அறநெறிகளைக் கூட்டி, வடசொற்களை நீக்கித் தனித்தமிழில் அழகிய முறையில் படிப்பவர்கட்குப் பொருள் நன்கு விளங்கும் வண்ணம் பத்திகள் பிரித்தும் தலைப்புக்கள் கொடுத்தும் எழுதி முடிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அவ்வாறே நானும் பழங்கதைகளை யெல்லாம் ஆராய்ந்து சிறிய முறையில் எழுதிமுடித்தேன். சில கதைகள் பலவகை மாற்றங்களோடும் வெவ்வேறு பெயர்களோடும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் ஒன்றின் முடிபை மற்றொன்று வேறுவகையாகக் கொண்டும் காணப் பட்டன. அவைகளில் சிறந்தவைகளை எடுத்துக் கொண்டு மற்றவைகளை ஒதுக்கிவிட்டேன். உரை

நடையில் மாற்றங்கள் செய்திருப்பதையன்றிக் கதைகளின் கருத்து முடிபு ஆகியவைகளில் எத்தகைய மாற்றமும் செய்யப்படவில்லை. உரைநடை நன்முறையில் அமைந்துள்ளது. வடசொற்களும் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களாக மாற்றி யமைக்கப்பட்டிருக்கின்றன. இக் கதைகள் கற்பவர்கட்குக் கழிபேருவகையை அளிக்கும் என்பது திண்ணம்.

பலவகையான பெயர்களைக் கொடுத்து மக்களை மருளச்செய்வதைவிட, ஒரே தன்மை வாய்ந்த இக் கதைகள் ஒரே பெயரைப் பெறுதல் தக்கதென முடிவுசெய்து, "தென்னாட்டுப் பழங்கதைகள்" என்னும் பெயரோடு முதற்புத்தகத்தை அண்மையில் வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து இப்பொழுது இரண்டாம் புத்தகம் வெளிவருகிறது. இவ் வரிசையில் மேலும் சில புத்தகங்கள் வெளிவரும். பழங்காலக் கதைகள் எல்லாவற்றையும் ஒருங்கே படிக்கவேண்டும் என்னும் பேரார்வம் உடையவர்கள் இவ் வரிசையில் வெளிவரும் நூல்களைப் பெற்றுப் படித்து மகிழலாம். இச் சிரிய முயற்சிக்கு அன்பர்கள் அனைவருடைய ஆதரவும் இன்றியமையாததாகலின், அன்பர்கள் அனைவரும் இப் புத்தகத்தையும் இனிவரும் புத்தகங்களையும் வாங்கி ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

சு. அ. இராமசாமிப்புலவர்.

உள்ளுறை

தென்னாட்டுப் பழங்கதைகள்

இரண்டாம் புத்தகம்

க. கஞ்சி வரதப்பா! எங்கு வரதப்பா ?

ஒரு பிச்சைக்காரன்

ஒருநாள் ஒரு பிச்சைக்காரன் காஞ்சிபுரத்தில் வீடு வீடாகப் பிச்சையின் பொருட்டு அலைந்தான். ஒரு வாய் உணவுகூட அகப்படவில்லை. அவனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. "இந்தப் பாழும் ஊரிலே இடி விழட்டும்" என்று தன் பசி பொறுக்கமுடியாமல் ஊரைச் சபித்தான். பிறகு விட்டுணு காஞ்சிக்குப்போய் ஒரு வைணவர் வீட்டுத் திண்ணையிலே படுத்துப் புரண்டுகொண்டிருந்தான். பசி மிகுதியால் அவனுக்கு உறக்கம் சிறிதும் வரவில்லை. வயிறு துடித்துக்கொண்டிருந்தது.

வழிபாடு

அப்பொழுது ஒரு வைணவர் கஞ்சி வரதராசப்பெருமாளை வழிபட்டுவிட்டு வீட்டிற்குப் போகும்போது பெருமாளை மனதில் எண்ணி, " கஞ்சி வரதப்பா " என்று வரதராசப்பெருமாளை வேண்டிக்கொண்டார்.

எங்கு வரதப்பா

வீட்டுத் திண்ணையிற் படுத்துப் பசியோடு புரண்டுகொண்டிருந்த பிச்சைக்காரன் 'கஞ்சி வரதப்பா' என்பதற்கு வேறு பொருள் செய்துகொண்டான். அஃதாவது அந்த வைணவர் 'கஞ்சிவருகிறது அப்பா' என்று சொன்னதாக எண்ணினன். உடனே எழுந்து வீட்டிற்கு வெளியில் வந்து, " எங்கு வரதப்பா ?" என்று கேட்டான். ஒரு

பத்தர் கை குவித்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். அப்பொழுதுதான் அவனுக்கு அதன் பொருள் விளங்கியது. மிகுந்த நாணமடைந்து திரும்பினான். தான் "கஞ்சி வரதப்பா" என்றவுடன் பிச்சைக்காரன் "எங்கு வரதப்பா?" என்றதையும் பிறகு தன்னைக் கஞ்சிகொண்டு வந்தவனாக எண்ணிப் பார்த்து வெட்கினதையும் கண்டு மிகுந்த வருத்தம் அடைந்தார்.

உணவிடுதல்

பிறகு அந்த வைணவர், "அடே பிச்சைக்காரா! நமது வீட்டிற்கு வா, நான் உனக்குக் கஞ்சி ஊற்றுகிறேன்," என்று சொல்லித் தம்முடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றார். அவன் பசியடங்குமாறு நன்றாக உணவிட்டார்.

ஏதாவது ஒன்று சொல்ல அதைத் தன் பக்கமாகப் பொருள் செய்துகொள்ளும் சிலருக்கு இந்தப் பழமொழியைப் பயன்படுத்துவது வழக்கமாக இருக்கிறது.

உ. எங்கப்பா குதிருக்குள் இல்லை

கடன் வாங்கி

ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் வெகு கடன்காரன். கண்டவர்களிடமெல்லாம் கடன் கேட்டு வாங்குகிறதும் பலதடவை அவர்களை அலைக்கழித்துக் கொடுப்பதும் வழக்கம். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் தன்னுடைய தகப்பனாருக்கு நேர்மாறாகப் பெரிய அசடாக இருந்தான்.

தந்தையும் மைந்தனும்

ஒருநாள் இவன் வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது சிறிது தொலைவில் தனக்குக் கடன் கொடுத்த வணிகன் ஒருவன் வருவதைக் கண்டான். தன் பிள்ளையிடம், "நான் உள்ளே சென்று குதிருக்குள் ஒளித்

துக்கொள்ளுகிறேன். யாராவது வந்து தேடினால், 'இல்லை' என்று கூறிவிடு," என்று சொல்லிவிட்டுத் தான் குதிருக்குள் போய் உட்கார்ந்தான். அவன் உள்ளே சென்றதும் வணிகன் வந்தான். "உன்னுடைய தகப்பனார் எங்கே?" என்று பிள்ளையைப் பார்த்துக் கேட்டான். அதற்கு அவன், "எங்கப்பா குதிருக்குள் இல்லை" என்று மறுமொழி கூறினான். சிறுவன் இவ்வாறு சொல்வதைக் கேட்டு வணிகன் நகைத்தான். உடனே குதிரில் புகுந்து தகப்பனாரை வெளியில் இழுத்துவந்தான். தகப்பனார், "அந்தமட்டும் போதும் உன்னைப்போல் இரண்டு பிள்ளைகள் இருந்தால் பிழைத்துப்போகலாம்," என்று நினைத்துக்கொண்டு கடனகாரனுக்கு ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிட்டான்.

பழமொழி

இவ்வாறு சூது என்பதே தெரியாமல் சிறிது அசட்டுத்தனமாய், ஒளிக்கவேண்டியதை வெளியிட்டு யார் பேசுகிறார்களோ அவர்களை "என்ன, எங்கப்பா குதிருக்குள் இல்லை" என்னும் கதைபோல் சொல்லுகிறீர்கள் என்று சொல்வது வழக்கமாய்விட்டது. இப்போது இஃது ஒரு பழமொழியாகவே விளங்கிக்கொண்டிருக்கிறது.

---

௩. பிச்சைக்காரனுக்கு வைத்துவை

முன்னுரை

இரவு நேரத்தில் சாப்பிடுகையில் ஏதாவது ஓர் உணவு நன்றாக இருந்தால், "அம்மா! நாளைக்கு வைத்து வைக்கிறாயா?" என்று குழந்தைகள் தாயைப் பார்த்துக் கேட்பது வழக்கம். அதற்குத் தாயானவள், "அப்படிச் சொல்லாதே கண்ணே, 'பிச்சைக்காரனுக்கு வைத்துவை' என்று சொல்," என்பாள். "ஏன்?" என்று குழந்தைகள் கேட்கும்பொழுது தாயார் பின்வருங் கதையைச் சொல்லுகிறதுண்டு.

கணவனும் மனைவியும்

ஓர் ஊரில் ஒரு கணவனும் மனைவியும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கணவனுக்கு மோர்க் குழம்பில் அளவு கடந்த அவா. நாள்தோறும் மோர்க்குழம்பு செய்து சாப்பிட்டாலும் அவனுக்கு மனநிறைவு உண்டாகிற தில்லை. இரவில் உறங்குவதற்குத் தொடங்கும்போதெல்லாம், "நாளைக்கும் இவ்வாறு மோர்க்குழம்பு செய்துவிடு," என்று சொல்வது வழக்கம். இவ்வாறு வெகுநாள் சொல்லிக்கொண்டிருந்தான். இவ்வாறு இருக்கையில் ஒருநாள், "நாளைக்கு மோர்க்குழம்பு செய்துவிடு," என்று அவன் சொல்லும்போது, "கல கல" என்று நகைப்பொலி கேட்டது. இஃதென்ன புதுமை என்று எல்லோரும் திகைத்தார்கள்.

எமதூதன்

ஆளை மட்டும் காணோம். நகைப்பொலி மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. இவ்வாறு இருக்கும்போது அந்த மனிதன் பாம்பு கடித்து அன்று இரவே இறந்துபோய்விட்டான். பக்கத்து வீட்டு மக்கள் பாம்பைப் பிடித்து அடிக்கப்போனார்கள். அதற்குள் அது மனிதக்கோலம் பூண்டு, "நான் எமதூதன்; இவனைப் பிடித்துக் கொண்டு போவதற்கு வந்தேன். ஆனால் இவன் தான் எப்போதும் உயிரோடிருக்கப்போவதாக எண்ணிக்கொண்டு, 'நாளைக்கு மோர்க்குழம்பு, நாளைக்கு மோர்க்குழம்பு' என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஐயோ நீ நாளைக்கு இருக்கப்போகிறது இல்லையே என்று நான் நேற்றிரவு நகைத்தேன்," என்றது.

பிச்சைக்காரன்

எல்லோரும் அதைக் கேட்டுத் திகைத்தார்கள். அன்றுமுதல் பிச்சைக்காரனுக்கு என்று சொல்லத் தொடங்கினார்கள். "நாளை" என்பது நிச்சயமில்லை. பிச்சைக்காரனுக்கு என்றால், நமக்கு நமன் உயிர்ப்பிச்சை கொடுப்பானேயானால் நாம் நாளைக்கு அதே பிச்சைக்கார

ளுக இருந்து அந்த உணவைச் சாப்பிடலாம் என்பது கருத்து. "நாளை என்பது நம்முடைய நாளோ நமனுடைய நாளோ," என்று பெரியோர்கள் கூறியிருப்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு," என்று திருவள்ளுவரும் கூறியிருக்கிறார் அன்றோ?

---

௩. மூன்று சோம்பேறிகள்

ஓர் ஊரில் ஒரு பெரிய குடித்தனக்காரன் இருந்தான். அவன் மிகுந்த தருமகுணம் உள்ளவன். தன்னூரில் அறச்சாலை ஒன்றை ஏற்படுத்தி வந்தவர்களுக்கெல்லாம் இல்லையென்று சொல்லாமல் உணவிட்டுக்கொண்டு வந்தான். அந்த அறச்சாலை உண்டானது முதல் அதில் மூன்று சோம்பேறிகள் தங்கியிருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள், அரைச்சோம்பல், முக்காற்சோம்பல், முழுச்சோம்பல். முழுச்சோம்பல் என்பவன் தன்னுடைய வாயை ஒரு நாளாவது திறந்ததே இல்லை. முக்கால் சோம்பல் திங்களுக்கு ஒரு தடவை என்றைக்காவது ஒருவேளை பேசுவான். அரைச்சோம்பல் இரண்டு தடவை பேசுவான்.

அறச்சாலையில் தீ

இவர்கள் நாள்தோறும் அறச்சாலையில் சாப்பிடுவதும் தூங்குவதுமாகக் காலத்தைக் கழித்தார்கள். வெகு நாளாக இவர்கள் இப்படி இருப்பதை ஒருவன் கவனித்துப் பார்த்துக்கொண்டுவந்தான். 'இஃதென்ன புதுமை இப்படியும் மனிதர்கள் உண்டா ?' என்று வியப்படைந்தவனாய், "நல்லது; இவர்கள் உட்காரும் அறச்சாலையில் தீயை வைப்போம். அப்பொழுதாவது எழுந்திருந்து அப்புறம் போகமாட்டார்களா பார்ப்போம்," என்று நெருப்பை அந்த அறச்சாலையில் வைத்தான். வைத்தவன் வேறு எவரும் அண்மையில் இருந்து அணைக்கக்

கூடாத காலம் பார்த்து வைத்தபடியால் கட்டிடம் நன்ருகத் தீப் பிடித்துக்கொண்டிருந்தது.

சோம்பேறிகள் பேச்சு

நெருப்பு அவர்களுக்கருகில் வரவே அரைச்சோம்பல், "அம்பலம் வேகுது," என்ருன். இவ்வாறு இவன் பேசியது முக்காற் சோம்பற்காரனுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவன் அதற்குப் பொருமைப்பட்டு, "அதைத்தான் சொல்லுவானேன்? வாய்தான் நோவானேன்?" என்ருன். இவ்வாறு இந்த இரண்டு பெயர்களும் சொன்னதைக்கேட்டு மிகச்சினங் கொண்டவனுய் முழுச்சோம்பற்காரன், "சந்தை இரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே," என்று தன்னைத்தானே நொந்துகொண்டான். அன்று முதல் இந்த மொழிகள் வழங்கத் தொடங்கிப் பழமொழிகளாய்விட்டன. அறச்சாலையில் பிடித்த தீயால் மூன்று சோம்பேறிகளும் வெந்து மாண்டார்கள். சோம்பேறிகளின் கதி இறுதியில் இவ்வாறுதான் முடியும்.

ரு. பால் பழம் சருக்கரை

உடன்பிறந்தார் இருவர்

ஓர் ஊரில் இரண்டுபேர் உடன் பிறந்தார்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய தந்தை தேடிய பழைய பொருள்களைப் பிரித்துக்கொண்டு தனித்தனியாகப் பக்கத்து வீடுகளில் குடியிருந்து வாழ்ந்து வந்தார்கள்.

மூத்தவன்

மூத்தவனுக்கு ஏதோ பொல்லாத காலத்தால் பொருளெல்லாம் போய்விட்டது. போய்விட்டது என்ருலும் அவன் சிறிதேனும் வருத்தப்படாமல் தனக்கு இருப்பதைக்கொண்டு எப்பொழுதும் மனநிறைவு உடையவனுய்க் கஞ்சியையும் நீராகாரத்தையும் நிரம்பக் குடித்துக் காலந் தள்ளி வந்தான். காலையில் எழுந்திருந்து முகங் கழுவித்

தன் மனைவியைக் கூப்பிட்டு, "அடியே! பாலும் பழமும் சருக்கரையும் கொண்டு வா," என்பான். அவள், ஓர் ஈயச் செம்பு நிறைய நீராகாரமும், வரட்டு மிளகாயில் இரண்டு மிளகாயும், ஓர் அவரையிலையில் இரண்டு உப்புக் கல்லும் கொண்டுவந்து வைப்பாள். இவைகளைக் கொண்டு மூத்தவன் வயிற்றை நிரப்பிவிட்டு வயல் வெளிக்குப்போவான். எப்பொழுதும் உழைப்பாளியாக இருந்தபடியால் உடலில் யாதொரு நோயும் இல்லாமல் உடல் நலத்துடன் காலந்தள்ளிவந்தான்.

இளையவன்

இளையவன் தன்னுடைய செல்வம் குறையாமலே பெருக்கிக்கொண்டு வந்தான். வெளியில் அதிகமாகச் செல்லுகிறதில்லை. தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வம்பு பேசிக் காலத்தைக் கழிப்பான். நல்ல காற்றை உட்கொள்ளாதவனுக்கு உடல்நலம் எப்படி உண்டாகும்? ஆகவே இவனுடைய உடல் நாளுக்கு நாள் மெலிந்துகொண்டு வந்தது. "நாம் வேலை செய்யாமல் இருக்கிறோம். நம்முடைய உடல் இளைத்து வருகிறது. நம்முடைய அண்ணன் நாள்தோறும் வேலை செய்து நாய் போல் திரிந்தும் பருத்து வருகிறான். நாள்தோறும் காலையில் எழுந்திருந்து நம்முடைய அண்ணன் பால் பழம் சருக்கரை கொண்டுவா என்பதை நாம் வெகுநாளாகக் கேட்டிருக்கிறோம். இவன் இப்படிச் சாப்பிடுவதால்தான் இப்படிப் பெருத்து உடல்நலத்துடன் இருக்கிறான்போல் தெரிகிறது," என்று எண்ணினான். தான் உண்மையாகவே பால் பழம் சருக்கரை முதலியவைகளைச் சாப்பிடத் தொடங்கினான். இவ்வுணவுகள் செரிக்காமற் போகவே மிகவும் வருந்தினான். பிறகு தன்னுடைய தமையன் சாப்பிடும் பால் பழம் சருக்கரை இன்னதென்று அறிந்து கொண்டு அதைப் பின்பற்றி வந்தான். பிறகு உடல் நன்னிலைக்கு வந்தது.

இதன் கருத்து என்னவெனில் எப்போதும் பொதுவான உணவே உடல்நலத்தைக் கொடுக்கும் என்பதாம்.

சூ. ஆணவம் பொல்லாது

வணிகர்களும் கள்ளர்களும்

ஒருநாள் பத்துப்பெயர்கள் பக்கத்து ஊரில் வாணிகஞ்செய்துவிட்டுத் தங்களுடைய ஊருக்குத் திரும்பிவந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியிலே மூன்று கள்ளர்கள் வந்து அவர்களை மறித்துக்கொண்டார்கள். கள்ளர்கள் கையில் ஆயுதம் இருந்தபடியால் இந்தப் பத்துப்பெயர்களும் கள்ளர்களை எதிர்க்கமுடியாமற் போய்விட்டது. கள்ளர்கள் வணிகர்களைப் பார்த்து, அவர்கள் கையில் இருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு இடுப்புத் துணியைக்கூட விடாமல் அவிழ்த்துக்கொண்டு பத்து வணிகர்களையும் கோவணத்துடன் நிறுத்தினார்கள். பிறகு அவர்களைப்பார்த்து, "அடா! நீங்கள் எல்லோரும் கூத்தாடுங்கள் பார்ப்போம்," என்றார்கள்.

வணிகர்கள் கூத்தாடுதல்

வணிகர்கள், "இந்தக் கள்ளர்கள் நம்முடைய பொருள்களையெல்லாம், உடுத்திய துணியைக்கூட விடாமல் பறித்துக்கொண்டு, இப்பொழுது நம்மை ஆடச் சொல்லுகிறார்கள். இதுவும் நமக்குவந்த பொல்லாத காலந்தான்," என்று வருத்தப்பட்டவர்களாய் ஆடத் தொடங்கினார்கள். வணிகர்களில் ஒருவன் நல்ல அறிவாளி. அவன்தான் கூத்தாடுவதற்கு ஏற்றவாறு ஒரு பாட்டைப் பாடத் தொடங்கினான். அஃதாவது,

"நாமனும் புலிப்பேர்
தாளனும் திருப்பேர்
சாவன்ன தாளனை
திருவாண தாளன் சுற்றினால்
சாவன்னத் தாளன் மீதி
தா, தை, தோ, ததிங்கண."

இவ்வாறு பாடிக்கொண்டு எல்லாரும் சுற்றிச் சுற்றிக் கூத்தாடினார்கள். இந்தப் பாட்டின்பொருள் வணிகர்

கட்கு மட்டுந்தெரியுமேயல்லாமல் மற்றவர்கட்குத் தெரிய மாட்டாது. வணிகர்களுக்குள் எண்ணிக்கைகளுக்கு ஒரு மறைமுக ஏற்பாடு உண்டு. முதன்மையாய் நம்முடைய பாட்டுக்கு வேண்டிய பொருள்கள்; சா என்ருல் ஒன்று. திரு என்ருல் மூன்று. புலி என்ருல் பத்து. இந்த அறிவாளி பாடிய பாட்டின்பொருள்; "நாமனும் புலிப்பேர் - நாமோ பத்துப்பெயர்கள். தாளனும் திருப்பேர் - திருடர்கள் மூன்று பெயர்கள். முண்டனுக்கு இரண்டாட்கள் என்பது பழமொழி. அதற்குப் பதிலாகச், "சாவன்ன தாளனே திருவாணத்தாளன் சுற்றினுல் - அஃதாவது ஒரு கள்ளனுக்கு மூன்று பெயர்களாகப் புகுந்து பிடித்துக் கொண்டால், "சாவன்ன தாளன் மீதி" நம்மில் மூன்று கள்ளர்களுக்கு, மும்மூன்று ஒன்பதுபோகப் பாக்கி ஒருவன் இருக்கிருன். அவன் கள்ளர்களுடைய கால்கைகளைத் துணியால் கட்டிவிட்டால், நாம் நம்முடைய பொருளை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம் என்பது கருத்து.

கள்ளர்களைப் பிடித்துக் கட்டுதல்

இவ்வாறு பாடிக் கூத்தாடிக்கொண்டே வந்து, "தா, தை, தோ, ததிங்கண" என்னும்போது, ஒரு கள்ளன்பேரில் மும்மூன்று வணிகர்களாகப் பாய்ந்து பிடித்துக்கொண்டார்கள். எஞ்சிய ஒருவன் துணிகளைக் கிழித்துக் கள்ளர்களுடைய கைகால்களை நன்ருகக் கட்டி உருட்டினுன். கள்ளர்கள் அசையாமற் கட்டுண்ட பிறகு, "இங்கேயே விழுந்துகிடங்கள். ஆணவம் பொல்லாது" என்று மூன்று கள்ளர்களையும் உருட்டிவிட்டுப் பத்து வணிகர்களும் தங்கள் தங்கள் பொருளை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். கள்ளர்கள் முதலில் தங்களுடைய காரியத்தை நிறைவேற்றியும் ஆணவத்தால் கெட்டார்கள். ஆகவே ஆணவம் யாருக்கும் இருக்கக் கூடாது என்பது இச் சிறுகதையினுடைய கருத்தாகும்.

எ. காயத்திரி செபம்

மறையவன்

ஓர் ஊரில் மிகவும் ஒழுக்கங்கெட்டவனாகிய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் பல்கூட சரியாக விளக்குவதில்லை. நாள்தோறும் காலையிலே நீராடிவிட்டு ஆற்றுக் கரையில் உட்கார்ந்திருப்பவர்களையெல்லாம் எள்ளி நகையாடுவது அவனுடைய இயற்கைக் குணமாக இருந்தது.

அடை தின்பதே செபம்

இவ்வாறு சிறிது காலஞ்சென்ற பிறகு தனக்குத் தானே அவனுக்குக் கடவுளன்பும் நல்லொழுக்கத்தோடு கூடியவனாக இருக்கவேண்டும் என்னும் எண்ணமும் உண்டாயின. உடனே அவன் நல்லொழுக்கங்கள் மிகுந்த ஒரு பெரிய கலைஞரிடஞ்சென்று, "பெரியீர்! காயத்திரி செபம் என்கிறார்களே அப்படியென்றால் என்ன?" என்று உசாவினான். அதற்கு அவர், "இவனை நம்பக்கூடாது. ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு கேட்கிறான்போல் தெரிகிறது" என்று முடிவு செய்தார். அவனைப் பார்த்து, "காயத்திரி செபம் என்றால் அடை தட்டித் தின்பதாம். இரவு அடை தட்டி அதைக் காலமே எழுந்திருந்து மடிசஞ்சியில் வைத்துக்கொண்டு நீராடப்போய் அது முடிந்தவுடன் அந்த அடையைப் பிட்டு, இருபது முப்பது துண்டுகளாய்க் கையில் வைத்துக்கொண்டு கிழக்குத் திக்கைப் பார்த்து உட்கார்ந்து, ஒருவருக்கும் காட்டாமல் ஒன்றொன்றாக வாயில் போட்டு மெல்லுவதாம்," என்றார்.

இவனுடைய காயத்திரி செபம்

இதனைக் கேட்டவுடன் இந்தத் தீயவன் சரிதான் என்று எண்ணி, அன்றுமுதல் காலமே எழுந்திருக்கிறதும் இரவு தட்டிவைக்கச் சொல்லியிருந்த அடையை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப்போய் நீராடித் திருநீற்றைப் பட்டையாகப் பூசிக்கொண்டு கிழக்குத் திக்கை நோக்கி உட்காருகிறதும் மேல்வேட்டியை மற்றவர்களைப்

போல் தாவடமாய்ப் போட்டுக்கொண்டு மெதுவாக உள்ளுக்குள் அடையை வைத்துக்கொண்டு தின்கிறதும் பிறகு வீட்டிற்கு வருவதுமாக இருந்தான்.

ஊரார்கள் எண்ணம்

இவ்வாறு சிறிது நாள் செல்லவே அந்த ஊரிலே இருப்பவர்கள் யாவரும், "இவன் நல்ல வழிக்கு வந்துவிட்டான், நல்ல வழிக்கு வந்துவிட்டான்," என்று மகிழ்ச்சியடைந்தார்கள். இவன் அடையைத் தின்றுகொண்டிருந்தாலும் வாய் முணுமுணுப்புக் காயத்திரி செபம் செய்வதைப்போலவே தோன்றியது.

சாயம் வெளுத்தது

இவ்வாறிருக்க ஒருநாள் ஒரு செல்வனுடைய வீட்டில் திதி வந்தது. அதற்கு ஓர் அந்தணன் அகப்பட்டிருந்தான். மற்றொருவன் அகப்படவில்லை. அதற்காக அந்தச் செல்வன், 'ஆபத்துக்குத் தோடமில்லை' என்று நூல் கூறுகிறது. அந்த அந்தணன் இப்பொழுது நல்ல வழியில் வந்திருக்கிறான். அவனை அழைத்துப்போவோம்," என்று எண்ணிக்கொண்டு, ஆற்றங் கரைக்கு வந்தான். அடை தின்று காயத்திரி செபம் செய்துகொண்டிருக்கும் அந்தணனைப் பார்த்து, "பெரியீர்! இன்று நமது இல்லத்தில் திதி; தங்களை ஓர் அதிதியாக வரிக்க வந்திருக்கிறேன்," என்று சொன்னான். அதற்கு அந்த அந்தணன், "மிக்க மகிழ்ச்சி! இன்னும் இரண்டு துண்டுகள் தாம் இருக்கின்றன. முடிந்தவுடன் வருகிறேன்," என்று சொன்னான்.

துண்டுகள் என்று கேட்கவே வந்தவன் நாணினான். அஃது என்ன என்று உசாவினான். அதற்கு அவன், "அதுதான் காயத்திரி செபம். என்னை ஏய்க்கிறீரோ? அந்த மறையவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்," என்றான். "நல்லது இவ்வளவாவது சொன்னீரே?" என்று அழைக்க வந்தவன் திதிக்கு அழையாமலே திரும்பி விட்டான்.

அ. சூரன்

மாமியும் மருகியும்

ஓர் ஊரிலே சூரன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் பயந்தவள். தாயினுடைய பெயர் தீசி. தீசியாகிய மாமி தன்னுடைய நாட்டுப் பெண்ணுக்குக் கூழ் வார்க்கும்போதெல்லாம் நன்ருகக் கூழ் வார்க்கமாட்டாள். சட்டியோரத்தில் ஒட்டியிருக்கிற பொருக்குகளைத்தான் வழித்துப்போடுவது வழக்கம். இதைச் சாப்பிட்டால் யாருக்காவது வயிறு நிரம்புமா? பயந்தவள் பல நாள் பொறுத்துப் பார்த்தாள். பிறகு அவளால் பொறுக்க முடியவில்லை. ஒருநாள் தன் கணவனிடம், "நீங்களாவது சொல்லக் கூடாதா? ஒரு நாளாவது வயிறு நிரம்பப்பெருமல் காய்ந்துபோகிறேனே," என்று சொன்னுள். அதற்குக் கணவன், "நீ சும்மா இரு: நான் தகுந்தபடி ஏற்பாடு செய்கிறேன்," என்ருன். பிறகு பட்டணம் போய் வருவதாகத் தாயாரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

சூரன் சூழ்ச்சி

சூரன் பட்டணத்துக்குப்போய் வருவதாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்டானே அல்லாமல், உண்மையில் பட்டணத்துக்குப் போகவில்லை. அன்று நள்ளிரவில் தன் வீட்டுக்கொல்லையில் வந்து அங்கிருந்த புளிய மரத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டு,

"சுற்றி வழித்தவளைக் கொண்டு போறேன்
சூரன் அம்மாளைக் கொண்டு போறேன்."

என்று அஞ்சத்தக்க விதமாகக் குரல் எழுப்பினுன்.

மாமியின் நடுக்கம்

நள்ளிரவில் புளியமரத்தில் இருந்து இவ்வாறு ஒலியுண்டாகவே தீசி, திடுக்கிட்டு எழுந்தாள். "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கும்," என்னும் பழமொழிப்படி

அவளுக்கு மிகுந்த திகில் உண்டாகிவிட்டது. சுற்றி வழித்தவளும் சூரன் தாயும் அவள்தானே. ஆகவே, உளறியடித்துக்கொண்டு விழுந்தாள். மரத்தில் இருந்து வரும் ஒலி காளியினுடையது என்று எண்ணினுள். மரத்தை நோக்கி, "அம்மா தாயே! நான் தப்பிச் செய்து விட்டேன். இனிமேல் அவ்வாறு செய்யாமல் என் நாட்டுப் பெண்ணுக்கு நன்ருக உணவிடுகிறேன். என் பேரில் சினங்கொள்ளாதே," என்று சொல்லி வேண்டிக்கொண்டாள். அச்சம் உண்டாக்கிய அந்த ஒலியும் அடங்கிப் போய்விட்டது.

நல்ல காலம் பிறந்தது

பிறகு மரத்தில் இருந்து சூரன் இறங்கினுன். நான்கு நாள் தலைமறைவாக இருந்துவிட்டுப் பட்டணத்தில் இருந்து திரும்பி வருபவன்போல் வந்து சேர்ந்தான். இதற்குள்ளேயே நான்கு நாட்களாகத் தீசி காலமே எழுந்திருந்து, "தெய்வமே சினந்துகொண்டு இருக்கிறது. என்ன செய்கிறதோ," என்று நடுநடுங்கினுள். தன்னுடைய நாட்டுப் பெண்ணை பயந்தவளை உட்காரவைத்துப் பருப்பும் பாயசமுமாய் அமுதளித்துக்கொண்டிருந்தாள். நான்கு நாட்களிலேயே பயந்தவள் நன்ருக உப்பிவிட்டாள். சூரன் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் தன்னுடைய மனைவியை மறைமுகமாகக் கூப்பிட்டு, "என்ன செய்தி! இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று வினவினுன். அதற்குப் பயந்தவள், "நாதா! நான்கு நாட்களாகத்தான் சாப்பாட்டைக் கண்டேன்," என்ருள். அதுமுதல் அவளுடைய துன்பம் நீங்கி மிகுந்த நலமடைந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தாள். சிலபேர் இவ்வாறு சூழ்ச்சி செய்தும் தங்களுடைய காரியத்தை நன்ருக முடித்துக்கொள்ளுகிருர்கள்.

கஉ. அந்தணனும் துருக்கனும்

ஓர் அந்தணன்

ஓர் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் குடும்ப வாழ்க்கையில் சிறிது நாள் இருந்துவிட்டுக் கடைசியில் துறவியானான். ஊருக்கு வெளியில்போய் மூக்கைப் பிடித்துக்கொண்டு வெகு நாள் கடவுளை எண்ணித் தவஞ் செய்துகொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு துருக்கன் அந்த அந்தணன் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் புல் வெட்டப்போனான். அப்போது அவன் அந்த அந்தணத்துறவியைப் பார்த்து, "நீ கெட்டாய் பார்ப்பானே. மனைவி மக்களை விட்டுவிட்டு, இப்படி யார் உன்னை இங்கு வந்து உட்கார்ந்திருக்கச் சொன்னார்கள்?" என்று கேட்டான். அந்தணத் துறவி பார்த்தான். "இஃதென்ன வீண் தொல்லையாக இருக்கிறது? நம்மைத் துருக்கன் தொந்தரவு செய்கிறானே," என்று எண்ணினான். பிறகு துருக்கனைப் பார்த்து, "அப்பா! நீ உன்னுடைய வழியைப் பார்த்துக்கொண்டு போ. நான் இவ்வாறு தவஞ் செய்தால்தான் கடவுளைப் பார்க்கலாம். நீ தொந்தரவு செய்யாதே," என்றான்.

முகமதியனுக்கு மொழிதல்

அதற்கும் துருக்கன் விடாமல், "அந்தக் கடவுளை நானும் பார்க்கவேண்டும். எனக்குச் சொல்லு அந்த வழியை," என்று வற்புறுத்தினான். அந்தணன் துருக்கனை ஒழித்துக்கட்டக் கருதினான். எதிரில் இருந்த ஓர் ஓடையைக் காட்டி அவனைப் பார்த்து, "நீ மூக்கைப் பிடித்துக்கொண்டு மூன்றே முக்கால் நாழிகை இந்தக் குளத்துத் தண்ணீரில் முழுகிக் கிடப்பாயானால் உனக்குக் கடவுள் காட்சியளிப்பார்," என்றான்.

முகமதியன் தவம்

அந்த முகம்மதியன் அந்தணன் சொன்னதை அப்படியே நம்பினான். மூக்கைப் பிடித்துக்கொண்டு குளத்தில் விழுந்து மூன்றே முக்கால் நாழிகை முழுகிக்கிடந்தான்.

கடவுள் காட்சி

இவ்வாறு இவன் உண்மையான உள்ளன்புடன் விழுந்து தவஞ்செய்வது பார்வதி பரமேசுரர்களுக்குத் தெரிந்தது. உடனே அவர்கள் இடபத்தின்மீது குளக் கரைக்கு எழுந்தருளினர்கள். துருக்கனை எழுப்பி, "வா அப்பனே கைலாயம் போவோம்." என்று சொல்லிக் கூப் பிட்டார்கள். கடவுளைக் கண்டவுடன் முகமதியனுக்கு நல்ல அறிவு உண்டாகிவிட்டது. இன்பக் கூத்தாடினன். "சுவாமி! அங்கு ஓர் அந்தணர் மூக்கைப் பிடித்துத் தவஞ்செய்துகொண்டிருக்கிறர். அவரையும் அழைத்து வருகிறேன்," என்று பரபரப்பாக ஓடிவந்து அந்த அந் தணனைக் கூட்டிக்கொண்டு குளக்கரைக்குச் சென்றுன். கடவுள் முகமதியனுடைய கண்களுக்கு மட்டும் காணப் பட்டாரேயல்லாமல் அந்தணன் கண்ணுக்குக் காணப்பட வில்லை. உடனே அந்தணன் கடவுளை வணங்கித் தனக் கும் காட்சி கொடுக்கும்படியாக வேண்டிக்கொண்டான். அவர் அவ்வாறே காட்சி கொடுத்தார்.

முகமதியன் கைலாயம் போதல்

ஆனல் அவர் முகமதியனை மட்டும் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டார். அந்தணன் தன்னையும் கூட் டிக்கொண்டு போகவேண்டும் என்று வேண்டிக்கொண் டான். அதற்குக் கடவுள், "உனக்கு இன்னும் சிறிது நாள் இங்கு நிலவுலகத்தில் வாழவேண்டும் என்று ஊழிருக் கிறது. அவ்வாறே செய்வாயாகில் பிறகு நீ கைலாயம் வந்து சேருவாய்," என்று கூறிவிட்டு முகமதியனை மட் டும் அழைத்துக்கொண்டு தனதிருப்பிடம் போய்ச் சேர்ந் தார். அந்தணனும் அவ்வாறே குறிப்பிட்ட காலம் வரை யில் நிலவுலகத்தில் இருந்துவிட்டு அப்புறம் கைலாயம் போய்ச்சேர்ந்தான்.

யாராக இருந்தாலும் உண்மையான நம்பிக்கை மட் டும் தெய்வத்தின்மேல் வைத்தால், தெய்வம் அவனைக் கைவிடாது.

கo. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு! என்கும்

நாவிதன் முதலியோர்

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய நாவிதன், குயவன், வண்ணான் இம் மூவர்களுக்கும் தனக்குக் கீழே அலுவல் கொடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அவர்களும் தங்களுடைய அதிகாரத்தை ஒருவாறு சரிவர நடத்தி வந்தார்கள்.

நாவிதன்

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் நாவிதன் அலுவல் பார்த்த ஊரில் ஒரு குடித்தனக்காரன் மற்றொருவனால் அடிக்கப்பட்டான். அடிக்கப்பட்ட குடியானவன் அலுவலில் இருந்த நாவிதனிடஞ்சென்று முறையிட்டுக்கொண்டான். முறையிட்டு முடிக்கையில் குடித்தனக்காரன் அதிகாரியைப பார்த்து, "இனி தாங்கள் வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டை," என்ருன். இதை நாவித அதிகாரி கேட்டு, அவன் தன்னுடைய குலத் தொழிலைக் குறித்து இகழ்வதாக எண்ணினான். நியாயத்தை உசாவாமலே குடித்தனக்காரனை நான்கு நாள் சிறையில் போட்டான்.

குயவன்

நாவிதனுக்கு உயர்ந்த பதவியில் குயவன் இருந்தான். ஆகவே தனது நான்கு நாள் காவல் கழிந்தவுடன் குடித்தனக்காரன் தனது குறையைக் குயவனாகிய அதிகாரியிடஞ் சொல்லிக்கொண்டான். "இனிமேல் தாங்கள் பானையாகப் பண்ணினாலும் சரி, சட்டியாகப் பண்ணினாலுஞ்சரி," என்று உலக வழக்கம்போல் சொன்னான். அவ்வாறேதான் நாவித அதிகாரியைப் பார்த்துத், "தாங்கள் வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை," என்று சொன்னதும். இதைத் தவிர இவர்களுடைய குலத் தொழிலைக் குறித்து இகழ்ந்துரைத்ததன்று. ஆனால் இவர்கள் இருவரும் தங்களையே இகழ்ந்ததாக எண்ணி

விட்டார்கள். நாவித அதிகாரி நான்கு நாள் கடுங்காவல் விதித்தது போதாதென்று குயவ அதிகாரி, முறைசெய்து கொண்ட குடித்தனக்காரனுக்குப் பன்னிரண்டு நாள் கடுங்காவல் விதித்தான். இந்தத் தண்டனையையும் நமது தலைவிதியென்று குடித்தனக்காரன் நுகர்ந்தான்.

வண்ணான்

குயவனுக்கு மேலான அதிகாரி வண்ணான். ஆகவே தான் சிறையில் இருக்கவேண்டிய காலம் முடிந்தவுடன் குடித்தனக்காரன் வண்ணார அதிகாரியிடஞ் சென்று தனது குறைகளைச் சொல்லிக்கொண்டு இறுதியாய், "இனிமேல் தாங்கள் பார்த்து வெளுத்துவிட்டாலுஞ்சரி சும்மாவிட்டாலும் சரி," என்றான். வண்ணார அதிகாரி யானவன் இதனைச் சரியாகப் பொருள் செய்துகொள்ள வில்லை. அவன் தன் குலத்தொழிலைச் சுட்டிக்காட்டி இகழ்வதாக எண்ணினான். குடித்தனக்காரனுக்கு இரு பது நாள் தண்டனை விதித்தான். அவன் இதனையும் நுகர்ந்து முடித்தபின் அரசனிடஞ்சென்று தனது குறை களைச் சொல்லி முறையிட்டுக்கொண்டான்.

அரசன் நியாயம் வழங்கல்

நடந்த செய்திகளை அரசன் நன்றாக உசாவினான். குடியானவன் பேரில் குற்றம் ஒன்றும் இல்லாமலிருப்ப தைக் கண்டான். தன்னால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரி களாகிய நாவிதன், குயவன், வண்ணான் ஆகிய மூன்று பெயர்களையும் வரவழைத்து, "நீங்கள் மூவரும் ஏன் இந்தக் குற்றமற்ற மனிதனைத் தண்டித்தீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் குடித்தனக்காரன் சொன்ன உலகப் பேச்சுமொழிகளைச் சொல்லி, "இவ்வாறு எங்களை இகழ லாமா?" என்று கேட்டார்கள். அப்பொழுது அரசன், "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கும்; குறும்பியுள்ள காது தினவு தின்கும்," என்கிற பழமொழியைச் சொல்லி மூடத்தனமாக அதிகாரஞ்செலுத்தினதற்காக நாவிதன், குயவன், வண்ணான் ஆகியவர்களை அவரவர் பதவியில்

இருந்து நீக்கி, நல்ல அறிவாளிகளை அவர்களுக்குப் பதிலாக ஏற்படுத்திக் குடியானவனுக்கு நியாயத் தீர்ப்புச் செய்தான்.

கக. காதவழி மணக்கும் மல்லிகைப்பூ அரசன்

நகைப்பும் மணமும்

ஒரு நாட்டில் மல்லிகைஅரசன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் தற்செயலாக நகைத்தால் சுற்றி நான்கு பக்கங்களிலும் காதவழி மல்லிகைப்பூ மணம் வீசும். ஆனால் அந்த நகைப்பு ஒருவராலும் உண்டாக்கப்படாமல் தனக்குத்தானே வர வேண்டும்.

பெரிய அரசன்

இந்த மல்லிகைராசாவிடம் கப்பம் வாங்கும் ஒரு பெரிய அரசன் இருந்தான். அவன் இவனுடைய வாசனை நகைப்பைப்பற்றிக் கேள்விப்பட்டான். தான் அந்த அரசனை அழைத்து நகைக்கச்செய்து மணம் உண்டாவதைப் பார்க்கவேண்டும் என்று விரும்பினான். இவனை வரவழைத்து நகைக்கும்படி கேட்டுக்கொண்டான். அவன் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் காரணமில்லாமையால் மல்லிகையரசனால் நகைக்க முடியவில்லை. பெரிய அரசன் மிகுந்த சினங்கொண்டு மல்லிகை அரசன் நகைக்கும் வரையில் சிறையில் வைத்தான்.

பெரிய அரசன் மனைவி

சிறைக்கு எதிரில் ஒரு முடவன்வீடு இருந்தது. அந்த முடவனிடங் காதல் கொண்டு பெரிய அரசனுடைய மனைவி இரவு பத்து நாழிகைமுதல் வந்திருந்து போவது வழக்கம். இது மல்லிகையரசனுக்குத் தெரிந்திருந்தும் நமக்கென்ன என்று ஒருவருடனுஞ் சொல்லாமல் இருந்து விட்டான்.

முடவன் அடிக்கு மகிழ்ச்சி

ஒரு நாள் பெரிய அரசனுடைய மனைவி பத்து நாழிகைக்கு வருவது தவறிப் பதினைந்து நாழிகைக்கு வந்து சேர்ந்தாள். முடவன் தன்னுடைய நொண்டிக் காலாலும் நொண்டிக் கையாலும் அவளை உதைத்து அடித்தான். அவள் அவ்வளவு அடிகளையும் பொறுத்துக்கொண்டு வாயைத் திறக்கவில்லை. அவனுக்குக் கொண்டுவந்த பலகாரங்களைக் கொடுத்தாள். களிப்புடன் இருக்குஞ்சமயத்தில் இவ்வளவு பெரிய அரசியை அடித்துவிட்டோமே என்று முடவனுக்குச் சிறிது இரக்கம் வந்தது. உடனே அவன், "நான் உன்னை அடித்துவிட்டேன் என்று என்பேரில் சினமா?" என்று கேட்டான். அதற்கு அவள், "எனக்குச் சினமாவது? கீழுலகம் ஏழு, மேல்உலகம் ஏழு ஆகப் பதினான்கு உலகங்களையும் பார்த்த மகிழ்ச்சி எவ்வளவோ அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது," என்றாள்.

கழுதை தேடிய வண்ணான்

இவர்கள் பேசிக்கொண்டிருந்த திண்ணைக்குப் பக்கத்தில், ஒரு வண்ணான் தன் கழுதையைக் காணமல் நாலைந்து நாளாகத் தேடித்தேடி; வழியில் அன்று அவ்விடத்தில் குளிருக்குப் பதுங்கி உட்கார்ந்திருந்தான். பதினான்கு உலகங்களையும் பார்த்தாற்போல மகிழ்ச்சியாக இருக்கிறது என்று அரசி சொல்லவே அந்த வண்ணான், "அடி ஆயா என் கழுதையைக் கண்டாயா?" என்று உசாவினான். பதினான்கு உலகங்களையும் பார்த்தவள் தன்னுடைய கழுதையையும் பார்த்திருக்கவேண்டும் என்பது அவனுடைய எண்ணம்.

மல்லிகைஅரசன் நகைப்பு

இவ்வாறு வண்ணான் கேட்டதும் மல்லிகை அரசனுக்கு மிகுந்த நகைப்பு உண்டாகிவிட்டது. கொல்லென்று நகைத்தான். நகைக்கவே காதவழிதொலை மல்லிகை மணம் உண்டாயிற்று. விடியப் பத்து நாழிகைப் பொழு

தாக இருந்தபோதினும் வேலைக்காரர்கள் பெரிய அரசனை எழுப்பி மணம் உண்டாவதைத் தெரிவித்தார்கள். பெரிய அரசன் மல்லிகை அரசனை வரவழைத்து இவ்வளவு நாள் நான் எவ்வளவோ வேண்டியும் நகைக்காத உனக்கு இன்று இவ்வளவு அகாலத்தில் நகைப்புண்டானதற்குக் காரணம் என்ன என்று கேட்டான்.

பெரிய அரசன் செய்தி அறிதல்

சின்ன அரசன் தன்னால் கூடிய மட்டும் காரணத்தை ஒளித்துப் பார்த்தான். கூடாமற்போகவே உண்மையைச் சொல்லிவிட்டான். பெரிய அரசன் தன்னுடைய மனைவியைச் சுண்ணும்புக் காளவாயில் வைத்து நீருக்கிவிட்டு மல்லிகைஅரசனை அவனுடைய ஊருக்கு அனுப்பி வைத்தான்.

கஉ. கதை கேட்ட நாயைச் செருப்பால் அடி

ஒரு கிழவி

ஓர் ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவளுக்குக் காலையிலே எழுந்து வீடு வீடாகச்சென்று ஐயமேற்று வந்து வாழ்க்கை நடத்துவதே தொழிலாக இருந்தது. பிள்ளையில்லாதபடியினால் அவள் ஒரு நாயைப் பிள்ளை போல் வளர்த்து வந்தாள். சொந்தப் பிள்ளையைவிட அவள் அந்த நாயினிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டி வந்தாள்.

நாய்க்குப் பசி

ஒருநாள் நாய்க்கு மிகுதியாகப்பசியெடுத்தது. உடனே அஃது அம்மையாரிடம் வந்து, "அம்மா! எனக்குப் பசிக்கிறது. சோறு போடு," என்றது. அதற்கு அவள், "ஓர் அரிசிகூட வீட்டில் இல்லையே, எங்கேயாவது போய் ஐயம் ஏற்று வந்துதானே ஆகவேண்டும்?" என்றாள். அதைக்கேட்டு நாயானது, "எனக்கு அதுவரையிற்

பொறுக்கமுடியாது. அடுத்த வீட்டில் நீ ஒரு படி அரிசி கடன் வாங்கிவந்து சமையல் செய்துகொண்டிரு. நான் வெளியில்போய் ஐயமேற்று வருகிறேன். நான் வந்ததும் சாப்பாடு போடவேண்டும். கடன் வாங்கின அரிசியைத் திருப்பிக்கொடுத்துவிடலாம்," என்றது. அதைக் கேட்டு அக்கிழவி, "ஒருநாளும் இல்லாமல் குழந்தை இன்று பசிக்கிறதாகச் சொல்லுகிறது. நல்லது அப்படியே செய்வோம்," என்று அடுத்த வீட்டிற்குச்சென்று, அப்போது சமையல் செய்வதற்காக ஒருபடி அரிசி வாங்கி வந்தாள். நாயும் ஐயம் எடுப்பதற்கு வெளியிற் சென்றது.

நாய் ஐயம் எடுத்தல்

நாய் வந்து ஐயம் எடுக்கிறதே என்று எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள். ஒரு பிடிக்குப் பதிலாகப் படி அரிசியாகப் போட்டார்கள். அவைகளையெல்லாம் நாயினால் தூக்கமுடியவில்லை. கடைக்காரனிடம் விற்றுக் கையில் பத்துப்பணம் எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தது.

கதை கேட்டல்

வழியில் யாரோ ஓர் அந்தணர் இராமாயணம் படித்துக்கொண்டிருந்தார். அன்று முடிசூட்டு விழா படிக்கும் இடமாக இருந்தது. பலபேர்வந்து கதை கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த நாயும் மக்கள் கூட்டத்தில் உட்கார்ந்து தானும் இராமாயணக் கதை கேட்டது. எல்லோரும் இராமாயணத்துக்கு மோதிரப் பணம் போட்டார்கள். இந்த நாயும் தன் கையில் இருந்த பத்துப் பணத்தையும் மோதிரப் பணமாகப் போட்டுவிட்டுக், கையில் அரிசியும் இல்லாமல் பணமும் இல்லாமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

கதைகேட்ட செய்தி சொல்லுதல்

நாய் வெறுங் கையாய் வீட்டிற்கு வரவே கிழவி நாயைப் பார்த்து, "அரிசி எங்கே?" என்று கேட்டாள்.

அதற்கு நாய் தான்போய் ஐயம் எடுத்ததையும் அதிக அரிசி கிடைத்ததையும், அதைப் பணமாக மாற்றியதை யும், இராமாயணக் கதை கேட்டதையும், அங்கு எல்லா ரும் மோதிரப் பணம் போடவே தானும் மோதிரப் பணம் போட்டதையும் சொல்லிற்று.

கதைகேட்ட நாயைச் செருப்பால் அடி

நாய் சொன்னவைகளையெல்லாம் கேட்ட உடனே கிழவிக்கு வந்த சினத்திற்கு அளவே இல்லை. வந்த பணம் அரிசி எல்லாவற்றையும் கரியாக்கிவிட்டு நாய் வீட் டிற்கு வந்ததைப் பார்க்க அவள் மனம் பதைத்தது. உடனே அவள், "சீ! கதை கேட்ட நாயைச் செருப்பால் அடி! கதை கேட்ட நாயைச் செருப்பாலடி!" என்று நாயைச் செருப்பால் அடித்தாள். அதுமுதல் இது பழ மொழியாக வழங்கி வருகிறது.

கதை கேட்பவன்

இக் கதையைச் சொல்லும்பொழுது சொல்லுகிறவன் கேட்கிறவனைப் பார்த்து, "ஆம் ஆம்" என்று கேட்கச் சொல்வது வழக்கம். கடைசியாய் அவன் கேட்கிறவனையே நாயாக வைத்துத் தான் அவனைப் பார்த்துக், "'கதை கேட்ட நாயைச் செருப்பால் அடி,' என்றதுபோல் உன்னை அடிக்கவேண்டும்," என்று சொல்வது வழக்கம். அப் பொழுது இதனைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நகைப் பார்கள்.

கரு. பழிக்குப் பழி

ஆட்டுக்கடாப் பலி

ஓர் ஊரில் ஒரு பள்ளியிருந்தான். அவன் தனக்கு ஒரு காரியம் வெற்றியாக முடிந்தால் தான் காளிக்கு இரண்டு ஆடுகளைப் பலி கொடுப்பதாகச் சொன்னான். அவ்வாறே அக் காரியம் கைகூடிவிட்டது. உடனே அவன் தான் காளிக்குச் சொல்லியிருந்தபடி இரண்டு ஆட்டுக்கடாக்களைப் பலி கொடுத்தான்.

அரசனும் அமைச்சனும்

மற்றொரு பிறவியில் அந்த ஆடுகள் இரண்டும் அரசனும் அமைச்சனுமாகப் பிறந்தன. அந்தப் பள்ளி ஒரு குருக்களாய்ப் பிறந்தான். அரசனும் அமைச்சனும் தாங்கள் பகைவர்களை வெற்றிகொண்டால் தங்களூர்க் காட்டுத் தெய்வத்துக்கு மனிதப் பலி கொடுப்பதாக உறுதி செய்திருந்தார்கள். அவ்வாறு அவர்களுடைய காரியம் நிறைவேறியது. அவர்கள் காட்டுக்கோவிலுக்குப் பூசை செய்யப்போனார்கள். தேடித்தேடிப் பார்த்தும் மனித பலியாகக் கொடுக்கக்கூடிய ஒருவனும் அகப்படவில்லை. நல்லது நம்பியான் ஒருவன் இந்தக் கோவிலுக்குப் பூசை செய்ய வருவான் அல்லனோ அவனைப் பிடித்துப் பலி பலிகொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள்.

நம்பியான்

அந்தக் காட்டுக் கோவிலுக்குப் பூசை செய்பவன் முன் பிறவியில் பள்ளியாயிருந்த குருக்களாவன். அவன் அன்று அங்குப் பூசைக்கு வந்ததும் அரசனும் அமைச்சனும் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். "வா அப்பா! நீதான் எங்களுக்குப் பலியாகவேண்டும். நாங்கள் இந்தத் தெய்வத்துக்கு உறுதிசெய்து விட்டோம்," என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். இதனைக் கேட்கவே நம்பியானுக்கு மிகுந்த அச்சம் உண்டாகிவிட்டது.

நம்பியான் வேண்டுகோள்

குருக்கள் தான் கோவிலில் தனிமையில் அவர்களுடைய கையில் சிக்கிக்கொண்டதைப் பார்த்தான். தன்னை இவர்கள் விடமாட்டார்கள் என்று அறிந்தான். "நாம் இந்தக் காட்டில் தனிமையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் இந்தத் தெய்வத்திற்கு நாள்தோறும் பூசை செய்து வந்தும் இது நம்மை இவர்களிடம் காட்டிக் கொடுத்ததே! நல்லது இந்தத் தெய்வம் செய்த அநீதியை இதனிடமே சொல்லி நியாயம் கேட்டுவிட்டு மாண்டுபோவோம்," என்று முடிவு செய்தான். அரசனைப் பார்த்து, "நானோ தனிமையில் உங்களிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். தப்புவதற்கு வழியில்லை. ஆயினும் இந்தத் தெய்வத்தை இரண்டொரு கேள்விகள் கேட்டு வருகிறேன். நீங்கள் ஒதுங்கி நில்லுங்கள்," என்றான். அதை அவர்கள் கேட்டுத் தப்புவதற்கோ வழியில்லை, அவன் தன்னுடைய விருப்பப்படி தெய்வத்தைக் கேட்டுக்கொள்ளட்டும் என்று ஒதுங்கி நின்றார்கள்.

காளிக்கு அடி

குருக்கள் உள்ளே சென்றான். ஓங்கி ஓர் அறை காளி தேவிக்குக்கொடுத்தான். "பாழுந் தெய்வமே! நான் உன்னை இவ்வளவு நாளாகப் பூசித்தும் என்னைத் தனிமையில் இவர்களுடைய கையில் அகப்படச் செய்தாயே," என்றான். அதற்குக் காளிதேவி நகைத்தாள். "அப்பா! என்பேரில் சினங்கொள்ளாதே. நீ போன பிறவியில் அவர்களைக் கொன்றாய். அப்பொழுது அவர்கள் ஆடுகளாக இருந்தார்கள். நீஒரு பள்ளியாக இருந்தாய். நீ செய்த பழியை அவர்கள் உன்னிடம் செய்யப்போகிறார்கள். இன்னம் ஒரு தடவை நீ அவர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டும்," என்றாள். அதற்குக் குருக்கள், "அப்படியானால் இன்னம் ஒரு தடவை இவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் இந்தத் தடவையோடு ஒழிந்துவிடும்படி செய்தால் நல்லது," என்றான்.

ஒரே தடவையில் தொலைய வழி

அதற்குக் காளியானவள், "அப்படியானால் நீ அவர்களிடஞ்சென்று கத்தியின் ஒரு பக்கத்தை ஒருவனும் இன்னொரு பக்கத்தை மற்றவனும் பிடித்துக்கொண்டு, இரண்டுபேர்களையும் ஒரே காலத்தில் வெட்டச் சொல்வாயானால் இந்தப் பிறவியோடு பழி நீங்கிவிடும்," என்றுகூறி மறைந்தாள். குருக்களும் அவ்வாறே கேட்டுக்கொள்ள அரசனும் அமைச்சனும் அவ்வாறே செய்தார்கள்.

கதையின் கருத்து

ஆகவே, பழிக்குப் பழி எப்பொழுதும் உண்டு. இந்தப் பிறவியில் நாம் ஒருவனுக்குத் தீங்கு செய்தால் இப்போது அது பலிக்காவிட்டாலும் இன்னம் ஒரு பிறவியிலாவது நம்மை விடாது பற்றிக்கொள்ளும். ஆகவே நாம் தீமை செய்வதை அடியோடு நீக்கவேண்டும், "தீயவை செய்தார். கெடுதல் நிழல்தன்னை, வீயா தடியுறைந் தற்று" என்று திருவள்ளுவப் பெருந்தகையார் கூறியிருப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

கச. செல்லும் செல்லாது என்பதற்குச் செட்டியார் இருக்கிறார்

ஒரு செட்டியார்

ஓர் ஊரில் தனிகன் என்னும் பெயருள்ள பணக்காரச் செட்டியார் ஒருவர் இருந்தார். அவர் ஆயிரம் மொகராக்கள் அடங்கிய ஒரு சுருக்குப் பையை இடுப்பில் கட்டிக்கொண்டு வழிப்பயணம் போய்க்கொண்டிருந்தார். வழியில் மிக எளியவனான ஒரு பாட்டைசாரி போவதை அவர் பார்த்தார். அவன் நல்ல பலசாலியாக இருந்தபடியால், "இவனை நாம் நட்பாக்கிக்கொண்டால், ஒருக்கால் வழியில் யாராவது வழிபறிக்காரர்கள் வந்தாலும் நமக்கு உதவியாக இருப்பான்," என்று எண்ணினார். அவனிடம்

மெள்ள மெள்ள நெருங்கிப் பேச்சுக் கொடுத்தார். அவனை நண்பனுக்கிக்கொண்டார். அம் மனிதனும் கள்ளமற்றவனுகக் காணப்பட்டபடியால் 'இவனுல் நமக்கு அச்சமில்லை,' என்றும் ஊகித்துக்கொண்டார். இருவரும் பொழுது போகிறவரையில் வழி நடந்தார்கள்.

வழியில் தங்குதல்

பொழுது போனபின் இனிமேல் வழிநடப்பது சரியில்லையென்று முடிவு செய்து எங்கேனும் தங்குவதற்கு இடந் தேடினர்கள். வழியிலே ஓர் அறச்சாலை இருந்தது. தங்கள் கையிலிருந்த கட்டமுதைப் புசித்துவிட்டுப் பகலில் வழி நடந்த அலுப்புத் திரும்படியாகப் படுத்துக்கொண்டார்கள். "மடியில் கனமில்லை வழியில் பயமில்லை." என்பது பழமொழி. செட்டியாருடைய நண்பனுன பாட்டைசாரி காற்றுவேண்டியவனுகையால் பாதையின ஓரமாகவே சிறிதும் அச்சமில்லாமல் படுத்துக்கொண்டான். செட்டியாரோ அறச்சாலையின் திண்ணையில் படுத்துக்கொண்டார். செட்டியார் மடியில் கனமுள்ளவராகையால் இவருக்குச் சிறிதும் உறக்கம் வரவில்லை.

இரண்டு கள்ளர்கள்

இவ்வாறு இவர்கள் படுத்திருக்கும்போது ஏறக்குறைய நள்ளிரவாயிற்று. இரண்டு கள்ளர்கள் அவ்வழியாய்த் தங்கள் இலக்கை நோக்கி எங்கேயோ சென்றுகொண்டிருந்தார்கள். வழியோரமாக நடந்துவருகையில் அவ்விருவர்களுள் ஒருவனுடைய கால் பாதையோரத்தில் உறங்கும் பாட்டைசாரியின்மேற்பட்டது. அவன், "இஃதென்ன அண்ணே, வழியில் ஒரு பெரிய கட்டை கிடக்கிறது?" என்றுன். அதற்குப் பாட்டைசாரி, "கள்ளர்கள் இவ்வளவுடன் நம்மைப் புடைக்காமல் விட்டார்களே" என்று களிப்பதற்குப் பதிலாகத் தன்னைக் கட்டையென்று இகழ்ந்ததற்குச் சினங்கொண்டவனுய், "என்னடா உங்கள் வீட்டுக்கட்டை ஒரு பணத்தைத் துணியில் முடிந்துகொண்டு தூங்குமோ?" என்றுன். அதைக் கேட்டதும்

கள்ளர்கள், "இது நல்ல சகுனம். உதை இவனை; ஒரு பணம் போகும் வழியில் பாக்கு வெற்றிலைச் செலவுக்கு உதவும்," என்று சொல்லி இவனை உதைத்து ஒரு பணத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள்.

செட்டியாரைக் காட்டிவிடுதல்

அவ்வாறு பிடுங்கிக்கொண்டவர்கள் இந்தப் பணம் செல்லுமோ செல்லாதோ என்று ஐயப்பட்டார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்து, "இந்த அற்பப் பயலுடைய பணம் செல்லுமோ செல்லாதோ," என்று சொல்லிக்கொண்டே ஒரு கல்லில் போட்டுத் தட்டிப்பார்த்தான். இப்பொழுதுகூட நமது பாட்டைசாரி வாயை மூடிக்கொண்டிராமல் பேசத்தொடங்கினான். இவன் அறிவீனனுகையால், "என்ன ஐயம் உங்களுக்கு? செல்லும் செல்லாதது தற்கு அதோ செட்டியார் இருக்கிறார். கேட்டுக்கொள்ளுங்கள்," என்று 'எங்கப்பா குதிருக்குள் இல்லை' என்னும் பழமொழியின் நியாயமாகச் செட்டியாரைக் காட்டிவிட்டான். செட்டியார் என்றால் கள்ளர்களுக்குக் களிப்புண்டாகும் ஆத்மா அன்றோ? அதைக்கேட்ட பிறகும் அவர்கள் சும்மா போவார்களா? செட்டியாரிடம் உடனே சென்று அவரை நன்றாகப் புடைத்து அவருடைய மொகராக்கள் அவ்வளவையும் பறித்துக்கொண்டு போனார்கள்.

அற்ப நட்பு

"அற்பசகவாசம் பிராணசங்கடம்" என்பது ஆன்றோர் கூறிய அறமொழி. அற்ப நட்புச்செய்து செட்டியாருடைய உயிருக்குப் பெருந்தொல்லையேற்படாமற் போனாலும், உயிருக்கு மேல் விலையேறப்பெற்ற மொகராக்கள் முற்றிலும் பறிபோயின. மூடர் கூட்டுறவு கேடுதான் தருமேயல்லாமல் ஒருநாளும் நன்மையைத் தரமாட்டாது.

கரு. அதிருட்டம் உள்ளவனுக்குக் கிடைக்கும்

புது வீடு

ஓர் ஊரில் ஓர் அந்தணன் வீடு ஒன்று கட்டுவதற்கு நாள் பார்த்து நல்ல இலக்கினத்தில் வேலை தொடங்கினான். ஒவ்வொரு நாளிலும் இராகுகாலம் தியாச்சியம் இவைகளையெல்லாம் நீக்கிச் சிறிது சிறிதாக வேலை நடத்தினான். பத்து இருபது ஆண்டுகளில் ஒரு பெரிய வீட்டைக் கட்டிமுடித்தான். வீட்டில் குடி புகுவதற்கு ஒரு நல்ல நாள் பார்த்து, ஒரு நாள் மங்கல ஒலி மறையொலி முதலியவைகளுடன் அந்த வீட்டிற்குச்சென்றான். இரண்டு நாட்கள் சென்றன. இரவு தோறும் அந்த வீட்டில் ஓர் ஒலி கேட்கத் தொடங்கியது. "விழுந்துவிடுகிறேன். விழுந்துவிடுகிறேன்," என்னும் ஒலி எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருந்தது. அந்தணன் அதனைக்கேட்டு நடுங்கினான். "ஓகோ! புது வீட்டிற்கு வந்தது உயிருக்கே அழிவாகக் காணப்படுகிறதே! வீடு விழுந்தால் அப்புறம் நம்முடைய பெண்டு பிள்ளைகள் அழிந்தொழிவரே," என்று எண்ணினான். முன்பு தானிருந்த பழைய வீட்டிற்கே போய்ச் சேர்ந்தான்.

பேய் வீடு

புது வீடு காலியாக இருந்தது. வீடு கட்டிக் குடியிருக்கப் போனவன் மறுபடியும் திரும்பிவந்துவிடவே, அது பேய்பிடித்த வீடு என்று அதற்கு ஒரு பழிச்சொல்லும் வந்து விட்டது. இவ்வாறு வெகு காலஞ்சென்றது.

ஓர் எளியவன்

அந்த ஊரிலேயே ஓர் எளிய பிச்சைக்காரன் இருந்தான். அவனுக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருந்தார்கள். அவர்களைக் காப்பாற்ற முடியாமல் அவன் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். இவ்வாறிருக்கையில் மழை காலம் வந்துவிட்டது. அந்த எளியவனுக்குக் குடியிருப்பதற்கு வீடு ஒன்றும் அகப்படாதபடியினால்

வீடு கட்டிய அந்தணனிடஞ்சென்று, "உங்கள் வீட்டை எனக்குச் சிறிது காலத்திற்கு வாடகைக்குக் கொடுப்பீர்களா?" என்று உசாவினன். அதற்கு அந்தணன், யாராவது வீட்டில் விளக்கு வைத்துக்கொண்டிருந்தால் பழிச்சொல்லாவது நீங்கும்' என்று நினைத்து. அந்த எளியவனைப் பார்த்து, "நீ என் வீட்டில் இருப்பதாக இருந்தால் எனக்கு வாடகைகூட வேண்டாம்; நன்றாக இரு. வீடு விசாலமாக இருக்கிறது," என்றான். எளியவனும் அங்குப்போய்த் தங்கியிருந்தான்.

விழுந்துவிடட்டுமா ?

அவனுக்கும் நள்ளிரவில், "விழுந்துவிடட்டுமா ? விழுந்துவிடட்டுமா ?" என்று ஒலி கேட்டது. எளியவன் அப்பொழுது, 'நாமோ மிகுந்த ஏழையாக இருக்கிறோம். இந்த வீடு நம்முடைய தலையில் விழுந்தால் நம்முடைய தொல்லைகளெல்லாம் ஒரே அடியாகத் தொலைந்துவிடும்' என்று எண்ணியவனாய், "விழு" என்றான். உடனே மழை பொழிகிறதுபோல் தாரை தாரையாய் மொகராக்கள் விழுந்தன. எளியவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஏதோ ஒருவகையாய் நம்முடைய வறுமை விடிந்ததென்று அவைகளையெல்லாம் ஒரு பக்கத்தில் குவித்துச் சிறிது சிறிதாக மாற்றிப் புடவை, நகை, வேட்டி, வீடுவாசல் முதலியவைகளை வாங்கிக்கொண்டு அந்த வீட்டிலேயே குடியிருந்தான். இவ்வாறு அவனுக்குச் சிறிது சிறிதாகச் செல்வம் உண்டாவது எல்லாருக்குந் தெரிந்துவிட்டது. வீட்டுக்குரியவன் எளியவனைக் கூப்பிட்டு உண்மையைக் கேட்க, அவன் உள்ளதைச் சொல்லிவிட்டான்.

வீட்டுக்குடையவன்

வீட்டுக்கு உடையவன் அன்று இரவு தன் புதுவீட்டிற்குச்சென்று எளியவனோடு படுத்துக்கொண்டான். நள்ளிரவில், "விழுந்துவிடுகிறேன்! விழுந்து விடுகிறேன்," என்ற ஒலி கேட்டது. வீட்டுக்காரன், "விழு" என்றான். உடனே

சரமாரியாக மொகராக்கள் விழுந்தன. ஆனால் அவைக ளெல்லாம் வீட்டுக்காரனுக்குத் தேட்களைப்போலக் காணப் பட்டன. உடனே வீட்டுக்காரன் எளியவனைப் பார்த்து, "'அதிருட்டம் உள்ளவனுக்குக் கிடைக்கும்,' என்று என் தகப்பனார் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அஃது இப்பொழுதுதான் தெரிந்தது. இந்த வீடு வாசல் எல் லாம் உன்னுடையது. நீ எனக்கு ஏதாவது கொடுத் தால் பெற்றுக்கொள்ளுகிறேன்," என்று எளியவனை வாழ்த்தினான்.

முடிவுரை

அன்றுமுதல் எளியவன் வீட்டுக்காரனுக்குத் தனக் குக் கிடைப்பதில் சிறிது கொடுக்க அந்த அந்தணன் பெற் றுக்கொண்டான். இச் சிறுகதையின் கருத்து, 'அதிருட் டம் உள்ளவனுக்குக் கிடைக்கும்' என்பது. ஆகவே ஒவ் வொருவரும் நல்வினையைத்தான் முதன்மையாகத் தேடு தல்வேண்டும்.

கசஈ. வால்போயிற்றுக் கத்திவந்தது டம்டம்

ஒரு குரங்கு

ஓர் இலந்தைக் காட்டில் ஒரு குரங்கு பழந்தின்று கொண்டிருந்தது. அப்பொழுது அதன் வால்நுனியில் ஓர் இலந்தைமுள் தைத்துவிட்டது. அதை எடுப்பதற்கு அஃது எவ்வளவோ முயன்றும் எடுக்கமுடியவில்லை. பிறகு அஃது அந்தவூர் நாவிதனிடஞ்சென்று, "மாமா மாமா! என் வால்நுனியில் முள் தைத்திருக்கிறது. மெதுவாகக் கத்தியைக்கொண்டு எடுத்து விடுவாயாகில் அது நீ எனக்குச் செய்யும் பேருதவியாகும்." என்றது. நாவிதன், "அப்படியே ஆகட்டும் அப்பா" என்று தனது கத்தி யால் முள்ளை ஆராய்ந்தான். அவன் என்னதான் பார்த் தும் சரிப்படவில்லை. மிக ஆழமாகப் பார்க்கையில் வாலின் முனை அறுந்துபோய்விட்டது.

குரங்கின் குறும்பு

உடனே குரங்கு, "மாமா! வாலை மறுபடி சரியாக ஒட்டினாலாயிற்று. இல்லாவிடில் உன்னுடைய கத்தியைக் கொடுத்துவிடவேண்டும்," என்றது. நாவிதனுக்குக் கத்தியைக் கொடுப்பதுதான் முடியக்கூடியதாக இருந்தபடியால் அவ்வாறே அதனிடம் கத்தியைக் கொடுத்துவிட்டுப், "போதும் உன்னுடைய கூட்டுறவு நீ நல்லவன்தான்," என்று சொல்லிவிட்டு நாவிதன் போய்விட்டான்.

சுள்ளிக்காரக்கிழவி

அந்தப் பொல்லாத குரங்கு இவ்விதமாகத் தேடிய கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு தன் வழியே காட்டிற் சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது அங்கு ஓர் அம்மையார் சுள்ளிகள் ஒடித்துக்கொண்டிருந்தாள். குரங்கு அவளிடம் சென்று, "பாட்டி! பாட்டி!! ஐயோ கையெல்லாம் சிவந்துபோயிற்றே! இந்தக் கத்தியால் சுள்ளி வெட்டுகிறது தானே," என்றது. அந்த அம்மை "நீ பெரிய ராசாவாக என்றைக்கும் அகவை பதினாறாக வாழ்க," என்று குரங்கை வாழ்த்திவிட்டுக் கத்தியை எடுத்துச் சுள்ளி வெட்டினாள். கட்டுக்கட்டியானவுடன், குரங்கு தன்னுடைய கத்திவாய் மழுங்கிப் போனதைக் கண்டு, "பாட்டி! என்னுடைய கத்தியைக் கெடுத்துவிட்டாயே. எனக்கு வேறு கத்தியாவது வாங்கிக்கொடு, அல்லது சுள்ளியையாவது கொடுத்துவிடு," என்றது. கிழவி குரங்கின் குறும்பைக்கண்டு வியப்புற்றாள், "சுள்ளியைத் தொலைத்துக்கொள்," என்று சுள்ளிக்கட்டை அதன் முன்னிலையில் எறிந்துவிட்டு வீட்டிற்கு வந்துசேர்ந்தாள்.

தோசைக்காரக்கிழவி

குரங்கோ சுள்ளிக்கட்டைத் தலைமேல் வைத்துக் கொண்டு தான் செய்த குறும்பை நினைத்து மகிழ்ந்து கொண்டே விரைவாகப் போய்க்கொண்டிருந்தது. பாதையோரத்தில் வேறொரு கிழவி தோசை சுட்டுக்கொண்டிருந்தாள். "சொய்" என்ற ஒலி காதில் விழவே குரங்கின்

வாயில் தண்ணீர் ஊறிற்று. குரங்கு உடனே கிழவியிடஞ் சென்று, "பாட்டி, நீ நல்ல பாட்டியாயிற்றே. இதோ உனக்காகக் காட்டிற்குச்சென்று சுள்ளி கொண்டுவந்தேன். இதைக்கொண்டு தோசைசுடு. எனக்கும் தோசை கொடுத்து நீயும் சாப்பிடு," என்றது.

தோசைக்கூடை பெறுதல்

பாட்டி, "என் அப்பா! அப்படியே ஆகட்டும், என்று சொல்லி வாங்கிக்கொண்டு முழுமையையும் எரித்துத் தோசைகளைச் சுட்டு அடுக்கினாள். தனது கடைசிச் சுள்ளி எரியுமட்டும் குரங்கு வாயைத் திறவாமல் நல்லதைப்போல் உட்கார்ந்து கொண்டிருந்தது. பிறகு பாட்டியைப்பார்த்து, "எனக்குச் சுள்ளியைத் திருப்பிக்கொடு. இல்லாவிட்டால் தோசைக் கூடையைக் கொடுத்துவிடு," என்று சொல்லிப் போராடத் தொடங்கியது. அந்தக் கிழவி மிகுந்த வெறுப்புற்று, "இதோ தொலைத்துக்கொள்," என்று கூடையைக் கொடுத்துவிட்டாள்.

பறை பெறுதல்

குரங்கு கூடையை எடுத்துக்கொண்டு போகையில் அங்கு ஒரு பறையன் கையுந் தப்புமாக வந்துகொண்டிருப்பதைப் பார்த்தது. தோசையில் நான்கைந்தைச் சாப்பிட்டுவிட்டுப் பறையனை பார்த்து, "அப்பா! இந்தக் கூடைத்தோசையை எடுத்துக்கொள்; இதற்குப்பதிலாக உன் தப்பைக்கொடு," என்றது. பறையனும் அப்படியே ஒப்புக்கொண்டு பறையைக் குரங்கினிடம் கொடுத்தான்.

பறையடித்தல்

குரங்கு பறையை எடுத்துக்கொண்டு ஒருபெரிய ஆலமரத்தின் மீதுஏறி, "வால் போயிற்றுக் கத்தி வந்தது டம்டம்," என்று ஓரடி கிழக்கை நோக்கி அடித்தது. பிறகு மேற்கை நோக்கி, "கத்தி போயிற்றுச் சுள்ளி வந்தது டம்டம்" என்று அடித்தது. மூன்றுந்தடவை வடக்கை நோக்கி "சுள்ளி போயிற்றுத் தோசை வந்தது டம்டம்,"

என்று கொட்டிற்று. கடைசியில் நான்காந் தடவை தெற்கை நோக்கித், "தோசை போயிற்றுப் பறை வந்தது டம்டம்," என்று ஒலித்தது.

இவ்வாறு சிலர் பலவகையான குறும்புகள் செய்து ஒன்றைவிட மற்ருென்று சிறந்ததாக இருக்கிறது என்று களிப்படைவது வழக்கம். இதனுல் அவர்கட்கு உண்டாகிற அற்பமகிழ்ச்சியைத்தான் அவர்கள் பெரிதாக எண்ணுகிருர்களே தவிர, மற்றவர்கட்கு உண்டாகிற தொல்லையை அவர்கள் சிறிதும் எண்ணிப்பார்க்கிறதே யில்லை.

கஎ. வாயுள்ளவன் பிழைப்பான்

ஒரு புலி

ஒரு காட்டில் சிறிய ஒரு மலைச்சரிவின் பள்ளத்தில் ஒரு புலி மூன்று குட்டிகளைப் போட்டிருந்தது. ஒருநாள் தன் குட்டிகளைப் பள்ளத்தில் விட்டுவிட்டுப் புலி அவைகளுக்குத் தீனி தேடிவர வெளியிற் சென்றது. அப்பொழுது அந்த வழியாக ஒரு நரி போய்க்கொண்டிருந்தது. அந்தப் புலி போகும் வரையிற் பதுங்கியிருந்து அதுபோன உடனே குழியில் இறங்கி மூன்று குட்டிகளையுந் தின்று விட்டது.

குழியில் திண்டாட்டம்

பிறகு குழியைவிட்டு மேலே ஏறுவதற்கு முடியாமல், "ஐயோ என்ன செய்கிறது! புலி வந்துவிடுமே! புலி வந்துவிடுமே" என்று அஞ்சித் திகைத்து நின்றது. உடனே சிறிது தொலையில் புலியின் உறுமல் கேட்டது. "ஓகோ வந்தது மோசம்; ஒரு சூழ்ச்சி செய்துபார்ப்போம். அதில் தப்பினுல் தப்பினது. இல்லாவிட்டால் உயிரை விட்டுவிட வேண்டியதுதான்," என்று முடிவுசெய்தது. பிறகு நிலத்தைப் பார்த்துக்கொண்டு, "கொண்டுவா இன்னம் ஒரு புலியை, ஒன்பதினுயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்

னூற்றென்பது புலிகளைத் தின்றுய்விட்டது. பதினுயிரம் புலிக்கு இன்னம் ஒரு புலி பாக்கியாக இருக்கிறது. அதுவும் வந்துவிட்டால் நாளை நம்முடைய பாரணையைச் செய்யலாம். இந்தக் குட்டிகளுக்குத் தாய்தான் பதினுயிரத்தாவது புலி. அஃது எப்பொழுது வருகிறதோ தெரியவில்லை. அதைக்கொண்டுவா குட்டிச்சாத்திரி,'' என்று அட்டகாசஞ் செய்துகொண்டிருந்தது.

புலி ஏமாந்தது

அச்சத்தால் நடுநடுங்கிய நரி சொல்லிக்கொண்டிருந்ததைப் புலி கேட்டது. தன்னுடைய புதரைப்பார்த்தது. குட்டிகளைக் காணவில்லை. குட்டிகளைக்கொன்று தின்ற பிசாசு 'தாயைக் கொண்டுவா' என்று குட்டிச்சாத்திரியைக் கூப்பிடுவதைக் கேட்டு, "ஐயோ நான் என்ன செய்வேன்! நான் என்ன செய்வேன்!! குட்டிகள் போனுல் போகட்டும்; மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம். நம்முடைய உயிர் தப்பவேண்டுமே,'' என்று ஓட்டம் பிடித்தது.

செந்நாய்

இவ்வாறு குடல்தெறிக்க ஓடிக்கொண்டிருக்கையில் அதை வழியில் ஒரு செந்நாய் பார்த்து, "அம்மங்கா! ஏன் இவ்வாறு ஓடுகிருய்?'' என்று கேட்டது. உடனே புலி, "நம்மைத் துக்கம்கேட்க இப்படி ஒருவன் அகப்பட்டானே என்று, "அத்தான்! அதை என்னவென்று சொல்லுகிறது? போ.'' என்புதரில் யாரோ ஒரு கொடிய பாதகன் வந்து குட்டிகளையெல்லாம் சுற்றி வாயில் போட்டுக் கொண்டுவிட்டான். மேலும் 'கொண்டா தாய்ப் புலியை' என்று கூவிக்கொண்டு உட்கார்ந்திருக்கிருன். அதைப்பார்த்து உயிர் தப்புவதற்கு ஓடுகிறேன்,'' என்று கூறிற்று.

இரண்டுந் திரும்புதல்

புலி புகன்றதைக் கேட்டுச் செந்நாய், "நல்லது; என்னையும் அங்கு அழைத்துக்கொண்டு போ. நாம் இருவரும்

அவன் இளைத்தவனாக இருந்தால் அவனைக் கொன்று தின்றுவிடுவோம், இல்லாவிட்டால் ஓடிவந்து விடுவோம்," என்றது. உடனே புலி, "என்னோடு நீ சரியாக ஓடமாட்டாயே அதற்கு என்னசெய்கிறது?" என்று கேட்டது. அதற்குச் செந்நாயானது, நீ என்னை உன் உடம்புக்கு ஒணுங்கொடியைப் போட்டுக் கட்டிக்கொள். நான் உன் ஓட்டத்திற்குச் சரியாக ஓடாவிட்டால், நீ என்னை இழுத்துக்கொண்டு ஓடிவிடு," என்று சொல்லி ஏற்பாடு செய்துகொண்டது.

கட்டிப்பிணைத்துக் கொள்ளுதல்

அவ்வாறே ஒணுங்கொடியை எடுத்துப் புலி தனக்கும் ஓநாய்க்குமாகக் கட்டிக்கொண்டது. பிறகு அத்தான் அம்மங்காளாகிய செந்நாய் புலி இரண்டும் புலிப்புதரிடம் வந்தன.

மீண்டும் நரி மிரட்டல்

மேலே ஏற முயன்று எழும்பிக் குதித்துக்கொண்டிருந்த நரி செந்நாயோடு புலி வருவதைப் பார்த்தது. "ஓகோ ஓடிவிட்டது என்று இருந்தோமே! செந்நாயோடு இதோ வருகிறதே! எத்தாகவே இப்பொழுதும் அதட்டிப் பார்ப்போம். நல்வினையிருந்தால் பிழைப்போம் இல்லாவிட்டால் சாகவேண்டியதுதான்," என்று எண்ணிக்கொண்டு, புலியையுஞ் செந்நாயையும் பார்க்காததைப் போல "கொண்டா குட்டிச்சாத்திரி! செந்நாய் சாப்பாட்டிற்குச் சிறந்த ஊறுகாய் கொண்டா விரைவாக," என்று கத்திக்கொண்டிருந்தது.

செந்நாய் செத்தொழிதல்

நரியின் ஓலம் புலியின் காதிலும் செந்நாயின் காதிலும் விழுந்தது. புலியானது, ஓடிய நம்மைக் குட்டிச்சாத்திரிதான் ஓநாயோடு தன்னுடைய மாயையால் கட்டிப் பிடித்து வருகிறது போலும் என்று எண்ணி மயங்கியது. முன்பைவிட இப்பொழுது மிக விரைவாக ஓடத்தொடங்கி

யது. செந்நாய் சிறிது தொலை புலியோடு ஓடியது. பிறகு அதனோடு ஓடமுடியாமல் தடுமாறிக் கீழே விழுந்தது. புலியானது செந்நாயைக் கல்லிலும் முள்ளிலும் போட்டு இழுத்துக்கொண்டு போகவே செந்நாய் செத்தொழிந்தது. பிறகு பல்லை இளித்துக்கொண்டு விறைத்துப் போய் விட்டது.

மேலும் புலியின் ஓட்டம்

செந்நாய் செத்தொழிந்ததைப் புலி பார்க்கவில்லை. சிறிது தொலை பிணமாகவும் இழுத்துக்கொண்டு போயிற்று. சிறிது தொலை போய்ச் செந்நாய் பல்லிளித்திருப்பதைக் கண்டு, "ஆமாம் உனக்கு நகைப்பு; எனக்கு வயிற்றெரிச்சல். என் குட்டிகள் போய்விட்டன," என்று சொல்லிக்கொண்டே ஓடிற்று. அன்றுமுதல் "உனக்குச் சிரிப்பு எனக்கு வயிற்றெரிச்சல்" என்னும் பழமொழி உண்டாகிவிட்டது. இவ்வாறு பிறர் தொல்லையைப் பார்க்காமல் தம் தொல்லையை மட்டும் எண்ணிப்பார்த்து வருந்துபவர்களும் உலகில் பலர் இருக்கிறார்கள்.

கஅ. ஆண் நல்லது பெண் பொல்லாதது

கணவனும் மனைவியும்

ஓர் ஊரில் ஒரு நல்ல அந்தணர் இருந்தார். அவருக்கு எப்பொழுதும் யாரையாவது விருந்தாளிகளை அழைத்துவந்து சாப்பாடு போடவேண்டும் என்னும் எண்ணம் உண்டு. ஆனால் அவருடைய வீட்டில் அவருடைய மனைவி மிகக் கடினமான நெஞ்சுள்ளவள். யாரையாவது அழைத்துவந்து திண்ணையில் உட்காரவைத்துவிட்டுக் கணவன் எங்கேயாவது போனால், அவள் ரேழியில் வந்து நின்றுகொண்டு, "வந்துவிட்டான் பட்டுக்கிடப்பான் தின்று தெறிக்கிறதற்கு. பிள்ளையில்லாப் பொருளோ? அறச்சாலையில் போய்த் தின்கிறது தானே!" என்று

'படபட' என்று பொரிந்து கொட்டுவாள். சிறிது மானி யாக இருப்பவர்கள் இப் பேச்சைக் கேட்டுப் போய்விடு வார்கள். சிலர் வையவையப் பொறுத்துக்கொண்டு சாப்பிட்டுவிட்டுப் போவார்கள். "பொறுத்தார் பூமியாள் வார்" என்பது அவர்களுடைய எண்ணம்போலும்.

ஒரு பெரியவர்

ஒருநாள் காலையில் சிவனடியார்போல் உருத்திராக்க மாலை யணிந்தவரும் சிவப்பழமானவரும் ஆன ஓர் அந்த ணர், "இன்று இந்த வீட்டில் சாப்பாடு கிடைக்குமா?" என்று கேட்டுக்கொண்டு அங்கு வந்தார். வீட்டுக்கார அந்தணர் வந்தவரைப்பணிந்து போற்றி இருக்கச் செய் தார். "ஆகட்டும் திண்ணையில் உட்காருங்கள். நான் விரைவாக நீராடிவிட்டு வருகிறேன்," என்று சொல்லி விட்டு ஆற்றுக்குச் சென்றார். வீட்டுக்காரர் அந்தப் பக்கஞ்சென்றதும் அவருடைய மனைவி கூடத்தில் வந்து நின்று பார்த்தாள். வந்திருப்பவர் பெரிய சிவனடியாராகக் காட்சியளித்தபடியால் அவரை வைவதற்கு அவளுக்கு மனது வரவில்லை.

வீட்டுக்காரியின் சூழ்ச்சி

சூழ்ச்சியினாலேயே துரத்திவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். கூடத்தில் கோலம் போட்டாள். அதன் நடுவில் ஓர் உலக்கையைக் கொண்டுவந்து வைத்தாள். பிறகு வாசலில் வந்து, "பெரியீர்!. தங்களுக்கு வேண்டிய வர்களையெல்லாம் நினைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் இன்னும் அரைநாழிகைக்கெல்லாம் நீங்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை அடையப் போகிறீர்கள்," என்று சொன்னாள். இதனைக்கேட்டு விருந்தாளியாகவந்த அந்தணர் நடுநடுங்கினார், "என்ன செய்தி?" என்று உசாவினார். அதற்கு அந்தப்பெண், "என்னுடைய கணவன் நாள்தோறும் ஓர் அந்தணனை இந்த உலக்கையால் மண்டையுடைக்காமல் சாப்பிடுகிற தில்லை," என்று சொன்னாள்.

விருந்தாளியின் ஓட்டம்

விருந்தாளியாக வந்த அந்தணர், "இதற்குத்தானா என்னை உட்காரவைத்து விரைவாக நீராடப்போனார். அடாபாவி! அடாகொலைகாரா! நீ வெகுநாள் வாழ்வாயா?" என்று நல்ல மனிதனாகிய அந்த வீட்டுக்கார அந்தணனை வைதுகொண்டே மடிசஞ்சியைத் தோளில் போட்டுக் கொண்டு குடல்தெறிக்க ஓடினார்.

வீட்டுக்காரர் வருதல்

நீராடப்போயிருந்த அந்தணர் இதற்குள் திரும்பி வந்தார். திண்ணையில் இருந்த விருந்தாளியைக் காணாமல், கூடத்தில் உலக்கை வைத்திருக்கக்கண்டு "என்ன செய்தி?" என்று தம்முடைய மனைவியை உசாவினார். அதற்கு அவள், "அந்த அந்தணன் நான் பிறந்தவீட்டில் இருந்து கொண்டுவந்த இந்தக் கருங்காலி உலக்கையைக் கேட்டார். நான் கொடுக்கமாட்டேன் என்று சொன்னேன். அவர் அதோ விரைந்து ஓடுகிறார்," என்று சொன்னாள்.

விருந்தாளியைப்பிடிக்க ஓடுதல்

அதனைக்கேட்ட கணவன், "அடிபாவி! அந்த விருந்தாளியைத் துரத்தினாயா?" என்று உலக்கையை எடுத்துக் கொண்டு அவர் கையில் கொடுத்து அவரை அழைத்துவர உலக்கையும் கையுமாய் ஓடினார். முன்னாலேபோகும் விருந்தாளியந்தணர் பின்னால் உலக்கையும் கையுமாய்த் துரத்திவரும் அந்தணனைப் பார்த்தார். "அந்தோ! இன்று நம்முடைய தலைக்கு முடிவுகாலம் வந்துவிட்டது. அந்த வீட்டுக்காரி நல்லவள். முன்னதாகவே செய்தி அறிவித்து நம்மை அனுப்பிவைத்தாள்," என்று விரைவாக ஓடிப்போனார். சிறிது தொலை அவரைத் துரத்தி விட்டு வீட்டுக்காரர் திரும்பிவந்தார்.

இவ்வாறு சில ஊர்களில் கணவன் நல்ல எண்ணமுள்ளவனாகவும் மனைவி கெட்ட எண்ணம் உள்ளவளாகவும் இருப்பது வழக்கம்.

௬௯. பெண் நல்லது ஆண் பொல்லாதது

முன்னுரை

முன் கதையில் ஆண்பிள்ளை நன்மனத்தோடிருந்ததைப் பார்த்தீர்கள். இக்கதையில் அதற்கு மாருகப் பெண்பிள்ளை நன்மனத்தோடிருப்பதைப் பாருங்கள்.

கணவனும் மனைவியும்

ஓர் ஊரில் ஒரு பெரிய குடித்தனக்காரன் இருந்தான். அவன் மிகுந்த கையழுத்தக்காரன். அறுத்துக்கொண்ட கைக்குத் தடவச் சுண்ணும்புகூடக் கொடுக்கமாட்டான். ஆனால் அவனுடைய மனைவி மிகவும் நல்லவள். தரும எண்ணம் எப்பொழுதும் அவளுடைய உள்ளத்திலே குடிகொண்டிருக்கும். கணவன் கஞ்சனுக இருப்பதில் அவளுக்கு மிகுந்த வருத்தம். கணவன் வீட்டைவிட்டு வெளியே போகுஞ் சமயம் பார்த்திருந்து நான்கு பெயர்களைக் கூப்பிட்டு உணவிடுவாள். நான்கு பெயர்களுக்குக் காசு கொடுப்பாள். இச் செய்தி கணவனுக்கு எப்படியாவது தெரிந்துவிட்டால், அவன் தன்னுடைய மனைவியைச் சினந்துகொள்வான்.

ஓர் எத்தன்

அதற்கு அடுத்த ஊரில் மணமாகாதவன் ஒருவன் (ஒரு பிரமசாரி) இருந்தான். அவன் பெரிய எத்தன். எப்படியாவது அடுத்தஊர்க் கொடாக் குடித்தனக்காரனுடைய வீட்டில் பொருள் தேடிக்கொண்டு போகவேண்டும் என்று எண்ணினன். வீட்டுக்காரன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து வியர்க்க வியர்க்க அவனுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்தான். "சூ! அப்பாடா!!" என்று உட்கார்ந்தான்.

ஏமாத்துதல்

வீட்டுக்காரி ஓடிவந்தாள். "நீங்கள் யார்? வாருங்கள். எங்கே இருந்து வருகிறீர்கள்? என்ன செய்தி?" என்று

உசாவினாள். அதற்கு அந்த எத்தன். "அம்மா! காலையிலே தான் சுவர்க்கத்தில் இருந்து புறப்பட்டேன். அங்கு உன் மாமியாரும் மாமனாரும் மிகுந்த அல்லற்படுகிறார்கள். 'நீ நிலவுலகத்திற்குப் போகிறாயே. எங்கள் மருமகளைக் காண்பாயானால், எங்களுக்கு ஏதாவது வாங்கிவா' என்றார்கள். அவர்கள் துன்பத்தைப் பார்க்கமுடியாமல் நான் இங்கு முதலில் உன்னிடந்தான் வந்தேன். மிகு துன்பம். இப்பொழுது அவர்களுக்குக் கட்டிக்கொள்ளத் துணிகூட இல்லை. காது கழுத்து முதலிய எல்லாம் வெறிச்சென்றிருக்கின்றன," என்றான். இவன் பேசின பேச்சில் அந்த வீட்டுக்காரி மயங்கிப்போனாள், "ஐயோ இவ்விடம் இவ்வளவு கொட்டிக்கிடக்கிறது. நாயும் பேயும் தின்று போகின்றன. அவர்கள் மட்டும் துன்பப்படுவானேன்?" என்று எண்ணினாள். உள்ளே போய்த் தன்னுடைய நகைகள் எல்லாவற்றையும் எடுத்தாள். மற்றும் தன்னுடைய புடைவைகள் கணவனுடைய வேட்டிகள் எல்லாவற்றையும் சுருட்டி இவைகளையெல்லாம் கொண்டுவந்து பிரமசாரியிடம் கொடுத்து, "அப்பா! என்பேரில் அருள்வைத்து இன்று மாலைக்குள் இவைகளையெல்லாம் கொண்டுபோய் அவர்களிடம் கொடுத்துவா," என்று சொன்னாள். பிரமசாரி எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு, வீட்டுக்காரன் வருமுன் போய்விடவேண்டும் என்று எண்ணினான். அவ்விடமிருந்து மிகு விரைவாகச் சென்றான். வீட்டுக்காரி சிறிது தொலைவரை அவனைப் பின்தொடர்ந்து வந்து மாமியார் மாமனார்களுக்குச் செய்தி சொல்லி ஆளை அனுப்பிவிட்டாள்.

கணவன் செய்தியறிதல்

பிரமசாரி ஓடிப்போனதும் கணவன் வீட்டிற்குவந்து பார்த்தான். கொடியில் வேட்டி துண்டு முதலிய எதுவுங் காணப்படவில்லை. "எல்லாம் எங்கே?" என்று மனைவியைக் கேட்டான். அதற்கு அவள், "உங்களுக்கு என்ன குறை? கடையில் இருந்து இரண்டு புதிய வேட்டிகள் வாங்கிக்கொள்ளுங்கள்," என்றாள்.

எத்துக்காரனைத் தேடிச் செல்லுதல்

பிறகு நடந்தவைகளையெல்லாம் அறிந்தான். கடுஞ் சினங்கொண்டான். யாரோ எத்துக்காரன் ஏமாற்றி விட்டுப் போய்விட்டான் என்று உணர்ந்தான். தன் மனைவியைப் பார்த்து, "நீ அவனை உண்மையான மனிதன் என்று நம்பிவிட்டாய்? அவன் பெரிய மோசக்காரன்," என்று சொல்லிவிட்டு, "அந்த மோசடிக்காரன் எந்த வழி யாகப் போனான்?" என்று கேட்டான். அவன் போன வழியை வீட்டுக்காரி காட்டினாள். தன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு எத்துக்காரன் சென்ற வழியே குதிரையை விரட்டினான். முன்னாலே சென்றுகொண்டிருக்கும் மோசக் காரப் பிரமசாரி, வீட்டுக்காரன் குதிரையின்மேல் ஏறிக் கொண்டு தன்னைத் தேடித் துரத்தி வருவதைக் கண்டான். தான் மிகு விரைவாக ஓடினான். என்ன ஓடியும் முடிய வில்லை. வழியில் ஒரு பெரிய முள்ளு முருங்கை மரத்தைப் பார்த்து அதன்மேல் ஏறினான். வீட்டுக்காரன் மரத்தின் கீழ் நின்றுகொண்டு "இறங்கிவா" என்றான்.

குதிரையையும் பறிகொடுத்தல்

அதற்கு அந்த எத்துக்காரன் "என்னை ஏன் கீழே வரச்சொல்லுகிறாய்? சுவர்க்கலோகத்திற்குப் போகும்வழி இதுதான்" என்று சொல்லிக்கொண்டே மேலே ஏறிக் கொண்டிருந்தான். வீட்டுக்காரன் "இவன் மிகவும் கெட்டிக் காரன் கீழே இறங்கிவரமாட்டான்," என்று குதிரையை நிறுத்திவிட்டுத் தானும் மேலே ஏறினான். வீட்டுக்காரன் தனக்குப் பக்கமாக வரும் வரையில் எத்துக்காரன் மேலேயே இருந்தான். இவன் தனக்குப் பக்கத்தில் வந்த தும் வேறு கிளைகளைப்பற்றிக்கொண்டு தடதடவென்று கீழே இறங்கினான். திடுதிப்பென்று குதிரையின்மேல் குதித்துப் படுகைக் காட்டைப் பார்த்துப் பறந்தான். வீட்டுக்காரன் கீழே இறங்கினான். "நல்லது நம்முடைய பங்கு வீண்போவானேன்? என்று குதிரையைக் கொடுத் தோம்," என்று நினைத்துக்கொண்டவனாய்க் கால்நடையாக வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

மனைவிக்கு மறுமொழி

"சுவர்க்கலோக மனிதனைக் கண்டீர்களா?" என்று மனைவி கேட்டாள். அதற்குக் கணவன் "கண்டேன் கால் நடையாகப் போகவேண்டாம் என்று சொல்லிக் குதிரையைக் கொடுத்து ஏறிக்கொண்டு போகச் சொல்லிவிட்டு வந்தேன்," என்றான்.

சிலர் இவ்வாறு ஏமாந்தபின் மற்றவர்களுக்கு வேடிக்கையான காரணஞ்சொல்லுவதுண்டு.

உ0. பேய்பிடித்தாடின பித்தலாட்டக்காரி

குடியானவனும் மனைவியும்

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் தன்னுடைய கொல்லையில் பத்துக் கீரைப் பாத்திகள் விதைத்துக் காலங்கழித்துக்கொண்டிருந்தான். அவனுடைய மனைவி அந்தக் கீரையை ஊரில் விற்று வேளைக்கு அரைப்படி அரிசி கொண்டுவந்து சமைத்துக் கணவனுக்கு முதலில் போட்டுப் பிறகு தானுஞ் சாப்பிடுவாள். இவ்வாறு காலத்தைக் கழித்து வந்தார்கள். ஒழிந்த வேளையில் இவர்கள் வெளியிற்போய் வராட்டி தட்டிப் பொருள் தேடுவதும் உண்டு.

மாங்காயும் மீனும்

குடியானவனுடைய ஊருக்குக் கிழக்கில் ஒரு குளமுண்டு. குளத்தின் கரையில் ஒரு தருமராசர் கோயில். அந்தக் கோவிலுக்கு எதிரில் ஒரு மாமரம் எப்பொழுதும் பூத்துக் காய்த்துக் குலுங்கிக்கொண்டே இருக்கும். அந்தக் குளத்தில் விரால் மீன்கள் அதிகம். அந்த ஊரில் யாராவது அந்த மரத்திலிருந்து மாங்காயையாவது அல்லது அந்தக் குளத்தில் துள்ளும் மீனையாவது எடுத்துச் சமையல் செய்ததாகத் தெரிந்தால், அந்த ஊரார்கள் அவ்வாறு செய்தவர்களைக் குலத்தைவிட்டு விலக்கிவிடுவது வழக்கம். இந்தச் செய்தி அந்த ஊரில் எல்லோருக்குந் தெரிந்ததே.

குடியானவன் எண்ணம்

ஒரு நாள் கிரைப்பாத்தி வைத்துக்கொண்டிருக்கும் குடியானவன் அந்தக் குளத்தின் கரை வழியாய்க் கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு சாணி திரட்டுவதற்குப் போய்க்கொண்டிருந்தான். மரத்தில் மாங்காய் மிகுதியாகக் காய்த்திருப்பதைப் பார்த்தான். "நாம் இந்தத் தின்னிப்பத்திரி மாங்காயை ஒருநாள்கூடச் சாப்பிடாமற் போனால் அப்புறம் நம்முடைய பிறவியினால் என்ன பயன்? யாராவது நம்மைக் கண்டால்தானே தண்டிப்பார்கள். ஒருத்தரும் பார்க்காத சமயம் பார்த்து நாம் இந்தத் தின்னிப்பத்திரி மாங்காயில் ஒன்றைக்கொண்டுபோய் விடுவோம்," என்று நினைத்தவனாய் அவ்விடம் காத்திருந்தான். தின்னிப்பத்திரி மாங்காய் என்பது அச் சாதி மாங்காயின் பெயர்.

களவு

அவன் நினைத்தபடி ஒரு சமயம் சுற்றிப் பார்க்கும்போது ஒருவரும் இல்லாமல் இருக்கக் கண்டான். அதுதான் நல்ல சமயம் என்று எண்ணி, ஒரு தின்னிப்பத்திரி மாங்காயைப் பறித்துக் கூடையில் வைத்துக்கொண்டான். குளத்தில் இறங்கி, மாங்காயுடன் மீனையுஞ்சேர்த்துச் சமைத்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு மீனையும் பிடித்துவைத்துக்கொண்டான். பிறகு அவன் தன்னுடைய வீட்டிற்குப்போய் மனைவியைக் கூப்பிட்டு, "அடியே! இவைகளை மிக மறைமுகமாகச் சமையல் செய்; யாருக்காவது தெரிந்தால் தலை போய்விடும். நாம் இருவரும் இன்று சாப்பிடுவோம்," என்று சொல்லி அவள் கையில் கொடுத்தான். "நான் கொல்லைக்குப்போய் இரண்டு பாத்திகளுக்குத் தண்ணீர் இறைத்துவிட்டு வருகிறேன்; சமையலானதும் கூப்பிடு," என்றுஞ் சொன்னான்.

கணவனை அழைத்தல்

அவ்வாறே மனைவி சமையல் செய்துகொண்டிருந்தாள். கணவன் ஏற்றம் ஓட்டிக்கொண்டிருந்தான். சமைய

லும் செய்துமுடிந்தது. ஒருநாளும் இல்லாமல் புதிதாக ஒரு கறி சமைத்தால் யாருக்குமே வாயில் நீர் ஊறும். சிறிது எடுத்துத் தின்றுபார்ப்போம் என்று தோன்றும். அது போலவே குடியானவனுடைய மனைவிக்கும் வாயில் நீர் ஊறிற்று. ஒருமுறை சிறிது எடுத்து வாயில் போட்டுப் பார்த்தாள். அது வெகு இனிமையாக இருந்தது. உடனே அவள் அதை எடுத்துவந்து கூடத்தில்வைத்துவிட்டு முற்றத்தில் நின்று கணவனைப் பார்த்துச், "சாப்பிட வாருங்கள்," என்று கூப்பிட்டாள். அவன் காதில் இது விழவே இல்லை. மனைவிக்கு மட்டும் நினைப்பு சாப்பாட்டின் மேல் இருந்தபடியால், கணவன் ஒன்றுஞ்சொல்லாவிட்டா லும் அவளுக்கு ஏதோ பதில் சொல்லுவதுபோலத் தோன்றிற்று.

கறி முடிந்தது

ஏற்றம் ஓட்டும்போது அவன் தன்னுடைய கையை மேலே தூக்கிப்போடுவதை அவள் உற்றுப் பார்த்து, "நீ சாப்பிடு நான் அப்புறம் வருகிறேன்," என்கிற சாடை யாய் வைத்துக்கொண்டு கூடத்திற்கு வந்து மற்றொரு முறை சிறிது கறியெடுத்துத் தின்றாள். மறுபடி முற்றத்தில் வந்து கணவனைச் சாப்பிடக் கூப்பிட்டாள். மறுபடியும் கணவன் கையைத் தூக்கி வீசிக்கொண்டிருந்தான். மறு படியும் அவள் சென்று கறியில் சிறிது சாப்பிட்டாள். இவ் வாறு சட்டிக்கறி முழுவதையும் தின்று தீர்த்துவிட்டாள். கறிமுடிகிறவரையில் அவளுக்குத் தான் செய்கிற குற்றம் விளங்கவில்லை.

சாமியாடியது

பிறகு அவளுக்கு மிகுந்த அச்சம் உண்டாகிவிட்டது. "நம்முடைய கணவன் மிகவும் விரும்பிக்கொண்டுவந்ததை நாம் சாப்பிட்டுத் தீர்த்துவிட்டோமே! கணவன் வந்து கேட்டால் என்ன மறுமொழி கூறுகிறது? அவன் நம்மை எளிதில் விடானே. இப்போது நாம் சாமி வந்தாற்போல் ஆடினால்தான் பிழைக்கலாம்," என்று அவள் முடிவு

செய்துகொண்டாள். கறிசெய்த சட்டிக்குள் ஒன்றும் இல்லாவிட்டாலும் ஏதோ இருக்கிற பாவனையாய் அதன் மேல் இன்னொரு சட்டியைப் போட்டுக் கவிழ்த்து மூடினாள். அதன் எதிரில் உட்கார்ந்தாள். தலைமயிரை அவிழ்த்து விட்டுக்கொண்டு பேய்பிடித்தவள்போல ஆடத்தொடங்கினாள். ஆடும்பொழுது,

"தின்னிப் பத்திரி மாங்காயும் திருக்குளத்து மீனும்தன்
குளத்துக்குப் போகவேண்டும் என்று ஆடுகிறது ஆடுகிறது,"

என்று சொல்லிக்கொண்டே ஆடினாள்.

கணவன் பிழைபொறுக்க வேண்டுதல்

கணவன் ஏற்றமரத்தில் இருந்து இதைக்கேட்டான். அஞ்சி ஓடிவந்தான், "அந்தோ நாம் செய்தது சாமிக்குப் பொறுக்கவில்லையே. இந்தச் செய்தியை வெளியில் கேட்டால் போதும்! நம்மைக் குலத்தைவிட்டு நீக்கிப்போடுவார்களே," என்று அஞ்சினான். ஆடுகிற தன் மனைவிக்கு முன்னால் வந்து நின்று, "சாமி! அபராதம்! நீ என்ன சொன்னாலும் செய்கிறேன். ஒன்றுந்தெரியாத நாய்நான்! என்னை இந்தத் தடவை மன்னிக்கவேண்டும்," என்று கீழே விழுந்து வணங்கினான். அதற்கு அம்மன் பேசுவது போல் அவன் மனைவி, "அப்படியென்றால் நீ அந்தச் சட்டியை அப்படியே திறக்காமல் குளத்திற்குக் கொண்டு போய் விட்டுவிடு," என்றாள். "ஆகா சுவாமி! அப்படியே சுவாமி!!" என்று அவன் அதை எடுத்துக் கொண்டோடிக் குளத்தில் போட்டுவிட்டுவந்தான். வீட்டில் சுவாமியும் போய்விட்டது.

உண்மை வெளிப்படுதல்

மறுநாள் குடியானவன் சாணியெடுப்பதற்காக அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தான். குளத்தில் விட்ட சட்டி கரையில் ஒதுங்கியிருக்கக் கண்டான். அதில் யாரோ கைபோட்டு வழித்துத் தின்றிருக்கும் குறிகளால் தன் மனைவி தனக்குக் கெடுதிசெய்து ஏய்த்துவிட்டதாக

உணர்ந்துகொண்டான் உடனே வீட்டில்வந்து கேட்கவே மனைவி கணவனுடைய காலில் விழுந்தாள். 'தன்னுடைய குற்றத்தைப் பொறுக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள். பெண்பாலாகையால் கணவன் அவளை மன்னித்துவிட்டான். இன்றைக்கும் எத்தனையோ பெண்கள் இவ்வாறு சூழ்ச்சிசெய்து, தாங்கள் செய்த குற்றத்தில் இருந்து விடுபட்டு விடுகிறார்கள்.

உக. யாரோ நினைக்கிறார்கள்

முன்னுரை

இலையில் உட்கார்ந்து சாப்பிடும்பொழுதும் அல்லது தண்ணீர் குடிக்கும்போதும் காரணமில்லாமல் புரையேறினால், நண்பர்களோ உறவினர்களோ நினைப்பதாகச் சொல்வது வழக்கம். அவ்வாறு வழக்கத்தில் வந்ததற்குக் காரணம் பின்வரும் சிறுகதையால் காணலாம்.

இரண்டு நண்பர்கள்

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். வயலுக்குப் போகும்போது சேர்ந்துபோவது வழக்கம். ஒரு நாள் அறுவடை நடைபெற்றது. ஆகவே சாப்பிடுவதற்கு வீட்டிற்கு வருவதற்குச் சரிப்படாமல் களத்துக்குக் கட்டுச்சோறு கொண்டுவருமாறு வீட்டுக்குச் செய்தி சொல்லியனுப்பினார்கள். அந்த ஊரிலே ஓர் அந்தணச் சிறுவன் ஐயமேற்றுச் சாப்பிட்டுவிட்டு வேதநூல் கற்றுக்கொண்டிருந்தான். இந்த நண்பர்களின் மனைவியர் இருவரும் அந்தப் பையனைக் கூப்பிட்டுவந்து ஆளுக்கு ஒரு சோற்று மூட்டையைக் கட்டி அவனிடம் கொடுத்துத் தங்கள் கணவர்களிடம் சேர்ப்பிக்குமாறு கூறினார்கள். அப்பையன் அவ்வாறே செய்துவிட்டுத் தன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்றான்.

புரையேறுதல்

பகல் பதினெட்டு நாழிகைக்கு அறுவடைக்காரர்கள் எல்லோரும் கஞ்சி குடிப்பதற்கு அறுவடையை நிறுத்தினார்கள். நண்பர்கள் இருவரும் அங்கிருந்த ஒரு குளக்கரைக்குச்சென்று, அங்கே தாழ்ந்து தொங்கும் ஓர் அரச மரத்து நிழலில் உட்கார்ந்து உணவுகொள்ளத் தொடங்கினார்கள். தங்கள் தங்கள் மூட்டையை அவிழ்த்தார்கள். ஒருவன் சாப்பிடத் தொடங்கியதுமுதல் அவனுக்கு இருமல் வந்துகொண்டேயிருந்தது. மற்றவன் அவனைப் பார்த்து, "உனக்கு ஏன் இப்படி இருமுகிறது?" என்று கேட்டான். அதற்கு அவன், "இஃது இருமல் அன்று. இதற்குப் புரையேறுதல் என்று பெயர் சொல்வார்கள். யாராவது அன்புள்ளவர்கள் நம்மை நினைத்தால் இவ்வாறு சாப்பிடுங்காலத்தில் புரையேறுவது வழக்கம். என் மனைவி என் மீது மிகுந்த அன்போடு என்னை நினைத்துக்கொண்டிருக்கிறாள். உன் மனைவிக்கு உன்னிடத்தில் அன்பில்லை. அவளும் உன்னை நினைத்திருந்தால் உனக்கும் புரையேறாதா?" என்றான். இதனைக்கேட்ட இரண்டாம் நண்பன், 'இவன் சொல்வது சரிதான்,' என்று எண்ணினான். அவனுக்கு மிகுந்த நாணம் உண்டாகி விட்டது. 'நல்லது வீட்டிற்குப் போனவுடன் மனைவிக்குத் தகுந்தபடி உதை கொடுப்போம்,' என்று எண்ணிக் கொண்டே களத்திற்குச் சென்றான். அன்று அறுவடை வேலை முடிந்த பிறகு, மறுநாள் ஆட்களைச் சிறிது முன்னதாக வேலைக்கு வருமாறு சொல்லியனுப்பிவிட்டுத் தங்கள் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

புரையேறப்பெறாதவன்

சாப்பிடும்போது புரையேறப்பெறாதவன் தன்னுடைய வீட்டிற்கு வந்ததும் மனைவியைக் கூப்பிட்டான். தாறுமாறாக வைதான். "அடுத்த வீட்டுச் சேடி மட்டும் தன்னுடைய கணவனை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறாள். அவளுடைய கணவனுக்கு அடிக்கடி புரையேறுகிறது. எனக்கு ஒன்றையும் காணோம். நீயும் என்னை

நினைத்துக்கொண்டிருந்தால் எனக்கும் புரையேறியிருக்குமே,'' என்று சொல்லி அவனை நன்றாக அடித்தான். அதை அவள் பார்த்து, 'இவன் பெருமூடன். என்ன சொன்னாலுங் கேட்கமாட்டான். குற்றத்தை ஒப்புக்கொண்டு நாளைக்குப் புரையேறும்படி செய்வதே தக்கது,' என்று முடிவு செய்தாள். கணவனைப் பார்த்து, "நான் இன்று நண்பகலில் தூங்கிவிட்டேன். ஆகையால் உங்களை நினைக்கமுடியாமற்போய்விட்டது. நாளைக்கு அடிக்கடி நினைக்கிறேன் பாருங்கள்,'' என்று சொல்லித் தன்னுடைய வேலைமேற் சென்றாள். கணவன் தன்னுடைய அடுத்த வீட்டு நண்பனிடம் நடுப்பகலில் தன்னுடைய மனைவி தூங்கிவிட்ட செய்தியைச் சொல்லி, நாளைக்கு நினைப்பாள் என்றுஞ் சொன்னான்.

மறுநாள் நடந்தது

மறுநாள் பொழுது விடிந்தது. இரண்டு நண்பர்களும் நீராடிவிட்டு வயலுக்குப் புறப்பட்டார்கள். இரண்டாம் நண்பனுடைய மனைவி ஒருபடி மிளகாய் வற்றலை இருப்புச் சட்டியில் நன்றாக வறுத்து இடித்து உப்பிடாமல் உணவிற் கலந்து கணவனுக்குக் கட்டுச்சோறு கொடுத்து அனுப்பினாள். முதல் நண்பனுடைய மனைவி வழக்கம்போலவே கட்டுச்சோறு கட்டிக் கணவனிடம் கொடுத்து அனுப்பினாள். இருவரும் களத்துக்குச்சென்று அறுவடை வேலையைக் கவனித்தார்கள்.

புரையேறுதல்

பதினெட்டு நாழிகைக்கெல்லாம் அறுப்பு நிறுத்தப்பட்டது. இருவருங் குளக்கரைக்குச் சென்று சாப்பிடத் தொடங்கினார்கள். இரண்டாம் நண்பனுக்கு நூறு புரை ஏறின. உடனே அவன், "போதும் போதும் நினைக்காதே. நேற்று நினைக்காமல் இருந்ததற்கு அடித்தேன். இன்றைக்கு அதிகமாக நினைப்பதற்கு அடிப்பேன்; நினைக்காதே; நினைக்காதே,'' என்றான். இதனைக்கேட்ட முதல் நண்பன் கொல்லென்று நகைத்தான். அதற்கு இரண்

டாவது நண்பன், "நேற்று அடித்த அடி அல்லவா இவ்வாறு நினைக்கச் செய்கிறது," என்று தன் மனைவியை வியந்துகொண்டான். மாலையில் வீடு திரும்பித் தன்னுடைய மனைவியைப் புகழ்ந்தான். அன்று முதல் சாப்பிடும்போது புரையேறினால், "யாரோ நினைக்கிறார்கள்," என்று சொல்வது வழக்கத்திற்கு வந்துவிட்டது.

உஉ. விறகு வெட்டியும் துறவியும்

துறவி

ஓர் ஊரில் ஒரு துறவி இருந்தார். அவர் தமது மடத்தில் உட்கார்ந்துகொண்டு மக்கள் எல்லோரும் நல்ல கதி பெறுவதற்கு அருள் உரை வழங்கிக்கொண்டிருப்பார்.

விறகு வெட்டி

ஒருநாள் ஒருவிறகு வெட்டி அந்த மடத்திற்கு விறகு போட்டுவிட்டுத் துறவி கூறும் அறிவுரைகளைக் கேட்டுக்கொண்டு நின்றான். துறவியானவர் விறகு வெட்டியைப் பார்த்து, "ஏன் அப்பா! உனக்கு என்ன வேண்டும்?" என்று அவனைக் கேட்டார். அதற்கு அவன், "நல்வழியை அடைவதற்கு எனக்கு ஒரு வழி சொல்ல வேண்டும்," என்றான்.

மாங்கொட்டை

உடனே துறவி மடத்துக்குட்சென்றார். தாம் இரண்டொரு நாட்களுக்கு முன்பு தின்றுவிட்டு உமிழ்ந்து வைத்திருந்த மாங்கொட்டையைச் சீவி இலிங்கம்போற் செய்து அதை ஒரு துணியில் முடிந்துகொண்டுவந்து அந்த விறகு வெட்டியின் கையில் கட்டினார். "இதனை நீ நாள்தோறும் வழிபட்டுவந்தால் உனக்கு நல்ல கதி உண்டாகும்,"என்று சொன்னார். விறகு வெட்டி அதனை உண்மையென்று நம்பினான். அவ்விடம் விட்டுப் போகும்போது, "அந்தச் சாமி சாப்பிடுவாரா?" என்று மக்களைக் கேட்டான். அவர்

கள் 'இவன் ஒரு பைத்தியக்காரன். கையில் கட்டியிருக்கிறது மரக்கட்டையோ கூழாங்கல்லோ தெரியவில்லை. இதை இவன் சாப்பிடுவாரா என்று கேட்கிறான். நல்லது சாப்பிடுவார் என்று சொல்வோம்' என்று எண்ணிக்கொண்டு, "அவர் ஒரு படி அரிசிச்சோறு சாப்பிடுவார்," என்றார்கள். சரி என்று விறகு வெட்டி தன் சாமியுடன் தன் காட்டிற்குப் போய்ச்சேர்ந்தான்.

மாங்கொட்டைக்குப் பூசை

அன்றுமுதல் அந்த மாங்கொட்டைச் சாமிக்கு வெகு சிறப்பாகப் பூசை நடத்தி வந்தான். நாள்தோறும் தான் சாப்பிட உட்காரும்போது இரண்டு இலைகள் போட்டுக்கொண்டு சாமிக்கு ஒரு படி அரிசி வடித்துத் தன் கையில் கட்டியிருக்கும் மாங்கொட்டையை அவிழ்த்து வைப்பான். அஃது என்ன செய்யக்கூடும்? வைத்தவிடத்தில் இருக்கும். உடனே ஒரு புளியமிலாரை ஒடித்துக்கொண்டு வந்து அதனால், "இந்தச் சோற்றைத் தின்கிறாயா இல்லையா?" என்று மாங்கொட்டைச் சுவாமியை அடிப்பான். அடி மேலே விழுந்ததும் இலையில் இருக்கிற சோறு இருந்த விடந்தெரியாமற் போய்விடும். இவ்வாறு வெகு காலம் நடந்து வந்தது.

விறகு வெட்டியும் குருவும்

தான் பூசை பெற்றுக்கொண்ட பிறகு பலநாள் கழித்து விறகு வெட்டி தன்னுடைய குருவைப் பார்க்கப் போனான். போகும்போது ஏதாவது கொண்டுபோக வேண்டும் என்று எண்ணி, காட்டில் இருந்த சுண்டைக்காய் வற்றல், சுக்கங்காய் வற்றல், விறகு முதலானவைகளை எடுக்க முடிந்த அளவு எடுத்துக்கொண்டு மடத்திற்கு வந்து சேர்ந்தான். குரு மாணவனைக் கண்டு நலம் உசாவினார். "இன்று இங்குத் தங்கி மடத்தில் சாப்பிட்டுவிட்டுப் போ," என்றார். குருவின் மொழியைத் தள்ளக்கூடாதாகையால், அவன் அன்று அங்கு இருந்து சாப்பிட்டுவிட்டுப்போக ஒப்புக்கொண்டான்.

இரண்டு இலைகள்

பகலில் பதினைந்து நாழிகைக்கெல்லாம் எல்லோருக்கும் இலை போட்டார்கள். விறகுவெட்டி தனக்கு அடுத்தாற்போல் மற்றோர் இலைபோடச் சொன்னான். அங்கிருந்தவர்கள் எல்லோரும் அவனுக்குப் பைத்தியம்போல் இருக்கிறது என்றிருந்தார்கள். தன்னிடம் போட்டிருந்த இலையிலும் அவன் தனக்குப் பரிமாறுவதுபோல் பரிமாறச் செய்தான். எல்லோரும் சாப்பிடத் தொடங்குகையில் தான் மட்டும் சாப்பிடாமல் சாமியை அவிழ்த்துத் தனக்கு அடுத்த இலையில் வைத்துச் "சாப்பிடு" என்றான். காட்டில் தனிமையில் வந்த சுவாமி கூட்டத்தில் வருவதற்கு வெட்கப்பட்டு இலையில் இருந்ததைச் சாப்பிடாமல் இருந்தார். உடனே இலையைத் தூக்கிக் காம்பைக் கிழித்துக் கொண்டு, "போக்கிரிச்சாமியே! நாள்தோறும் அங்கு மட்டும் அரைக்கீரையும் சோறும் வயிறு நிரம்பத் தின்றுவிட்டு இப்போது நெய்யையும் பருப்பையுங் கண்டு களித்து வாயைக் கெட்டியாக மூடிக்கொண்டாயா?" என்று அடித்தான்.

கடவுள் தோன்றுதல்

சுவாமி அந்த அடியின் வருத்தம் பொறுக்க முடியாமல் விண்ணிற் பாய்ந்தார். விறகு வெட்டி அவரைப் பிடித்துக்கொண்டு தானும் பாய்ந்தான். அண்மையில் இருந்த குரு தானும் ஏற எண்ணி விறகு வெட்டியினுடைய காலைப் பற்றிக்கொண்டார். கடவுள் பார்த்து, 'இவன் காரிய குரு, இவன் தன் காரியம் ஆகிறவரையில் குரு, இவன் இங்குதான் இருக்கவேண்டும். சுவர்க்கத்திற்குக் கொண்டுபோகக் கூடாது' என்று எண்ணி, "ஐயா குருவே! இவன் உமக்கு எவ்வளவு சுண்டைக் காய் வற்றல் கொண்டுவந்து கொடுத்தான்?" என்று கேட்டார். அதற்குக் குரு, "இவ்வளவு" என்று கையை விரிக்கையில் கீழே விழுந்து மாண்டார். குரு இவ்வாறு விழுந்து மாளவேண்டும் என்றுதான் சுவாமியும் கேட்டார். சுவாமியினுடைய சூழ்ச்சி பலித்துவிட்டது.

கருத்து

பொய்க்கோலத்திலும் பெயரிலும் பயனில்லை. உண்மையான பக்திதான் ஒவ்வொருவருக்கும் முதன்மையாக வேண்டும். இத்தகைய உலகப் போக்கைக் கருதியே "உபதேசிக்கில்லை மோட்சம்" என்று ஒரு பழமொழியும் உலகத்தில் வழங்கிக்கொண்டிருக்கிறது.

உங. வரவர மாமி கழுதைபோலானுள்

வல்லாளகண்டி

ஓர் ஊரில் அம்மாஞ்சி என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய தாயார், மாமியார், மனைவி ஆகிய மூன்றுபேரும் அவனேடு ஒன்ருக இருந்தார்கள். அம்மாஞ்சியின் மனைவிக்கு வல்லாள கண்டி என்று பெயர். மனைவி எவ்வாறெல்லாம் சொல்வாளோ அவ்வாறெல்லாம் அம்மாஞ்சி என்னுங் கணவன் ஆடி வருவான். அம்மாஞ்சியினுடைய தாயாரோ மருமகளைக் கண்டால் ஓடி ஒளிவாள். உலக வழக்கப்படி மருமகள் மாமியாருக்கு அஞ்சுவதுபோக அவ்வீட்டில் மாமியார் மருமகளுக்கு அஞ்சுமாறு தலைகிழாக எல்லாம் நடந்து கொண்டிருந்தது. தொல்லையென்ருல் இவ்வளவு அவ்வளவு இல்லை என்னும்படி அம்மாஞ்சியின் தாயார் வல்லாள கண்டியிடம் துன்பப்பட்டாள்.

கிழவி ஓடிப்போதல்

இறுதியில் துன்பம் பொறுக்க முடியாமல், 'ஊரை விட்டு ஓடிப்போவோம்' என்று, ஒரு நாள் மாலையில் கிழவி வீட்டைவிட்டு ஓடிப்போனுள். ஊருக்கு இரண்டு நாழிகை வழி தொலைவில் காளிகோவில் ஒன்று இருந்தது. அவ்விடத்தில் போகும்போது கதிரவன் மறைந்துபோனுன். எங்கும் இருள்மூடத் தொடங்கியது. கிழவியானவள் இரவில் 'இவ்விடத்தில் தங்கியிருப்போம்' என்று அங்குத்

தங்கியிருந்தாள். நள்ளிரவில் காளி நகர் சோதனைக்கு வெளியே புறப்படும்போது இந்தக் கிழவி வெளியில் தன் கோவிலில் உட்கார்ந்திருக்கக் கண்டாள்.

காளியின் அருள்

காளியானவள் கிழவியைப் பார்த்து, "நீ யார்? எங்கு வந்தாய்?" என்று கேட்டாள். அம்மாஞ்சியின் தாயாகிய கிழவி தன் மருமகளாகிய வல்லாளகண்டியிடம் தான் படுகிற தொல்லைகளையெல்லாஞ் சொல்லிக்கொண்டாள். காளி மெய்யறிவுக் கண்ணால் பார்த்தாள். கிழவி சொல்வன எல்லாம் உண்மையென்று கண்டாள். ஒரு மாம் பழத்தைக் கொடுத்து, "இதை நீ சாப்பிடுவாயாகில் உன்னுடைய தொல்லைகளெல்லாம் நீங்கிப்போகும்," என்று சொல்லி மறைந்தாள். கிழவி அவ்விடமே படுத்திருந் திருந்தாள். காளி கொடுத்த மாம்பழம் மிகுந்த தெய்வத் தன்மை பொருந்தியது.

மகன் தேடி வருதல்

இவ்விடத்தில் ஊரில் அம்மாஞ்சி மாலையில் வீட்டிற்கு வந்து, "தாயார் எங்கே?" என்று உசாவினான். தாயாரைக் காணாமல் ஊரெங்கும் தேடினான். அகப்படவில்லை. 'காலையில் ஊருக்கு வெளியே போய்ப் பார்ப்போம்' என்று இருந்துவிட்டான். பொழுது விடிந்ததும் தன் தாயார் போன வழியை உசாவி அவ்வழியே தேடிக்கொண்டு சென்றான். தாயைக் காளி கோவிலில் கண்டான். "அம்மா! எழுந்திரு, அவள் கிடக்கிறாள் கழுதை, நீ வா வீட்டிற்குப்போவோம்," என்றான். அதற்கவள், "ஆகட்டும் வருகிறேன். இரவு பட்டினி. எனக்கு நடப்பதற்குப் பலமில்லை. என்னை நீ தூக்கிக்கொண்டு போ," என்று சொன்னாள். தன் கையில் வைத்திருந்த மாம்பழத்தைப் பிள்ளையிடங்கொடுத்து, "இதைச் சாப்பிடு," என்றாள். அம்மாஞ்சி அதற்கு, "அந்தப் பழத்தை நீயே சாப்பிடு. எனக்கு வேண்டாம்," என்று சொல்லி மறுத்தான். அவன் தாயார் அதனைப் புசித்தாள்.

கிழவி குமரியாதல்

உடனே அம்மாஞ்சி அவளைத் தன் தோளின்மீது தூக்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். தோளில் எடுத்து வரும்பொழுதே சிறிது சிறிதாய் முதுகில் சுமை அதிகரிக்கக் கண்டு 'இஃதென்ன புதுமை'யென்று வீடுவந்து கீழே இறக்கினான். தன்னுடைய தாய் இளம் பெண்ணாக இருக்கக் கண்டான். அன்றுமுதல் வல்லாளகண்டி தன் மாமியாரைத் தொல்லைப்படுத்துவதை விட்டுவிட்டாள்.

வல்லாளகண்டியின் தாய்

வல்லாளகண்டி தன்னுடைய தாயாரும் குமரியாக மாறவேண்டும் என்றும், 'முண்டனுக்கு இரண்டாள்' என்பதுபோல், 'தானும் தன் தாயாரும் இரண்டு குமரிகளாக இருந்தால், மாமியாராகிய குமரியைப் பொருட்படுத்தாமல் இருக்கலாம்' என்றும் உறுதி செய்து, தன் தாயாரை வல்லாளகண்டியானவள், "நீயும் காளிகோவிலுக்குப் போ போ," என்று உயிரை வாங்கிவந்தாள். கடைசியாய் அவளும் ஒரு நாள் மாலையில் அப்படியே காளிகோயிலுக்குச் சென்று அங்குக் காத்திருந்தாள்.

காளியின் காட்சி

நள்ளிரவில் சம்பந்திக்குக் காட்சி கொடுத்த காளி இவளுக்கும் காட்சிகொடுத்து, "நீ யார்?" என்று வினவினாள். அவளும் "எனக்கு வீட்டில் தொல்லை மிகுதியாக இருக்கிறது. கிழப்பருவத்தில் எல்லோரும் இகழ்கிறார்கள். என்று முறையிட்டாள். காளி அறிவுப் பார்வையால் நிலைமையைப் பார்த்தாள். இவள் சொல்வது பொய் என்றும், இவள் கருத்து கெட்ட கருத்தென்றும் அறிந்துகொண்டாள். ஆயினும் இவளுக்கும் ஒரு மாம்பழம் கொடுப்போம் என்று ஒரு பழம் அளித்து மறைந்தாள். அதை அவள் சாப்பிட்டுவிட்டாள்.

மாமி கழுதையாதல்

காலையில் வல்லாளகண்டியால் துரத்தப்பட்டு அம்மாஞ்சி தன் மாமியாரை அழைத்துப்போகக் காளிகோவி

லுக்கு வந்தான். மாமியாரைத் தோளில் தூக்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினன். வழியில் 'இவள் எவ்வாறு குமரியாகிருள் பார்ப்போம் என்று' கீழே வைத்துத் திரும்பிப்பார்த்தான். முகம்மட்டும் கழுதைமுகமாக மாறியிருந்தது. மேலுஞ் சிறிது தொலை சென்று கீழே விட்டான். மார்பு கழுதை மார்பாக மாறியிருந்தது. 'இஃதென்ன அநியாயம்! இன்னுஞ் சிறிது தொலை போய்ப் பார்ப்போம்' என்று ஊருக்கு அண்மையில் வந்து பார்த்தான். முதுகில் இருந்த மாமியார் முழுக்கழுதையாகிக் கழுதைபோலக் கத்தத்தொடங்கினள். உடனே கழுதை மாமியைக் கீழேவிட்டு, "வரவர மாமியார் கழுதைபோலானள், ஊரின்கிட்ட வருகையில் ஊளையிடத் தொடங்கினள்" என்னுஞ் செய்தியைத் தன் மனைவியாகிய வல்லாளகண்டியிடம் தெரிவித்தான். 'அவள் கிழவியாக இருந்தாலும் எவ்வளவோ நன்மையுண்டே, நம்மாலேயே நாம் கெட்டோமே!' என்று அவள் மிகுவருத்தம் அடைந்தாள்.

பொறாமை பொல்லாதது என்பதை, இந்தப் பழமொழிக்கதை விளக்கிக்காட்டுகிறது. நல்லவர்களாக இருந்த மனிதர்கள் நாளடைவில் கெட்டபெயரைத் தேடிக் கொள்வார்களாயின், அவர்களுக்கும் இந்தப் பழமொழி இந்தக் காலத்தில் வழங்கிவருகிறது.

உசு. கழுவுக்கேற்ற கோமுட்டி

அங்குசெட்டி

ஓர் ஊரிலே அங்குசெட்டி என்று பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பல ஆண்டுகள் வாணிகஞ்செய்து பொருள்தேடி அழித்தவன். அவனுக்குப் புகழ்மட்டும் அதிகமேயல்லாமல் கையில் ஒரு காசு கூடக் கிடையாது. அவன் வீடு ஒரு பெருங் காற்று மழையில் விழுந்துவிட்டது. கூலியாட்களை அழைத்து

வந்து விழுந்துபோன சுவர்களை மீண்டும் வைக்குமாறு கட்டளையிட்டான். அக்காலத்தில் வீடுகளுக்கு மண் சுவர்தான் வைப்பது வழக்கம். அவ்வாறே கூலியாட்கள் மண்சுவரை வைத்துவிட்டுத் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

கள்ளன் மாளுதல்

அங்குசெட்டியின் பெயர் எங்கும் புகழ்பெற்ற தாகையால் அன்றிரவு அவன் வீட்டிற்கு ஒரு கள்ளன் வந்தான். மண்சுவரிற் கன்னம் வைத்து வீட்டிற்குள் நுழையும் போது சுவர் ஈரமாகையால் கீழே உட்கார்ந்துவிட்டது. அதே சமயத்தில் கள்ளன் தன்னுடைய தலையை உள்ளே நுழைத்தபடியினால் அவனுடைய தலை சுவரினால் அழுத்தப்பட்டு அவன் மாண்டுபோனான்.

செட்டியின்மீது வழக்கு

மறுநாள் காலையில், கள்ளர்களுடைய உறவினரில் ஒருவன் "மண்சுவர் உட்கார்ந்து தன்னுடைய உறவினன் ஒருவன் மாண்டான். அதற்கு அங்குசெட்டியே காரணம் அவனைக் கழுவிலேற்றவேண்டும்" என்று அந்தநாட்டு அரசனாகிய மூடன் என்பவனிடம் முறையிட்டுக்கொண்டான். மூடன் செட்டியை வரவழைத்து, "ஏன் அவ்வாறு ஈரச்சுவர்வைத்து ஒரு கள்ளனைக் கொன்றாய்?" என்று கேட்டான். அதற்குச் செட்டி, "சாமி! எனக்கு ஒன்றுந் தெரியாது; சுவர் வைத்தவன் குற்றம்," என்று சொன்னான். மூடன் சுவர் வைத்தவனை அழைத்து உசாவினான். அதற்கு அவன், "அரசே! அஃது என்னுடைய குற்றம் அன்று; மண்கொடுத்தவன் இளகின மண்ணைக் கொடுத்தான். நான் என்ன செய்வேன்?" என்றான். அரசன் மண் கொடுத்தவனைக் கூப்பிட்டு உசாவினான். அதற்கு அவன், "பெருமை பொருந்திய அரசே! அஃது என்னுடைய குற்றம் அன்று; எனக்குக் குடம்கொடுத்த குயவன் குடத்தை வாய்பெரிதாகச் செய்துகொடுத்தான்," என்றான். அரசன் குயவனைக் கூப்பிட்டுக், "குடத்தை ஏன்

வாய் பெரிதாகச் செய்தாய்?" என்று கேட்டான். அதற்குக் குயவன், "ஐயா! நான் மண் எடுத்துச் சக்கரம் சுற்றிக் குடஞ் செய்யும்போது ஒரு தேவதாசி தெருவிலே போய்க்கொண்டிருக்கக் கண்டேன். அவளை நான் பார்த்துக் கொண்டிருந்தபடியால் என் வேலையில் நான் நினைவுப் பிசகாக இருக்கவே குடத்தின் வாய் பெரிதாகப்போய் விட்டது," என்றான். உடனே அந்த மூட மன்னன் தேவதாசியை வரவழைத்துக், "குயவன் குடஞ்செய்யும்போது நீயேன் அந்த வழியாகச் சென்றாய்?" என்று கேட்டான். அதற்கு அவள், "அரசே! நான் தட்டானிடம் ஒரு நகை கொடுத்திருந்தேன். அதை அவன் வெகு நாளாகக் கொடுக்கவில்லை. அதை நான் அன்று வாங்குவதற்காகப் போய்க்கொண்டிருந்தேன்." என்றாள். அரசன் தட்டானை வரவழைத்து, "நீயேன் தேவதாசியின் நகையை வைத்துக்கொண்டு அவளை அலைக்கழித்தாய்?" என்று கேட்டான். அதற்குத் தட்டான் முதலில் எதுவுஞ் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

தட்டானுக்குத் தண்டனை

தட்டான் உடனே பதில் உரைக்காமற்போகவே அரசன் முதலான அறிவாளிகள் எல்லோரும், கள்ளன் ஈரச் சுவரால் மாண்டதற்குத் தட்டானே காரணன் என்று முடிவு செய்து அவனைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டார்கள்.

கழுவுக்கேற்ற கோமுட்டி

அந்தச் சமயத்தில் கோமுட்டி ஒருவன் அரசாங்கத்தில் வேலையில் இருந்தான். தட்டான் அந்தக் கோமுட்டியைப் பார்த்து, "ஐயோ அந்தக் கோமுட்டி எனக்குச் சிறிது பொன்கேட்டபொழுது கொடுக்காதபடியினால் அல்லவோ இப்படி எனக்குத் தண்டனை வாய்த்தது. இந்தக் குற்றம் கோமுட்டியினுடைய தாயிற்றே! மேலும் இந்தக் கழுவுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? கழுவோ மிகப் பெரிதாக இருக்கின்றது. நானோ மிக மெலிந்திருக்கிறேன். ஆதலால் கழுவுக்கும் எனக்கும் இணையேயில்லை.

கோமுட்டியோ மிகவும் பருத்திருக்கிறான். அவனல்லவோ கழுவுக்கு ஏற்றவனாக இருக்கிறான்?" என்றான். உடனே அரசன் தட்டான் சொல்வது சரிதான் என்றான். அரசாங்கத்தில் வேலையிலிருந்த அந்தக் குற்றமற்ற கோமுட்டியைக் கழுவிற்போட்டான்.

மூடர் கூட்டுறவு உயிருக்குக் கெடுதி விளைவிக்கும் என்பதுடன் "கழுவுக்கேற்ற கோமுட்டி," என்னும் பழமொழியின் பொருளையும் இச் சிறுகதை வெளியிடுகின்றது. இக் கதையைச் சிலர் இன்னும் வளர்த்துப்பின் வருமாறுங் கூறுவார்கள்.

மேலும் கதையின் வளர்ச்சி

இவ்வாறு கோமுட்டி அகப்பட்டுக்கொண்டு திகைக்கவே சிலர் கோமுட்டியினுடைய நிலைமையைக் கண்டு வருந்தினார்கள். அவர்களில் அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இருவர் கோமுட்டியை எவ்வாறேனும் காப்பாற்றவேண்டும் என்று எண்ணினார்கள். தங்களுக்குள் ஆராய்ந்தார்கள்; இருந்தாற்போலிருந்து பலமாகப் போரிடத்தொடங்கினார்கள். இவர்களுடைய போரைக் கண்ட அரசன் என்ன செய்தி என்று உசாவினான். அவ்விருவர்களில் ஒருவன், "அரசே! இந்த வேளையில் எவனொருவன் இந்தக் கழுவில் ஏறி உயிரைவிடுகிறானோ அவன் மறுபிறப்பில் இந்த நாட்டிற்கு அரசனாகவேண்டும் என்று காலக்கணிதநூல் கூறுகின்றது. இந்த நாட்டிற்கு அரசனாகவேண்டும் என்று நீண்ட நாளாகவே எனக்கு விருப்பம் இருக்கிறது. அதற்காக நான் கழுவில் ஏற வேண்டும் என்றால் இந்தப் படுபாவி இந்தச் சூதை அறிந்துகொண்டு 'நான்தான் ஏறுவேன்' என்கிறான். இது தான் எங்களுடைய வழக்கு," என்று சொல்லிமுடித்தான். இதை அரசன் கேட்கவே "யாரவன் என்னுடைய நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளப் பார்க்கிறவன்? என்னுடைய நாட்டிற்கு மற்றொருவன் அரசனாக வரக்கூடுமா? நான் அல்லவோ வரவேண்டும். ஏற்று என்னைக் கழுவில்" என்றான். உடனே எல்லோரும் சேர்ந்து அரசனைக்

கழுவில் ஏற்றிவிட்டார்கள். மூட அரசன் ஒழிந்ததைப் பற்றி எல்லோருக்கும் மகிழ்ச்சியே தவிர யாருஞ் சிறிதும் வருத்தப்படவில்லை. பிறகு தகுந்த அறிவாளி ஒருவனை அரசனாக முடிசூட்டினார்கள்.

உரு. நன்மை விதைத்தால் நன்மை விளையும்

ஓர் அந்தணன்

ஒரு சிறிய நாட்டில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் காலையில் எழுந்திருந்து நீராடி நாட்கடன்களை முடித்துக்கொண்டு ஓர் எலுமிச்சம்பழத்துடன் போய் அரசனைக் காண்பது வழக்கம். அரசன் கையிற் பழத்தைக் கொடுக்கும்போதெல்லாம், "நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்தால் தீமை விளையும்; 'நன்மையும் தீமையும் பின்வரக் காணலாம்." என்று இவ்வாறு, நாள் தோறுஞ் சொல்லி வாழ்த்துரை கூறிவருவான். அரசன் 'இவன் நாள்தோறும் நமக்கு வாழ்த்துரை கூறி வருகிறான். இவ் வந்தணன் யாரோ மிகப்பெரியவன்' என்று இவனிடம் மிகுந்த அன்பு பாராட்டினான். பூசை நடக்கும் போது எப்போதும் இவனைத் தன்னுடன் கூடவே வைத்துக்கொண்டிருப்பது வழக்கம்.

பட்டாக்கத்தி

இவ்வாறாக ஒருநாள் அரசன் ஏதோ பரபரப்பினால், பூசையில் உட்காரும்போது தன்னுடைய பட்டாக்கத்தியை அந்தப்புரத்தில் வைத்து மறந்து வந்துவிட்டான். நாள்தோறும் பட்டாக்கத்தி வைக்காமல் பூசை செய்கிறதேயில்லை. ஆகவே தன்முன்பு உட்கார்ந்திருக்கும் அந்தணனைக் கூப்பிட்டு, "சுவாமி! தாங்கள் அரண்மனைக்குள் என் படுக்கையறைக்குப்போய்க் கட்டிலின்மீது மெத்தையின்கீழ் என் பட்டாக்கத்தி இருக்கிறது; அதை எடுத்துக் கொண்டு வரவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான்.

அந்தணன் அவ்வாறே ஒப்புக்கொண்டு அந்தப்புரத்துக்குச் சென்றான்.

அமைச்சனும் அரசியும்

அந்த ஊர் அமைச்சன் அரசியிடம் நெடுநாளாகக் காதல்கொண்டு, அரசன் பூசையில் உட்காருகிற சமயம் பார்த்து, அந்தப்புரத்திற்குவந்து அரசியோடு இருந்துவிட்டுப் போகிறது வழக்கம். அவ்வாறே அன்றும் அவர்கள் கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தார்கள். அந்தணன் அவர்களைப்பார்த்தான். "சிவசிவ" என்று சொல்லிக் கண்ணைமுடிக்கொண்டு மெத்தையைமட்டும் தூக்கிக் கத்தியை எடுத்துக்கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தான். கண்ட செய்தியைப்பற்றி வாயைத்திறக்கவில்லை. 'அவரவர்கள் தலைவிதி; நாம் ஏன் அந்தத் தீவினையை வெளியிடவேண்டும்' என்று பேசாமல் இருந்துவிட்டான்.

அரசியின் அடாப்பழி

அந்தணன் வந்து தங்கள் இருவரையும் அந்த நிலையிற் பார்த்துக்கொண்டு போகவே அமைச்சனுக்கும் அரசிக்கும் உள்ளத்தில் மிகுந்த அச்சம் உண்டாகிவிட்டது. உடனே அமைச்சன் அரசியைப் பார்த்து, "இவன் நம்முடைய தீயொழுக்கத்தைக் கண்ணால் பார்த்துவிட்டான். இதனை அரசனிடம் சொல்லிவிடுவான். நாளைக் காலைக்குள் இவனைக் கொன்று தொலைத்துவிடவேண்டும்," என்றான். அரசியும் அவ்வாறே ஒப்புக்கொண்டாள். அரசன் சாப்பிடுவதற்கு உட்காருஞ் சமயம் பார்த்துத், தலைமயிரை அவிழ்த்துவிட்டுக்கொண்டு அவனிடஞ்சென்று, "அந்தப்புரத்துக்கு இன்னாரை அனுப்பலாம் இன்னாரை அனுப்பக் கூடாது என்னும் அறிவு அரசராக இருக்கும் தங்கட்கு இல்லையா? அந்த அந்தணன் என்ன கிழவனானாலும் அவனுடைய தீய எண்ணம் மாறிற்றா? என்னை வலுக்கட்டாயஞ்செய்து கையைப்பிடித்து இழுத்தான்," என்று முறையிட்டாள்.

அரசன் பதற்றம்

அரசி கூறியதைக்கேட்டு அரசன் மிகுந்த சினங் கொண்டான். அமைச்சனைக் கூப்பிட்டு அந்தணனுடைய பெயரைச் சொல்லி, "அவன் இத்தகைய குற்றஞ் செய் திருக்கிறன். அவனுக்கு எத்தகைய தண்டனை விதிக்க லாம்?" என்று கேட்டான். "எண்ணெயைக் காயவைத் துப் பொரித்துவிடும்படி மனுநூலில் சொல்லியிருக்கிறது" என்று கூறிவிட்டு வீட்டிற்குப் போய்விட்டான் அமைச் சன். அரசன் உடனே கொலையாளிகளைக் கூப்பிட்டான். "நீங்கள் இன்று மாலையிலேயே பெரிய அடுப்பு அமைத்து அதில் பெரிய வெல்லக் கொப்பரையொன்றை வைத்து ஐம்பது ஆடம்தேங்காய் எண்ணெயை, நன்ருக மறுகு மாறு காய்ச்சி வைத்துக்கொண்டிருங்கள். நாளைக் காலை யில் பொழுதுவிடியுஞ் சமயத்தில் ஒரு மனிதன் வந்து, 'ஆயிற்ரு' என்று கேட்பான். முன்பின் சிறிதும் பாரா மல் அவனை அப்படியே கட்டிக் கொப்பரையில் போட்டுப் பொரித்துவிடுங்கள்," என்று கட்டளையிட்டான். பிறகு சாப்பாட்டை முடித்துக்கொள்ளப்போனுன்.

அந்தணனுக்குக் கட்டளை

அரசன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அந்த ணனை வரவழைத்தான். அவனைப்பார்த்து, "ஓய் அந்தணரே! நீர் நாளைக் காலையில் நீராடப் போகும்போது கிழைவாசலில் ஒரு கொப்பரையில் எண்ணெய் காய்ச்சிக் கொண்டு சிலர் உட்கார்ந்திருப்பார்கள். நீர் அவர்களிடம் போய், 'ஆயிற்ரு' என்று கேளும், அவர்கள் என்ன மறுமொழி சொல்லுகிருர்களோ அதை என்னிடம் தெரி வியும்," என்று சொல்லியனுப்பினுன். பிறகு, 'தெரிவிக்கப் போகிறது ஏது? உம்மைக் கொப்பரையில் போட்டுப் பொரித்துவிடுவார்கள்' என்று தன் மனதில் எண்ணிக் கொண்டான். அந்தணனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது கொலையாளிகளுக்கு இட்டிருக்கிற கட்டளையாவது அமைச் சனுக்கு அறவே தெரியாது. அவன், 'நாளைக் காலையில் அந்தணனைக் கொப்பரையிற் போட்டுப் பொரித்துவிடு

வார்கள். பிறகு நம்முடைய விருப்பம்போல் அந்தப்புரத்திற்குப்போய் வரலாம்' என்று எண்ணிக்கொண்டு, எப்பொழுது பொழுதுவிடியப்போகிறது என்று காத்திருந்தான்.

தன்வினை தன்னைச்சுடும்

மறுநாள் அருணோதயம் ஆயிற்று. உடனே அமைச்சன் எழுந்தான். கொப்பரையைக் காய்ச்சிக்கொண்டிருக்கும் ஆட்களிடம்போய், "ஆயிற்றா?" என்று கேட்டான். "யாராக இருந்தாலும் பார்க்கவேண்டாம்" என்ற அரசனுடைய கட்டளையைக் கொலையாளிகள் மனதில் வைத்துக் கொண்டிருந்தார்களாகையால், அமைச்சன் என்று சிறிதும் பின்வாங்காமல் அவனைக் கட்டித் தூக்கிப்போட்டுப் பொரித்துக் கொப்பரையைக் கீழே இறக்கி வைத்துவிட்டார்கள்.

அரசன் செய்தியறிதல்

அந்தணன் வழக்கம்போல் எழுந்து நீராடச் சென்றான். செல்லும் வழியில் அணித்திருக்கும் அடுப்பிடஞ் சென்று அங்கிருப்பவர்களைப் பார்த்து, "ஆயிற்றா?" என்று கேட்டான். அவர்கள், "ஆயிற்று; அமைச்சன் வந்து, 'ஆயிற்றா?' என்று கேட்டான். அரசனுடைய கட்டளைப்படி அமைச்சனைக் கொப்பரையிற் போட்டுப் பொரித்துவிட்டோம்," என்று கூறினார்கள். அந்தணன் தன்னுடைய செம்பு, மடிசஞ்சி முதலியவைகளை அவ்விடமே வைத்துவிட்டுக் குடல் தெறிக்கும்படி அரசனிடத்திற்கு ஓடிவந்து, "ஆய்விட்டதாம். அமைச்சனைப்போட்டுப் பொரித்துவிட்டார்களாம்," என்று தெரியப்படுத்தினான். அரசனுக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. உடனே புறப்பட்டு விரைவாகக் கீழ் வாசலுக்குச் சென்று நடந்த செய்தியை உசாவினான். கொலையாளிகள், "அரசே! முன்பின்பாராமல், யார் வந்து 'ஆயிற்றா?' என்று கேட்கிறார்களோ அவர்களைப்போட்டுப் பொரித்துவிட எண்ணெயை நன்றாகக் காய்ச்சி வைத்திருக்கச் சொன்னீர்கள்.

நாங்கள் அப்படியே வைத்திருந்தோம். ஒரு நாழிகைக்கு முன்னே அமைச்சர்வந்து, "ஆயிற்று? என்று கேட்டார். நாங்கள் தங்களுடைய கட்டளைப்படி அவரைப் பொரித்து விட்டோம். எங்கள்மேல் தவறு இல்லை," என்றார்கள்.

அரசன் உண்மையை அறிதல்

"அமைச்சன் ஏன் அவ்வளவு பரபரப்பாக வந்து 'ஆயிற்று?' என்று கேட்கவேண்டும்" என்று அரசனுக்கு ஐயம் உண்டாயிற்று. அந்தணனைப் பார்த்து, "நேற்று நடந்தது என்ன? நடந்தபடி சொல்லும்; இல்லாவிடில் உம்மைக் கொன்றுபோடுவேன்," எனறு அரசன் மிகுந்த சினத்தோடு கேட்டான். அந்தணன் எல்லாவற்றையும் உள்ளபடியே உரைத்துவிட்டான். மன்னனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. தன் மனைவியையும் அந்த எண்ணெயிற் பொரித்துவிடுமாறு கட்டளையிட்டான்.

அந்தணன் அமைச்சனாதல்

அரசன் அந்தணனைப்பார்த்து, "நாள்தோறும் எலுமிச்சம்பழம் கொடுக்கும்போது தாங்கள் உரைத்துவந்த உரையின் பொருளை இன்றுதான் நான் அறிந்தேன்; 'நன்மை விதைத்தால் நன்மைவிளையும், தீமை விதைத்தால் தீமைவிளையும். நன்மையும் தீமையும் பின்வரக் காணலாம்' என்பது உங்களிடத்திலும் அமைச்சனிடத்திலும் சரியாக முடிந்தது. நீங்கள் நல்லது விதைத்து வந்தீர்கள். அந்த நன்மை உங்களைக் காப்பாற்றிற்று. அமைச்சன் தீமை விதைத்து அழிவடைந்தான்," என்று பலவாறு அந்தணனைப் புகழ்ந்தான். அவனை அமைச்சனாக அமைத்துக்கொண்டான். அந்தணனுக்கும் காலத்திற்குத் தகுந்த அறிவு வந்துவிட்டது. அரசியலை நன்றாக நடத்தி யாதொரு குறைவும் இல்லாமல் அரசமுறை செலுத்தினன். ஆகவே ஒவ்வொருவரும் நன்மையான காரியத்தையே நாளும் செய்தல்வேண்டும்.

உகூ. அயனிட்ட எழுத்தில் அணுவளவுந் தப்பாது

அரசன் மகப் பேறு

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். வெகுநாள் அவனுக்கு மக்கட்பேறு இல்லை. இறுதியாக ஓர் ஆண்மகன் பிறந்தான். குழந்தை பிறந்தவுடனே அரசன் காலக் கணிதர்களைக் கூப்பிட்டு மகனுடைய பிறந்த நாட்பலனை விவரித்துரைக்கக் கட்டளையிட்டான்.

முதலையால் சாவு

உடனே அவர்கள், குழந்தையின் பிறந்த நாட் குறிப்பை ஆராய்ந்து பார்த்துவிட்டு அரசனை நோக்கி, "அரசே! காலக்கணிதநூல் பொல்லாதது. உள்ளதை உள்ளவாறு உரைத்தால் கேட்பவர்களுக்கு மிகுந்த வருத்தமாக இருக்கும். எங்களுக்கு ஏன் இந்தப் பிறந்த நாட்குறிப்பைக் காட்டினீர்கள்?" என்று வருத்தத்துடன் கூறினார்கள். அரசன் அவர்களைப் பார்த்து, "அஞ்ச வேண்டாம் நடக்கிறது நடக்கிறபடி நடக்கட்டும்; உள்ளதை உரையுங்கள்;" என்றான். உடனே அவர்கள், "அரசே! இந்தப் புதல்வனுக்குப் பதினாறுவது அகவையில் முதலையால் சாவு நேரிடும்" என்று கூறினார்கள்.

அரசனுடைய ஏற்பாடு

அவ்வாறு சொல்லிவிட்டு அவர்கள் சென்றதும் அரசன் தனக்குள்ளேயே எண்ணமிடலானான். 'நல்லது இருக்கட்டும். முதலையால் நம் மகனுக்குச் சாவு என்றால் குளம் குட்டைகள் ஆறுகள் முதலியவை இருக்கிற இடத்தில் வைத்தாற்றானே நம்முடைய மகன் இறப்பான்?' என்றும் எண்ணினான். தனது ஊருக்கு அண்மையில் இருநூறு அடி உயரமுள்ள ஒருசிறு குன்றில் ஒரு சிங்காரத்தோட்டமும் வீடும் அமைத்தான். அகவை நான்கு ஆனதுமுதல் தன்னுடைய மகனை அதில் இருக்கச் செய்துவிட்டான். அந்தக் குன்றின்மேல் இருக்கும் வீட்

டிற்கு எல்லாவகையான பொருள்களும் போகும். இளவரசன் அந்த இடத்திலேயே இருப்பான். குன்றைவிட்டு நூறு அடிக்குக் கீழ் அவன் இறங்காதபடி அரசன் கட்டளையிட்டிருந்தான். அவனுடைய வேலைக்காரர்களும் அவ்வாறே கருத்துடன் பாதுகாத்தார்கள். சிறு பையனுயிற்றே! படிப்பு முதலியவைகள் சரிவர நடக்கவேண்டுமே, அதற்காக அரசன் பல ஆசிரியர்களை ஏற்படுத்தியிருந்தான். இளவரசன் தனிமையில் ஏங்காதிருக்குமாறும் சேர்ந்து படிப்பது விளையாடுவது முதலியவற்றிற்கும் தன்னுடைய குருவின் மகன் ஒருவனையும் கூடச்சேர்த்து விட்டிருந்தான். இந்த இளவரசனும் குருமகனும் எல்லாக் கலைகளையும் சேர்ந்து படித்துவந்தார்கள். இளவரசனுடைய அகவையும் குருமகனுடைய அகவையும் ஏறக்குறைய ஒன்றுதான். குருமகன் இளவரசனுக்கு ஏழு நாள் இளையவன்.

பாதுகாப்பு

இவ்வாறு இரண்டுபேரும் உடன்பிறந்தவர்களைப் போல் சேர்ந்து படிப்பதும் விளையாடுவதும் குளிப்பதும் தூங்குவதுமாக ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் இனிது வளர்ந்து வந்தார்கள். அரசனல் ஏற்படுத்தப்பெற்ற ஆட்களும், மற்ற வேலைக்காரர்களும் இவ் விருவர்களும் அந்தக் குன்றைவிட்டுக் கீழே இறங்காதபடி பாதுகாத்து வந்தார்கள். என்றைக்காவது சிறிது மழைபெய்து அந்தக் குன்றின்மேல் முழங்கால் அளவு தண்ணீர் ஏதாவது ஒரு சிறு பள்ளத்தில் தங்கினலும் வேலைக்காரர்கள் அதில் மண்ணைவெட்டிக் கொட்டி மூடிவிடுவார்கள்.

ஒருநாள்தான் பாக்கி

இந்த இரண்டு இளைஞர்களுக்கும் ஏன் தாங்கள் இவ்வாறு குன்றின்மேல் வசிக்கும்படி வந்ததென்பதை அறிய வழியில்லை. இரண்டொரு தடவை அவர்கள் தங்களுடைய வேலைக்காரர்களைக் கேட்டபோது "அகவை பதினறு முடியும் வரையில் அஃதாவது, உங்கள் படிப்பு

முடிவு பெறுகிற வரையில் இந்த இடத்திலேயே குன்றை விட்டு இறங்காமல் இருக்குமாறு அரசருடைய கட்டளை," என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இவ்வாறு பதினைந்து ஆண்டுகளும் 364 நாட்களும் நடந்துவிட்டன.

அரசன் இறுமாப்பு

'இன்னும் ஒரே ஒருநாள்தான் பாக்கி, அகவை பதினாறு முடிவதற்கு. இன்னும் ஒருநாள் போய்விட்டால் முதலைவாயில் நம்முடைய மகனுக்குச் சாவு என்று நான் முகன் எழுதிய எழுத்துத் தவறிவிடும்' என்று அரசன் இறுமாப்புக்கொண்டிருந்தான். அரசனுடைய இறுமாப்பு நீடித்து நிற்கவில்லை. மேலே நடந்ததைப் பாருங்கள்.

நீராடல்

இவ்வாறாக அன்றைக்கு இளவரசனும் குருமகனும் தங்களுடைய காலைப்படிப்பை முடித்துக்கொண்டு சாப்பிடுவதற்கு முன்பு நீராடுவதற்காகத் தாங்கள் நாடோறும் நீராடும் கல் தொட்டியில் இறங்கினார்கள். அந்தத் தொட்டி இரண்டு அடி உயரம் உள்ளது. அதில் பத்துப் பன்னிரண்டு குடம் தண்ணீர் ஊற்றப்பட்டிருக்கும். நாள் தோறும் இந்த இரண்டு சிறுவர்களும் அதில் இறங்கிச் சிறிதுநேரம் நீராடுவது வழக்கம். அப்புறம் தொட்டியை விட்டு வெளியில் வந்ததும் ஆளுக்கு இரண்டு மூன்று குடம் தண்ணீர் ஊற்றிக்கொண்டு நீராடலை முடிப்பார்கள். இவ்வாறு சிறிய தொட்டி ஒன்று இளவரசனுடைய வேண்டுகோளின்படி அரசனால் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு அமைக்கப்பட்டிருந்தது. அஃதாவது இளவரசன் 11, 12 ஆண்டுச் சிறுவனாக இருக்கும்போது இளவரசனுடைய வேண்டுகோளின்படி அரசன் அமைத்துக் கொடுத்திருந்தான். குளம், குட்டை, ஆறு முதலியவைகளை இவர்கள் கண்டதில்லையாகையால், இச் சிறு தொட்டியிலாவது இவர்கள் நீராடிக் களிக்கட்டும் என்பது அரசனுடைய எண்ணம். இவ்வாறு அமைக்கப்பட்டிருந்த தொட்டியே இளவரசனுடைய சாவுக்குக் காரணமாகிவிட்டது.

முதலைக்கு இரையாதல்

நான்கைந்தாண்டுகளாக இந்த இரண்டுபேரும் நீராடியதுபோலவே அன்றும் நீராடினார்கள். தண்ணீரில் இறங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசன், 'கோ'வென்று கதறினான். அவனோடு நீராடிய குரு மகனைக் காணோம். எல்லோரும் இஃதென்ன புதுமையென்று திகைப்படைந்தார்கள். உடனே இளவரசனை வெளியில் தூக்கினார்கள். அவனோடு ஒரு முதலை இருக்கிறதையும், அஃது இளவரசனுடைய வலதுகாலைப்பற்றி முழங்கால் வரையில் விழுங்கிவிட்டதையும் கண்டார்கள். துன்பம் பொறுக்க முடியாமல் இளவரசன் மாண்டான். தொட்டியில் இருந்த தண்ணீரை வெளிப்படுத்தினார்கள். இளவரசனை முதலையோடு வெளியில் எடுத்துப்போட்டார்கள்.

நான்முகன் எழுத்து

அந்த முதலையை அடிப்பதற்கு எல்லோரும் தடியை ஓங்கினார்கள். அன்றைக்கு அரசனும் அங்கு வந்திருந்தபடியால் தொட்டியண்டை ஓடிவந்து ஒன்றுந் தெரியாமல் நின்றான். தடியை ஓங்கினவுடனே முதலை எல்லோரும் வியப்படையுமாறு மனிதப்பேச்சால் பேசத்தொடங்கிற்று. "நான்தான் குருவினுடைய மகன். நீங்கள் பலவகையான ஏற்பாடுகள் செய்து இளவரசன் முதலைக்குத் தப்புமாறு ஏற்பாடுகள் செய்வீர்கள் என்றே நான்முகன் என்னைக் குரு வயிற்றில் பிறப்பித்தான். நான்கைந்தாண்டுகள் இளவரசனோடு இருக்கச் செய்ததும் இன்று இவனை விழுங்குவதற்குத்தான். நான்முகன் தான் எழுதிய எழுத்துப்படிதான் இன்று இளவரசனை நான் விழுங்கச் செய்தான். நீங்கள் என்மீது சினங்கொள்வதிற் சிறிதும் பயன் இல்லை. ஊழ்வினையைக் கடக்க மனிதர்களால் முடியுமோ?" என்று கூறி மறைந்துவிட்டது.

அரசன் வருத்தம்

இதனைப் பார்த்தும் கேட்டும் எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள். குருவின் மகன் இளவரசனிடம்

பேரன்பு பாராட்டி உடன் வசித்திருந்த காரணம் இப்பொழுதுதான் எல்லோருக்கும் விளங்கியது. அரசன், "அயனிட்ட எழுத்தில் அணுவளவும் தப்பாது," என்று சொல்லிப் புலம்பி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தன் அரண்மனைக்குத் திரும்பினான். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்னுந் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாக்கில் எவ்வளவு உண்மையிருக்கிறது பார்த்தீர்களா?

உஎ. விடாமுண்டனும் கோடாமுண்டனும்

கோடாமுண்டன்

ஓர் ஊரில் பஞ்சாங்கப் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் வெளியிலே சென்று, அந்தணர்களுக்கு உணவு செய்துவைப்பதாகக் கூறி எல்லோரிடமிருந்தும் பத்துப்படி அரிசி பிச்சை வாங்கிக்கொண்டு வருவான். யாராவது சாப்பிடுவதற்கு வந்தால், "நாளைக்கு வாருங்கள். இன்றைக்குப் பத்துப்பேர்களுக்கு முன்னாடியே ஏற்பாடாகிவிட்டது," என்று சொல்வான். என்றைக்கு யார் வந்தாலும் இவ்வாறுதான் சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிடுவான். ஒரு நாளாவது ஒருவருக்காவது அவன் ஒரு கவளம் சோறும் போட்டறியான். கண்டபடி மிகுதியாக அரிசியைக் கொண்டுவருகிறதும், கணவனும் மனைவியும் வயிறுவெடிக்கச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறதும், இன்று பிராமண போசனம் என்று சொல்லி, "அவனை ஏய்த்து அவ்வளவு அரிசி கொண்டு வந்தேன், இவனை ஏய்த்து இவ்வளவு அரிசி கொண்டு வந்தேன்," என்று கொடுத்தவர்களையெல்லாம் தனக்குள்ளேயே கேலி செய்து காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான். இந்தப் பஞ்சாங்கப் பார்ப்பானுக்குக் 'கோடாமுண்டன்' என்று பெயர்.

விடாமுண்டன்

அதே ஊரில் 'விடாமுண்டன்' என்னும் பெயருடைய வேருேர் அந்தணன் இருந்தான். அவன், எவன் கொடுக்காமல் கள்ளத்தனஞ்செய்து மக்களை ஏய்த்து வருகிருனே அவனிடமே சென்று வேண்டியதை வாங்கி வருவது வழக்கம். கொடாமுண்டன் என்னும் பஞ்சாங்கப் பார்ப்பான் செய்யும் காரியங்கள் எப்படியோ அவன் காதில் விழுந்தன. 'கொடாமுண்டனுடைய வீட்டில் எப்படியாவது போய்ச் சாப்பிட்டுவிட்டு வரவேண்டும்' என்னும் எண்ணம் அவனுக்கு நன்ருக உண்டாகிவிட்டது.

முண்டனும் முண்டனும்

ஒருநாள் காலையில் விடாமுண்டன் என்பவன் கொடாமுண்டனுடைய வீட்டிற்குச்சென்று, "இன்று தங்களுடைய இல்லத்தில் உணவு கொள்வதற்கு வந்தேன்," என்று தெரிவித்தான். அதற்குக் கொடாமுண்டன், "இன்றைக்குப் பத்துப் பெயருக்குச் சொல்லியாகிவிட்டது. நாளைக்கு வாருங்கள்," என்று சாக்குச் சொன்னுன். "அப்படியே ஆகட்டும்," என்று ஒப்புக்கொண்டு விடாமுண்டன் 'இன்று போனல் போகட்டும்; நாளைக்குப் பார்த்துக் கொள்ளுவோம்' என்று எண்ணிக்கொண்டு திரும்பிப் போய்விட்டான். மறுநாள் விடாமுண்டன் அதே நாழிகைக்குச்சென்று, "நேற்றுச் சொன்னபடி இன்றைக்கு வந்தேன்," என்ருன். கொடாமுண்டன், 'இவனிடம் இன்றைக்கு நாளைக்கு என்னும் சாக்குச் சரிப்படாதுபோல் இருக்கிறது. வேறு ஏதாவது போக்குக் காட்டி அனுப்பி விடவேண்டும்' என்று எண்ணினுன்.

சூழ்ச்சி

வீட்டிற்குட்சென்று மனைவியைக் கலந்து எண்ணினுன். தலைவலி என்று தன் மனைவியைப் படுக்கையில் படுக்கச்செய்து வெளியில் வந்தான். விடாமுண்டனைப் பார்த்து, "நேற்றுத் தங்களை வரச்சொன்னேன், உண்மையே. ஆனல் இன்று அந்தணர்கட்கு அன்னதானம்

இல்லை. என் மனைவிக்கு இரவு முதற்கொண்டு கொடிய தலைவலி உண்டாகியிருக்கிறது. மறுபடியும் அவளுக்கு உடல்நலம் ஏற்பட்ட உடனே சொல்லியனுப்புகிறேன். தாங்கள் வந்து சாப்பிடலாம்," என்று சொன்னான். இம் மொழிகளைக் கேட்டதும் விடாமுண்டன், "வெகு நன்றாக இருக்கிறது. இந்தச் சிறிய காரணத்துக்காகச் சாப்பாடு போடுவதை நிறுத்தலாமா? எனக்குச் சமையல் வேலை மிக நன்றாகத் தெரியும். இதோ வேட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு மடைப்பள்ளிக்குப் போகிறேன். நீங்களும் வாருங்கள். நாம் இருவரும் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு உங்கள் மனைவிக்குப் பத்தியம் போடுவோம்," என்று சொன்னான்.

சமையல் செய்தல்

விடாமுண்டன் விளம்பியதைக் கேட்ட கொடாமுண்டன், 'இஃதேது இவன் பிடிவாதக்காரனாக இருக்கிறான். நல்லது! நம்முடைய மனைவிக்கு வருத்தமில்லாமல் சமையல் வேலையை முடித்துக்கொண்டு இவனுக்குச் சோறு போடாமல் ஓட்டிவிடுவோம்' என்று முடிவு செய்தான். "வாரும் நாம் இருவரும் சமையல் செய்வோம்," என்று கொடாமுண்டன் விடாமுண்டனை அழைத்துக்கொண்டு சமையல் செய்வதற்குச் சமையல் அறைக்குச் சென்றான். இருவரும் கூடிச் சமையல் செய்தார்கள். சமையல் வேலை முடிந்தபிறகு கொடாமுண்டன் விடாமுண்டனைப் பார்த்து, "சாப்பிடுவதற்கு இலை இல்லை. எனக்கு மட்டும் ஓர் இலை இருக்கிறது. நீங்கள் வெளியே போய் உங்களுக்கு ஓர் இலை தேடிக் கொண்டு வாருங்கள்," என்று கூறினான். விடாமுண்டன் "அப்படியே ஆகட்டும்," என்று ஒப்புக்கொண்டு இலை கொண்டுவருவதற்கு வெளியே சென்றான்.

மேலுஞ் சூழ்ச்சி செய்தல்

விடாமுண்டன் இலைகொண்டு வருவதற்கு வெளியே சென்றதும் கொடாமுண்டன் தன்னுடைய மனைவியைப்

பார்த்து, " அடியே! நான் உனக்கு வருத்தம் இல்லாமல் அந்தப் பார்ப்பானை வைத்து வேலேவாங்கிவிட்டேன். இப்பொழுது இலே கொண்டுவருவதற்கு அவனை அனுப்பியிருக்கிறேன். அவனுக்குச் சோறுபோடாமல் ஓட்டிவிட்டால்தான் நமக்குப் புகழுண்டாகும். கதவை மூடிக்கொள்வது தவறு. அவன் வந்ததும் நீ என்னிடம் சண்டைபோடு. நான் உன்னைப் பொய்யாகப், "படார் படார்" என்று அடிக்கிறேன். நீ தேம்பித் தேம்பி அழு; இவைகளையெல்லாம் அந்தப் பார்ப்பான் பார்த்துவிட்டு, 'நமக்குச் சோறும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்' என்று ஓடிப்போவான். பிறகு நாம் இருவரும் சாப்பிட்டுவிட்டுக் களித்திருப்போம்," என்றுகூறி முடித்தான்.

கள்ளப்போர்

இதற்குள் விடாமுண்டன் இலேவாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தான். இவன் வந்து சேர்ந்ததும் கணவனும் மனைவியும் கலந்தெண்ணி முடிவு செய்துவைத்திருந்தபடி கள்ளப்போரை மெள்ளத் தொடங்கினார்கள். எலியையும் பூனையையும்போல் போரிட்டார்கள். மனைவியானவள் கணவனைப் பார்த்து, "வந்தவன் போனவனுக்கெல்லாம் வடித்துக்கொட்டுவதற்கு இங்கென்ன மலேமலேயாகவா குவித்து வைத்திருக்கிறது? கண்டவனுக்கெல்லாம் தண்ட பிண்டமாக எதற்காகக் கொட்டவேண்டும்? நாளைக்குச் சோற்றுக்கு ஓர் அரிசிகூட வைக்காமல் வந்த தடியர்களுக்கெல்லாம் வடித்துக்கொட்டுங்கள். வீட்டில் இருக்கிறவர்கள் வாயில் மண்ணைத் தெள்ளிப் போடுங்கள்," என்று இவ்வாறு சொல்லிக் கத்தத் தொடங்கினாள்.

கணவனானவன், "ஆ அப்படியா சொல்லுகிறாய்? பார்ப்பானுக்கு நான் சோறுபோட்டால் உன்னுடைய அப்பன் வீட்டுப் பொருள் என்ன குறைந்தது?" என்று சொல்லி அவள் இருக்குமிடத்திற்கு ஓடினான். இரண்டு கையையுஞ் சேர்த்துச் சுவரின்மேல் 'அறை அறை' என்று அறைந்தான். அதற்கு அவள், "ஓ" என்று கூச்சலிட்

டாள். "ஐயோ பாவி கொல்லுகிறானே. இந்த ஊரில் கேள்வி முறை இல்லையா?" என்று சொல்லி அலறினாள்.

விடாமுண்டன் பதுங்கியிருத்தல்

விடாமுண்டன் இந்தக் கபட நாடகத்தை வெளியில் இருந்தபடியே கவனித்தான். 'நாம் எதிரில் இருந்தால் யாராவது இந்தச் சண்டைக்குச் சாட்சியாகக் கூப்பிடு வார்கள். கண் மறைவாய் இந்தப் பரண்மீது ஏறி உட் கார்ந்திருப்போம்' என்று நினைத்தான். மடைப்பள்ளிக் குப்போய் எருமுட்டைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்த பரணின் பேரில் ஏறி உட்கார்ந்தான். கணவன் கைந் நோகும் வரையில் சுவரில் அறைந்தான். அவன் மனைவி யும் இடைவிடாமல் அழுதாள். சிறிது நேரஞ்சென்றது. கொடாமுண்டன் வெளியில்வந்து பார்த்தான், விடா முண்டனைக் காணவில்லை. கொடாமுண்டனுக்கு மிகுந்த களிப்பேற்பட்டுவிட்டது. அவன் தன் மனைவியைப் பார்த்து, "அடியே! அவன் தொலைந்தான். உனக்குப் பசியாக இருக்கலாம். நாம் இருவரும் உட்கார்ந்து சாப் பிடுவோம் வா," என்றான். இரண்டு இலைகளை எதிரெதி ராகப் போட்டுக்கொண்டு பந்தி பரிமாறினார்கள்.

விடாமுண்டன் வெளிப்படுதல்

உட்காரப் போகும்போது கணவன் தன்னுடைய மனைவியைப் பார்த்து, "நான் உன்னை நோகாமல் அடித் தேன்," என்றான். அதற்கவள், "நான் ஓயாமல் அழு தேன்," என்றாள். பரணியில் இருந்து இம் மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த விடாமுண்டன், "நானும் போகா மல் வந்தேன்," என்று சொல்லித் திடீர் என்று கீழே குதித்து மனைவிக்காகப் பரப்பப்பட்டிருந்த இலையில் வந்து உட்கார்ந்தான். இதைக் கொடாமுண்டன் பார்த்து, "நாம்தான் 'கொடா முண்டன்' என்னும் பெயரை ஒழுங் காகக் காப்பாற்றி வருகிறோம் என்றால் இவனும், 'விடா முண்டன்' என்னும் பெயரைச் சரியாகக் காப்பாற்றி வருகி றான்," என்று அவனுக்கும் உணவளித்தான்.

இக் கதை, "நோகாமல் அடித்தேன், ஓயாமல் அழுதேன், போகாமல் வந்தேன்," என்னும் பழமொழிகளுக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லப்படுகிறது. கணவன் மனைவியாக உலகில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பவர்கள் இவர்களைப்போலக் குடித்தனம் நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தினால் பழியுண்டாகும். இல்வாழ்க்கையில் இருப்பதெல்லாம் பிறருக்கு உணவிடுவதற்கே என்று மனதில் எண்ணி வாழ்க்கையை நடத்தவேண்டும்.

உஅ. பிரமராட்சதன் கதை

ஓர் எளிய அந்தணன்

ஓர் ஊரில் ஓர் எளிய அந்தணன் இருந்தான். அவன் வறுமையினால் பீடிக்கப்பட்டு 'நமக்கு ஒரு வழியும் இல்லையே' என்று ஏங்கி வருந்தினான். பிறகு காசிக்குப்போவதற்குப் புறப்பட்டான். வழியில் சாப்பிடுவதற்காகச் சிறிது கட்டுச்சோறு கட்டிக்கொண்டு சென்றான். போகும்போது வழியில் ஒரு தோப்பைக் கண்டான். அவ்விடத்தில் சிறிது நேரம் இளைப்பாறி யிருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று முடிவு செய்தான். உடனே கட்டுச்சோற்று மூட்டையைக் கீழே வைத்துவிட்டு ஓரிடத்தில் சிறுநீர் கழிப்பதற்காக உட்கார்ந்தான்.

பிரமராட்சதன் மறியல்

அந்தணன் உட்கார்ந்தவுடன் ஓர் ஒலி, "உட்காராதே மறியல்," என்று கேட்டது. இஃதென்னவென்று சிறிது நேரம் எண்ணமிட்டான். பிறகு ஒன்றுக்கு இருந்துவிட்டுப் பக்கத்தில் இருந்த ஒரு குளத்திற்குச்சென்று வாய்கொப்பளிக்கப்போனான். மறுபடியும், "கொப்பளிக்காதே மறியல்," என்றோர் ஒலி கேட்டது. இதைப் பொருட்படுத்தாமல் வாய்கொப்பளித்துவிட்டுத் தான் கொண்டுவந்திருந்த கட்டுச்சோற்றைச் சாப்பிடத் தொடங்கினான்: மறுபடியும், "சாப்பிடாதே மறியல்" என்றோர் ஒலி கேட்

டது. இதையும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டுவிட்டு வழக்கம்போல் வழி நடையைத் தொடங்கினான். அப்போதும், "போகாதே மறியல்" என்று ஒலி கேட்டது.

நீயார்

அந்தணன் சிறிது நேரம் நின்று, 'இஃதென்ன புதுமை! ஒலி மட்டும் கேட்கிறதே தவிர ஒருவரையுங் காணோமே,' என்று எண்ணினான். பிறகு, "நீ யார்? ஏன் இவ்வாறு மறியல் செய்து ஓலமிடுகிறாய்?" என்றான்.

நான் ஒரு பிரமராட்சதன்

அதற்கு அங்கு மரத்தின்மேல் இருந்த ஒரு பிரம ராட்சதன் இவனைக் கூப்பிட்டு, "நான்தான் அவ்வாறு கூறினேன். இங்கே வா," என்று சொல்லிக் கூப்பிட்டான். அந்தணன் அண்மையில் வந்தவுடனே, "நான் முன் பிறப்பில் அந்தணர் குலத்தில் பிறந்தேன். இசைக் கலையில் பெரும்புலமை அடைந்திருந்தேன். ஆயினும் என்னுடைய இசைக் கலையைப் பிறருக்குக் கற்றுக்கொடுக்காமலே காலங்கழித்த குற்றத்தினால் இப்பொழுது எனக்கு இந்தப் பிறவி வாய்த்தது. இது தெய்வத்தினுடைய திருவருள். இதோ கூப்பிடுதொலையில் ஒரு கோவில் இருக்கிறது. அதில் உள்ள வாத்தியக்காரன் தனது நாதசுரத்தைச் சரியான இசையோடு வாசிக்காமல் தன் மனம்போனபடி தாறுமாறாக வாசிக்கிறான். அஃது என்னுடைய காதில் நாராசம்போல் விழுகிறது. சிறிதுகூடப் பொறுக்க முடியவில்லை. நெடுநாட்களாக இந்த அபசுரத்தைக் கேட்டுக்கேட்டு என் உடல் முழுவதும் சல்லடைக் கண்கள்போல் துளைக்கப்பட்டு மிகவும் வருந்துகிறேன். இன்னுஞ்சிறிது நாளைக்கு இவ்வாறே காலங்கழிப்பேனாகில் தற்கொலை செய்துகொண்டு சாகவேண்டியதுதான். ஆகவே நான் உன்னைவேண்டிக்கொள்வது என்னவெனில், என்னை ஒரு காத வழிக்கு அப்பால் தூக்கிக்கொண்டு போய் விடுவாயாகில் உனக்கு மிகுந்த நல்வினையுண்டு," என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

கைம்மாறு

பிரமராட்சதன் கூறியவைகளைக் கேட்ட அந்தணன் மனம் இரங்கினான். "நல்லது; உன் விருப்பப்படியே நான் உன்னை வேறிடத்திற்குத் தூக்கிக்கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். ஆனால் நீ எனக்கு அதன்பொருட்டு ஏதாவது கைம்மாறு செய்யவேண்டும்," என்று சொன்னான். அவ்வாறே செய்வதாகப் பிரமராட்சதன் இசைந்தான். அந்தணன் பிரமராட்சதனைத் தூக்கிக்கொண்டு போய்க் காதவழிக்கு அப்பால் இருந்த ஒரு பெரிய மரத்தின்மீது விட்டான். அவ்வாறு விடவே பிரமராட்சதன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அந்தணனைப் பார்த்து, "நீ வறுமையால் அடையுந் துன்பத்தை நீக்கிவிடுகிறேன். நான் மைசூர் அரசனின் பெண்ணைப்போய்ப் பிடித்துக் கொள்ளுகிறேன். யார்வந்து ஓட்டினாலும் போகிறதில்லை. நீ வருவாயாகில் உன்னைக் கண்டதும் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு ஓடிப்போகிறேன். அதனால் உனக்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும். ஆனால் ஒன்று; நான் பிறகு வேறே யாரையாவது போய்ப் பிடித்துக்கொண்டால் அங்கே நீ வருவாயாகில் உன்னைக் கொன்றுபோடுவேன். வீண் அவாவினால் உயிரைப் போக்கிக்கொள்ளாதே; நீ காசிக்குப் போய்விட்டுவா," என்றான்.

பேயோட்டுதல்

அந்தணன் வழிநடந்து காசியை அடைந்தான். கங்கையில் நீராடிக்கொண்டு சிலகாலம் தங்கியிருந்தான். பிறகு தன்னுடைய ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் பிரமராட்சதன் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது. மைசூரை அடைந்து அங்கு ஓர் அம்மையார் வீட்டில் தங்கியிருந்தான். அவ் வம்மையாரைப் பார்த்து, "இந்த ஊரில் ஏதேனும் புதுமை உண்டா?" என்று கேட்டான். அதற்கு அந்த அம்மையார், "அப்பா! ஒரு புதுமை உண்டு. இந்த ஊர் அரசன் பெண்ணைப் பேய்பிடித்துக்கொண்டிருக்கிறது. ஒருவராலும் அதனை விரட்டமுடியவில்லை. அதனால் அரசன்

மிகுந்த கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறான். யார் தன்னுடைய பெண்ணைப் பிடித்திருக்கும் பேயை ஓட்டுகிறார்களோ அவர்களுக்குத் தகுந்த நன்கொடை வழங்குவதாக எங்கும் விளம்பரப்படுத்தியிருக்கிறான்,'' என்று சொன்னாள்.

அந்தணன் இதனைக் கேட்டான். 'நமக்கு நல்லகாலம் வந்தது' என்று எண்ணி மகிழ்ந்தான். அரசனிடம்போய்த் தான் பேயை ஓட்டிப் பெண்ணைக் குணப்படுத்துவதாகச் சொன்னான். இதனைக்கேட்ட அரசன் அந்தணனுடைய மொழியில் நம்பிக்கை வைக்கவில்லை. ஆயினும் இருக்கட்டும் பார்ப்போம் என்று அரைமனதாக எண்ணினான். அந்தணனைப் பார்த்து, "அவ்வாறே ஓட்டுவாயாக,'' என்று கூறித் தன் உடன்பாட்டையும் நல்கினான்.

அந்தணன் இளவரசி இருக்கும் இடத்திற்குச் சென்றான். அந்தப்பெண்ணைத் தனியாக விட்டுவிட்டு எல்லோரையும் அப்புறம் போகுமாறு கூறினான். அவர்களும் அவ்வாறே அகன்றார்கள். அந்தணன் உள்ளே சென்றதும் பிரமராட்சதன் இவனைப்பார்த்து, "நீ வருவதற்காகவே இவ்வளவு நாள் காத்திருந்தேன்; இனிமேல் ஓடிப் போகிறேன். நான் கூறியது உன்னுடைய நினைவில் இருக்கட்டும். வேறே எங்கேயாவது நான் போகிற இடத்திற்கு வருவாயானால் கொன்றுபோடுவேன். அவ்வாறு வராமல் விழிப்புடன் இரு,'' என்று சொல்லி அறிவுறுத்திவிட்டு ஓடிப்போய்விட்டான். பேய் நீங்கிப்போகவே எல்லோரும் மிகுந்த களிப்படைந்தார்கள். அரசன் அந்தணனுக்கு ஐந்தாறு சிற்றூர்கள் முழு உரிமையுடன் கொடுத்தான். இதைக்கொண்டு அந்தணன் திருமணஞ் செய்துகொண்டு பிள்ளைகுட்டிகளுடன் நலமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

திருவனந்தபுரத்திற்குச் செல்லுதல்

இவ்வாறாக ஓடிப்போன பிரமராட்சதன் திருவனந்தபுரத்து அரசன் மகளைப் போய்ப் பிடித்துக்கொண்டான். அவ்வரசன் பிரமராட்சதனை ஓட்டுவதற்கு எவ்வளவோ

முயற்சிகள் செய்தான். என்ன முயற்சி செய்தும் ஓட்ட முடியவில்லை. அப்பொழுது அவ் வரசனுக்கு மைசூர் நாட்டில் பேயோட்டின அந்தணன் ஒருவன் இருக்கிறான் என்று செய்தி தெரிந்தது. அந்த மாயாவியை அனுப்ப வேண்டும் என்றும், அனுப்பினால்தான் நல்ல வெகுமதி செய்தனுப்புவதாகவும் மைசூர் அரசனுக்கு ஓலை அனுப்பினான். இந்த ஓலையைக் கண்டவுடன் மைசூர் அரசன் அந்தணனை வரவழைத்தான். திருவனந்தபுரத்திற்குப் போகுமாறு கட்டளையிட்டான். இதனைக்கேட்ட அந்தணன் அஞ்சினான். 'அந்தோ நம்முடைய உயிருக்குத் தொல்லைவந்துவிட்டதே. ஆயினும் என்ன செய்யலாம். போகமாட்டேன் என்றால் அரசனுக்குச் சினம் உண்டாகி விடும். மற்றும் நம்முடைய பெருமைக்குஞ் சிறுமை வரும். இவ்வாறு இங்கே சிறுமைப்படுவதைவிடத் திருவனந்தபுரத்திற்குச்சென்று பிரமராட்சதனுக்கு உயிரைக் கொடுப்போம்' என்று முடிவு செய்தான். தனக்குப் பிற்காலம் தன் மனைவி மக்களுக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு மிகுந்த வருத்தத்துடன் திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டான். அங்கு இரண்டு திங்கள்வரை, "நாள் சரியாக இல்லை; கோள் சரியாக இல்லை," என்று பொய்க்காரணங்கள் கூறிக் காலங்கடத்தினான். பிறகு வேறு வழியில்லாமல் பேயோட்ட வேண்டியதாயிற்று.

பேயை மிரட்டுதல்

அந்தணன் தன்னுடைய மனதைத் திடப்படுத்திக் கொண்டான். தன்னுடை உயிரைக் கடவுளுக்கு உரிமையாக்கினான். பேய் பிடித்திருக்கும் பெண் இருக்கும் அறைக்குட் சென்றான். இவனைக் கண்டவுடனே பிரமராட்சதன் "கொன்றுவிடுகிறேன் பார்" என்று கூறி அங்கிருந்த ஒரு பெரிய இருப்புலக்கையைத் தூக்கிக்கொண்டு வந்தான். அப்பொழுது அந்தணன் பேயை மிரட்டிப் பேசத் தொடங்கினான். துன்ப காலத்தில் திடீரென்று சிலருக்கு நல்ல சூழ்ச்சித் திறன்கள் தோன்றும். அத்தகைய சூழ்ச்சித் திறமை அந்தணனுக்குந் தோன்றியது. அவன்

பிரமராட்சதனைப் பார்த்து, "ஓ பிரமராட்சதனே! நீ இப்பொழுது பேசாமல் ஓடிப்போகிறாயா? அல்லது அந்த வாத்தியக்காரனைக் கூப்பிடட்டுமா?" என்றான். "வாத்தியக்காரனைக் கூப்பிடட்டுமா?" என்ற ஒலி காதில்விழுந்தவுடனே பிரமராட்சதன் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்விட்டான். பெண்ணின் உடம்பு நலமடைந்துவிட்டது. அரசன் மிகவும் மனம் மகிழ்ந்து அந்த அந்தணனுக்குச் சிறந்த நன்கொடைகள் வழங்கினான். இவைகளையெல்லாம் அந்தணன் பெற்றுக்கொண்டு மைசூரையடைந்து தன் மனைவி மக்களோடு நலமாக வாழ்ந்திருந்தான்.

உகூ. முச்செவிடர்கள்

கணவனும் மனைவியும்

ஒரு சிற்றூரிலே ஒரு பார்ப்பானும் அவனுடைய மனைவியும் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் முழுச்செவிடர்கள். அவர்கள் தங்களுடைய சமையல் திட்டத்தை ஒரு நாளைக்குப் புளியில்லாக் குழம்பு, ஒரு நாளைக்குப் புளியிட்ட கீரைக் கூட்டு என்று முடிவு செய்து அவ்வாறே சமைத்துச் சாப்பிட்டு வந்தார்கள். ஒரு நாள் கணவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். புளியிட்ட கீரைக்கறி மிகச் சுவையாக இருப்பதைக் கண்டான். அதே கீரைக் கறியை மறுநாளுஞ் சமைக்குமாறு மனைவியிடங் கூறியிருந்தான். செவிட்டு மனைவி கணவனுடைய கட்டளையைத் தெரிந்துகொள்ளவில்லை. வழக்கம்போல் புளியிடாத கீரைக் கூட்டையே அன்று சமைத்தாள். சாப்பாட்டிற்கு உட்கார்ந்த கணவன் தன் கட்டளைப்படி புளியிட்ட கீரைக்கறி சமைக்கப்படாமல் இருப்பதைக் கண்டான். அவனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. கீரைக் கறியைச் சுவரின்மேலே எடுத்தெறிந்தான். மிகுந்த சினத்துடன் வெளியே புறப்பட்டான். மனைவி மட்டும் நன்றாகச் சாப்பிட்டாள். பிறகு புளியிட்ட கீரைக்கறி சமைத்தாள்.

இரண்டு செவிடர்கள்

சினத்துடன் வெளியேறிய செவிடன் முச்சந்தி ஒன்றிலேபோய் உட்கார்ந்தான். சினம் அடங்கி அமைதி பெறுவதற்காகவே அவன் அங்குப்போய் உட்கார்ந்தான். அப்பொழுது அவ்வழியே மாடுமேய்ப்பவன் ஒருவன் வந்தான். அந்த மாடு மேய்ப்பவனும் முழுச்செவிடனே. அந்த மாட்டுக்காரன் மேய்த்துக்கொண்டிருந்த பசுமாடு ஒன்றும் அதனுடைய கன்றுக்குட்டியும் சில நாட்களுக்கு முன்னர்க் காணுமற் போய்விட்டன. அவன் அவைகளைத் தேடிக்கொண்டுதான் அங்கு வந்தான். முச்சந்தியிலே செவிடன் உட்கார்ந்திருப்பதைக் கண்ட மாடுமேய்ப்போன் அந்தச் செவிடன் ஒரு சோதிடனுக இருக்கக்கூடும் என்று எண்ணிக்கொண்டு அவனிடம் நெருங்கினுன். அவனைப் பார்த்து, "ஐயா சோதிடரே! என்னுடைய மாடுங்கன்றுங் காணுமற்போய்விட்டன. எங்கே தேடினுல் அவைகள் அகப்படக்கூடும் என்பதைத் தங்களுடைய சோதிடத்தினுலே கண்டுபிடித்துச் சொல்லவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

சோதிடம்

மாட்டுக்காரச் செவிடன் யாது கூறுகிருன் என்பதை உட்கார்ந்திருந்த செவிடன் உணர்ந்துகொள்ளவில்லை. அவன் சொல்வது இன்னதென்று தெரியாமல் இருக்கும் போதே அவனை வைதான். தனக்குத் தொல்லை கொடுக்கக்கூடாதென்று கூறிக்கொண்டே தன்னுடைய கையை மாட்டுக்காரனுடைய முகத்திற்கு நேரே நீட்டினுன். இதனை மாடு மேய்ப்போன் 'கன்றும் பசுவும் உள்ள திக்கை அவன் சுட்டிக்காட்டுவதாக' எண்ணிக்கொண்டான். "நீங்கள் காட்டிய திக்கில் மாடுங் கன்றும் அகப்பட்டால் கன்றைத் தங்களுக்குக் கொடுக்கிறேன்," என்று கூறிவிட்டுச் செவிடன் சுட்டிக்காட்டிய திக்கில் சென்று மாட்டையுங் கன்றையுந் தேடிப்பார்த்தான். எதிர்பாராதவாறு மாடுங் கன்றும் அங்கோரிடத்தில் மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளைக் கண்டு மாட்டுக்காரச் செவிடன் மகிழ்ந்தான்.

இடையன் மகிழ்ச்சி

உடனே அவன், 'சரி சோதிடத்தில் ஐயர் மிகக் கெட்டிக்காரர்தாம். அவருக்குக் கன்றைக் கொடுத்து விடவேண்டியதுதான்,' என்று உள்ளத்தில் முடிவுசெய்து கொண்டு முச்சந்திக்கு வந்தான்.

செவிட்டாட்டம்

அங்கு உட்கார்ந்துகொண்டிருந்த பார்ப்பானைப் பார்த்து, "சாமீ! உங்களுடைய சோதிடம் பலித்தால் கன்றுக்குட்டியைக் கொடுப்பதாகக் கூறினேன் அன்றோ? உங்களுடைய சோதிடம் பலித்தது. கன்றுக்குட்டியை ஒப்புக்கொள்ளுங்கள்," என்று சொன்னான். அந்தக் கன்றுக்கு ஏதோ காரணத்தால் வால் சிறிது கூழையாக இருந்தது. கன்றுக்குட்டியைச் சுட்டிக்காட்டிய இடையன் வால் பக்கமாக அதிகஞ் சுட்டிக்காட்டியபடியால் உட்கார்ந் திருந்த செவிடன் அதற்கு வேறு பொருள் கற்பித்துக் கொண்டான்.

"ஓகோ நாம் நம்முடைய வீட்டில் மனைவியானவள் நாம் சொன்னபடி கேட்கவில்லையென்று சினங்கொண்டு இங்கு வந்தால், இந்த இடையன் தன்னுடைய கன்றுக்குட்டியின் வாலை முறித்துவிட்டதாக வீண்பழி போடுகிறான்," என்று எண்ணினான். 'தனக்கு அந்தச் செய்தி ஒன்றுந்தெரி யாது' என்று சொல்லிக் கையை விரித்தான். இவன் கையை விரித்ததின் பொருளை இடையன் வேறாக எண் ணிக்கொண்டான். அஃதாவது, 'பார்ப்பான் கன்றுக் குட்டி போதாதென்றும் பசுவையே. கொடுக்கவேண்டும்' என்று கேட்பதாகவும் முடிவு செய்துகொண்டான். 'ஓகோ இவனுக்குப் பேரவா மிக அதிகமாக இருக்கிறது' என்று நினைத்தான். "என்ன சோதிடரே! மிகுந்த பேரவா உடையவராக இருக்கிறீர்? நான் கன்றைக் கொடுப்ப தாகச் சொன்னேனேயல்லாமல், மாட்டைக் கொடுப்ப தாகச் சொல்லவில்லையே. உமக்கு ஏன் இவ்வளவு அவா?" என்று கேட்டான்.

அறியாப்போர்

பார்ப்பான், "கன்று வாலை நான் முறிக்கவே இல்லை. வீணாக என் தலைமேல் பழிபோடாதே," என்றான். இடையன், "நான் கன்று கொடுப்பதாகச் சொன்னேனே அல்லாமல் மாடு கொடுப்பதாகச் சொல்லவில்லை," என்றான். இவ்வாறு இரண்டுபேரும் சொற்போரிட்டுக்கொண்டு நின்றார்கள்.

குறும்பன் கொள்ளை

அப்பொழுது குறும்பன் ஒருவன் அந்தப் பக்கமாக வந்தான். அவன் தொலைவிலே நின்று இவர்களுடைய போரைக் கவனித்தான். அவனுக்குச் செய்தி நன்றாக விளங்கிவிட்டது. 'இந்த மக்குகளின் நடுவில் நாம் ஊதியம் அடையலாம்' என்று முடிவு செய்தான். போரை விலக்கிச் சமாதானம் செய்துவைப்பவனைப்போல் இடையே புகுந்தான். இடையனைச் சிறிது அப்பால் அழைத்துக் கொண்டுபோய், டமாரம் அடித்தாற்போல், அவனுடைய காதுகளிலே, "நீ அஞ்சாதே; சும்மா போய்விடு; சோதிடர்கள் எல்லோரும் அப்படித்தான். அவா மிகவும் பொல்லாதது. நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போய்விடு. நான் எப்படியாவது சரிப்படுத்திக் கன்றுக்குட்டியைக்கொடுத்து விடுகிறேன்," என்று சொன்னான். இடையன், "நீங்கள் மிக நல்லவர்கள். அவனுடைய பேரவாவிலே இடி விழ; நான் கன்றுக்குட்டியைக் கொடுத்தால் போதாது என்கிறான். எப்படியாவது கன்றை அவனிடம் கொடுத்து விடுங்கள்," என்று கூறிவிட்டு மாட்டை ஓட்டிக்கொண்டு 'செத்தேன் பிழைத்தேன்' என்று வீடுபோய்ச்சேர்ந்தான். அவன் சென்ற பிறகு குறும்பன் கன்றுக்குட்டியோடு, சினத்துடன் உட்கார்ந்திருக்கும் பார்ப்பானிடம் வந்து அவனுடைய காதில் டாமாரம் அடித்தாற்போல், "அவன் போகிற விரைவைப் பார்த்தாயா? அடுத்த ஊர்ப் பட்டா மணியக்காரன் அவனுக்கு மாமாவாம். வீட்டிலே மாட்டைக் கட்டிவிட்டு, நீ வால் முறித்த செய்தியை உசாவுவதற்கு அவனை அழைத்துவரப் போகிறான். நீ சிறிதும்

அஞ்சவேண்டாம். நான் எப்படியாவது சரிப்படுத்தி விடுகிறேன். அவன் வருவதற்கு முன்னரே நீ வீட்டிற்குப் போய்ச்சேர்," என்று சொன்னான். பெண்டாட்டியோடு சினந்துகொண்டு வந்திருந்த செவிடன் இதைக்கேட்டுத் திடுக்கிட்டான். 'இன்று யாருடைய முகத்திலே விழித்தோமோ தெரியவில்லை. வீட்டிலோ மனைவி பிண்டத்திலே மண் போட்டாள். வெளியிலோ கன்றுக்குட்டியின் வாலை முறித்ததாக வீண் பழி வந்து சேர்ந்தது. இன்றையப்பொழுது நல்ல பொழுதாகப் போகவேண்டுமே! கடவுளே நீதான் துணை' என்று வீட்டிற்கு வந்து சேர்ந்தான். குறும்பனோ 'நாம் இன்று நரி முகத்திலே விழித்தோம் என்பதற்குச் சிறிதும் ஐயமே இல்லை' என்று களிப்புடன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

சுவருக்கீரை

கணவன் வீட்டிற்கு வந்ததும் மனைவி வரவேற்றுப் போற்றினாள். சாப்பிடுவதற்கு இலையிலே உட்காரவைத்தாள். வறியவர்களாகையால் முன்போட்ட இலையிலேயே இப்பொழுதும் உட்காரவைத்தாளேயல்லாமல் வேறு இலை போடவில்லை. கணவன் உட்கார்ந்து சாப்பிடும்போது முன் புளியிட்டகீரை போட்டிருந்த இடத்தில் விரலால் வழித்து நாக்கிலே தடவினான். மிகவும் நன்றாக இருந்தது. மனைவியைப் பார்த்துப், "புளியிட்டகீரை கொண்டு வா பார்ப்போம்," என்றான். மனைவி முன்னரே சாப்பிட்டுவிட்டபடியால் இல்லையென்று கையை விரித்தாள். கணவன் சினந்துகொண்டு, "சுவரின் கீரையை வழித்துப் போடடி சொரணைகெட்ட வெள்ளாட்டி," என்று சொன்னான். அவளும் அவ்வாறே வழித்துப்போட்டாள்.

முடிவுரை

இக் கதையில் இருந்து இரண்டு பழமொழிகள் நமது தமிழ் மொழியில் பிறந்துவிட்டன. (1) 'முச்செவிடர் கதையாய் முடிந்தது' (2) 'சுவரின் கீரையை வழித்துப் போடடி சொரணைகெட்ட வெள்ளாட்டி.' இவற்றுள் முதற்

பழமொழி ஒருவரை ஒருவர் சரியாக அறிந்துகொள்ளாமல், தவருன எண்ணத்தில் ஏதாவது ஒரு காரியத்தை ஒன்றிருக்க ஒன்ருகச் செய்துவிட்டால் அவர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது பழமொழியோ முதலில் ஒன்றைப் பெரிதாக விரும்பி அது கிட்டாத போது சிறியதைத் தேடி வருபவர்களுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

---

௩௦. வாயால் வல்லவன் கையால் வல்லவன்

இரண்டு வல்லவர்கள்

ஓர் ஊரில் இரண்டு வல்லவர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவனுடைய பெயர் வாயால் வல்லவன். அவன் யாரோடும் வாயாலேயே எதிர்த்துத் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக்கொண்டு வந்துவிடுவான். மற்ருெருவனுக்குக் கையால் வல்லவன் என்று பெயர். அவன் தன்னுடைய வாயைத் திறந்து ஒரு பேச்சுக்கூடப் பேச மாட்டான். கைப்பலத்தால் முடிக்கக்கூடிய காரியத்தைக் குறைவின்றி முடித்து வருவான். இவர்கள் இருவரும் ஒருநாள் ஒன்றுகூடிஞர்கள். "நாம் இருவரும் சேர்ந்திருந்து சிறிது நாள் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் உன்னிடம் வந்தேன் அண்ணு," என்று கையால் வல்லவன் வாயால் வல்லவனிடஞ் சொன்ஞன். அவன் அதற்கு உடன்பட்டான். இப்படியே இவர்களிருவரும் உடன்பிறந்தார்களைப்போல ஒத்து வாழ்ந்து வந்தார்கள்.

கடாப்பலி

இவ்வாறு இருக்கையில் ஒருநாள் கையால் வல்லவன் வாயால் வல்லவனைப் பார்த்து, "நாளை துர்க்கைக்கு ஒரு கடாப் பலி கொடுக்கவேண்டும். இன்றிரவு எங்கேயாவது போய்க்கொண்டுவர என்ன சூழ்ச்சி?" என்ருன். அதற்கு வாயால் வல்லவன், "இங்கிருந்து சிறிது தொலைவில் ஓர் இடையன் ஆட்டுக்கிடை வைத்திருக்கிருன். அங்குப்

போய்க்கொண்டுவருவோம்,'' என்று சொல்லி எப்பொழுது பொழுது போகப்போகிறது என்று பார்த்திருந்தான்.

கிடைக்குச் செல்லுதல்

பொழுது போனவுடன் சிறிது விரைவாகச் சாப்பிட்டுவிட்டு வாயால் வல்லவன் கையால் வல்லவன் இருவரும் அந்த ஊருக்குக் கிழக்கே இரண்டு நாழிகை வழி தொலையில் மறிக்கப்பட்டிருக்கிற ஓர் ஆட்டுக்கிடைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இடையன் சூழ்ச்சி

அப்பொழுதுதான் அந்த ஆட்டு இடையன் தன் கிடையை நன்ருய் மறித்து ஆட்டுக்கிடைக்கு எதிரில் ஒரு கோலை நாட்டிக் கம்பளியை அதன்பேரில்போட்டு, "பையா! நான் வீட்டிற்குப்போய்க் கஞ்சி குடித்துவிட்டு வருகிறேன். திருடன் கிருடன், புலி கிலி, முனி கினி ஆகிய இவைகள் வந்து ஆட்டைக் களவு செய்துகொண்டு போகாமல் பார்த்துக்கொள்,'' என்று சொன்னன். அங்குப் பையனும் இல்லை ஒன்றுமில்லை. கம்பளி போட்டிருக்கும் கம்பைப் பார்த்துப் பேசிய பேச்சுத்தான் அது.

புலியும் முனியும்

அன்று அந்தக் கிடைக்குள் ஒரு புலி ஒரு முனி ஆகிய இரண்டும் வந்திருந்தன. இடையன் புலி கிலி என்று சொன்ன சொல்லைக்கேட்டுப் புலியானது 'புலிதான் நாம் ஆயிற்று. கிலி என்பது என்ன? அஃது ஒருக்கால் நம்மை எடுத்துக்கொண்டுபோனல் என்ன செய்கிறது' என்று ஏக்கம் பிடித்துப்போய்ப் படுத்துக்கிடந்தது. முனியும், "ஓகோ நாம் இதுவரையில் கினியைப்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. இப்போது நாம் முனிக்கோலத்தோடேயே இருந்தால் ஒருகால் கினிவந்து நம்மைத் தூக்கிக்கொண்டுபோனலும் போய்விடும். ஆகவே நாம் ஆட்டுக்கடா வடிவம் எடுத்து ஆடுகளோடு ஆடுகளாகப்

படுத்துக்கிடப்போம்," என்று முடிவு செய்து அவ்வாறே ஆடாகிப் படுத்துக்கொண்டிருந்தது.

திருடர்கள்

இந்தப் புலியும் முனியும் கிலிக்கும் கினிக்கும் அஞ்சியதுபோல் கையால் வல்லவன் திருடன் கிருடன் என்று இடையன் சொன்னதைக் கேள்விப்பட்டு வாயால் வல்லவனைப் பார்த்து, "திருடன்தான் நாமாக இருக்கிறோம் கிருடன் என்பது யார்?" என்று கேட்டான். வாயால் வல்லவன் இவன் படும் ஐயத்தைக் கண்டு உள்ளத்தில் நகைத்துக்கொண்டு, "திருடன் நீ. கிருடன் நான்," என்று சொல்லி இவனுடைய ஐயத்தைப் போக்கினான். பிறகு, "அந்தப் பையன் இருக்கிறானே என்ன செய்கிறது," என்று கையால் வல்லவன் அஞ்சினான். அதற்கு வாயால் வல்லவன், "இல்லை; அது பையனல்ல. கம்பைக் காட்டி அச்சுறுத்திவிட்டுப் போனானேயல்லாமல் உண்மையான பையன் அவ்விடம் இல்லை," என்றான்.

முனியைத் தூக்குதல்

இவ்வாறு தடைவிடைப் பேச்சுக்கள் நிகழ்ந்த பிறகு இருவரும் கிடைக்குள் புகுந்தார்கள். ஒவ்வொரு ஆடாகத் தூக்கித் தூக்கிப் பார்த்தார்கள். "இது பயனில்லை: அது பயனில்லை," என்று எல்லாவற்றையும் தள்ளிவிட்டுக் கொழுத்த ஆடுபோல் படுத்திருக்கும் முனியிடம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வந்து முனியாகிய ஆட்டைத் தூக்கவே முனிக்கு, "ஓகோ கினி என்பது இதுதான் போல இருக்கிறது. நாம் ஆட்டுருவமாகியும் நம்மைக் கண்டு இழுக்கிறதே," என்று நடுநடுங்கி நின்றது. வாயால் வல்லவன், "இது நல்ல ஆடு. ஊன் நிரம்பக் கிடைக்கும்; இதைத் தூக்கு," என்று சொல்லி அந்த ஆட்டைக் கட்டிக் கையால் வல்லவன் தலையில் வைத்தான். கையால் வல்லவன் அதை மிகுந்த துன்பப்பட்டுத் தூக்கிக் கொண்டுபோனான். இருவரும் வீட்டை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

முனி ஓடிப்போதல்

கையால் வல்லவன் தலையில் இருந்த முனியானது சிறிது சிறிதாக அவனைத் தொல்லைப்படுத்தத் தொடங்கிற்று. உடனே கையால் வல்லவன், "அண்ணா! மார்பை அடைக்கிறது. இஃது ஆடில்லைபோல் தெரிகிறது. ஆடாக இருந்தால் இவ்வளவு பளுவாகக் கனக்கமாட்டாது," என்று சொன்னான். வாயால் வல்லவனுடைய மனத்துக்குள் அச்சம் இருந்தபோதினும் 'இந்தச் சமயத்தில் அச்சப்படுவதாகக் காட்டிக்கொள்வது தவறு' என்று எண்ணினான். கையால் வல்லவனைப் பார்த்து, "எடு கத்தியை, வீட்டில் அறுக்கும் ஆட்டை இங்கேயே அறுத்துக் கொண்டு போவோம்," என்றான். உடனே முனி அச்சமடைந்து ஓடிப்போய்விட்டது. இந்தக் கள்ளர்களும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

முனி மற்றைய முனிகளுக்கு மொழிதல்

ஓடின முனி தன் இனத்தார்களிடஞ்சென்று, "இந்த ஊரில் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் இரவு நான் அகப்பட்டுக்கொண்டு பிழைத்து வந்தது மறுபிறப்பாகிவிட்டது," என்று சொல்லி முறையிட்டுக் கொண்டது. அதற்கு அந்த முனிகளெல்லாம் கூடிப் பிழைத்துவந்த முனியை எள்ளி நகையாடி, "யாரோ ஓர் அறிவற்ற மனிதன் கையில் அகப்பட்டுக்கொண்டு என்னவோ அவர்களைப் புகழ்ந்து பேசுகிறாயே," என்றன. அதற்குத் தப்பிவந்த முனி, "நீங்கள் இப்பொழுது இப்படித்தான் சொல்லுவீர்கள். நீங்களும் பட்டிருந்தால் உங்களுக்குந் தெரிந்திருக்கும்," என்று கூறிற்று. அதற்கு மற்றைய முனிகள் எல்லாம், "நல்லது நாளை இரவு பார்ப்போம்," என்று சொல்லின.

முனிகள் வருதல்

மறுநாள் இரவு வாயால் வல்லவன் தன் மனைவி மக்களோடு வீட்டுக்குள்ளே படுத்திருந்தான். கையால் வல்லவன் அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் படுத்திருந்தான்.

முனிக்கூட்டங்களெல்லாம் இந்த மனிதர்கள் கையில் அகப்பட்டுத் தப்பிவந்த முனியை அழைத்துக்கொண்டு இந்த வல்லவர்கள் வீட்டிற்குவந்து வாசலில் நான்கு, கொல்லையில் நான்கு, முற்றத்தில் நான்கு என்று வளைய வளைய வந்துகொண்டிருந்தன. கையால் வல்லவன் விழித்துக்கொண்டு பார்த்தான். தன் முன்பு முனிகள் சுற்றிக்கொண்டு திரிவதை நோக்கினான். மெதுவாக நகர்ந்து வாயால் வல்லவன் படுத்துக்கொண்டிருக்கும் அறைக்குப் பக்கமாகச் சென்றான். முற்றத்தில் முனிகள் நடமாடுவதைத் தெரிவித்தான்.

முனியை விரட்டச் சூழ்ச்சி

வாயால் வல்லவன் எழுந்தான். தன் மனைவியை எழுப்பி அவளிடம், "அடியே! நான் 'சமையலாயிற்று' என்கிறேன். அதற்கு நீ 'ஆயிற்று.' என்று மறுமொழி கூறு: நான் மீண்டும் 'என்ன சமையல்!' என்று கேட்கிறேன். "ஓர் இரசமும் பருப்புத் துவையலும் செய்துவைத்திருக்கிறேன்'' என்று சொல்லு. அதற்கு நான் 'பையன் பள்ளிக்கூடத்தில் இருந்து வரும்போது மூன்று முனி பிடித்து வந்தானே அவைகள் எங்கே' என்கிறேன். நீ அவைகளை அவன் சுட்டுத் தின்றுவிட்டான் என்று சொல்,'' என்று ஏற்பாடு செய்துவிட்டு விளக்கை ஏற்றிவைத்தான். சொல்லியிருந்தபடி மனைவிக்கும் கணவனுக்கும் உரையாடல் நடைபெற்றது. இவர்களுடைய உரையாடலை முனிகள் கேட்டன. 'பிள்ளையே மூன்று முனிகளைச் சுட்டுத் தின்றிருப்பானாயின் பெரியவர்கள் எத்தனையைச் சுட்டுத் தின்னமாட்டார்கள்' என்று நடு நடுங்கி ஓடிப்போய்விட்டன. உடனே முதல்நாள் கிடையில் அகப்பட்டுத் தப்பிப்போன முனி, "நான் அப்பொழுதே சொன்னேனே,'' என்றுகூறி எள்ளிநகையாடிற்று. எல்லா முனிகளுங் கூடி, "இனிமேல் நாம் இந்த நாட்டில் இருப்பது சரியன்று; வடக்கே ஓடிவிடவேண்டும்,'' என்று முடிவு செய்து வடக்கே ஓடி, அங்கொரு காட்டில் திரிந்துகொண்டிருந்தன.

வல்லவர்கள் வடநாடு செல்லுதல்

வல்லவர்கள் இருவரும் சிறிது நாள் இருந்துவிட்டுப் பிறகு வடநாட்டிற்குப் புறப்பட்டார்கள். ஒருநாள் வழி நடந்துபோய்க்கொண்டிருக்கையில் ஒரு காட்டில் பொழுது போய்விட்டது. வாயால் வல்லவனும் கையால் வல்லவனும் அந்தக் காட்டிலேயே இரவைக் கழிக்கவேண்டியவர்களானுர்கள். தீய விலங்குகளுக்கு அஞ்சி ஒரு பெரிய மரத்தின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். நள்ளிரவில் முனிகளெல்லாம் அந்த மரத்தடிக்குவந்து தங்களுடைய ஆடல் பாடல்களைத் தொடங்கின. கையால் வல்லவன் முனிகளைக் கீழே கண்டதும் கைகால்கள் நடுங்கிக் கீழே விழுந்தான். இவன் விழுவதை வாயால் வல்லவன் பார்த்துப், "பிடித்துக்கொள் பெரிய முனியை விடாதே விடாதே," என்று கத்தினுன்.

முனிகள் மேலும் ஓடுதல்

உடனே முனிகளெல்லாம் நம்முடைய பகைவர்கள் இங்கும் வந்தார்கள் என்று நடு நடுங்கி ஓடிவிட்டன. கையால் வல்லவன் வாயால் வல்லவனுடைய ஆற்றலைக் கண்டு வியப்படைந்து, "'ஆகா உன்னை வெல்ல ஒருவராலும் முடியாது. நீ வாயால் பெரிய பெரிய வேலைகளைச் செய்கிருய். நீயே மிகவும் கெட்டிக்காரன்,'' என்று வாயால் வல்லவனைப் புகழ்ந்து போற்றினுன்.

கருத்து

கைப்பலத்தைக் காட்டிலும் வாய்ப்பலம் சிறந்தது. கைப்பலம் மட்டும் இருப்பதால் பயனில்லை. கைப்பலத்தோடு வாய்ப்பலமும் இருந்தால்தான்,"பொன்மலர் நாற்றமுடைத்து,'' என்பதற்கு ஏற்பச் சிறப்பினையடையும். எத்தனையோ பேர் பெருந்தடியர்களாக இருந்தும் ஒன்றுஞ் செய்யமுடியாமல் திண்டாடுகிருர்கள். "பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக் குறின்'' என்னும் திருக்குறள் ஈண்டு எண்ணிப் பார்க்கத் தக்கது.

௩௧. சொக்கா! சொக்கா!! சோறுண்டோ?

முன்னுரை

இந்தப் பழமொழியை எல்லாத் தமிழர்களும் சொல்லுகிறார்கள். ஆனால் இதை ஒட்டிய கதை சில பேருக்குத்தான் தெரியுமாகையால் அதை எல்லாரும் அறியச் சொல்லுகிறேன்.

குடியானவன்

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவளை ஒரு குடியானப் பையனுக்கு உள்ளூரிலேயே திருமணஞ் செய்து கொடுத்தான். இளைய பெண்ணை அயலூரில் சிறிது சாப்பாட்டுக்குள்ள ஒரு சோழியனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். சிறிது நாட்களுக்குப் பிறகு இந்தப் பெண்களினுடைய தகப்பனான கிழக் குடியானவன் இறந்து போனான். மூத்த பெண்ணின் கணவன் ஏதோ காய்ச்சல் நோயால் துன்பப்பட்டு அவனும் இறந்து போய்விட்டான். இளைய பெண் மட்டும் தன் கணவனோடு அச் சிற்றூரில் நலத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

மூத்தவள்

தகப்பனும் கணவனும் இறந்து போய் விடவே மூத்த பெண்ணுக்குத் துன்பம் மேலிட்டது. கூலிக்கு நெல் குத்தும் தொழிலைச் செய்து வந்தாள். மூத்தவள் இளையவள் இரண்டு பேருக்குமே பிள்ளைகள் இல்லை. மூத்தவள் நாள் தோறும் காலையில் நெல்லுக் குத்தும் கூலிக்காரிகளுடன் வெளியே புறப்பட்டுப் போய்ப் பொழுது போகிறதற்குள் இரண்டு படி அரிசி கூலியாகப் பெற்றுக் கொண்டு வருவாள். மிகவும் வறியவளானபடியால் விளக்கு ஏற்றி வைப்பதற்குக்கூட வழியில்லாமல் அடுப்பு மூட்டி இரண்டு படி அரிசியையும் பானையிற் போட்டுப்

பொங்குவாள். பிறகு கை கால்களைக் கழுவிக் கொண்டு பொங்கின சோற்றை அப்படியே வைத்துக் கொண்டு உண்ணத் தொடங்குவாள். இவள் இரண்டு கவளம் சாப்பிடுவதற்கு முன்பு பானைச் சோறு ஆகிவிடும். வயிறும் நிரம்பாது. இவ்வாறு வெகு நாளாகத் துன்பப் பட்டாள். எவ்வளவு அரிசி கொண்டு வந்தாலும் வயிறு நிரம்பாமல் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

தங்கையும் தமக்கையும்

இவ்வாறிருக்கையில் அடுத்த ஊரில் இருந்து சோழி யனுக்கு வாழ்க்கைப்பட்ட தங்கையானவள் தன்னுடைய தமக்கையைப் பார்ப்பதற்கு வந்தாள். தங்கை விருந் தாளியாக வரவே, தமக்கையானவள் மேலும் மிகுதியாக நெல்லுக் குத்தி இரண்டரைப்படி அரிசியாகத் தேடிக் கொண்டு மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். தங்கையானவள் தமக்கையைப் பார்த்து, "நான் விளக் கில்லாமல் இருக்க மாட்டேன். சிறிது எண்ணெய் வாங்கிக்கொண்டு வந்து விளக்கேற்று," என்று சொன்னாள். 'இரண்டரைப்படி அரிசி மிகு தொல்லைப் பட்டுத் தேடிக் கொண்டு வந்து அதில் அரைப்படி அரிசியை எண்ணெய் வாங்குவதற்குச் செலவு செய்து விட்டால் எஞ்சிய இரண்டு படி அரிசிச் சோறு இரண்டு பேருக்கும் எவ்வாறு போதும்? எனக்கு மட்டும் இரண்டு படி அரிசி போதாமல் போகிறதே' என்று மூத்தவள் எண்ணமிட்டாள். 'ஆயினும் நல்லது பார்ப்போம்' என்று முடிவு செய்து கொண்டு எண்ணெய் வாங்கி வந்து ஓர் அகலில் திரியிட்டு விளக்கேற்றினாள். அந்த வீட்டில் அன்றுதான் முதல் முதலாக விளக்கு வைக்கப்பட்டது. மனதில் எவ்வளவு துன்பம் இருந்த போதிலும் அதனை வெளியிற் காட்டாமல் தமக்கையானவள் தான் கொண்டு வந்த இரண்டு படி அரிசியையும் சமையல் செய்ய அடுப் பில் வைத்தாள். தங்கை அவளைப் பார்த்து, "இரண்டு படி அரிசி பத்துப் பெயர் சாப்பிடலாமே. நம்மிருவருக்கும் இவ்வளவு அரிசியை ஏன் களைய வேண்டும்?" என்று

கேட்டாள். அதற்கு மூத்தவள், "இந்த இரண்டு படி அரிசி எனக்கே தினம் போதாமற் போகிறது. அவ்வாறாக, நம்மிருவருக்கும் இஃது எப்படிக் காணப் போகிறது என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டு கனேகிறேன். நீயே இதனை இப்பொழுது நேரிற் பார்க்கப் போகிறாய்," என்று இயம்பிக்கொண்டே சமையலை முடித்தாள்.

பசி அடங்கியது

இதற்குள் பொழுதுபோய் நான்கு நாழிகை ஆகி விட்டது. இரண்டுபேரும் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார்கள். பானையில் அரைக்கால் பங்குச் சோறுகூடக் குறைய வில்லை. தமக்கைக்கும் தங்கைக்கும் வயிறு நிரம்பிவிட்டது. தங்கையானவள் தமக்கையைப் பார்த்து, "நான் அப்பொழுதே சொன்னேனே. என் பேச்சைக் கேட்காமல் எதற்காக அவ்வளவு அரிசியைப் போட்டாய்?" என்று கேட்டாள். அதற்குத் தமக்கையானவள், "என்ன மாயமோ அஃது எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. நான் நாள்தோறும் இரண்டு படி அரிசி முழுவதையுஞ் சமைப்பேன். ஆனால் வயிறு நிரம்பாமல் தூங்குவேன். இன்று நீ வந்த பெருமை அரைப்படி அரிசியில் பசி அடங்கிவிட்டது," என்றாள்.

பிசாசுகள் உரையாடல்

இவ்வாறு ஆனதற்குக் காரணந்தெரியாமல் இரண்டு பேரும் எண்ணமிட்டார்கள். அப்போது ஓர் ஒலி இவர்களுக்குக் கேட்டது. யாரோ ஒரு மனிதன் மற்றொருவனைப் பார்த்துக் கேட்பதுபோல், "சொக்கா! சொக்கா!! சோறுண்டோ?" என்னும் கேள்வி காதில் விழுந்தது. அதற்கு மறுமொழியாய், "சோழியன் வந்து கெடுத்தாண்டோ," என்னும் ஒலியும் காதில் விழுந்தது. உடனே தங்கையானவள், "சொக்கா நீ யார்?" என்று கேட்டாள். அதற்கு அது "நான் ஒரு பிசாசு. நானுஞ் சொக்கன் என்னும் பிசாசும் விளக்கில்லாமல் சாப்பிடுகிறவர்

களிடம்போய், அவர்கள் சாப்பிடும் சோற்றைத் தின்பது வழக்கம். அவ்வாறே இன்றுவரையில் இங்குவந்து சாப்பிட்டோம். நீ சோழியனுக்கு வாழ்க்கைப்பட்டவளாகையால் உனக்கு எங்கள் தீமை தெரிந்து விளக்குவைக்கச் சொன்னாய். ஆகையால்தான் சொக்கன் என்னும் பிசாசு, 'சோழியன் வந்து கெடுத்தாண்டோ' என்று மறுமொழி கூறிற்று," என்றது.

முன்னோர்கள் கருத்து

இதைத் தமக்கையானவள் கேட்டு, 'ஆகா! நாம் இதுவரையில் விளக்கு வைக்காமல் சாப்பிட்டபடியினால் அல்லவோ நமக்கு இவ்வளவு துன்பம் வந்தது' என்று எண்ணி வருந்தினாள். அன்றுமுதல் விளக்கு வைத்துச் சமையல் செய்து சாப்பிடத் தொடங்கினாள். சொக்கனும் மற்றொரு பிசாசும் வராமல் நின்றுவிட்டன. ஆகையால் இருளில் சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் உணவைப் பிசாசுகள் கூடவந்து சாப்பிடும் என்பது நம்முடைய முன்னோர்களுடைய கொள்கையாகும்.

இருளில் சாப்பிடக் கூடாதென்பதற்கும் விளக்கணைந்தால் சாப்பிடக்கூடாதென்பதற்கும் இன்னும் ஒரு சிறிய கதையுண்டு. அஃது என்னவென்றால்:

முதலையின் கதை

ஓர் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவனுக்கு ஓர் அருமைப் பெண் இருந்தாள். அவள் மிக நன்றாகப் படித்தவள். அவளை நன்கு கல்வி கற்ற ஓர் அந்தணனுக்குத் திருமணஞ்செய்துகொடுத்தான். சிறிது நாளைக்குப் பிறகு அந்தப்பெண் பெரிய பெண் ஆனாள். ருது சாந்தி செய்வதற்கு ஒரு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளையைப் பெண் வீட்டிற்கு வரவழைத்தார்கள். ருதுசாந்தி நாள் அன்று மாலைவேளையில் மாப்பிள்ளையானவன் மாலைக் கடன்களை முடிப்பதற்கு ஒரு குளத்திற்குச் சென்றான். அக் குளத்தில் முதலைகள் மிக அதிகம். எவரும் அக்

குளத்தை அணுகுகிறதே இல்லை. இச் செய்தி மாப்பிள்ளைக்குத் தெரியாது. பிற குளங்களைப்போலப் பொதுவாக நினைத்துக் குளத்தில் இறங்கினன்.

முதலையும் அந்தணனும்

அந்தணன் இறங்கிய அளவில் கொடிய முதலை ஒன்று இவனுடைய காலைக் கௌவிப் பிடித்துக்கொண்டு இழுத்தது. உடனே அந்தணன், 'ஆ! ஆ!! இன்றிரவு ருதுசாந்திக்கு நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதலையோ நம்மைப் பிடித்துக்கொண்டது. நல்லது; இதனைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வோம்,' என்று எண்ணினன். முதலையைப் பார்த்து, "மாமா முதலையே! ஒரு செய்தி சொல்லுகிறேன் கேள். ஒரு தொண்டுகிழம் இன்றிரவு தன் பெண்ணை எனக்கு ருதுசாந்தி செய்து கொடுப்பதற்காக உயிரை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறது. இப்பொழுது நீ என்னைச் சாப்பிட்டுவிட்டால் அந்தக் கிழம் உன்னை வைதுகொண்டு தன்னுடைய உயிரைவிடும். என் மனைவியோ மிகுந்த மானியென்று கேள்வி. ருதுசாந்தி அன்றைக்குக் கணவன் மாண்டுவிட்டான் என்றால் அஃது அவளுக்குப் பொறுக்கக்கூடாத துன்பத்தை உண்டாக்கும். ஆகையால் இப்போது நீ என்னை விட்டுவிடுவாயானல், நான்போய் எனக்கு நேரிட்டுள்ள துன்பத்தை எல்லாருடனுஞ் சொல்லித் தேறுதல் கூறிவிட்டு உன்னிடம் நள்ளிரவில் வந்து சேருகிறேன். அப்போது நீ என்னைச் சாப்பிடலாம்," என்றான். இதைக்கேட்ட முதலையும், 'இவன் சொல்லுவது சரியாக இருக்கிறது! ஐயோ! பாவம்; ருதுசாந்தியை நாம் கெடுப்பானேன்? இப்பொழுது சாப்பிட்டால் என்ன? இரவு பதினைந்து நாழிகைக்குச் சாப்பிட்டால் என்ன?' என்று எண்ணிக்கொண்டு, அவ்வாறே தப்பாமல் வந்து சேருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு முதலை மாப்பிள்ளையை விட்டுவிட்டது.

அந்தணனும் மனைவியும்

அந்தணன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். மனைவியோடு மணையில் உட்கார்ந்து செய்யவேண்டிய சடங்குகளை

யெல்லாஞ்செய்து முடித்தான், பத்து நாழிகைக்கெல்லாம் பள்ளியறைக்குச் சென்றான். அங்குத் தன் மனைவியிடம் சிறிதுநேரம் இருந்தான். அவளிடம் முதலையின் செய்தியை மொழிந்தான். குளக்கரைக்குப் போவதற்கு உடன்பாடு கேட்டான். அதற்கு அவள் சிறிதேனும் கவலைப்படாதவள்போல் உடன்பாடு கொடுத்து அனுப்பினாள். 'சீ இவ்வளவுதானா இவளுடைய அன்பு! இத்தகைய மனைவி இருந்தால்தான் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன?" என்று வாழ்க்கையை வெறுத்தான். குளத்தங்கரைக்குச்சென்று முதலையைக் கூப்பிட்டான்.

முதலையின் விரதம்

உடனே முதலைவந்து அந்தணனுடைய காலைப் பற்றிக்கொண்டது. உடனே பளிச்சென்று வெளிச்சம் ஒன்று தோன்றி மறைந்தது. உடனே முதலை, "நான் உன்னைத் தொடமாட்டேன். இன்று நான் சாப்பிடத் தொடங்கும்போது விளக்கணைந்தது," என்று கூறி அந்தணனைவிட்டு விட்டது. மாப்பிள்ளை திரும்பிப் பார்த்தான். அவனுடைய மனைவி கண்ணும் கண்ணீருமாக நின்றாள். அவள் மேலுக்கு வெறுப்புடையவள்போல இருந்துவிட்டு உள்ளுக்குள் மிகுந்தத் துன்பப்பட்டாள். ஒரு விளக்கை யேற்றி அரிக்கன் சட்டியில் வைத்து மூடிக்கொண்டு கணவனைப் பின்தொடர்ந்துவந்தாள். அவ்வாறு அவள் வருவது கணவனுக்குத் தெரியாது. முதலை அவனைப் பிடித்துக்கொண்டதும் அரிக்கன் சட்டியில் இருந்து விளக்கை எடுத்து முதலைக்குக் காட்டி உடனே விளக்கை அணைத்து விட்டாள். நீர் வாழ் உயிராகிய அந்த முதலையும் உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டு மாப்பிள்ளையை விட்டுவிட்டது 'விலங்குகளே உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டபடியால், மனிதர்கள் இன்னும் மிகுதியாகக் கட்டுப்படவேண்டும் என்று அன்று முதல் ஏற்பாடு உண்டாகியிருக்கிறபடியால், விளக்கு அணைந்தபின் சாப்பிடக்கூடாது,' என்பதாம்.

௩௨. குபேரன் பட்டணத்தில் கோவணுண்டி இருப்பானு?

செல்வனுடைய மகன்

ஓர் ஊரில் ஒரு பெரிய செல்வன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் அந்தப் பிள்ளையை மிகவும் அருமையாக வளர்த்து வந்தான். ஒரு நாள் அந்தப் பையன் கடைத்தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது அங்குவந்த ஒரு கோவணுண்டியைப் பார்த்து, "குபேரன் பட்டணத்திலும் கோவணுண்டி இருப்பானு?" என்று வினவினுன். அதற்கு அவன், "ஆம்; இருப்பான்" என்று சொல்லிவிட்டுப் போனுன்.

கோவணுண்டியைப் பார்க்கவேண்டும்

கோவணுண்டி அவ்வாறு சொல்லிவிட்டுப் போனது முதல் 'தான் எப்படியாவது குபேரன் பட்டணத்திற்குப் போய்க் கோவணுண்டியைப் பார்த்துவிட்டு வரவேண்டும்' என்று எண்ணினுன். அன்றுமுதல் 'குபேரன் பட்டணம் போய்க் கோவணுண்டியைப் பார்க்கவேண்டு'மென்று வீட்டில் சொல்லிக்கொண்டேயிருந்தான். இவன் செய்யும் தொல்லே இவனுடைய தாயினுல் பொறுக்க முடியவில்லே. ஒருநாள் தன்னுடைய மகனேப் பார்த்து, "நீ இவ்வாறு தொல்லேசெய்துகொண்டிருப்பதைப் பார்க்கினும் அந்தப் பட்டணத்திற்குப்போய்க் கோவணுண்டியைப் பார்த்துவிட்டு வருகிறதுதானே," என்று சொன்னுள். அதற்கு அவன் இசைந்தான். "ஆனுல் எனக்கு இரண்டு தடவைக்குக் காணும்படியாய்க் கட்டுச்சோறு கட்டிக்கொடு," என்று கேட்டான். அவள் அவ்வாறே கட்டிக்கொடுத்துத் தன் பையனேக் குபேரன் பட்டணத்துக்கு அனுப்பினுள்.

குபேரன்பட்டணத்துக்குப் போதல்

சிறுவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். "குபேரன் பட்டணம் எங்கே? குபேரன் பட்டணம் எங்கே?" என்று

கேட்டுக்கொண்டே வழி நடந்து போய்க்கொண்டிருந்தான். இரண்டு நாள் இரவும் பகலும் வழி நடந்து மூன்ரும் நாள் ஓர் ஊருக்கு அண்மையில் வந்து சேர்ந்தான். அங்குப் பிச்சைக்காரனைப்போல் காணப்பட்ட ஒரு மனிதனைப் பார்த்து, "இதுதானு குபேரன் பட்டணம்?" என்று கேட்டான். அதற்கு அவன், "அதோ தெரிகிறதே அது தான் குபேரன் பட்டணம்," என்று சொன்னுன். சிறுவன் 'ஊர் நெருங்கிவிட்டது. சிறிது சாப்பிட்டுக் களையாறிச் செல்வோம்' என்று முடிவு செய்தான். அங்கு ஓடின ஒரு வாய்க்காலுக்குச்சென்று கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்தான். சிறுவனுக்கு ஊர் சொன்ன பிச்சைக் காரன் இவனிடம் வந்து, "எனக்கு இவ்வளவு சோறு கொடுக்கக் கூடாதா?" என்று கேட்டான். சிறுவன் மன இரக்கம் உள்ளவனுகையால் தன்னுடைய உணவில் பாதியைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னுன். மற்றைப் பாதியைத் தான் சாப்பிட்டான். வழி நடந்த வருத்தத் திஞல் களைப்பு மேலிடவே அங்கிருந்த ஓர் ஆலமரத்தின் கீழே படுத்து உறங்கிவிட்டான். 'பையன் பணக்காரப் பையன்' என்று முன்னரே சொல்லியிருக்கிருேமே; கையில் காப்புஞ் சங்கிலியும் போட்டுக்கொண்டிருந்தான்.

கள்ளன் கயமை

இவனிடத்தில் சோறுவாங்கித்தின்ற மனிதன் ஒரு பெருங் கள்ளன். சிறுவன் மனமிரங்கி உணவு கொடுத்த உதவியைக் கள்ளன் சிறிதும் எண்ணிப்பார்க்கவேயில்லை. நன்றிகெட்ட பன்றியாகிய கள்ளன் பையன் உறங்கின சமயம் பார்த்து மெதுவாக ஆலமரத்தடிக்கு வந்தான். அங்கிருந்த இரண்டு காரைமுட்களை எடுத்தான். தூங்கு கிற பையனுடைய இரு கண்களிலும் குத்தி அவனுடைய உயிரைப் போக்கினுன். சிறுவனுடைய காப்பையும் சங்கிலி யையும் கழற்றிக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தான். சிறுவன் எங்கும் போய் யாரிடமும் தன்னைப்பற்றிக் கூறித் தன்னைப் பிடித்துக்கொடுக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் கண்ணையுங் குத்திக் குருடாக்கிவிட்டான்.

பறவைகளின் சீரிய பண்பு

உயர்திணையாகிய மனிதன் கயமைக் குணத்தை மேற்கொண்டு, தனக்கு உணவு வழங்கிய உணக்கொடையாளியாகிய சிறுவனுடைய உயிரையும் போக்கிப் பொருளையும் கவர்ந்துகொண்டு சென்றுவிட்ட செயலை அந்த ஆல மரத்தில் அமர்ந்திருந்த இரண்டு சஞ்சீவிப் பறவைகள் கண்டன. நல்லியல்பு அமைந்த அச் சிறுவனைப் பிழைப்பிக்கவேண்டும்என்று எண்ணின. மரத்தைவிட்டு இறங்கிக் கீழே வந்து உட்கார்ந்தன. ஆண் பறவையைப் பார்த்துப் பெண் பறவை, “நாதா! நான் இடது கண்ணில் உட்காருகிறேன். நீர் வலது கண்ணிற்சென்று உட்காரும். நாம் இருவரும் மெதுவாக முட்களைப் பிடுங்கிவிட்டுச் சஞ்சீவியைப் பீச்சுவோமானல் இந்தச் சிறுவன் பிழைத்துக் கொள்ளுவான்,” என்றது. அவ்வாறே ஆண்சஞ்சீவிப் பறவை வலது கண்ணில் உட்கார்ந்து முள்ளைப் பிடுங்கியது. பெண் சஞ்சீவிப் பறவை இடது கண் முள்ளைப் பிடுங்கியது. இரண்டு கண்களிலும் பெண் பறவை சஞ்சீவியைப் பீச்சியது. பிறகு இரண்டும் மரத்தில்போய் உட்கார்ந்தன. இப் பறவைகளின் செயல் மனிதப் பண்பு வாய்ந்ததன்றோ?

சிறுவன் உயிர்பெற்றெழுதல்

கண்ணில் சஞ்சீவி விழுந்ததும் இறந்துபோன பையனுக்கு உயிர் வந்துவிட்டது. உறங்கி எழுந்திருப்பவன் போல் கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்திருந்தான். கண்ணைத் துடைக்கும்பொழுது ஒரு குன்றிமணி அளவு சஞ்சீவி மாத்திரை இவனுக்கு அகப்பட்டது. அதைத் துணியில் முடிந்துகொண்டான். கையில் இருந்த காப்புஞ் சங்கிலியும் போய்விட்டன. பையன் வெறுங்கையனுய்க் குபேரன் பட்டணம் வந்து சேர்ந்தான்.

நோயாளி அரசன்

குபேரன் பட்டணத்துக்கு அரசனுக இருந்தவன் குறை நோயுள்ளவன். யாராவது தன்னுடைய நோயைப்

போக்குவார்களானால் தன்னுடைய பெண்ணைத் திருமணஞ்செய்துகொடுத்துத் தன் அரசாட்சியையும் அவர்களுக்குக் கொடுப்பதாகப் பறையறைந்து எல்லா இடங்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தான். பட்டணம் பார்க்க வந்த சிறுவன் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டான். தன் கையில் சஞ்சிவி இருந்தபடியால் அந்த நோயைத் தீர்த்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அரசனுடைய நோயைப் போக்குதல்

அரசனைக் கண்டு தான் அவனுடைய குறைநோயைப் போக்கி நலமுண்டாகச் செய்வதாகக் கூறினான். அரசன் அதற்கு இசைந்து மருத்துவஞ் செய்யுமாறு கேட்டுக்கொண்டான். சிறுவன் உடனே தன்னுடைய சஞ்சிவியைக் காட்டிவிடக்கூடாதென்று பச்சிலைகளைக்கொண்டு மருத்துவஞ்செய்பவன்போல் பத்துநாள் பலவகை மூலிகைகளை அரசனுக்குக் கொடுத்தான். பதினோராம் நாள் ஒரு கொப்பறையில் தண்ணீர் வைத்து அதில் ஒரு கடுகளவு சஞ்சிவியைத் தூவி அதில் அரசனை உட்காரவைத்தான். அரசன் நோய் நீங்கி நலம்பெற்றான்.

மணமும் அரசாட்சியும் பெறுதல்

அரசனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனுக்குப் பிள்ளையில்லாதபடியால், அந்த முதிர்ந்த பருவத்தில், தன் பெண்ணைத் திருமணஞ்செய்துகொண்டு தன்னுடைய நாட்டை ஆள்வதற்குக் கடவுளே அந்தப் பையனை அனுப்பினரோ என்னவோ என்று மனமகிழ்ந்தான். தன் பெண்ணை அவனுக்குத் திருமணஞ்செய்து கொடுத்தான். தன் நாட்டையும் அவனுக்கு முடிசூட்டினான். அந்தச் சிறுவன் இளவரசன் என்னும் பெயரோடு அவ்விடத்தில் மிகுந்த சிறப்புடன் வாழ்ந்திருந்தான்.

கோவணாண்டி

இளவரசனாக இருக்கிற பையன் குபேரன் பட்டணத்தில் கோவணாண்டியைப் பார்க்கவந்தவனாகையால் ஒரு

நாள் தன்னுடைய அமைச்சனைக் கூப்பிட்டு, "இந்த ஊரில் கோவணுண்டி ஒருவன் இருக்கிறுனு?" என்று கேட்டான். அதற்கு அமைச்சன், இருப்பதாகச் சொன்னுன். அந்த ஊரில் ஓர் அறச்சாலையில் இருந்த ஒரு பண்டாரத்தைக் கொண்டுவந்துவிட்டான். அந்தப் பண்டாரம் நாள் தோறும் நான்கு வீடுகட்குச்சென்று பிச்சை வாங்கி உண்பது வழக்கம். அவனைக்கண்டு இளவரசன் மனம் இரங்கினுன். அவனைப் பார்த்து, "நீ இன்றுமுதல் நம்முடைய ஊரில் பிச்சையெடுக்கவேண்டாம். நம்மோடு உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப்போ," என்று கட்டளையிட்டான். ஆண்டியும் அவ்வாறே சாப்பிட்டுக்கொண்டிருந்தான். இவ்வாறு சிலகாலம் நடந்துகொண்டிருந்தது.

ஆண்டியும் அரசன் மனைவியும்

இளவரசன் சில காரியங்களை முன்னிட்டு வெளியூருக்குச் செல்லவேண்டிய வேலை ஏற்பட்டது. போகுமுன் அவன் தன்னுடைய மனைவியைக் கூப்பிட்டு, "நான் வரி வசூல் செய்யும்பொருட்டு வெளியூர்களுக்குப் போய்வர வேண்டும். நான் வரும்வரையில் நீ ஆண்டியை மறவாதே," என்று சொல்லிவிட்டுச் சென்றுன். அரசன் மனைவி ஆண்டிக்கு நாடோறும் உணவளித்துக் குறைவில்லாமல் நடத்திக்கொண்டிருந்தாள். நாட்கள் சில சென்றன. ஆண்டிக்கும் அரசன் மனைவிக்கும் கள்ள நட்பு உண்டாயிற்று. இருவரும் இன்பநலத்திலே ஈடுபட்டுக் களித்திருந்தார்கள்.

அரசியின் வஞ்சனை

நாட்கள்பல சென்றன. தான் திரும்பி வருவதாக இளவரசன் ஓர் ஆள்மூலம் ஒரு நாள் தன் மனைவிக்குச் செய்தியனுப்பினுன். அரசன் திரும்பி வந்துவிட்டால் 'தன் விருப்பம்போல் ஆண்டியோடு களித்திருக்க முடியாதே' என்று அரசி ஏங்கினுள். இரண்டு கொலையாளிகளைக் கூப்பிட்டு, அவர்களுக்கு ஆளுக்குப் பதினுயிரம் பொன் கொடுத்து, "நாளைக் காலையில் கரகம் எடுத்துக்கொண்டு காளி கோவிலுக்கு எவன் வருகிறுனே அவனை வெட்டி-

விடுங்கள்,'' என்று சொல்லித் திட்டஞ்செய்தாள். அவர்களைக் கோவிலுக்கனுப்பிக் காத்துக்கொண்டிருக்கச் செய்தாள். பிறகு தன்னுடைய வீட்டிலே கரகம் வைத்துப் பூசை செய்து அரசன் வரவை எதிர்பார்த்திருந்தாள். குறிப்பிட்டபடி அரசன் வந்தான். அரசனை வரவேற்று உள்ளே அழைத்துக்கொண்டு சென்றாள். அரசனைப் பார்த்துத், "தாங்கள் நலத்துடன் திரும்பிவரவேண்டும் என்று காளி தேவியை வழிபட்டேன். தாங்கள் நலத்துடன் வந்துசேர்ந்தால் இந்தக் கரகத்தைத் தங்கள் கையாலேயே காளிக்கு முழுக்காட்ட விரதம் பூண்டிருக்கிறேன். ஆகையால் தாங்கள் இதனைக்கொண்டுபோய்க் காளிதேவிக்கு முழுக்காட்டிவிட்டு வாருங்கள்,'' என்று சொன்னாள்.

பண்டாரம் படுகொலை

அரசன் அவ்வாறே அதை வாங்கிக்கொண்டு காளி கோவிலை நோக்கிச் சென்றான். அப்பொழுது அரசனுக்கு எதிரில் கோவணாண்டி வந்துகொண்டிருந்தான். அரசனுக்குத் தன் மனைவியைப்போய்ப் பார்க்கவேண்டும் என்கிற எண்ணம் மிகுதியாக இருந்தபடியால் 'யாராவது அகப்பட்டால் போதும் அவர்களிடம் கரகத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிவிடுவோம்' என்கிற எண்ணத்துடன் சென்றுகொண்டிருந்தான். ஆகவே, ஆண்டியைக் கண்டவுடன் கரகத்தை அவன் கையிலே கொடுத்து, "நீ இதனைக் காளிகோவிலுக்குக் கொண்டுபோய் அம்மனுக்குத் திருமுழுக்குச் செய்து வா,'' என்று சொன்னான். அரசனைக்கொல்ல அரசி செய்திருந்த ஏற்பாடு ஆண்டிக்குத் தெரியாதாகையால் ஆண்டி கரகத்தை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றான். அவ்விடத்தில் அரசியின் கட்டளைப்படி கரகங் கொண்டு வருகிறவனைக் கொல்லக் காத்துக்கொண்டிருந்த கொலையாளிகள் ஆண்டியை ஒரே வீச்சாக வீசினார்கள். ஆண்டி மாண்டு தொலைந்தான்.

இளவரசன் உண்மையறிதல்

அரசன் வீட்டிற்குத் திரும்பிவந்தான். ஆண்டிகையில் கரகத்தை அனுப்பிவிட்டதாகத் தன் மனைவியிடத்தில் சொன்னான். அஃது அவளுடைய மனதில் சுருக்கென்று தைத்தது. ‘அந்தோ நம்முடைய அன்புள்ள கள்ளக் கணவன் இதற்குள் மாண்டுபோயிருப்பானே,’’ என்று மனதில் எண்ணி வருந்தினாள். ஆயினும் அதனை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் கணவனோடு குலவுபவள் போல் நடித்தாள். ஆனால் இளவரசனுக்குத் தன் மனைவி முன்போல் இல்லை என்று ஐயம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் காளிகோவிலில் நடந்த கொலையை அங்கிருந்து பார்த்தவர்கள் வந்து அரசனிடஞ் சொன்னார்கள். தன்னைக் கொல்வதற்காகவே கொலையாளிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்திருக்கிறார்கள் என்பதை அரசன் ஊகித்து உணர்ந்து நடுநடுங்கினான். உடனே அக் கொலையாளிகளைக் கூப்பிட்டு உசாவவே உண்மை விளங்கிற்று.

ஊருக்கு மீளுதல்

அரசன் உடனே தன்னுடைய மனைவியை நன்றாகத் தண்டித்தான். “இதுவரையில் குபேரன் பட்டணத்தில் இருந்ததுபோதும்; நம்மையடுத்த கோவணுண்டியின் தகுதியும் போதும். ‘தன்வினை தன்னைச்சுடும்’ என்பதற்கு ஏற்பக் கோவணுண்டி தான் செய்த தீவினைக்குரிய பலனை நுகர்ந்தான்,’’ என்று எண்ணிக்கொண்டு தன்னுடைய சொந்த ஊரையடைந்து தாய்தந்தையர்களோடு இனிது வாழ்ந்திருந்தான். நற்செயல்களைப் புரிபவர்கள் நன்மையடைவார்கள் என்பதும் தீச்செயல்களைப் புரிபவர்கள் தீமையடைவார்கள் என்பதும் இக்கதையினால் நன்கு பெறப்படுகின்றன.

௫௫. பொறுமை பொல்லாதது

கணவனும் மனைவியும்

ஓர் ஊரில் ஓர் எளிய அந்தணன் இருந்தான். அவன் காலைமுதல் மாலைவரையில் ஐயம் எடுத்து இரண்டு ஆழாக்கரிசி கொண்டு வருவான். அவன் மனைவி அதைச் சமையல் செய்து அவனுக்கு முதலில் இட்டுப் பிறகு தான் மிகுந்ததைச் சாப்பிடுவாள். இவ்வாறு சிறிது நாள் நடந்த பிறகு ஒருநாள் மனைவி தன்னுடைய கணவனைப் பார்த்து, "இவ்வாறே நாம் எவ்வளவு காலத்திற்குத் தொல்லைப் படுகிறது? தாங்கள் வெளியிற்சென்று, எங்கேயாவது ஒரு வித்தை கற்றுக்கொண்டு நான்கு பணந்தேட வழியைத் தேடி வாருங்கள்," என்றாள்.

அந்தணன் செல்லுதல்

கணவன் அதற்கு இசைந்தான். வெளியே புறப்பட்டுப்போக முடிவு செய்தான். அன்று சிறிது அதிகமாகவே ஐயமேற்றுக்கொண்டு வந்தான். கையிற்கொண்டு போவதற்குக் கட்டுச்சோறு கட்டவேண்டும் அன்றோ? மனைவி அதனைச் சமைத்தாள்; இருவரும் சாப்பிட்டார்கள். சிறிது மிகுந்ததைக் கட்டுச்சோறு கட்டினாள். காலையிற் கணவனை எழுப்பித், "தாங்கள் எங்கேயாவதுபோய் வித்தை கற்றுக்கொண்டு வரவேண்டும்," என்று சொன்னாள். அவ்வாறே செய்ய அவன் காலையில் எழுந்து வெளியிற் சென்றான். காடு மலை முதலியவைகளைத் தாண்டிக் கடுநடையாக நடந்துபோய்க்கொண்டிருந்தான். பசி மேலிட்டுவிட்டது. அங்கு ஒரு காட்டுவழி தோன்றிற்று. அதில் சோற்றை அவிழ்த்து வைத்துக்கொண்டு நன்றாகச் சாப்பிட்டுவிட்டு அண்மையில் இருந்த ஒரு புங்க மரத்து நிழலிற் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். ஒரு நாழிகை கழித்து உறக்கந் தெளிந்து எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுது நல்ல தென்றல் வீசிக்கொண்டிருந்தது.

வித்தை கற்றல்

அந்தக் காற்றை இவன் நன்ருக வாங்கிக்கொண்டு மரத்து நிழற் கீழ் உட்கார்ந்துகொண்டிருந்தான். அச் சமயத்தில் ஒரு மாட்டுக்காரன் மாட்டை மேய்த்துவிட்டு வீட்டிற்கு ஓட்டிப் போய்க்கொண்டிருந்தான். இவன் உட் கார்ந்திருப்பதைப் பார்த்துப், "புங்கமரமாம் கொழுந்து மணல் தென்னலரே," என்று எள்ளி நகையாடிப் பாடி ஞன். இதை இந்த அந்தணன் உண்மையான பாட்டாக எண்ணி, "இஃதென்ன வித்தை?" என்ருன். அதற்கு அவன், "இது பாட்டு வித்தை" என்ருன். 'அதுவும் அப்படி இருக்கும்' என்று நினைத்துக்கொண்டு, "ஆனல் சிறிது என்னிடம் வந்து அதைக் கற்றுக்கொடு," என்று கேட்டான். அதற்கு அந்த மாட்டுக்காரன் இசைந்து அந்தணனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். புங்க மரத்தில் ஒரு பிடி தழை உருவி அவன் முந்தானையிற் கட்டி, ஒரு கை மணல் மற்ருெரு பக்கத்தில் கட்டி, "இவை இரண்டையும் எதிரில் வைத்துக்கொண்டால், உனக்கு, 'புங்கமரமாம் கொழுந்து மணல்' என்பது நினைவுக்குவந்து விடும். 'தென்னலரே' என்பதை மட்டும் உருப்போட்டுக் கொள்," என்ருன்.

வீட்டிற்குத் திரும்புதல்

அந்தணன் கேட்டு, 'ஆ ஆ நல்லது, நமக்கு வித்தை வந்துவிட்டது,' என்று நினைத்து, அவ்விடம்விட்டுச் சர சர வென்று வழியெல்லாம் உருப்போட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். மனைவியானவள் கணவன் பாடிக்கொண்டு வருவதைப் பார்த்து, "என்னவித்தை தேடி வந்தீர்கள்?" என்று ஆவலுடன் வினவினுள். அதற்கு அவன் புங்கந்தழையையும் மணலையும் அவிழ்த்து வைத்துக்கொண்டு, "புங்கமரமாம் கொழுந்து மணல் இருநூற்றிருபத்திரண்டு," என்ருனே அன்றித், 'தென் னலரே' என்று முடிக்க அறியவில்லை. உடனே அவள், "இவ்வளவுதானு நீர் கற்றுவந்த வித்தை?" என்ருள். அதற்கு அவன், "இதுவுமதுவுமடி இன்னுமொன்றுமடி,"

என்று கையைப் பிசைந்தான். அதற்கு அவள் மனம் நொந்து, "இன்றுதான் இப்படிப் போய்விட்டது. நாளைக்காவது நல்ல வித்தை தேடிக்கொண்டு வாருங்கள்," என்று சொன்னாள். அன்று இரவும் சிறிது கட்டுச்சோறு கட்டி வைத்தாள்.

இறைவனும் இறைவியும்

கணவனாகிய அந்தணன் அதனை எடுத்துக்கொண்டு மறுநாள் பயணமானான். கடுநடை நடந்து ஒரு நடுக்காட்டிற்கு வந்து சேர்ந்தான். அதற்கு முதல் நாளும் நடந்து அன்றும் நடந்தவனாதலால் கால் சோர்ந்து அங்கு ஒரு மரக்கிளையில் சோற்று மூட்டையை மாட்டிவிட்டுப் படுத்து அயர்ந்து உறங்கிவிட்டான். இவன் தூங்கும்பொழுது பார்வதி பரமேசுரர்கள் அந்த வழியாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். பார்வதிக்குச் சிறிது பசியாக இருந்தது. உடனே அவள் சுவாமியை அழைத்துக்கொண்டு அந்த மரத்தில் அந்தணன் வைத்திருந்த சோற்றை எடுத்து அண்மையில் இருந்த குளத்தண்டை கொண்டுபோய்ச் சாப்பிட்டாள்.

தெய்வத் திருவருள்

பிறகு, "ஐயோ அந்த அந்தணன் பசியால் எழுந்திருந்து வருத்தப்படுவானே என்ன செய்வேன்," என்று பார்வதி வருந்தினாள். அதைப் பரமசிவன் பார்த்தார். ஐந்து கிண்ணங்களை உண்டாக்கி அவைகளை அவனுடைய துணியில் கட்டி அவன் எந்த இடத்தில் சோற்றைத் தொங்கவிட்டிருந்தானோ, அந்த இடத்தில் கிண்ண மூட்டையைத் தொங்கவிட்டார். அந்தணன் உறக்கம் நீங்கி எழுந்தான். பசியால் களைத்தவனாய்க், கை கால்களைக் கழுவிக்கொண்டு மூட்டையை எடுத்தான். அது மிகக் கனமாக இருக்கக் கண்டான். 'இஃது என்ன புதுமையாக இருக்கிறது' என்று திகைத்தான். அதை அவிழ்த்ததும் அதில் ஐந்து கிண்ணங்கள் இருக்கக் கண்டான். உடனே அவனுக்கு மெய்யறிவு உண்டாகிவிட்டது. "ஓகோ இது

தெய்வத் திருவருள்,'' என்று எண்ணினான். கிண்ணங்களை எடுத்துத் தனித்தனியாய் வைத்தான். ஒவ்வொன்றில் இருந்தும் ஐந்து தெய்வலோகப் பெண்கள்வந்து, இவனுக்குப் பணிவிடைகள் செய்து உணவளித்தார்கள். அதைக் கண்டு அந்தணன் வியப்படைந்தான். 'இன்றுமுதல் நம்முடைய வறுமை தொலைந்தது' என்று எண்ணி மகிழ்ந்தான். கிண்ணங்களை எடுத்து மறுபடியும் அடுக்கிவைத்தான். வைத்தவுடன் தெய்வப் பெண்களும் மறைந்து போனார்கள். மூட்டையை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வரும்பொழுதே இவனுடைய முகக் குறியால் 'இவனுக்கு நல்ல ஊதியம் ஏதோ கிடைத்திருக்க வேண்டும்' என்று இவனுடைய மனைவி அறிந்துகொண்டாள். எதிர்கொண்டுபோய்ப் பணிவுடனும் சிறப்புடனும் அழைத்துக்கொண்டு வந்தாள். சென்ற செய்தியைப் பற்றி உசாவினாள். கணவன் தான் அடைந்த பொருளைப் பற்றிச் சொல்லி, "நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது,'' என்று தெரிவித்தான்.

ஊராருக்கு விருந்து

மனைவியானவள் "நமக்குச் சிறந்த பொருள் கிடைத்த நல்ல காலத்திற்காக ஊரார்களுக்கு விருந்துசெய்து வைக்க வேண்டும்,'' என்று கணவனுக்குத் தெரியப்படுத்தினாள். கணவன் அவளுடைய கருத்திற்கு இசைந்தான். "நீ காலையில் எழுந்திருந்து வீட்டைமெழுகிக் கோலம்போட்டு நீராடித்தூய்மையோடிரு; ஊர்முழுவதும்போய், இன்று 'நம்முடைய வீட்டில் விருந்து சாப்பிட வரவேண்டும்' என்று அழைத்து வா. நானும் ஆடவர்களையெல்லாம் அழைத்து வருகிகிறேன்,'' என்று சொன்னான். அவ்வாறே மறுநாட் காலையில் அவ்விருவர்களும் ஊரார்களையெல்லாம் விருந்துச் சாப்பாட்டிற்கு அழைத்துவிட்டு வந்தார்கள். ஊரார்கள் எல்லோரும், "இவர்கள் வீட்டிலாவது சாப்பாடாவது? இவர்கள் வழிமுறை வழிமுறையாக எளியவர்களாயினரே!'' என்று பேசிக்கொண்டதுடன், 'போகாமற் போனால் ஏழை என்று இழிவுபடுத்தியதாக இவன் அவ

தாறு சொல்லுவான்' என்று முடிவு செய்து அவரவர் வீட்டிலேயே நன்றாகச் சாப்பிட்டுவிட்டு எளியவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

விருந்து சாப்பிடுதல்

வீட்டில் இருந்த நிலைமையைப் பார்க்கையில் விருந்துக்கு வந்தவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நாம் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டபடியினால் பிழைத்தோம். இன்று இங்கு ஏகாதசிதான்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவ்விடத்தில் சமையல் நடைபெறும் அறிகுறி சிறிதேனும் இல்லாமலிருந்தது. உடனே வீட்டுக்கார அந்தணன் எல்லோரையும் வரிசையாக உட்காரவைத்தான். தான் உள்ளே சென்று தன்னுடைய கிண்ணங்களைத் திறந்தான். உடனே கிண்ணத்தில் இருந்து அவ்வைந்து பெயர்களாக ஐந்து கிண்ணங்களிலிருந்தும் இருபத்தைந்து தெய்வலோகப் பெண்கள் வெளிப்பட்டார்கள். வந்திருந்த அவ்வளவு மக்களுக்கும் எல்லாவகையான பலகாரங்களோடும் சிறந்த விருந்தளித்தார்கள். விருந்தின் பெருமையைக் கண்டு வந்திருந்தவர்கள் எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள், "இவன் தெய்வத்திருவருள் பெற்றவன்," என்று களித்து வீடு சென்றார்கள்.

அடுத்தவீட்டுப் பணக்காரன்

இந்த அந்தணனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் செல்வன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி தன் கணவனைப் பார்த்து "அடுத்த வீட்டு அந்தணன் கடவுளிடஞ் சென்று கிண்ணங்கள் பெற்று வந்திருக்கிறான். நீயும் ஏன் அவ்வாறு தேடிக்கொண்டு வரக்கூடாது?" என்று சொல்லி வற்புறுத்தி நெருக்கினாள். அவன் அப்படியே செய்ய எண்ணினான். அடுத்தவீட்டு அந்தணனிடம் சென்று, அவன் கடவுளிடம் எந்த இடத்தில் எவ்வாறு கிண்ணங்கள் பெற்றான் என்று உசாவியறிந்தான். பிறகு தானுங் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு அந்த இடத்திற்குச் சென்

ருன். அந்தணன் எவ்வாறு மூட்டையை மாட்டிவைத்திருந் தானே அவ்வாறே மாட்டி வைத்துவிட்டுத் தான் உறங்கு பவனைப்போல் படுத்திருந்தான். கடவுள் எப்பொழுது வரப் போகிருர் என்று அவருடைய வரவை எதிர்பார்த்தவனுக இருந்தான். அன்றைக்கும் பார்வதியும் ப்ரமசிவனும் அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்தார்கள். பார்வதி யானவள் "இன்றைக்கும் எனக்குப் பசியாக இருக்கிறது. அங்கிருக்கிற சாப்பாட்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டுப் போவோம்," என்ருள். பரமசிவன் பார்வதியினுடைய கருத்திற்கு இசைந்தார். கட்டுச்சோற்று மூட்டையை எடுத்துக்கொண்டு பார்வதியோடு குளத்துப்பக்கம் சென் ருர். அங்கு இருவருஞ் சாப்பிட்டார்கள். மிகுந்த உண வைத் தண்ணீரில் கரைத்துவிட்டார்கள்.

செல்வனுக்கு அருளுதல்

பரமசிவனுக்கு, 'உணவு கொண்டுவந்தவன் சாப்பாட் டுக்கு உள்ளவன்' என்றும், 'கெட்ட எண்ணத்துடன் வந் திருக்கிருன்' என்றும் தெரிந்துவிட்டது. ஆகவே, 'இவ னுடைய கெட்ட எண்ணத்திற்குத் தகுந்தபடி செய்ய வேண்டும்' என்று எண்ணினர். இவனுடைய மூட்டையி லும் ஐந்து கிண்ணங்களைக் கட்டிவைத்துவிட்டுச்சென்ருர். இந்த மனிதன் விழித்துக்கொண்டு படுத்திருந்தவனுகை யால் கடவுள்சென்றவுடனே மூட்டையை அவிழ்த்து பார்த் துக் கிண்ணமிருக்கக் கண்டான். 'நாம் இங்கு கிண்ணத்தை எடுக்கக்கூடாது. விட்டிற்குக் கொண்டுபோய் எல்லாரை யும் சாப்பாட்டிற்கு அழைத்துவைத்துக்கொண்டே கிண் ணங்களைப் பிரிக்கவேண்டும்' என்று கருதி வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். மறுநாள் காலையில் பெண்கள் எல் லோரையும் தன்னுடைய மனைவியைக்கொண்டு அழைத்து வரச்சொன்னன். தானும் வீடுவீடாகச்சென்று ஆட வர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வந்தான்.

மொட்டைத்தலை விருந்து

பணக்காரன் வீட்டுச் சாப்பாடாகையால் எல்லோரும் பெரிதாக மதித்து வயிற்றைக் காயப்போட்டுக்கொண்டு

விருந்திற்கு வந்து சேர்ந்தார்கள். செல்வன், வந்தவர்கள் எல்லோரையும் வரிசையாக உட்காரவைத்தான். பிறகு தான் சென்று மூட்டையை அவிழ்த்துக் கிண்ணங்களைப் பிரித்தான். உடனே ஒவ்வொரு கிண்ணத்திலிருந்தும் அவ்வைந்து நாவிதர்கள் கையில் கத்தியோடு புறப்பட்டார்கள். ஒவ்வொரு விருந்தினர் முன்னும் உட்கார்ந்து ஆடவர் பெண்டிர் என்னும் வேறுபாட்டைக் கருதாமல் வேலை செய்யத் தொடங்கினார்கள். இவர்கள் தேவலோகத்து நாவிதர்களாகையால் அகப்பட்டுக் கொண்டவர்கள் எவ்வளவு திமிறிப் பார்த்தபோதினும் தப்பித்துக் கொண்டு ஓடிப்போக முடியவில்லை. நாவிதர்கள் எல்லாரையும் நன்றாகச் சிரைத்த பிறகுதான் விட்டார்கள். வந்தவர்கள் சாப்பாட்டிற்குப் பதிலாக மொட்டைத் தலையர்களாய் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். பணக்காரன் வெட்கிப் போனான்.

முடிவுரை

கடவுள் செய்த மாயையைப் பாருங்கள். இவன் சென்றது கெட்ட எண்ணத்துடனாகையால் கடவுள் இவனை இவ்வாறு இழிவு படுத்தினார். அன்றுமுதல் அவன் ஒரு நாளும் கிண்ணங்களை எடுக்கிறதே இல்லை. இச் சிறு கதையின் கருத்துப் 'பொறாமை பொல்லாதது' என்பதாம்.

---

௨௯. அரக்கு எருமை

கணவனும் மனைவியும்

எருமைப்பாளையம் என்னும் ஓர் ஊரில் ஏங்கி என்னும் பெயருடைய ஓர் ஏழை அந்தணன் இருந்தான். அவனுக்குச் சமர்த்தி என்னும் பெயருடைய மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் தன்னுடைய பெயருக்குத் தகுந்தபடி கெட்டிக்காரி என்றாலும் எப்பொழுதும் நகை நாணயம் முதலியவைகளுக்குக் கணவனைத் தொல்லை செய்துகொண்டிருப்பாள். ஏங்கி வெளியிற்போய்ப் பல

வீடுகளில் இரந்து ஏதாவது சாப்பாட்டிற்குக் கொண்டு வருவான். அதைச் சமர்த்தி மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு குடும்பத்தை நன்ருக நடத்திக்கொண்டு வந்தாள். எளியவர்களானபடியால் எவ்வளவோ தொல்லைகள் இருக்கும். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு எவ்வாறு நடந்து தன்னுடைய கணவனைக் களிப்பிக்க வேண்டுமோ அவ்வாறு செய்வாள். இவளை எல்லோரும் நல்லவள் என்று சொல்வார்களேயல்லாமல் தீயவள் என்று யாருஞ்சொல்லமாட்டார்கள்.

நகைப்பித்து

ஆனல் பெண்கள் சிலரிடம் இருக்கும் தீக்குணம் ஒன்று இவளிடமும் இருந்துகொண்டிருந்தது. அஃது என்னவென்ருல் எப்பொழுதாவது கணவன் களிப்புடன் இருக்குஞ் சமயம் பார்த்து, "என்ன, அடுத்த வீட்டுக் குப்புவுக்கு நேற்று ஒரு கம்மல் வாங்கியிருக்கிறது. அவள் எனக்குக் காட்டினுள். அது விலை நூறு ரூபா. அவ்வளவுக்கு நாம் எங்குப் போகிறது? முப்பது முப்பத்தைந்து ரூபாயில் எனக்கு ஓர் ஓலை வாங்கக் கூடாதா?" என்பாள். அதற்குக் கணவன், "ஆம்; அவ்வளவு செல்வம் நமக்கு ஏது? நாம் நாள்தோறுஞ் சாப்பிடுவதற்கே தொல்லையாக இருக்கிறதே! இந்தப் பிறப்பில் நமக்கு அத்தகைய சிறப்பு இல்லை," என்ருல், அதற்கு அவள், "நாள்தோறும் இந்தச் சொல்தான். யார்தாம் சாப்பிடவில்லை. குப்பைக்கரை நாய்கூடத்தான் வயிறு வளர்க்கிறது. எனக்கு என்னதான் செய்திருக்கிறீர்கள். நாளைக்கு இரண்டுவேளைப் பிண்டம்; நல்ல வேளையாய் இரண்டரை ரூபாவுக்குச் சாயப்புடவை ஒன்று இப்போது ஏற்பட்டுவிட்டது. இந்தத் துணி ஆண்டுக்கு இரண்டு. அதிகம் வேண்டாம், திங்கள் ஒன்றுக்கு இரண்டு ரூபா என் கையில் கொடுங்கள். ஆண்டுக்கு என்ன ஆயிற்றுப் பாருங்கள். அஃது ஒன்றும் இல்லை. நான் எதற்குக் கேட்கிறேன், 'ஆசைக்கு இட்டால் ஆபத்துக்கு உதவும்.' நாளைக்குத் திடீர் என்று ஒரு செலவு வந்தது, யார் நமக்கு

ஒரு காசு கொடுப்பார்கள்? ஒரு தங்க நகையிருந்தால் அதை எங்கேயாவது வைத்து நான்கு காசு வாங்கலாம்," என்று சொல்லுவாள். மனதில் எவ்வளவு வருத்தம் இருந்தபோதிலும் ஏங்கி அவள் சொல்வன யாவற்றையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருப்பான். ஏங்கி தன் மட்டில் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாலும் சமர்த்தி யோடு சொற்போர் செய்யமுடியாதவனாக விழிப்பான். இத்தகைய பேச்சுக்கள் அடிக்கடி அந்த வீட்டில் நடந்து கொண்டிருந்தன.

பெண்கள் இயற்கை

பெண்கள் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தபோதிலும் சில சமயங்களில் வகை தெரியாமலும் கணவனுடைய நிலைமையை எண்ணிப் பாராமலும் பேசிவிடுவார்கள். ஆடவர்கள் இதைக் குற்றமாக எண்ணிவிடக் கூடாது. "பேதைமை என்பது மாதர்க்கணிகலம்," என்பது பெரியோர் வாக்கன்றோ?

நகைப்பேச்சு

ஒரு நாள் ஏங்கி எங்கேயோ வெகு தொலைபோய் வருத்தப்பட்டுப் பகல் பதினைந்து நாழிகைக்கு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். நீராடல் முதலியவைகளை முடித்துக் கொண்டு சாப்பிடுவதற்கு இருபது நாழிகைக்கு இலைமுன் உட்கார்ந்தான். அன்று பைத்தியக்காரத்தனமாகச் சமர்த்தி சில பேச்சுக்களை எடுத்துக் கடைசியில் நகையில் கொண்டுவந்து முடித்தாள்.

ஏங்கி காசிக்கேகல்

பார்த்தான் ஏங்கி. "ஓகோ! இனி எவ்வித முயற்சி செய்தாவது நாம் இவளுக்கு நகைசெய்து போடவேண் டும். இல்லாவிட்டால் இவள் நம்மை எளிதில்விடமாட் டாள்" என்று மனதிற்குள் முடிவு செய்தான். அன்று சாப்பிட்டுவிட்டு எழுந்தான். பதினைந்து நாழிகை வழித் தொலையில் உள்ள ஒரு பணக்காரன் வீட்டில் திருமணம்

ஒன்று வந்தது. அதற்குப் போய்விட்டு நான்கு நாள் கழித்து வருவதாகச் சொல்லிவிட்டுக் காசிக்குப் போகப் புறப்பட்டுவிட்டான். இவனுடைய எண்ணம் என்னவென்ருல் 'நாம் இரந்து நம்முடைய நாட்டில் பணஞ்சேர்க்க முடியாது. தொலே நாடுகளுக்குப்போய் அங்கு நமது போக்குப்படி வாங்கக் கூடாத தானங்கள் வாங்கிப் பணந் தேடிவந்து சமர்த்திக்கு நகைபோடவேண்டும்' என்பதேயாம், தானங்களில் தைல தானம், படுக்கைதானம் என்கிற சிலவகைத் தானங்களும் உண்டு. அவைகளே வாங்குகிறவர்களுக்கு மிகுதியாகப் பணம் கொடுப்பார்கள். அவ்வகையான தானங்கள் வாங்குவது பெருமைக்குக் குறைவு என்பது மக்களுடைய கொள்கை. தொலே நாடுகளில் வாங்கிஞல் யார் கண்டுகொள்வார்கள் என்பது ஏங்கியின் எண்ணம். இவ்வித எண்ணங்களோடுதான் ஏங்கி காசிக்குப் புறப்பட்டதும். புறப்பட்ட நான்காம் நாள், தான் காசிக்குப் போவதாகவும் பணந்தேடிக்கொண்டு இரண்டோராண்டுக்குள் திரும்பி வருவதாகவும், சமர்த்திக்குச் செய்தி சொல்லியனுப்பிவிட்டான். அவள் சிறிது நாள் மனவருத்தப்பட்டாள். 'ஐயோ சண்டாளி நான் நகை நகை என்று வதைத்து என்னுடைய கணவனே ஓட்டிவிட்டேனே! மாங்கலிய பலமிருந்தால் யாதோர் தொல்லேயும் இல்லாமல் திரும்பி வருவார்' என்று தனக்குத் தானே தேறுதல் சொல்லிக்கொண்டாள்.

பொருள் தேடிக்கொண்டு திரும்புதல்

ஏங்கி நான்கு திங்கள் வழி நடந்து காசியை அடைந்தான். அங்குத் தான் கொண்ட கருத்தின்படியே தோன்றியபடியெல்லாம் தானம் வாங்கிஞன். இவன் படும் வறுமையையும் இவன் மனேவியின் நகை விருப்பத்தையும் ஈசனே உணர்ந்து அருள் செய்தான்போலும் என்று ஊகிக்கும்படியாக, ஏங்கி காசிக்குவந்த ஓராண்டுக்குள் அவனுடைய கையில் ருபாய் இரண்டாயிரம் சேர்ந்துவிட்டது. 'போதும், பேரவா வேண்டாம்' என்று எண்ணிஞன். தன் ஊராகிய எருமைப்பாளேயத்தை நினேத்துக்கொண்டு

காசியைவிட்டுப் புறப்பட்டுவிட்டான். இரண்டு திங்கள் வழி நடந்து பூனாவுக்கு வந்து சேர்ந்தான்.

நகை செய்தல்

அவ்விடம் வந்ததும் 'போகும்போதே ஒரு நல்ல நகையாய்ச் செய்துகொண்டு போனால் தன்னுடைய மனைவி களிப்படைவாள்' என்று எண்ணினான். பூனாவில் நல்லவனான ஒரு தட்டானை வரவழைத்தான். வழிச்செலவுக்கு நூறு ரூபா மட்டும் கையில் வைத்துக்கொண்டு பாக்கிப் பணம் அவ்வளவுக்கும் பொன் வாங்கி எடைபோட்டுக் கொடுத்து நல்லமாதிரியில் பொன் வைரமணி மாலை ஒன்று நூறு மணியுள்ளதாக ஒரு வாரத்திற்குள் செய்துகொடுக்கும்படி கட்டளை செய்தான். அக்கம் பக்கத்தில் உசாவியதில் 'அத் தட்டான் மிக நல்லவன்' என்று இவனுடைய மனதில் பதிந்துவிட்டது. அதை அந்தத் தட்டானும் அறிந்துகொண்டான்.

ஊரையடைதல்

குறிப்பிட்ட காலத்திற்கு ஒருநாள் முன்னதாகவே தட்டான் வைரமணிமாலையைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டான். ஏங்கி மாலையை வாங்கித் தூக்கிப்பார்த்தான். உரைத்துப் பார்த்தான். வெகு சரியாக இருந்தது. இவனுக்கு மகிழ்ச்சி பொறுக்க முடியவில்லை. பேசிய கூலிக்கு அதிகமாக இரண்டு ரூபா ஆசாரிக்குக்கொடுத்துவிட்டு நகையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். மறுபடியும் இரண்டு திங்கள் வழி நடந்து எருமைப்பாளையத்தையடைந்தான்.

மனைவியின் மகிழ்ச்சி

ஏறக்குறைய இரண்டு ஆண்டுக்காலம் பார்க்காமல் இருந்த கணவனும் மனைவியும் ஒன்றுபட்டால் அவர்களுக்கு உண்டாகிற களிப்புக்கு அளவும் கூறமுடியுமோ? கணவனோ வெறுங்கையாக வரவில்லை. ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறும்படியான நகையுடன் வந்திருக்கிறான். சமர்த்தி பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள். இரண்டொரு நாளைப் பெருங்களிப்போடு கழித்தார்கள்.

சூது வெளிப்படுதல்

ஒரு நாள் காலையில் சமர்த்தி சமையல் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது அவள் மணியைக் கையில் தூக்கித் தூக்கிப் பார்த்தாள். பார்வைக்குத் தோன்றிய பொன்னுக்குத் தகுந்த கனமிருப்பதாகத் தெரியவில்லை. 'நல்லது ஆராய்ந்து பார்ப்போம்' என்று முடிவு செய்தாள். ஒரு மணியை உடைத்தும் பார்த்தாள். மேலே வெங்காயத் தோல் அளவு பொன்னும் அதனுள்ளே அரக்குமாக இருந்தன. 'அந்தோ நம்முடைய கணவனை யாரோ மோசஞ்செய்துவிட்டார்களே' என்னும் அச்சம் அவளுக்கு உண்டாகிவிட்டது. ஆயினும் அதைச் சொன்னால் கணவனுடைய கதி யாதாக முடியுமோ என்ற அச்சமும் அவளுக்கு வந்துவிட்டது. 'நமது நிலைமை வறுமை நிலைமைதான்' என்று முடிவு செய்துவிட்டாள். ஆயினும் அவளுக்குள் வருத்தத்தை அடக்கிக்கொள்ள முடியவில்லை. சமயம் பார்த்துக் கணவனிடம் நடந்திருக்கிற மோசத்தைக் கூறினாள். அதைக்கேட்டவுடனே ஏங்கி மனம் ஏங்கிப்போனான். 'ஐயோ நாம் இவ்வளவு நாள் பட்டதுன்பம் அவ்வளவையும் ஓர் ஆசாரி நாசஞ்செய்தானே' என்று பொறுக்க முடியாத வருத்தம் அடைந்தான். பித்துப் பிடித்தவன்போல் ஆனான். சமையலாகிவிட்டது என்றால் எழுந்திருப்பான். கை கால்களைக் கழுவிக்கொண்டு சாப்பிடுவான். மறுபடி திண்ணையில் வந்து உட்காருவான். யார் கூப்பிட்டாலும் பேசமாட்டான். மனைவி கூப்பிட்டால் பேசுவான். இவ்வாறு ஏங்கி சித்தப்பிரமை கொண்டவனானான். என்ன செய்வான் அவன்? அவன் பட்ட தொல்லை அவனுக்கன்றோ தெரியும்? எவ்வளவோ செய்யக்கூடாத காரியங்கள் செய்து அவன் தேடின பணம் அவ்வளவையும் ஒருவன் ஒரு நிமிடத்தில் மோசஞ்செய்துவிட்டான் எனின் அவனுடைய துக்கத்திற்கு ஓர் எல்லையும் உண்டா?

கணவனைத் தேற்ற முயற்சி

சமர்த்தியானவள் தன்னால் கூடிய சமர்த்து அவ்வளவையும் சேர்த்து எவ்வளவோ பேசிக் கணவனுடைய

துன்பத்தை மாற்றப் பார்த்தாள். ஒருநாள் தன்னுடைய கணவனைப் பார்த்து, "நீங்கள் சென்ற பிறகு நான் எவ்வாறு வாழ்க்கை நடத்தினேன் தெரியுமா? அதைத் தாங்கள் கேட்கவில்லையே!" என்று ஒரு கதை சொல்லத் தொடங்கினாள். அஃது உண்மையான கதைதான். கணவனாகிய ஏங்கி ஒன்றுஞ்சொல்லவில்லை. 'இருக்கட்டும்; இன்னும் பார்ப்போம்' என்று சமர்த்தி, "நமது கொல்லைச் சந்தில் மாணிக்கம் என்று ஒரு தட்டான் இருக்கிறானே அவனிடம் ஒரு நல்ல எருமை இருந்தது. அதைப் பத்து ரூபா கொடுத்து வாங்கினேன். அது வேளைக்குப் பக்காப் படியால் ஒரு படி பால் கறக்கும். அது குறு குறு என்று கறக்கும். பிண்ணாக்கு வைக்க வைக்க நன்றாகப் பால் சுரக்கும். அதைக்கொண்டுதான் காலந் தள்ளினேன். திங்களுக்கு ஐந்தாறு ரூபாய்க்குப் பாலுந் தயிரும் விற்பேன்," என்று சொல்லி முடித்தாள்.

கணவன் மறுமொழி

இதுவரையில் வாயை மூடிக்கொண்டிருந்த ஏங்கி இவள் இவ்வாறு சொல்லி முடித்தவுடன், "கலகல"என்று ஒருதடவை நகைத்தான். "அடிபோடி பைத்தியக்காரி, அஃது அரக்கு எருமை. தட்டானிடம் வாங்கினாயல்லவா? அவன் உன்னை மோசஞ்செய்தான். அரக்கு எருமையைக் கொடுத்து ஏய்த்துவிட்டான்," என்றான். இவனுக்கு 'நாம் மோசம் போனோம்' என்னும் நினைவு வந்ததுமுதல் தட்டான் வேலை அவ்வளவும் அரக்கு என்னும் எண்ணம் ஒன்றைத் தவிர மனதில் வேறொன்றும் தோன்றவில்லை. சமர்த்தி, "அரக்கு எருமை அன்று; அரக்கு எருமை என்றால் பால் சுரக்குமா? இஃது உண்மையான எருமை," என்றாள். இதனைக்கேட்ட ஏங்கி, "அடி போடி பைத்தியக்காரி. தட்டான் சூது உனக்குத் தெரியாது. அரக்கு எருமையைச்செய்து பால் கறக்க விசை வைத்திருப்பான்," என்றான். சமர்த்தி, "ஐயோ இல்லவே இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கட்டுப் புல்லைத் தின்னுகிறதே அரக்கு எருமையானால் எப்படிப் புல் தின்னும்?" என்றாள்.

அதற்கு ஏங்கி, "நீஎன்ன தான் சொன்ஞய் அஃது அரக்கு எருமைதான்," என்ருன். அதற்குச் சமர்த்தி, "ஐயோ தெய்வமே அரக்கு எருமையாஞல் எப்படிக் கன்றுபோடும்? நான் வாங்கினபிறகு இரண்டு தடவை அது கன்று போட்டுவிட்டதே?" என்ருள். அதற்கு ஏங்கி, "அடி உன்ஜேப்போலப் பெரும் மூடப்பெண்ணே நான் எங்குங் கண்டதில்லே. தட்டானுடைய சூது உனக்குத் தெரியுமா? கன்று போட்டாலும் அரக்கு எருமைதான்," என்ருன்.

காதை வெட்டிக் காட்டுதல்

சமர்த்திக்குத் துன்பம் பொறுக்க முடியவில்லே. 'ஐயோ நம்முடைய கணவன் மனம் இப்படியும் போய் விடுமா' என்று வருத்தப்பட்டு, மாடு கட்டியிருக்கும் கொட்டடிக்குப்போய் அதை இழுத்து வந்து அது கதறக்கதறப் பாக்குவெட்டியால் அதன் வலக் காது நுனியை நறுக்கி, "இதோ பாருங்கள் இரத்தம்," என்ருள்.

அதற்கு ஏங்கி, "அதோ பார் நன்ருகக் கண்ணேத் திறந்து; அதுதான் அரக்கு," என்று சொல்லி நகைத் தான். இரத்தமும் அரக்கும் சிவப்பு நிறமாக இருக்குமான படியால், அவள் அப்படிக் காட்டியுங்கூட அரக்கு என்ற எண்ணமே ஏங்கிக்கு உறுதிப்பட்டுவிட்டது.

பைத்தியமும் சாவும்

இவ்வாறு ஏங்கி சித்தப்பிரமைகொண்டு யார் என்ன சொன்னபோதிலும் அரக்கு எருமை என்ருனே யல்லாமல் உண்மையான எருமை என்று ஒப்புக்கொள் ளவே இல்லே. அவ்வாறே அவன் பைத்தியம் பிடித்திருந்து சிறிது காலத்தில் மாண்டான். ஏதாவது ஒரு செயலில் ஒருவர் தமது முழுமனதையுஞ் செலுத்தி அதையே மனத் தில் கொண்டால் அதுவே விசாரமாக முடிந்து பித்துக் பிடித்து உயிருக்கு இறுதியை உண்டாக்கி விடும் என்ப தற்கு இந்த ஏங்கியின் கதையே நல்ல எடுத்துக் காட் டாகும்.

௩௫. விளக்கின் தெய்வத்தன்மை

ஒரு வணிகன்

ஓர் ஊரில் ஒரு பெரிய வணிகன் இருந்தான். அவனுக்கு ஒரே பெண்ணும் ஒரே பிள்ளையுமாக இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். மக்களோடு வணிகன் குறைவற்ற செல்வத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான். பெண் மூத்தவள். பிள்ளை இளையவன். இவர்கள் இருவருக்கும் நல்ல இடத்தில் திருமணஞ்செய்து வைத்தான். ஒரு நாள் அக்காளும் தம்பியும் ஏதோ வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, "நம் இருவருக்கும் தொடர்பு நீடித்து நிற்கவேண்டும். அதன்பொருட்டு உனக்குப் பிள்ளை பிறந்தால் என் பெண்ணுக்குக் கொடுக்கவேண்டும். எனக்குப் பெண் பிறந்தால் உன் பிள்ளைக்குக் கொடுக்கிறேன்," என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். பிறகு தம்பிக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் தமக்கைக்கு மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்தார்கள். கிழவனாகிய வணிகன் செலவு பெற்றுக்கொண்டு விண்ணுலகம் போய்விட்டான். வணிகன் போய்விடவே குடும்பம் சிறிது இளைத்தது. இருந்த பொருள்களையெல்லாம் கடன்காரர்கள் கொண்டுபோய்விட்டார்கள். ஆகவே வணிகனுடைய மகன் மிகவும் ஏழ்மையான நிலைமைக்கு வந்துவிட்டான்.

வறுமையும் செம்மையும்

இவனுடைய தமக்கை வாழ்க்கைப்பட்டிருந்த வீடு நல்ல செல்வனுடைய வீடாக இருந்தது. அவர்களுடைய வாணிகம் குறைவில்லாமற் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆகவே அக்காள் பணக்காரியாகவும் தம்பி ஏழையாகவும் ஆகிவிட்டார்கள். இவ்வாறு ஆகிவிடவே தமக்கைக்குத் தன்னுடைய பெண்களை ஏழை மருமகன்களுக்குக் கொடுப்பதற்கு விருப்பம் இல்லாமற் போய்விட்டது. மூத்த பெண்கள் இரண்டையும் இரண்டு பெரிய வணிகர்களுக்குத் திருமணஞ்செய்து கொடுத்துவிட்டாள்.

மூன்ருவது பெண்ணின் தடை

மூன்ருவது பெண்ணுக்கு மணமகனைத் தேடி உறுதி செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவள் தன்னுடைய தாய் தகப்பன் எதிரிலே வந்து நின்று, "என்னைப் பெற்றவர்களே! என் அம்மாஞ்சிகள் உங்களுக்கும் அவர்களுடைய தகப்பனுருக்கும் முன்னே நடந்திருக்கிற வாக்குறுதியைச் சொல்லியிருக்கிருர்கள். அல்லாமலும் அத் தங்காள் மூவருக்கும் திருமணமாகிறவரையில் தங்களுக்குத் திருமணஞ் செய்யக்கூடாது என்று, தகப்பனுர் குறிப்பிடுகிற பெண்களையெல்லாம் 'வேண்டாம்' என்று சொல்லி மறுத்துவிடுகிருர்கள். ஆகையால் நான் அவர்களில் ஒருவருக்குத்தான் வாழ்க்கைப்படுவேன்," என்று உறுதியாகச் சொன்னுள்.

தாயின் மறுப்பு

மகள் கூறியதைக்கேட்ட தாயானவள், அந்த "வறியவனுக்கு வாழ்க்கைப்படவாவது? உன் தமக்கைகள் பெருஞ் செல்வர்களுக்கு மனைவியராக இருக்கிருர்கள். நீ குடிக்கக் கூழ் அற்றவனைக் கட்டிக்கொண்டால் பிறகு அவர்கள் உன்னை ஒரு பொருளாக மதிப்பார்களா?" என்று சொல்லித் தடுத்தாள். மேலும் அவளைப் பார்த்து, "நீ அப்படிப் பிடிவாதம் பிடித்தால் அப்புறம் உன்னை நாங்கள் அவனுடைய வீட்டிலே தள்ளிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டோம்," என்று சொன்னுள்.

பெண்ணின் பிடிவாதம்

பெண்ணுனவள், "நீங்கள் என்ன சொன்னுலுஞ்சரி, நான் அவர்களில் ஒருவரைத்தான் திருமணஞ்செய்து கொள்வேன்," என்று உறுதியாகக் கூறிவிட்டாள். அவளுடைய தாயுந்தகப்பனும் பெண் பெரியவளாகிறவரையில் எவ்வளவோ அறிவுரைகளைச் சொல்லிப் பார்த்தார்கள். பெண்ணுனவள் அவர்கள் சொன்னவைகளைச் சிறிதும் கேட்கவில்லை.

கடைசிப் பெண்ணுக்குக் கடிமணம்

தமக்கையானவள், தன்னுடைய கடைசிப் பெண்ணைத் தம்பியின் மூத்த மகனுக்குக் கொடுப்பதாகச் செய்தி சொல்லியனுப்பினாள் தன்னுடைய தம்பிக்கு. அவனும் 'இவள் இளமைப்பருவத்தில் தனக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறாளா இல்லையா பார்ப்போம்' என்று தன்னுடைய பிள்ளைகளுக்குத் திருமணஞ் செய்து வைக்காமலே காத்திருந்தான். இப்பொழுது வலுவில் ஒரு பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லவே மிகுந்த களிப்புடன் ஒப்புக்கொண்டான். திருமணம் நடைபெற்றது. மற்றைய இரண்டு பிள்ளைகளுக்கும் எளியவர்களாக இரண்டு பெண்களைத் தேடித் திருமணஞ் செய்து வைத்தான். கடைசிப்பெண்ணை, அவளுடைய தாய் தந்தையர்கள் திருமணஞ் செய்து கொடுத்தபிறகு ஒருநாள்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

வாழ்க்கை

இவ்விடத்தில் இவள் மற்ற இரண்டு ஓர்ப்படிகளோடு தன் கணவன் வீட்டில், கஞ்சியோ கூழோ அகப்பட்டதைச் சாப்பிட்டுவிட்டுத், தான் பணக்கார வீட்டுப்பெண்; கணவன் ஏழை; என்னும் ஆணவஞ் சிறிதேனும் இல்லாமல் கணவனுக்கும் கொழுநன்மார்களுக்கும் ஆகவேண்டியவைகளைச் செய்து வந்தாள். ஆடவர்கள் மூவரும் ஆலிலை பறித்து வந்து தைத்துவிற்று, நாள்தோறும் நான்கு பணம் தேடுவார்கள். பெண்கள் தங்களுடைய கணவர்கள் கொண்டுவரும் சிறிய வரும்படியைப் பெரும்பொருளாக மதித்து அவர்களுடைய வயிற்றுக்குக் குறைவில்லாமல் உணவளித்து எஞ்சியதைத் தாங்கள் மூவரும் பங்கிட்டுக்கொள்வார்கள். இவ்வாறு துன்பமான நிலையில் சிறிதுநாள் வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது.

அரசனுடைய மோதிரம்

அந்த ஊர் அரசன் தான் ஒருநாள் எண்ணெய்தேய்த்துக்கொள்ளும்போது தனது மோதிரத்தைக் கழற்றிக்

கீழே வைத்திருந்தான். அப்பொழுது ஒருகருடன் அதை எடுத்துக்கொண்டு பறந்துபோய்விட்டது. சிறிது நேரஞ் சென்ற பிறகு அக் கருடன் இந்தக் கடைசிப்பெண் வாழ்க்கைப்பட்டிருக்கும் ஏழை வீட்டில் வந்து உட்கார்ந்து, அவளுக்கு முன்னே அம் மோதிரத்தைப் போட்டுவிட்டுப் பறந்துபோய்விட்டது. அப்போது இவளுடைய ஓர்ப்படிகள் இருவரும் வேறு வேலையில் இருந்தமையால் இவள் முன்பு கருடன் மோதிரம் போட்டதை அவர்கள் பார்க்கவில்லை. இவளும் அதை எடுத்து ஒருவருக்குந் தெரியாமல் முன்தானையில் முடிந்து மடியிலே வைத்துக்கொண்டாள். 'இதனால்தான் நம்முடைய வறுமை நீங்கவேண்டும்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்.

அரசனிடம் கடைசிப்பெண் வேண்டுகோள்

அரசன் தன்னுடைய மோதிரத்தைக் கருடன் தூக்கிக்கொண்டுபோவதைப் பார்த்தான். 'தன்னுடைய மோதிரத்தை யார்கொண்டுவந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் கேட்பதைக் கொடுக்கிறேன்' என்று நகர் எங்கும் விளம்பரஞ்செய்தான். இச் செய்தி இந்தக் கடைசிப்பெண்ணுக்குத் தெரிந்தது. இவள் தான் மோதிரம் எடுத்த வரலாற்றைத் தன் கணவனிடம் கூறினாள். "வாருங்கள் நாம் இப்பொழுது அரண்மனைக்குப்போய் இந்த மோதிரத்தை அரசனிடம் சேர்ப்பித்து வருவோம். அன்றியும் நான் பணம் கேட்கவில்லை; காசு கேட்கவில்லை என்று என்னிடம் நீங்கள் சினங்கொள்ளாமல், நான் என்ன கேட்டு வாங்குகிறேனோ அதில் நீங்கள் களிப்படையவேண்டும்," என்று சொன்னாள். கணவனோடு அரண்மனைக்குச் சென்றாள்.

கணவன் தன் மனைவியிடம் மிகுந்த அன்போடுகூட, 'இவள் மிகுந்த அறிவாளி; நற்குணம் கற்புடைமை முதலிய நல்லியல்புகள் எல்லாம் அமையப்பெற்றவள் என்று மிகுந்த பற்றுவைத்திருந்தபடியால் அவளைப் பார்த்து, "ஆகா! நீ சொன்னபடியே செய்கிறேன்" என்று சொன்

னான். இருவரும் அரண்மனையை அடைந்தார்கள். அறிக்கைக்காரர் மூலமாகத் தாங்கள் வந்த வரலாற்றை அரசனிடம் தெரிவித்தார்கள். உள்ளே சென்று மோதிரத்தை அரசனிடஞ் சேர்த்தார்கள்.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட அரசன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். "உங்கட்கு என்னவேண்டும்?" என்று கேட்டான். அதற்குக் கடைசிப்பெண், "அரசே! எனக்குக் காசு வேண்டாம்; பணம் வேண்டாம். ஒரு வெள்ளிக்கிழமை மட்டும் இந்த ஊரிலே ஒரு வீட்டிலாவது விளக்கு வைக்கக் கூடாது. அரண்மனையில்கூட விளக்கு ஏற்றக்கூடாது. அன்று நான் மட்டும் விளக்கு வைத்துக்கொள்வேன். இதற்கு மட்டும் உடன்பாடு கொடுக்க வேண்டும்," என்று வேண்டிக்கொண்டாள். இதைக் கேட்ட அரசன், "அப்படியே ஆகட்டும், அடுத்த வெள்ளிக் கிழமையிலேயே வைத்துக்கொள்," என்றான். இந்தக் கட்டளையை ஊர்முழுவதற்கும் அனுப்பினான். 'அன்று யாராவது விளக்கு ஏற்றிவைத்திருந்தார்களேயானால் அவர்களுடைய கண்களைப் பிடுங்கிப்போடுவேன்' என்று எங்குந் தெரியப்படுத்தினான்.

எண்ணெய் திரிமுதலியன தேடுதல்

இந்தக் கடைசிப் பெண் அரசனிடம் கட்டளை பெற்று வந்ததும் தன்னுடைய கணவனின் உடன் பிறந்தார் இருவரையும் பார்த்து, "நீங்கள் எங்கேயாவது இரண்டு வராகன் கடன் வாங்கிவந்து அடுத்த வெள்ளிக் கிழமை நம்முடைய வீடு முழுவதும் விளக்கேற்றிவைத்து விட்டுத் தலைவாசலில் ஒருவர், கொல்லை வாசலில் ஒருவராக இருங்கள். தூங்காமல் விழித்துக்கொண்டு காத்திருங்கள். யாராவது உள்ளே போகவேண்டும் என்று கேட்டால், 'மறுபடியும் வெளியிற்போகாமல் இருந்தால் உத்தரவு கொடுக்கிறேன்' என்று சொல்வதோடு அவர்களிடம் இருந்து உறுதிமொழி பெற்றுக்கொண்டு உள்ளே விடுங்கள். யாராவது வீட்டிற்குள்ளிருந்து வெளியே போக

வேண்டும் என்று கேட்டாலோ மறுபடியும் உள்ளே வராமல் இருப்பதாக உறுதிமொழி வாங்கிக்கொண்டு வெளியில் விடுங்கள்,'' என்று கூறினாள்.

அவர்களுக்குத் தங்களுடைய தமையன் மனைவி கூறுவதன் கருத்து ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும் அவர்கள், 'இவள் மிகுந்த கற்பரசி. இவளுடைய சொற்படி நடந்தால் நமக்கு நன்மை உண்டு' என்று எண்ணி அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார்கள்; வெளியிற் சென்று தங்களில் ஒருவனையே அடகுவைத்து இரண்டு வராகன் கடன் வாங்கி, ஓர் இரவு வீடு முழுவதும் வைத்து எரிப்பதற்கு வேண்டிய எண்ணெய், திரி, அகல் முதலிய பொருள்களைத் தேடிக்கொண்டு வந்தார்கள்.

வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தல்

இதற்குள் வெள்ளிக்கிழமை வந்துவிட்டது. கடைசிப் பெண் தன் ஓர்ப்படிகளுடன் அன்று முழுவதும் விரதமிருந்தாள். இரவு தொடங்கியவுடன் வீடு முழுவதும் விளக்கு ஏற்றிவைத்தாள். கொழுநர்களில் ஒருவன் தலைவாசலிலும் மற்றொருவன் கொல்லைவாசலிலுமாகக் காவல் காத்திருந்தார்கள். வெள்ளிக்கிழமையில் அந்த ஊர் முழுவதும் வெளிச்சமே இல்லாமல் இந்த ஒரு வீட்டில் மட்டும் விளக்கு வைக்கப்பட்டிருந்தது. எட்டுத் திருமகளிரும் (அட்ட லட்சுமிகளும்) வீடு வீடாகப் பார்த்து ஓரிடத்திலும் விளக்கு இல்லாமல் இருக்கவே, பல விளக்குகள் எரியும் இந்த வீட்டிற்கு வந்து வாசலில் இருந்த ஆடவனைப் பார்த்து "உள்ளேபோக வேண்டும் வழிவிடு," என்றார்கள். கொழுநனானவன், "நீங்கள் யார்?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "நாங்கள் அட்ட லட்சுமிகள்," என்று மறுமொழி கூறினார்கள். அதைக்கேட்ட அளவில் கொழுநன் தன்னுடைய மதனியின் அறிவை எண்ணி வியந்தான். அவர்களைப் பார்த்து, "நீங்கள் உள்ளே போகவேண்டும் என்று எண்ணினால், மறுபடியும் திரும்பி வெளியிலே வராமல் இருத்தல் வேண்டும். அவ்

வாறு இருப்பதாக இருந்தால் உள்ளே போகலாம்," என்று சொன்னான்.

அட்டலட்சுமிகள் உள்ளே போதல்

வேறு எந்த இடத்திலும் விளக்கில்லாமல் இருக்கவே எட்டுத் திருமகளிரும் இவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். "நாங்கள் இப்பொழுது உள்ளே சென்றால் இனிமேல் திரும்பி வெளியில் வருகிறதில்லை," என்று சொல்லி அவனுக்குக் கை அடித்துக்கொடுத்தார்கள். கொழுநன் இவர்களை உள்ளே விட்டுவிட்டுத் தன் அண்ணியினுடைய சூழ்ச்சியை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். 'இவளன்றோ கற்பரசி' என்று எண்ணிக் களித்தான்.

தவ்வை வெளியேறுதல்

எட்டுத் திருமகளிரும் உள்ளே நுழைந்தவுடன் உள்ளே இருந்த ஒரு பெண் கொல்லை வாசலில் இருக்கும் கொழுநனிடஞ்சென்று, "நான் வெளியே போகவேண்டும். இனிமேல் அரை நாழிகைகூட இங்கு இருக்கமாட்டேன். எனக்குக் கட்டளை கொடு," என்று சொன்னாள். இதைக் கேட்ட உடனே கொழுநன் மிகுந்த வியப்படைந்தான். அப் பெண்ணைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். அதற்கு அவள், "நான்தான் அக்காள்; 'மூதேவி' என்றும் என்னைச் சிலர் கூப்பிடுவார்கள். இப்பொழுது இங்கே என்னுடைய தங்கைகள் வந்துவிட்டார்கள். இனிமேல் நான் இங்கு இருப்பது சரியன்று," என்றாள். கொழுநன் 'நம்முடைய வறுமை இன்று இரவோடு தொலைந்தது' என்று எண்ணினான். மூதேவியைப் பார்த்து, "நீ வெளியிற்போக வேண்டுமானால் 'மறுபடியும் இவ்விடத்திற்கு வருகிறது இல்லை' என்று உறுதிமொழி கூறவேண்டும். அவ்வாறு கூறாமல் வெளியே போகக்கூடாது," என்றான். இதை மூதேவி கேட்டுத் திருமகளிர் வந்துவிட்டபடியால் அவ்விடமே இருப்பதற்கு விரும்பாதவளாய், "இனிமேல் உண்மையாக இவ்விடத்திற்கு வருகிறதில்லை," என்று கையடித்துக் கொடுத்துவிட்டு வெளியிற் சென்றாள்.

செல்வச் சிறப்பு

மறுநாள் பொழுது விடிந்தது. முதல் நாள் இரவே திருமகளிர் வந்துவிட்டபடியால், அந்த வீட்டில் எந்தப் பானையிற்போய்க் கையைவைத்தாலும்பொருள்கள் நிறைந்திருந்தன. பெட்டியைத் திறந்தால் பவுனும் மொகராவுமாக நிரம்பியிருந்தன. இவ்வாறு திருமகளிர் எட்டுப் பேரும் வந்து மூதேவியும் ஓடிப்போகவே, இந்த ஏழைப் பெண் வீடு பெரிய அரண்மனையைப்போற் சிறப்படைந்தது. ஏழையாக இருந்தபோது வெறுத்த தாய் தகப்பனும் தமக்கைகளும் இவளைவந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். அன்றுமுதல் வீடு நிறைய விளக்கிருந்தால் திருமகளிர் வந்து குடிபுகுவார்கள் என்று உறுதியாகி விட்டதாம். இதனால்தான் எங்கும் வீடுகளில் வெள்ளிக் கிழமைகளில் சிறப்பாக விளக்கேற்றிப் பூசைசெய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்கள்.

---

௩௬. திருமகள் அருள் உள்ளவரையில் அச்சமில்லை

மகாமுனி

பொன்குன்றத்திற்கு அடுத்த வேதாரணியக் காட்டில், மகாமுனி என்னும் பெயருடைய ஒரு தவசி; உலக வாழ்க்கையை மிகு இளமைப் பருவத்திலேயே துறந்து துறவுக்கோலம் பூண்டு தவஞ்செய்துகொண்டிருந்தார். அவர் செய்த தவத்தின் கடுமையால் அந்தக் காட்டில் இருந்த கரடி புலி முதலிய கொடிய உயிர்த்தொகைகளும் அவரிடம் குழந்தைகள்போல் வசப்பட்டு விளையாடும். அவர்கடுமையான தவசி. தவஞ்செய்வதைவிட வேறு ஒரு வேலையும் அவருக்குக் கிடையாது. தவமே மனிதக் கோலம் பூண்டு வந்ததுபோல அவர் விளங்கினர்.

திருமகள் வருகை

இவ்வாறு இருக்குங்காலத்தில் ஒருநாள் இவர்முன் பேரழகோடு கூடியவளும், இளமை தங்கியவளுமாகிய ஒரு பெண் அக் காட்டிற்கு வந்து இவர்முன் நின்று, “ தவச் செல்வமே ! இன்றுமுதல் நான் தங்களிடம் தங்கியிருக்கப்போகிறேன். அதற்காகவே தங்களிடம் நான் தெரிவிக்கத் தங்களுடைய தவத்தின் பெருமையால் என் உண்மை வடிவத்தைக்கொண்டு வந்தேன்,” என்ருள்.

முனிவர் கேள்வி

இவ்வாறு இந்தக் கட்டழகி இயம்பிதைக் கேட்டும் இவளைப் பார்த்தும் மகாமுனி சிறிதேனும் சித்தங்கலங்காமல், “ அம்மா ! நீங்கள் யார் ? உங்களுக்கும் எனக்கும் வெகு தொலையாயிற்றே. நீங்களாவது என்னிடம் தங்கியிருக்கவாவது ?” என்ருர்.

நான் திருமகள்

அதற்கு அந்தப்பெண், “ நான் மனிதப் பிறவியன்று, நான் திருமகள். நான் சிறிதுகாலம் தங்களிடம் தங்கியிருக்க வேண்டும் என்று ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறபடியால் தாங்கள் இப்பொழுது என்னதான் என்னை வேண்டாம் என்று உதைத்துத் தள்ளினுலும் நான் ஓடிப்போக முடியாது. இருந்தே திரவேண்டும். தவசியாகிய உங்களுக்கு என்னுடைய அருளால் எவ்விதமான பயனும் இல்லை. என்றபோதிலும் எனக்கு நான்முகன் கட்டளையிட்டபடி நான் இருந்துதானே திரவேண்டும்,” என்ருள்.

உடன்படிக்கை

இதைக்கேட்டு மகாமுனி, ‘நாம் தள்ளினுலும் திருமகள் போகமாட்டாள். நல்லது; நாம் இவளிடம் ஓர் உடன்பாடு செய்துகொள்ளுவோம்’ என்று எண்ணினுர். “நல்லது அம்மணி, நீங்கள் எவ்வாறு என்னிடம் வசிப்பதாக முன்னல் தெரியப்படுத்தி வந்தீர்களோ அவ்வாறு நீங்கள் போகும்போதும் முன்னல் தெரிவித்து ‘என் காலங்கழிந்து

விட்டது. இனிநான் போய்விடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போகவேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார். திருமகளும் அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டாள்.

அருள் உண்மையை ஆராய்தல்

இவ்வாறு திருமகள் இயம்பி மறைந்துவிடவே மகா முனிக்குத் தன்னிடம் திருமகளின் திருவருள் முற்றிலும் இருப்பதாகத் தோன்றிவிட்டது. 'இஃது உண்மையா இல்லையா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று ஒரு சமயம் எண்ணினர். உடனே அவர் வேதாரணியத்தை விட்டுப் புறப்பட்டுப் பொன்குன்ற மகாநகருக்குச் சென்றார். அங்கு அரசனும் அவனுடைய அமைச்சர்களும் அவையில் வீற்றிருக்கும் சமயம் பார்த்து அதிவிரைவாகப் புகுந்தார். தமது இடது காலைத் தூக்கி ஒரே உதையாய் அரசன் முடியை நோக்கி உதைத்தார். உடனே அங்கிருந்தவர்கள் பேரிரைச்சலிட்டார்கள். "பிடி அந்தச் சண்டாளனை, பிடி அந்தப் பொல்லாத துறவியை, உதை, அடி, கொல்,'' என்னுஞ் சொற்கள் எழுந்தன. அமைச்சர்களும் அதிகாரிகளும் வீரர்களுமாய்ப் பலபேர் மகாமுனியைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அரசன் தடுத்தல்

அரசன் உரத்த சொல்லாய், "தொடாதே அந்தத் தவசியை; அவர் முக்காலமும் உணர்ந்தவர்: பார்முடியின் கீழ்,'' என்று மெய்பதற உளறிக் குளறிக் கதறினன். உடனே எல்லோரும் முடியைப் பார்த்தார்கள். அங்கு ஒரு பெரிய நல்ல பாம்பு படமெடுத்தாடுவதைக் கண்டார்கள். "ஓகோ இவர் மிகப்பெரியவர். நன்றாக முக்காலத்தையும் உணர்பவர். வீணாக இவரை இகழ்ந்தோமே,'' என்று நடுநடுங்கினார்கள். இதற்குள் அந்த நல்ல பாம்பு ஒருவர் கையிலும் அகப்படாமல் ஒரே சீறுய்ச்சீறி ஓடி மறைந்துவிட்டது. அரசன் நாம் இந்தப் பாம்பு இருப்பதைப் பார்க்காமல் முடியைத் தூக்கித் தலைமீது வைத்துக் கொண்டு வந்துவிட்டோம் என்று எண்ணினன்.

நடந்தது என்ன?

நல்லது! வந்தது உண்மையான பாம்புதானா அல்லவே அல்ல. திருமகள் பாம்பு வடிவம் எடுத்து அங்கு வந்து மகாமுனியைக் காப்பாற்றி மறைந்தாள். அவளுடைய திருவருள் தவசியிடம் முழுவதும் இருந்ததல்லவா? அவள் மட்டும் அப்பொழுது அவ்வடிவங்கொண்டு அங்கு வந்திராவிட்டால் மகாமுனியின் கதி யாதாகியிருக்கும்? இவ்வுண்மை யாருக்குத் தெரியும்?

அமைச்சராதல்

அன்று அங்கிருந்த மக்கள் தவசியை வியந்து 'அவர் மட்டும் அவ்வாறு செய்திராவிடில் அரசன் காலம் அன்றுடன் முடிவுபெற்றிருக்கும்' என்று எண்ணிவிட்டார்கள். அரசனும் முனிவர் வந்து முடியைத் தள்ளியிரா விட்டால் தான் அன்றே மாண்டுபோகும்படியாக நேரிட்டிருக்கும் என்று எண்ணினான். இவ்வாறு தன் உயிரைக் காப்பாற்றியதற்காக அரசன் மகாமுனிக்கு முதலமைச்சன் வேலை கொடுத்து தன் கைக்கீழ் எல்லா அதிகாரமுஞ் செலுத்துமாறு கட்டளையிட்டான். தவசியிடம் திருமகள் திருவருள் மிக மிகுதியாக இருந்தபடியால் முனிவர் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு அரசாட்சியை நன்றாக நடத்தி வந்தார். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சென்றன.

மற்றும் ஒருமுறை ஆராய்ச்சி

இன்னொரு தடவை திருமகள் தன்னிடம் உண்மையாகவே இருக்கிறாளா இல்லையா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று மகாமுனிக்கு எண்ணந்தோன்றியது. இதை எண்ணி ஒருநாள் நள்ளிரவில் மகாமுனி தம்முடைய படுக்கையைவிட்டு எழுந்தார். அரசனும் அவனுடையமனைவியும் படுத்துறங்கும் பள்ளியறையைநோக்கி விரைவாகச் சென்றார். இவர் முதன்மையான அமைச்சராகையால் இவரைத் தடைசெய்ய ஒருவராலும் முடியவில்லை. இவர் அரசனும் அரசியும் மெய்ம்மறந்து உறங்கிக்கொண்டிருக்கும் வேளையில் இருவரையும் ஒரேயடியாய்த்

தம் கைகளால் தூக்கிக் கரகரவென்று வெளியில் இழுத்து வந்தார். இந்த நிலைமையில் இவர்கள் விழித்துக்கொண்டு "இந்தப் பாதகன் தலையை வாங்கினால் என்ன குற்றம்?" என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்வேளையில், " திடும் திடும் " என்று இவர்கள் தூங்கின அறையின் மேல்மாடி இடிந்து இவர்கள் படுத்திருந்த கட்டிலின் மேலேயே விழுந்தது. அதைப் பார்த்த பிறகு அரசனுக்குத் தன் முதலமைச்சராகிய மகாமுனிமீது பெருமகிழ்ச்சி உண்டாகி விட்டது என்பதை உரைக்கவும் வேண்டுமோ? ஒவ்வொருவரும் முதல் அமைச்சரைப் பேரறிவாளர் என்றும் முக்காலமும் உணர்ந்த ஞானியென்றும், "அவ்வாறு இல்லாவிட்டால் நள்ளிரவில் எழுந்திருந்து அரசனையும் அரசியையும் காப்பாற்றி இருப்பாரா" என்றும் வியந்து பேசிக்கொண்டார்கள். மூக்கின்மேல் கையை வைத்து விழித்தார்கள். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு அவ்வூரில் எவரேனும் மகாமுனியைக் கண்டால், 'அவர் தெய்வம்; மூன்று காலங்களையும் உணர்ந்தவர்' என்று தலைவணங்குவார்கள். அரசனும் இவரிடத்தில் எல்லா அதிகாரத்தை யும் ஒப்படைத்துவிட்டு இன்பமாக வாழ்ந்திருந்தான்.

வேட்டைக்குச் செல்லுதல்

இவ்வாறு இரண்டாவது தடவை திருமகள் தன்னிடம் இருக்கிறாளா இல்லையா என்று ஆராய்ந்தறிந்த ஓராண்டிற்குப் பிறகு அரசன் தன் முதலமைச்சரான மகாமுனியோடும் மற்ற அமைச்சர்களோடும் உறுதிச் சுற்றத்தினரோடும் காட்டில் வேட்டையாடுவதற்குப் புறப்பட்டான். வேட்டையும் நன்றாக நடைபெற்றது. வேட்டையின் இறுதியில் அரசன் தனது உறுதிச் சுற்றத்தினரை விட்டுப்பிரிந்து ஒரு மானைத் துரத்தினான். அதைத் துரத்திக்கொண்டு அரசன் விரைவாக ஓடியபடியால் எல்லோரும் அரசனுடைய குதிரையின் விரைவுக்குச் சரியாக வரமுடியாமல் பின்தங்கிவிட்டார்கள். மகாமுனி மட்டும் தம் குதிரையை அரசன் குதிரைக்குச் சரியாக ஓட்டி அவன் பக்கத்தை விட்டுப் பிரியாமல் சென்றார்.

கடைசியாக மான் கண்ணுக்கு அகப்படாமல் ஓடிப்போய் விட்டது. அரசனும் மகாமுனியும் பெருங்காடான நடுக் காட்டில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது பகல் பதி னைந்து நாழிகை வேளை. காலைமுதல் குதிரையில் உட் கார்ந்து வேட்டையாடிய அரசனும் அமைச்சனும் களைத் துப்போய்விட்டார்கள். மகாமுனி அரசனைப் பார்த்து, "அந்த மான் போனால்போகட்டும். இனிமேல் தாங்கள் குதிரையின்மேல் இருப்பது சரியாயில்லை. கதிரவனே கடுமையாகக் காய்கிறான். இந்தச் சோலையில் சிறிதுநேரம் நாம் இளைப்பாறலாம். அதற்குள் நமது குதிரைக் காலடி யைப் பிடித்துக்கொண்டு நமது படையாட்கள் வந்துவிடு வார்கள்." என்றார்.

அரசன் உறங்குதல்

இவ்வாறு மகாமுனி இயம்பியது அரசனுக்குச் சரியாகத் தோற்றியபடியால் அவன் உடனே தனது குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். மகாமுனியாகிய அமைச்சரும் இறங்கினார். குதிரைகளின் சேணங்களைக் கழற்றிக் கீழே வைத்தார்கள். குதிரைகள் தண்ணீர் குடித்து மேயப்போய்விட்டன. அரசனும் அமைச்சரும பக்கத்தில் ஓடிய காட்டாற்றில் தங்களுடைய நீர் வேட்கை யைப் போக்கிக்கொண்டு ஒரு பெரிய அரசமரத்தின் கீழே உட்கார்ந்தார்கள். அரசனுக்குக் களைப்பு மேலிட்டிருந்த படியால் அவன் அமைச்சரைப் பார்த்து, "அமைச்சரே! நீங்கள் உட்கார்ந்துகொண்டிருங்கள். நான் தங்களுடைய மடியில் தலையை வைத்துக்கொண்டு சிறிது நேரம் உறங்கு கிறேன்," என்றான். 'அவ்வாறே செய்யலாம்' என்று அமைச்சராகிய முனிவர் ஒப்புக்கொண்டார். அரசன் படுத்து உறங்கினான்.

கருடனும் பாம்பும்

இவ்வாறு அரசன் உறங்கிவிட்ட பிறகு, ஒரு பெரிய நல்ல பாம்பைக் கருடன் ஒன்று மூக்கில் கொத்திக் கொண்டு அதைத் தின்பதற்கு இடந்தேடி அரசனும்

அமைச்சனும் அமர்ந்திருந்த இடத்தில் இருந்த அரச மரத்தின் மீது வந்து தங்கியது. அஃது உட்கார்ந்த கிளையும் அரசன் முகத்துக்கு நேராக இருந்தது. மகாமுனி என்ன செய்வார்? தாம் எழுந்திருந்தாவது ஒலி செய்தாவது கருடனை விரட்டினால் அரசனுடைய உறக்கத்திற்குப் பங்கம் நேரிடும். பாம்பினால் அரசனுக்கு எத்தகைய தீங்கும் வரப்போகிறதில்லை என்பது உறுதி. ஏனெனில் பாம்போ கருடனிடத்தில் இருக்கிறது. நடக்கிறது நடக்கட்டும் என்று பேசாதிருந்தார். இவ்வாறிருக்கையில் கருடனானது அந்தப் பாம்பைப் புசிக்கத் தொடங்கிற்று. பாம்பைக் கொத்தியது. கொத்தின அளவில் பாம்பு தன்னுடைய நஞ்சைக் கக்கிற்று. அந்த நஞ்சில் ஒரு துளி அரசன் கழுத்தில் வந்து விழுந்தது. 'நல்ல பாம்பின் நஞ்சாயிற்றே என்ன செய்யுமோ' என்று முனிவர் எண்ணமிட்டார். அதைத் தம்முடைய கத்தி முனையினால் வழிக்க எண்ணினார்.

திருமகள் நீக்கம்

மகாமுனி இவ்வாறு எண்ணிக் கத்தியைக் கையில் எடுத்து அரசனுடைய கழுத்தில் வைத்த சமயத்தில் திருமகள் தோன்றினாள். "நான் தங்களிடம் இருக்கவேண்டிய காலம் முடிந்துவிட்டது. நான் போய்வருகிறேன்," என்று கூறிவிட்டு மறைந்தாள். இந்தச் சமயத்தில் அரசன் விழித்துக்கொண்டான். அமைச்சரைப் பார்த்து, "உன்னை நான் இதுவரையில் இப்படிப்பட்டவன் என்று எண்ணவே இல்லை. இவ்வாறு செய்தாயே. நீ கொலைகாரன்," என்று சொன்னான்.

உற்றதுரைத்தல்

அதற்கு மகாமுனி, "அரசே! நான் தங்களைக்கொன்றிருக்கவேண்டுமென்றால் இதற்கு முன்னாலேயே எவ்வித முயற்சியும் இல்லாமல் செய்திருப்பேன். சிறிது தலையை எடுத்துப் பாருங்கள். நான் கொலைகாரன் அல்லன் என்பது தெரியும். அதோ நீங்கள் கருடன் வாயில் காண்கிற

பாம்பின் வாயில் இருந்து ஒரு துளி நஞ்சு சிதறித் தங்களுடைய கழுத்தில் வந்து விழுந்தது. நஞ்சு ஒருக்கால் தீமை செய்யக்கூடும் என்று எண்ணி அதை நான் மெதுவாகக் கத்தியினல் வழித்தேனேயல்லாமல் வேறன்று. இவ்வாறு இந்தத் தடவையும் நான் தங்களைக் காப்பாற்ற முயன்றதற்காகத்தான் தாங்கள் என்னை இப்போது கொலைகாரன் என்றீர்கள். இனிமேல் நான் தங்களிடம் இருப்பதில் பயனில்லை. இதுவரையில் எனக்குத் திருமகள் திருவருள் இருந்தது. அவளுடைய பலத்தால் நான் காலால் தங்களை உதைத்தபோதும், அந்தப்புரத்தில் வந்து இழுத்தபோதும் நான் நல்லவனுனேன். இப்பொழுது இந்தக் காட்டில் நஞ்சுத் தொல்லையில் இருந்து காப்பாற்ற முயன்று பொல்லாதவனுனேன்,'' என்ருர்.

தவத்திற்குச் செல்ல எண்ணுதல்

அதற்கு அரசன் தான் தெரியாத்தனமாகச் சொன்னதாகவும் தன்னை மன்னிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். அதற்குத் தவசி, "எனக்கு என்ன இருக்கிறது? நான் என்றென்றைக்கும் தவஞ்செய்பவன். திருமகள் திருவருள் என்னிடம் வந்ததை அறிந்தே நான் அதிகாரத்திற்கு வந்தேன். இப்பொழுது அது நீங்கிவிட்டது. நான் இனி காட்டிற்குப் போகவேண்டியவன்,'' என்று சொல்லித் தம்மிடம் திருமகள் வந்ததையும், அப்புறம் அவள் நீங்கினதையும் அவள் இருந்த மட்டில் தமக்கு நல்லகாலம் இருந்ததையும் மற்றும் எல்லாச் செய்திகளையும் அரசனுக்குத் தெரிவித்து, "அரசே! இனி நான் தங்களிடம் இருப்பது முறையன்று. என்னுடைய தவத்திற்கு வேதாரணியம்போய்ச்சேர விடைகொடும்,'' என்ருர்.

அரசன் வேண்டுகோள்

அரசன் தான் கேட்டவைகளையும் கண்டவைகளையும் எண்ணிப் பார்த்து வியந்தான். "நான் தங்களை ஒரு நாளும் கைவிடேன். மேலும் என்னுடைய முதல் அமைச்

சராகவே இருந்து அரசாட்சி செய்துவரவேண்டும்,'' என்று வேண்டிக்கொண்டான்.

காட்டுக்குச் செல்லுதல்

அரசன் எவ்வளவோ சொல்லியும் மகாமுனி கேட்கவில்லை. திருமகளுடைய திருவருள் இல்லாமல் இருப்பதற்கு அஞ்சி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு வேதாரணியத்திற்குப் போய்விட்டார்.

கருத்து

வெற்றியுள்ளவரையில் அச்சமில்லை. வெற்றியுள்ளபோதெல்லாம் திருமகளுடைய திருவருள் இருக்கும். நமக்கு எச்சமயத்தில் தோல்வி நேருகிறதோ அப்பொழுது திருமகள் நம்மைவிட்டு நீங்கிவிட்டாள் என்று உணர்ந்து நாம் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டும்.

---

௩௭. அதுவும் ஒரு நன்மைக்கே

துவரமான்

துறையூர் நாட்டில் துவரமான் என்ற ஓர் அரசன் எல்லோருக்கும் நல்லவனாக அரசாட்சி செய்துவந்தான். அவன் மிக அறநெறியுள்ளவன். அவன் காலத்தில் மாதம் மும்மாரி தவறாமல் பொழியும். ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் சமய தருமங்களில் சிறிதும் வழுவாமல் நடப்பார்கள். குடிகளிடம் கடவுளன்பு, அரச அன்பு முதலிய எல்லா நற்குணங்களும் குறைவின்றி விளங்கிவந்தன.

அமைச்சன்

இவ்வரசன் அரசாட்சியை நன்றாக நடந்துவதற்குக் கடவுளே படைத்துக் கொடுத்ததுபோல் ஓர் அமைச்சன் இவனுக்குக் கிடைத்தான். இந்த அமைச்சனின் பெயர் நிர்மலன். நிர்மலனே எல்லாக் காரியங்களையும் தெய்வத்

தின்பேரில் பாரத்தைப்போட்டு நடத்திவந்தான். இவனுடைய முதன்மையான மந்திரம், "அதுவும் ஒரு நன்மைக்கே, இதுவும் ஒரு நன்மைக்கே," என்பவைகளேயாம். 'இப்படி என்ருல் என்ன பொருள்' என்று நம்முடைய நண்பர்கள் கேட்கலாம். அதை நாம் சிறிது விவரிப்போம். ஏதாவது ஒரு துன்பம் ஒருவனுக்குவந்துவிட்டால் கோழை மனதுடையவன் அத் துன்பத்தைப் பொறுக்காமல் வருத்தப்படும்போது, நிர்மலன் அவனைக் கண்டால், "வருத்தப்படாதே தெய்வத்தின் செயல் நமக்குத் தெரியாது. இவ்வித தொல்லையைக் கடவுள் நம்முடைய நன்மைக்கே ஏற்படுத்துகிருர். தெரியாத்தன்மையால், 'ஐயோ! நாம் ஒரு தீவினையுஞ்செய்யவில்லையே. பாழான தெய்வம் நம்மைக் கெடுத்ததே!' என்று அறிவற்றவர்கள் வருந்துவது வழக்கம். அது முற்றிலுந் தவறு. நாம் நல்லவர்கள் கெட்டவர்கள் என்பதை நாமே எப்படி முடிவுசெய்துகொள்ள முடியும்? ஒன்று மட்டும் உறுதி. ஊகித்துப் பார்த்தால் தெய்வம் நமக்கு விளைவிக்கும் நன்மையுந் தீமையும் நமது நன்மைக்கே யல்லாது வேறல்ல," என்பான். ஐயோ வீடு தீப்பட்டு எல்லாம் பாழாய்ப்போய்விட்டனவே என்ருல், "அதுவும் ஒரு நன்மைக்கே, தீப்படாமல் இருந்தால் அங்கிருந்த துர்வாயுவால் எல்லோரும் மாண்டிருப்பீர்கள், அல்லது நோயில் வருந்தியிருப்பீர்கள்," என்பான். யார் என்ன சொன்னபோதிலும் "இதுவும் ஒரு நன்மைக்கே" என்று எப்படியாவது நிர்மலன் சாதிப்பானேயல்லாமல் உலகத்தாரைப் போல் துன்பம் அடையவாவது மகிழவாவது மாட்டான். எப்போதும் அறநினைப்பு, கடவுள் அன்பு, தலைவனிடத்தில் பற்றுதல், குடிகளிடம் அருள் முதலிய எல்லா நற்குணங்களும் நிர்மலனிடம் இருந்தன.

துவரமானுக்குத் துன்பம்

இவ்வாருக ஒருநாள் துவரமானுகிய அரசன் ஒரு கொட்டைப்பாக்கை வெட்டிக்கொண்டிருந்தான். அப்போது பாக்குவெட்டியைச் சரியாகப் பிடிக்காதபடியால்

தனது இடது கை விரல்களில் ஒன்றை வெட்டிக்கொண்டான். விரலில் பாதியளவு பலமாக வெட்டுப்பட்டுவிட்டது. அரசனுடைய மருத்துவர்கள் வந்து மருந்து போட்டு எண்ணெய்ச்சிலே கட்டி இரண்டு நாளில் ஆறிப் போகும் என்றார்கள்.

துன்பம் உசாவல்

அரசனுக்கு நேரிட்ட துன்பத்திற்காகப் பலபேர் அரசனைவந்து பார்த்துத்துன்பம் நேரிட்டதுபற்றி உசாவி விட்டுச் சென்றார்கள். முதல் அமைச்சனாகிய நிர்மலனும் வந்தான். அவனிடம் அரசன் தனக்கு நேரிட்ட துன்பத்தைச்சொல்லி வருந்தினான். அதற்கு அமைச்சன், " அரசே 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று எண்ணுங்கள். கடவுளுக்கு நாம் என்ன கெடுதல் செய்கிறோம்? நம்மைக் கெடுக்கவாவது நம்மை வருத்தப்படுத்தவாவது அவருக்குத் திருவுளம் உண்டாகமாட்டாது. ஏதோ நன்மையை எண்ணிக் கடவுள் இவ்வாறு விரல் வெட்டுப்படச் செய்திருக்கிறாரேயல்லாது வேறல்ல," என்றான்.

அமைச்சன்மேல் சினம்

அரசனுக்குத் தன்னுடைய அமைச்சன்மேல் எவ்வளவு பற்றுதல் இருந்தபோதினும், தான் தன்னுடைய வருத்தத்தைச் சொல்லிக்கொள்ளும்போது அவன் சிறிதேனும் வருத்தப்படாமல்,'இதுவும் ஒரு நன்மைக்கு'என்று சொன்னானே என்பதாக மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. அவன் உடனே அமைச்சனைப் பார்த்து, " என்ன சொன்னாய் அமைச்ச?" என்று ஒரு தடவை அதட்டிக் கேட்டான். நிர்மலனோ இதற்கெல்லாம் அஞ்சியவனல்லன்; " இதுவும் ஒரு நன்மைக்கென்றே சொன்னேன்," என்றான். இதைக் கேட்கவே அரசனுக்கு மிகுந்த சீற்றம் உண்டாய் விட்டது.

அமைச்சனுக்குத் தண்டனை

அப்படியானால், " அந்த மொழியின் பலனை விரைவில் காண்பாய். உன்னை நான் இருபதாண்டுகளுக்குச் சிறை

யில் அடைக்குமாறு கட்டளையிடுகிறேன்," என்றான். அதற்கு நிர்மலன், "அரசே! இதுவும் ஒரு நன்மைக்கே," என்று சொல்லிவிட்டுக் களிப்போடு தன் வீட்டிற்குப் போவதுபோல் சிறைச்சாலைக்குச் சென்றான்.

நகரமாந்தர் வியப்பு

இச் செய்திகளைப் பார்த்துங் கேட்டும் அந் நகரவாசிகள் எல்லோரும் வியப்படைந்தார்கள். தனது கண்ணுக்குக் கண்ணாக வைத்திருந்த நிர்மலனைத் துவரமான் சிறைக்கு அனுப்பிய புதுமை ஒன்று; அரசனிடத்தில் பேரன்புடைய அமைச்சன் அரசனுடைய கையில் காயம் பட்டதைக்கூட 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று சொன்னது ஒன்று. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் பற்றி மக்கள் ஊரில் கூட்டங்கூட்டமாகக் கூடிப் பேசத்தொடங்கினார்கள்.

அரசனுடைய வருத்தம்

அரசனுக்குக்கூட ஒரு சமயத்தில் 'இவ்வளவு நற்குணம் பொருந்திய நிர்மலனைச்சிறைக்கு அனுப்பினோமே!' என்னும் வருத்தம் மிகுதியாக இருந்தது. ஆனால் "அவன் 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று நமக்கு வந்த துன்பத்தைப் பார்த்துச் சிறிதேனும் வருத்தப்படாமல் சொன்னான் பார்த்தாயா?" என்ற பெருமையும் கூடவேயிருந்தது.

அரசன் வேட்டைக்குச் செல்லுதல்

இவவாறு அமைச்சனைத் தண்டித்த மறுநாள் துவரமான் தன்னுடைய வழக்கப்படி வேட்டைக்குச் சென்றான். அன்றுவரையில் அவன் ஒரு நாளாவது அவன் தன்னுடைய அமைச்சன் இல்லாமல் வேட்டைக்குச் சென்றதே இல்லை. அரசனுக்கு வேட்டையில் மிகுந்த பைத்தியம். அதே காரணத்தினால்தான் கையில் எண்ணெய்ச் சீலை கட்டிக்கொண்டிருந்தும் வேட்டைக்குப் புறப்பட்டான். வேட்டையாட்களும் மற்றவர்களும் தங்கள் வழக்கப்படி கூடப் புறப்பட்டார்கள். அரசனுடைய முகத்தைப்

பார்க்க ஒருவருக்கும் பிடிக்கவில்லை. ஏனெனில் அவன் தன்னுடைய அமைச்சனைத் தண்டித்ததுதான். மேலும் அரசனும் 'அநியாயமாக அமைச்சனைத் தண்டித்துவிட்டு நாம் மட்டும் வேட்டைக்குப் போகிறோமே இது நமக்குத் தகுமா?' என்று உள்ளத்தில் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். வழக்கப்படி வேட்டை நடைபெற்றது.

மானைத் துரத்திச் செல்லுதல்

அரசன் தான் எவ்வளவு துன்பத்தில் மூழ்கியிருந்த போதிலும், தான் தொடங்கிய வேட்டையில் சிறிதேனும் குறைவில்லாமல் மிகச் சிறப்பாக வேட்டையாடினான். எல்லோரும் வேட்டையாடி முடியுஞ்சமயத்தில் ஒரு பெரிய மான் தன்னுடைய புதரைவிட்டுக் கிளம்பிற்று. எல்லோரும் களைத்த சமயம்; அரசன் மட்டும் அதனைப் பிடிப்பதற்காகத் துரத்திக்கொண்டு ஓடினான். மற்றவர்கள் எல்லோரும் தங்களால் முடியாமல் பின்தங்கிவிட்டார்கள். காட்டுமானைத் துரத்திக்கொண்டு துவரமான் மட்டும் வெகு மரங்களும் செடிகளும் அடர்ந்த ஒரு பெரிய காட்டில் நுழைந்துவிட்டான். முன்னோடிய மானோ எங்கேயோ மறைந்துவிட்டது.

சிங்கத்தினிடம் சிக்குதல்

அதற்குப் பதிலாக அரசன் தன்முன் ஒரு பெரிய சிங்கம் பெருமுழக்கஞ்செய்துகொண்டு தன்னைக் குறி பார்த்து ஓடிவரக் கண்டான். அரசன் ஏறிவந்த குதிரை சிங்கத்தைக் கண்டு மிரண்டுவிட்டது. அரசனுடைய கை கால்கள் அவன் இடத்தில் இல்லை. அவன் குதிரையை விட்டுக் கீழே குதித்தான். ஓடிவருஞ் 'சிங்கத்தினிடமிருந்து தன்னால் தப்பமுடியாது' என்று முடிவு செய்தான். அதனைப் பார்க்கக்கூட முடியாதபடியால் தன்னிரு கண்களையும் கெட்டியாக மூடிக்கொண்டு 'நடக்கிறது நடக்கட்டும்' என்று நிலத்தில் விழுந்துவிட்டான். இவ்வாறு இவன் விழுந்த அப்பொழுதே சிங்கம் இவனிடம் வந்து நின்றுவிட்டது. கண்களை மூடிக்கொண்டிருக்கும்

துவரமானை இப்படியும் அப்படியுமாகப் புரட்டித் தனது மூக்கால் முகர்ந்து பார்த்தது. அவனுடைய காயம்பட்ட கையை நான்கு ஐந்து தடவை நன்றாய் முகர்ந்து அவனிடம் வெறுப்புக்கொண்டதுபோல் விரைவாக ஓடிப்போய் விட்டது.

அரசன் வருந்துதல்

சிங்கம் கண்ணுக்குக் காணுமற்போன பிறகு அரசன் எழுந்திருந்து அந்த இடத்திலேயே உட்கார்ந்துகொண்டு தன் கண்களால் தாரை தாரையாய் நீர் வடித்தான். இவ்வாறு இவன் செய்தது தான் பிழைத்ததற்காகவன்று. தன் அமைச்சன் நிர்மலனை நினைத்து, "அப்பா அமைச்சா! நீ சிறந்த மனிதன். உன் நற்குணங்களை அறிய ஆணவம் உள்ள என்னுல் எவ்வாறு முடியும்? நேற்று நான் காயம் பட்டு வருந்த எல்லாரும் என்னுடன் புலம்பும்பொழுது நீ மட்டும் 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்ருய். நானோ எனக்குள்ள வீண் பெருமையினுல் உன்னை வீணுகச் சிறைச்சாலைக்கு அனுப்பினேன். நேற்று நீ கூறியது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இன்று உண்மையாக முடிந்ததே. என் விரல்கள் மட்டும் வெட்டுப்படாதிருந்தால் பசியுடன் ஓடிவந்த சிங்கம் இவ்வாறு என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டுத் திரும்புமா? நான் உறுப்புக் குறையுள்ளவன் என்று ஆராய்ந்து பார்த்துவிட்டல்லவோ அது திரும்பிப் போய்விட்டது. ஆகவே என்னுடைய விரல் நேற்றுப் பின்னப்பட்டது இன்று நன்மையாகத் தானே முடிந்தது. நேற்று மட்டும் விரல் போகாமலிருந்தால், இன்று நான் சிங்கத்திற்குத் தப்பியிருப்பேனு? இப்பொழுதே நான் உன்னை விடுவிப்பேன்," என்று தனக்குள் பலவாறு சொல்லிக்கொண்டு வருந்தினுன்.

துணைவர்கள் வருதல்

மிரண்டோடிய தன்னுடைய குதிரையைப் பிடித்து அதன் மீதேறி வந்தவழியே திரும்பினுன். அதற்குள் அவனுடைய வேட்டைப் படைகளும் வேட்டைத் துணைவர்களும் வந்து சேர்ந்தனர். அவ்விடத்திலேயே தன்னு

டைய முதன்மையான நண்பர்களிடம், தனக்கு நேரிட்ட இடுக்கண்ணையும் தான் தப்பினதையுஞ் சொன்னான். "சிங்கமானது விலங்குகளுக்குள் அரசனாகையால் அங்க ஈனம் உள்ளவர்கள், உறங்குகிறவர்கள் ஆகியவர்களைப் புசிப்பதில்லையென்பது கொள்கை. அதே காரணத்தினால் தான் சிங்கம் அரசனுடைய விரலை நான்கைந்து தடவை முகர்ந்து பார்த்துவிட்டு ஓடிவிட்டது." இவ்வாறு அரசன் தன்னுடைய நண்பர்களிடம் சொன்னான். அவர்கள் எல்லோரும் "நிர்மலன், 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று சொன்னது உண்மையாயிற்றே" என்று வியப்படைந்தார்கள். "ஆனால் அவனை நான் சிறைச்சாலைக்கு அனுப்பும்போது, 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று அவன் சொன்னானே. அஃது எப்படி உண்மையாகும்? சிறை வாழ்க்கை நன்மை என்று யார் ஒப்புக்கொள்ளுவார்கள்?" என்று அரசன் கேட்டான். அதற்கு நண்பர்கள், "அதன் பொருள் எங்களுக்குத் தெரியவில்லை. நிர்மலனைக் கேட்டுத்தான் தெரியவேண்டும்," என்றார்கள்.

நிர்மலனை விடுதலை செய்தல்

உடனே அரசனும் மற்றவர்களும் தங்களுடைய ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். ஊருக்கு வந்ததும் துவரமானும் மற்றவர்களும் நேராகச் சிறைக்குச்சென்று அமைச்சனை விடுவித்தார்கள். அவனை அரசன் வாரித் தழுவிக்கொண்டான். நடந்ததை நடந்தபடி நவின்றான். "நீ சொன்னது உண்மையாகிவிட்டது. என் விரல் போனது எனக்கு நன்மையாகவே முடிந்தது. என் விரல் போகாமலிருந்தால் நான் திரும்பி வந்திருக்கமாட்டேன்," என்று சொல்லி அமைச்சனைப் பலவாறு பாராட்டினான். தன்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான். பிறகு, "நான் உன்னை நேற்றுச் சிறைக்கு அனுப்பும்போதும், 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று சொல்லிச் சிறை புகுந்தாயே. அஃது எப்படி உனக்கு நன்மையாக முடிந்தது. அந்தப் பொருளையும் சிறிது விளங்கச் செய்," என்று சொன்னான்.

அமைச்சனுக்கு நன்மை

நிர்மலன் அரசனைப் பார்த்து, "எனக்கும் நன்மை என்றதன் பொருள் மிக எளிமையானதே. அஃது ஏன் தங்களுக்குப் புலப்படாமற்போகவேண்டும்? ஒருவேளை சிங்கத்தைக் கண்ட கிலியினால் அறிவு கலங்கியிருக்கலாம். நானும் தாங்களும் இதுவரையில் இணைபிரியாமல்வேட்டையாடியிருக்கிறோம் அன்றோ? நான் மட்டும்இன்று சிறையில் இல்லாவிட்டால் நான் இல்லாமல் நீங்கள் மட்டும்வேட்டைக்குப் போயிருப்பீர்களா? நான் இன்று உங்களோடு வந்திருந்தால் மீண்டும் வந்திருப்பேனோ? நாம் இருவரும் அதே காட்டில் சிங்கத்தைக் கண்டு அதைக்கொல்லத் தகுந்த ஆயுதம் கையில் இல்லாமல் நடுங்கிக் கீழே விழுந்திருப்போம். தங்களைப் புரட்டிப் பார்த்து விரல் வெட்டப்பட்டு ஈனம் ஏற்பட்டு எண்ணெய் நாற்றத்துடன் இருந்த விரலை முகர்ந்து பார்த்துவிட்டுத் திரும்பிய சிங்கம் எத்தகைய ஊனமும் இல்லாத என்னை அடித்துக்கொன்று தின்னாமல் போயிருக்குமா? என்னை அந்த இடத்திலேயே கொன்று தின்றிருக்குமே. ஆகவே அந்த இடுக்கண்ணுக்கு நான் இன்றைக்குத் தப்பிப் பிழைத்து உயிரோடிருப்பதும் இந்தச் சிறைத்தண்டனையினால் அன்றோ? இஃது 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' விளங்கவில்லையா?" என்றான்.

வியப்பு

இவ்வாறு அமைச்சனானவன் அரசனுடைய கைவிரல் போனதையும் தனக்குச் சிறைவாசம் வந்ததையும் நன்மைக்கே என்று எடுத்துக் காட்டினதைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தார்கள். அரசன் நிர்மலன்மீது முன்னிலும் அதிக அன்பும் நம்பிக்கையும் வைத்து நடத்தி வந்தான்.

கூஅ. சும்மா இருக்கிறாயா, சொரூபத்தைக் காட்டட்டுமா?

ஒரு பெண்

ஓர் ஊரில் ஒரு கணவனும் மனைவியும் இருந்தார்கள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும் ஓர் அருமைப் பெண்ணும் இருந்தார்கள். பெண்ணானவள் தான் நல்ல வடமொழி தெரிந்த ஒரு கணவனுக்குத்தான் வாழ்க்கைப்படுவது என்று முடிவு செய்துகொண்டிருந்தாள்.

ஒரு புலி

இந்தச் செய்தி காட்டில் ஒரு புலிக்குத் தெரிந்தது. எப்படியாவது இந்தப் பெண்ணைத் திருமணஞ்செய்து கொண்டு போகவேண்டுமென்று உறுதி செய்தது. ஓர் அந்தணச் சிறுவன்போல் கோலம்பூண்டு, கையில் தங்கக் காப்பு, தங்கச் சங்கிலி முதலியவை போட்டுக்கொண்டு அந்த ஊருக்கு வந்தது. அதிகாலையில் காவிரியில் நீராடிவிட்டு அரசமரத்தடியில் உட்கார்ந்து காவிரிப்புராணம் படித்துக்கொண்டிருக்கும் வழக்கத்தை மேற்கொண்டது. அதனை எல்லோரும் கருத்துடன் கேட்பார்கள். இந்தப் பெண்ணும் எல்லோரையும்விட முயற்சியாய்க் கேட்பாள். இவ்வாறு சில காலம் நடந்துகொண்டு வந்தது.

திருமணம்

ஒருநாள் இந்தப்பெண் தன் பெற்றோர்களை வணங்கி, "நாள்தொறும் அரசமரத்தடியில் உட்கார்ந்து காவிரிப் புராணம் படிக்கிற பிள்ளைக்கு என்னைத் திருமணஞ் செய்துகொடுங்கள்," என்று வேண்டிக்கொண்டாள். அவர்கள் பெண்ணினுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். பையனை வரவழைத்துத் திருமணஞ்செய்து கொடுத்தார்கள். சிறிது நாள் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தங்கள் வீட்டில் வைத்திருந்து பிறகு, "கணவன் வீட்டிற்குப் போ," என்று சொல்லி அனுப்பினார்கள். அனுப்பும்போது சோறு, தோசை முதலியன கட்டிக்

கொடுத்துக், "குளம் கண்ட இடத்தில் சாப்பிடு. நிழல் கண்ட இடத்தில் பலகாரம் பண்ணு," என்று சொல்லி அனுப்பினார்கள். அவ்வாறே அப் பெண் இளைஞனைப் போலக் கோலம் பூண்டு வந்திருக்கும் புலியோடுகூடக் கணவன் வீட்டிற்குச் சென்றாள்.

சொரூபத்தைக் காட்டட்டுமா?

சிறிது தொலை சென்றவுடன் இவளுக்கு வயிறு பசித்தது. உடனே, "பசிக்கிறது சாப்பிடவேண்டும்," என்று கணவனைக் கேட்டாள். அதற்குக் கணவன், "சும்மா இருக்கிறாயா சொரூபத்தைக் காட்டட்டுமா?" என்று அச்சுறுத்தினான். இவ்வாறு பத்துப் பதினைந்து தடவை மனைவி கேட்டும் கணவன், "சும்மா இருக்கிறாயா சொரூபத்தைக் காட்டட்டுமா?" என்று சொல்லவே மனைவிக்குப் பொறுக்கமுடியாத வருத்தம் உண்டாகிவிட்டது. "சொரூபத்தைத்தான் காட்டுமே பார்ப்போம்," என்றாள்.

சொரூபத்தைக் காட்டுதல்

பெண்ணானவள் 'சொரூபத்தைத்தான் காட்டுமே பார்ப்போம்' என்று சொன்னவுடனே புலி, வாலுந்தோலுமாய்த் தன்னுடைய கொடிய உருவத்தை எடுத்துக் கொண்டது. பெண்ணானவள் அஞ்சி நடுங்கினாள். புலியானது, "இஃது என்னுடைய காடு. உன்னுடைய ஆர்ப்பாட்டங்கள் இங்குச் செல்லமாட்டா. என்னுடைய வீடு சிறிது தொலையில் இருக்கிறது. அங்கு உன்னைக்கொண்டு போய் வைத்துவிடுவேன். என் சொற்படி சரிவர நடந்தாலாயிற்று. இல்லாவிட்டால் உன்னைக்கொன்று தின்றுவிடுவேன்," என்று சொல்லி மிரட்டிற்று.

புலியின் வீட்டை அடைதல்

அதைக்கேட்டு அவள் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு புலியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவ்விடத்தில் புலி நாலைந்து பெரிய தொட்டிகளைக் காட்டி, "நாள்தோறும் எனக்குப் பத்து நாழிகைக்குள்

ளாக இந்தத் தொட்டி நிரம்பச் சோறு வடித்துக்கொட்டி வைக்கவேண்டும். இந்தத் தொட்டி நிரம்பக் குழம்பு பண்ணி நிரப்பவேண்டும். இந்தத் தொட்டி முழுமையும் காய்கறி சமைத்து நிரப்பி யிருக்கவேண்டும். இந்தத் தொட்டி நிறையத் தண்ணீர் கட்டி வைக்கவேண்டும்," என்று சொல்லி ஏற்பாடு செய்துவிட்டுக் காட்டிற்குப் போய்விட்டது.

பெண்ணின் வேலை

பெண் வீட்டிற்குள்ளே போய்ப் பார்த்தாள். அரிசி, பருப்பு, பறங்கிக்காய், பூசணிக்காய், புளி முதலிய எல்லாச் சாமான்களும் மிகுதியாக வைக்கப்பட்டிருந்தன. கொல்லை யில் கிணறும் வாசலில் குளமும் இருந்தன. புலிக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு சும்மா இருந்து என்ன செய் கிறது என்று முடிவு செய்து, உடனே புலி சொன்ன திட் டப்படி சமையல் செய்து தொட்டியில் நிரப்பிவிட்டுத் தண் ணீரையும் ஒரு தொட்டியில் கட்டிவிட்டுக் கதவைத் தாள் போட்டுக்கொண்டு தனக்கு மட்டும் தனியாக உள்ளே சமையல் செய்து சாப்பிடுகிற வழக்கத்தை மேற் கொண்டாள். புலி காடுகளில் மேய்ந்துவிட்டு, "யாரடா அவன் காட்டிலே ஆண் நாற்றம் பெண் நாற்றம்" என்று சொல்லிக்கொண்டே பசியுடன் வரும். வந்ததும் சோற் றைச் சாப்பிட்டுவிட்டுத் தண்ணீரைக் குடிக்கும். சிறிது மன நிறைவு உண்டானவுடன் கதவைத் தட்டும். மனைவி யாகிய பெண் கதவைத் திறப்பாள். அவளுடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டு சிறிது நேரம் இளைப்பாறி இருக்கும். பிறகு மறுபடியும் காட்டிற்குப் போய் மேய்ந்துவிட்டு இரவு வீட்டிற்கு வந்து சேரும். இவ்வாறு நாள்தோறும் நடந்துகொண்டிருந்தது.

தாய் தந்தையருக்குச் செய்தி

இவ்வாறு நடந்து வருகையில் அந்தப்பெண் வெகு வாகத் துன்பப்பட்டு, "இந்தத் தாய் தகப்பன் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? இத்தனை நாளாகியும்

என்னை எட்டிப் பார்க்கவில்லையே," என்று சொல்லி வருந்தியழுதாள். அவள் அழுவதை அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு காக்கை பார்த்துவிட்டுத் தானும் வருந்தியது. பிறகு அவளைப் பார்த்து, "நீ என்னிடம் ஒரு சீட்டு எழுதிக்கொடு. நான் அதனைக்கொண்டுபோய் உன் தாயார் தகப்பனார் கையில் கொடுத்து நீ படும் துன்பத்தையும் தெரிவித்துவிட்டு வருகிறேன்," என்றது. அவள் அவ்வாறே ஓர் ஓலையில் தான் இருக்கும் நிலைமையை எழுதிக் காக்கையின் கழுத்தில் கட்டினாள். அது பறந்துபோய்ப் புலிக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணினுடைய பிறந்த வீட்டில் உட்கார்ந்தது.

தமையன்மார் வருதல்

பெண்ணினுடைய தமையன்மார்கள் இருவரும் காக்கையின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த ஓலையை அவிழ்த்துப் படித்துப் பார்த்தார்கள். தங்களுடைய தங்கை படுந் துன்பத்தை உணர்ந்தார்கள். உடனே காக்கைக்கு மறுமொழி கொடுத்து அனுப்பிவிட்டுத் தாங்கள் இருவரும் போய்த் தங்கையை எப்படியாவது அழைத்துக்கொண்டு வருவது என்று முடிவு செய்தார்கள். உடனே காட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். புறப்பட்டுப் போகும்போது வீட்டில் சோறு மிகுதியாக இல்லாதபடியால் அவர்களுடைய தாயார், களிமண்ணை உருண்டையாக உருட்டி அதன் பேரில் சோற்றுப்பருக்கையை ஒட்டி வழிக்குக் கொடுத்தாள். அதை எடுத்துக்கொண்டு அவர்கள் வெகு தொலை நடந்து ஒரு குளத்தைக் கண்டு குளக்கரையில் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார்கள். கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்துப்பார்க்கவே சோறெல்லாம் களிமண்ணாக இருக்கக் கண்டார்கள். பசி பொறுக்க முடியாமல் வயிறு நிரம்பத் தண்ணீரைக் குடித்துவிட்டு வழி நடந்தார்கள். வழியில் ஒரு பனைமரங்கிடந்தது. அதைத் தமையன் தூக்கிக்கொண்டான். இன்னுஞ்சிறிது தொலை போகையில் ஓர் ஏற்றச்சாலைக் கண்டார்கள். இதுவும் இருக்கட்டும் என்று அதனையும் எடுத்துக்கொண்டார்கள்.

மேலுஞ் சிறிது தொலே போகையில் வழியில் ஒரு கழுதை நின்றுகொண்டிருந்தது. 'இந்தக் கழுதையையும் ஓட்டிக் கொண்டு சென்ருல் எதற்காவது பயன்படும்' என்று கழுதையையுங்கூட ஓட்டிக்கொண்டு சென்ருர்கள். மேலுஞ் சிறிது தொலே போகையில் வழியில் ஒரு கட்டெறும்பைக் கண்டு அதனேயும் பிடித்துவைத்துக்கொண்டார்கள். ஆகவே, தமையன்மார்கள் இருவரும் பனேமரம், ஏற்றச் சால், கழுதை, கட்டெறும்பு ஆகியவைகளுடன் தங்கையின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

தமையன்மார் ஒளிந்துகொள்ளுதல்

தங்கை அப்பொழுதுதான் புலிக்குச் செய்யவேண்டிய சமையல்களேயெல்லாம் செய்து தொட்டியில் நிரப்பி விட்டுக், கதவை மூடிக்கொண்டு தன்னுடைய வேலேயைப் பார்ப்பதற்கு எண்ணிஞள். இவள் கதவை மூடிக்கொள்ளப் போகிற சமயத்தில் தமையன்மார்கள் இருவரும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தமையன்மார்களேக் கண்டவுடன் தங்கைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவேயில்லே. இன்பக் கண்ணீர் சொரிந்தாள். தமையன்மார்களே விரைவாக உள்ளே அழைத்துக்கொண்டு சென்ருள். "அப்புறம் தாராளமாகப் பேசிக்கொள்ளலாம் புலி வருகிற சமயமாகிவிட்டது. இந்தப் பரணின் பேரில் ஏறி ஒளிந்துகொள்ளுங்கள்." என்றுகூறி அவர்களேப் பரணின் மேல் ஏறி ஒளிந்துகொள்ளச் சொன்ஞள். அவர்களும் அவ்வாறே ஏறி ஒளிந்துகொண்டார்கள்.

புலி ஏமாறுதல்

இதற்குள் புலியும் வந்தது. வெளியில் வைத்திருந்த தொட்டிகளேயெல்லாம் வெறுந் தொட்டிகளாகச் செய்து விட்டுக் கதவைத், 'தட தட' வென்று தட்டிற்று. பெண் ஓடிவந்து கதவைத் திறந்து புலியை வரவேற்ருள். புலி உட்கார்ந்ததும், "யாரோ ஆள் மணக்கிருன் உள்ளதைச்சொல் உள்ளதைச் சொல்," என்று தன் மனேவியை நெருக்கிற்று. அதற்குள் ஒரு தமையனுக்குப்

பரண்பேரிலேயே ஒன்றுக்கு வந்துவிட்டபடியால் அவன் அங்கிருந்தபடியே நீரைவிட்டான். குளத்து நீரில் பாதியைக் குடித்துவிட்டு வந்திருக்கிறபடியால் அந்த வீடெல்லாம் மூத்திரமாகப் போய்விட்டது. புலி பார்த்துவிட்டு, "இஃதென்ன?" என்று உசாவிற்று. பெண்ணானவள், "என்னுடைய தமையன் இன்றுவந்தான். அவன் மேலே உட்கார்ந்திருக்கிறான். அவன் ஒன்றுக்கு இருக்கிறான்," என்று சொன்னாள். புலி இதனைக்கேட்டு அஞ்சியது. 'இவ்வளவு மூத்திரம் ஒருவனுக்கு இருந்தால் அவன் எவ்வளவு பெரிய ஆளாக இருப்பானோ?' என்று எண்ணியது. "மைத்துனா! உன்னுடைய காலைக்காட்டு பார்ப்போம்," என்று சொல்லிக் கேட்டது. தமையர்களில் ஒருவன் தான் கொண்டுவந்த பனைமரத்தை எடுத்துக் காட்டினான். பனைமரத்தைப் பார்த்ததும், "அடே அப்பா இவ்வளவு பெரிய காலா?' என்று வியப்படைந்தது. தமையன் பனைமரத்தை மட்டும் காட்டினானேயல்லாமல் வாயைத் திறந்து பேசவில்லை. ஏனென்றால் புலியைக் கீழே காணவே அத்துடன் பழகாதவர்களாகையால் அவர்களுடைய கைகால்கள் நடுங்கின. புலி மறுபடியும், "மைத்துனா! சிறிது உன்னுடைய வயிற்றைக் காட்டு," என்றது. ஒருவன் உடனே ஏற்றச்சாலைத் தூக்கிக் காட்டினான். அதைப் பார்த்ததும் புலி, "இவ்வளவு பெரிய வயிறு? வயிறு வண்ணான் தாழியா?" என்று மூக்கின்மேல் கைவைத்தது. மறுபடியும் புலி, "மைத்துனா! நீ சிறிது வாயைத் திறந்து பேசு பார்ப்போம்," என்றது. அதற்கு ஒருவன் தான் பிடித்துவைத்துக் கொண்டிருந்த கட்டெறும்பைக் கழுதையின் காதில்விட்டான். கட்டெறும்பு காதுக்குட்சென்று கடிக்கவே கழுதை விறிட்டுக் கத்தியது. புலி கழுதையின் பேரொலியைக் கேட்டதும், "இனிய மொழியே இப்படி இருந்தால் சினமொழி எவ்வாறிருக்குமோ? இவ்வளவு மூத்திரம், இவ்வளவு பெரிய வயிறு, இவ்வளவு பெரிய கால்," என்று சொல்லிக்கொண்டே அஞ்சி ஓடிப்போய்விட்டது. உடன்பிறந்தார்கள் இருவரும் இதுதான் சமயம் என்று கீழே

இறங்கித் தங்கையை அழைத்துக்கொண்டு விரைவாக ஓட்டம்பிடித்தார்கள். காடு மலை முதலியவைகளைக் கடந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

புலி மனிதக்கோலம் பூண்டு வருதல்

காட்டிலோ புலி பொழுதுபோன பிறகு வீட்டிற்கு வந்து சேர்ந்தது. வாசலில் உள்ள தொட்டிகளில் ஒன்றும் இல்லாமலிருக்கக் கண்டது. கதவிடம் போய்ப் பார்க்கவே கதவு உள் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. முதலில் கதவைத் தட்டிற்று. தட்டியும் கதவு திறக்கவில்லை. உடனே அது, "தமையன் வந்திருக்கிருன் என்று ஆணவமோ? இரு இரு," என்று உறுமிக்கொண்டு தன் மனைவியை அதட்டி அதட்டிக் கூப்பிட்டுப் பார்த்தது. ஆயினும் மறுமொழி இல்லாமற்போகவே சுவரேறிக் குதித்து உள்ளே புகுந்தது. உள்ளே போய்ப் பார்த்தால் அங்கே ஒருவரும் இல்லை. "ஓகோ நம்மை ஏமாற்றிவிட்டுத் தமையன்பின்னேடு பிறந்த வீட்டிற்கு ஓடிவிட்டாள். பார்த்தாயா? நல்லது! நான் மறுபடியும் மனிதக்கோலம் பூண்டுபோய் அவளை இந்தக் காட்டிற்கு அழைத்துவந்து கொன்றுவிடுகிறேன்," என்று மனதில் எண்ணிக்கொண்டு உடனே பட்டை பட்டையாய்த் திருநீற்றைக் குழைத்துப் பூசிக்கொண்டு கணவனைப் போல் தன் மாமனுர் வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

மாமனுர் வீட்டில் புலி

புலி மனிதக்கோலம் பூண்டு வருவதை மைத்துனர்கள் தொலைவிலேயே பார்த்தார்கள். 'எப்படியாவது வகையாக இதை மயக்கிக் கொன்றுவிட்டால் நல்லது. இல்லாவிட்டால் இது நம்முடைய தங்கையைக் கொன்றுவிடும்' என்று எண்ணினுர்கள். மாப்பிள்ளைக்கு எதிரே ஓடி, "மாப்பிள்ளையே! வாருங்கள் வாருங்கள்," என்று வரவேற்றுப் போற்றினுர்கள். விருந்துக்காகக் கடைக்குப் போய் எல்லாச் சாமான்களும் வாங்கிவந்து சமையல் செய்யத் தொடங்கினுர்கள். புலியின் மனைவியாகிய பெண்

புலியிடம் வந்து, "நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் நாம் ஒற்றுமையாக வாழ்வோம்," என்று சொன்னாள்.

சூழ்ச்சி

சமையல் எல்லாம் ஆய்விடவே, "நீராடலாம்" என்று மாமியார் மாப்பிள்ளையிடம் தெரியப்படுத்தினாள். மாப்பிள்ளை நீராடிவிட்டு மாமனார் மைத்துனர் முதலியவர்களோடு உட்கார்ந்து சிறப்பாக விருந்துண்டார். சாப்பாடானவுடன் தமையன் தம்பியைக் கூப்பிட்டு, "முற்றத்திலே நன்றாகக் காற்றடிக்கிறது. அங்கேபாய்போட்டு வெற்றிலைத் தாம்பாளம் சந்தனம் எல்லாம் எடுத்து வை," என்றான். முற்றத்தில் பாழ்ங்கிணறு ஒன்று வெகு காலமாகப் பயனில்லாமல் பலகைபோட்டு மூடியிருந்தது. தம்பியானவன் கிணற்றின் மேலே போட்டு மூடியிருந்த பலகையை எடுத்துவிட்டு மேலே கோரைப் பாயைப்போட்டு அதன் மேல் பட்டுப் பாய் போட்டுத் தமையனுக்குத் தான் செய்த சூழ்ச்சியைச் சொல்லிவிட்டு மாப்பிள்ளையை அழைக்கப் போனான்.

கிணற்றில் தள்ளி மூடுதல்

மைத்துனர்கள் இருவரும் மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்தார்கள். தாங்கள் இருவரும் கோரைப் பாயின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்துகொண்டு நடுவில் இருந்த பட்டுப்பாயில் மாப்பிள்ளையை உட்காரவைத்தார்கள். சந்தன தாம்பூலம் கொடுத்துப் பெருமைப்படுத்தினார்கள். மாப்பிள்ளை வெற்றிலை போட்டுக்கொண்ட பிறகு, "உடம்பு பட பட" என்று அடிக்கிறதென்று படுத்துக்கொண்டார். மைத்துனர்கள் இருவரும் சமயம் பார்த்துச் சரேலென்று கோரைப்பாயை விட்டு விலகிவிட்டார்கள். புலிமாப்பிள்ளையார் கோரைப்பாய் பட்டுப்பாய் ஆகியவைகளோடு கீழே இருந்த பாழுங்கிணற்றில் விழுந்தார். மைத்துனர்கள் இருவரும், "அடடா" என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தார்கள். மாப்பிள்ளை விழுந்துவிட்டதற்காக வருத்தப்படுகிறவர்களைப்போல நடித்தார்

கள். புலி எங்கே மேலே ஏறி வந்துவிடப்போகிறதோ என்று கல்லேயும் மண்ணேயும் கொட்டி அக் கிணற்றை நிரப்பி மூடிவிட்டார்கள்.

முடிவுரை

புலியின் மனைவியாகிய அந்தப்பெண் அந்தக் கிணற்றின்மேல் ஒரு துளசி மாடங்கட்டி, நாள்தோறும் மெழுகிக் கோலமிட்டு விளக்கேற்றிவைத்துவந்தாள்.

---

௩௪. நான்கு பழமொழிகள்

(1)

ஒரு செட்டி

ஓர் ஊரில் ஒரு செட்டியிருந்தான். அவன் தான் இறந்துபோகும் பொழுது, ஓர் ஏடும் எழுத்தாணியும் கொண்டுவரச் சொல்லி, அதில் பின்வரும் நான்கு வரியை எழுதித் தன் பிள்ளை கையில் கொடுத்தான். "இதுதான் உனக்குப் பொருள். இதை இந்த ஊர் அரசனிடம் கொடுப்பாயானுல் உன்னுடைய வாழ்க்கைக்கு வழி ஏற்படும்" என்று கூறிவிட்டுத் தான் விண்ணுலகஞ் சென்றுன். பிள்ளையானவன் அந்த ஏட்டை இறப்பிலே செருகிவிட்டுத் தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளையெல்லாம் செய்துமுடித்தான். அந்த ஏட்டில் எழுதியிருப்பது இன்னதென்றுகூட அவன் படித்துப் பார்க்கவில்லை.

அரசனிடஞ் செல்லுதல்

பிறகு சோற்றுக்குக்கூட வழியில்லாதபடியால், தகப்பனுர் என்னவோ ஏட்டைக் கொடுத்தாரே அதனுல் நமக்கு ஏதாவது பயன் உண்டா என்ன பார்ப்போம் என்று அதை இறப்பில் இருந்து எடுத்துக் கொண்டு அரசனிடஞ் சென்றுன். அரசன் அந்த ஏட்டை வாங்கிப் பார்க்கையில் அதில்:

(௩) பெண்சாதியைப் பிறந்த விட்டுக் கனுப்பாதே

(௪) கையிற் பொருளில்லாமல் வெளியிற் போகாதே

(௫) கஷ்டப்படுங் காலத்தில் சகோதரிவீடு சேராதே

(௬) கஷ்டப்படுங் காலத்தில் சிநேகிதனைச் சேராமல் இருக்காதே

என்று எழுதப்பட்டிருந்தது. இதனைப் பார்த்த அரசன் இவ்வளவும் உண்மையா அல்லவா என்பதைக் கண்டறிய வேண்டும் என்னும் கருத்துள்ளவன் ஆனான். சீட்டைத் தன்னிடம் கொண்டுவந்த செட்டிப் பையனுக்கு வேலை ஒன்று கொடுத்து அரண்மனையில் இருக்கச் செய்தான். தான் தன்னுடைய அரசாட்சியை அமைச்சனிடத்தில் ஒப்புவித்து விட்டு வெளியே புறப்பட்டான்.

அரசன் ஆராய்ச்சி

"கையில் பொருளில்லாமல் வெளியிற் போகாதே," என்று எழுதப்பட்டிருந்த இரண்டாவது சொல்லை நம்பினவனாய்ப் பொருள் கொண்டு செல்ல எண்ணினான். பணமாகக் கொண்டு போனால் கள்வர்கள் யாராவது பறித்துக் கொண்டு போய்விடுவார்கள் என்று எண்ணி, மாணிக்கம் ஒன்றை எடுத்து அதைக் கோவணத்தில் வைத்துக் கட்டிக் கொண்டு விறகுத் தலையன்போல் கோலம் பூண்டு புறப்பட்டான். அரசனுடைய உடல் வெயிலில் இளைத்து மேனியெல்லாம் கறுத்தது.

தாய் வீட்டில் மனைவி

அரசன் தன்னுடைய மனைவியை நாலைந்து திங்களுக்கு முன்னர் அவள் பிறந்த வீட்டிற்கு அனுப்பியிருந்தான். செட்டிப் பையன் கொடுத்த ஏட்டில், "பெண்சாதியைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பாதே," என்று எழுதியிருப்பதைப் பார்த்து அரசன், 'இந்தக் கோலத்துடன் அந்த ஊர்க்குப் போய் நம்முடைய மனைவி எவ்வாறிருக்கிறாள் பார்ப்போம்,' என்று அவள் இருக்கும் ஊருக்குச் சென்றான். இப்பொழுது அரசன் இருந்த கோலத்தில் அவனை

யாரும் அடையாளங் கண்டு கொள்ள இயலாது. அரசனுடைய அழகான உடல்மாறி விகாரமான விறகுத் தலையன் உடம்புபோல் காணப்பட்டது. அரசன் உருமாறியதோடு விறகுக்கட்டு ஒன்றையும் தன்னுடைய தலையில் வைத்துக் கொண்டு சென்றான். தன்னுடைய மனைவியின் ஊரையடைந்து தெருத் தெருவாக, "விறகு வாங்கவில்லையோ விறகு" என்று கூவிக்கொண்டே போய்க் கொண்டிருந்தான்.

அரசியும் நட்டுவனும்

அங்கே ஒரு பெரிய வீட்டுத் திண்ணையில் அரசனுடைய மனைவியானவள் ஒரு நட்டுவனோடு காயாடிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அரசன் தன்னுடைய மனைவியின் நடத்தையையே பார்க்க வந்தவனாகையால், அந்த வீட்டு ஓரமாகச் சென்று, "விறகு வாங்கவில்லையோ விறகு," என்றான். அந்த நட்டுவன் விறகுத் தலையனைப் பார்த்து, "அரைப் பணத்துக்குப் போடுவாயா?" என்று கேட்டான். அதற்கு அவன், "ஆகா சாமி," என்று சுமையைக் கீழே வைத்தான். நட்டுவன் விறகுத் தலையனைப் பார்த்து, "சிறிது, பொறு இந்த ஆட்டம் முடிந்தவுடன் காசு கொடுக்கிறேன்," என்று சொல்லி விறகுத் தலையனை நிறுத்தினான். அரசன் 'நாம் நன்றாகப் பார்க்க இதுவும் ஒரு சமயம்' என்று களிப்படைந்து அங்கு உட்கார்ந்தான்.

அனுமானப் பிரமாணம்

நட்டுவனும் அரசியும் காயாடும்போதே யாராவது பார்த்தால் இருவருக்கும் ஏதோ சிறிது தொடர்பு இருக்கிறது என்று ஐயப்படுமாறு நடவடிக்கை இருந்தது. விளையாட்டிலேயே பொழுது போய்விட்டது. மாலையில் நட்டுவன் விறகுத் தலையனிடம் அரைப்பணங் கொடுத்தான். அதற்கு அவன், "எனக்குப் பணம் வேண்டாம் சாமி. உங்கள் குணம் ஒன்றே போதும். சிறிதுகூழ் என்னுடைய வயிற்றுக்கு ஊற்றினால் அதுபோதும்," என்றான். நட்டுவன் விறகுத் தலையனுடைய வயிறு காய்ந்

திருப்பதைப் பார்த்தான். அப்படிப் போய்த் திண்ணையில் படுத்திரு. இரவில் நாங்கள் எல்லோரும் சாப்பிட்ட பிறகு உனக்குச் சோறு போடச் சொல்கிலுறேன்," என்ருன். அதற்கு விறகுத் தலையன் "ஆமாம் சாமி. அவ்வளவு செய்தால் போதுஞ் சாமி," என்று சொல்லிவிட்டுத் திண்ணையில் படுத்து, 'இன்னம் என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று காத்திருந்தான்.

அரசன் மனைவி வருதல்

அரசனுடைய மனைவியானவள் பொழுது போன வுடனே வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு விட்டு இரவு நான்கு நாழிகைப் பொழுதுக்கெல்லாம் நட்டுவனுடைய வீட்டிற்கு வந்து விட்டாள். விறகுத் தலையன்போல் படுத் திருந்த அரசனுக்குத் தன் மனைவி இரவில் அவ்விடம் வரவே ஐயம் அடியோடு நீங்கிவிட்டது. நட்டுவன் தான் விறகுத் தலையனுக்குச் சொன்னபடியே சாமப்பொழுதுக் கெல்லாம் சோறு போட்டான். சாப்பிட்டு விட்டு விறகுத் தலையன் கைகால்களைக் கழுவிக்கொண்டு வாசலில் படுத் துக் கொண்டான்.

கட்டிலின் கால்

உள்ளே அரசன் மனைவியும் நட்டுவனும் இரண்டு நாழிகை நேரம் இசைபாடிக் கொண்டிருந்தார்கள். பிறகு படுப்பதற்குப் படுக்கையறைக்குச் சென்ருர்கள். அங்கு மெத்தையைத் தட்டுகையில் கட்டிற் கால்களில் ஒன்று மளக்கென்று முறிந்து போய்விட்டது. இவர்கள் விரை வாகப் படுத்துறங்க எண்ணினர்கள். இரவு அவ்வளவு நேரத்தில் கட்டிற்காலை ஒழுங்கு செய்வதற்கு எவன் வரு வான்? நட்டுவன் வெளியே வந்தான். உறங்குவதுபோல் முகத்தை மூடிக்கொண்டு படுத்திருக்கும் விறகுத் தலையனை எழுப்பி, "அடே உள்ளே வா. கட்டிலின் கால் ஒன்று முறிந்து போய்விட்டது. அதற்குப் பதிலாக உன் தலையை முட்டிட்டுக் கொண்டு உட்காருவாயாகில் நான் உனக்குக் கூலி தருகிறேன்," என்ருன். அரசன் தன்னுடைய மன

துக்குள் 'இவர்களுடைய நியவொழுக்கத்தை நேராகப் பார்ப்பதற்கு இதுவும் ஒரு சமயம்' என்று எண்ணினன். நட்டுவனைப் பார்த்துக், "கூலியும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். உங்களுடைய அருள் இருந்தால் போதுஞ் சாமி!" என்று சொல்லி விட்டு உள்ளே சென்று, தன் தலையைக் கட்டிலின் காலுக்குப் பதிலாக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அதே கட்டிலின் மேல் நட்டுவனும் அரசன் மனைவியும் உறங்கினர்கள். அரசனுக்கு ஐயம் அடியோடு தீர்ந்தது. பொழுது விடிந்தவுடன் நட்டுவன் விறகுத் தலையன் கையில் நான்கு பணத்தைக் கொடுத்தனுப்பினன். அப்பொழுதுதான் அரசன் மனைவிக்கு விறகுத் தலையன்மீது சிறிது ஐயம் உண்டாயிற்று.

விறகுத் தலையனைக் கொல்லமுயற்சி

'நடை முதலியவைகளைப் பார்த்தால் நம்முடைய கணவனைப் போல் காணப்படுகிருனே!' என்று எண்ணினள். உடனே வீட்டிற்குச் சென்று இரண்டு கொலையாளிகளைக் கூப்பிட்டாள். "அதோ போகிருனே விறகுத் தலையன்; அவனை வெட்டிக் கொலைபுரிந்து விடுங்கள்," என்று கட்டளையிட்டாள். இவளுக்குக் கணவன்தான என்னும் உறுதியில்லாவிடினும், யாராக இருந்தாலும் இருக்கட்டும். நாம் நட்டுவனேடு இருந்ததைப் பார்த்தவனுகையால் இவனை உயிரோடு வைக்கக் கூடாது என்னும் எண்ணம் தோன்றிவிட்டது. கொலையாளிகள் விறகுத்தலையனைத் தொடர்ந்து சென்ருர்கள். ஊரைக் கடந்ததும் அவனைப் பிடித்துக் கொண்டு, "எங்களுடைய தலைவி உன்னைக் கொன்றுவிடச் சொன்னுள்; ஆகையால் எங்களோடு வா," என்று சொல்லி இழுத்தார்கள். அரசன், 'ஓகோ! நம்முடைய மனைவி நம்மை அறிந்து கொண்டு கொலை செய் ஏற்பாடு செய்திருக்கிருள்,' என்று உறுதியாகத் தெரிந்து கொண்டான்.

உயிர் தப்புதல்

அரசன் கொலையாளிகளைப் பார்த்து அவர்களிடம் மறைமுகமாகப் பேசத் தொடங்கினன். "நீங்கள் என்னைக்

கொல்வதால் உங்களுக்கு என்ன பயன் உண்டாகப் போகிறது? என்னை விட்டு விடுங்கள். நான் உங்களுக்கு விலை உயர்ந்த அரிய மணி ஒன்றைத் தருகிறேன்," என்று சொல்லியதோடு கோவணத்தில் வைத்திருந்த மணியை அவிழ்த்துக் காட்டினன். கொலையாளிகள் அரசன் காட்டிய மணியினிடத்தில் பேரவாக் கொண்டார்கள். பிறகுத் தலையனைப் பார்த்து, "நீ விரைவாக ஓடிப்போய் விடு. மறுபடியும் இந்த ஊருக்கு விறகு கொண்டு வராதே!" என்றுகூறி அவனை விரட்டி விட்டார்கள். ஒரு சப்பாத்திப் பழத்தை நசுக்கி அதைத் துணியில் நனைத்து அரசன் மனைவியிடம் காட்டினர்கள். அவள் தன்னுடைய கணவன் தொலைந்துவிட்டதாக எண்ணி நட்டுவனுடன் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

உடன் பிறந்தாள் வீடு

அரசனுக்குச் செட்டிப் பையன் கொடுத்த ஏட்டில் இருந்த நான்குமொழிகளில் இரண்டு உண்மையாக முடிந்துவிட்டன. "பெண்சாதியைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பாதே," என்று அதில் கண்டிருந்த சொல் அவனுக்கு உண்மையாக முடிந்தது. "நாம் அனுப்பியபடியால் அல்லவா நம்முடைய மனைவியின் ஒழுக்கம் இவ்வாருகக் கெட்டுப் போய்விட்டது. தெய்வத் திருவருளால் அவளிடம் குழந்தைகள் தோன்ருமற் போயின. இஃது ஒன்றே போதும். இவளை இனிமேல் யார் சேர்க்கப் போகிருர்கள்? 'பணமில்லாமற் செல்லாதே' என்பதும் உண்மையாக முடிந்துவிட்டது. அந்த மணி மட்டும் நம்மிடம் இல்லையாயின், நம்முடைய தலைபோயிருக்கும் அல்லவா? இரண்டு மொழிகளின் உண்மையையும் பார்த்தாய் விட்டது. இன்னும் இரண்டு மொழிகள் எஞ்சியிருக்கின்றன. அவைகளின் உண்மையையும் பார்ப்போம்," என்று அரசன் தன்னுடைய தங்கை வாழ்க்கைப் பட்டிருக்கும் ஊருக்குச் சென்ருன். அவளுடைய வீட்டிற்குப் போகாமல் குளத்தங் கரையில் உட்கார்ந்து கொண்டு ஓர் அந்தணனைக் கூப்பிட்டுத் தன் தங்கை பெயரையும் தன்

னுடைய பெயரையும் சொல்லி அவளிடஞ் சென்று தான் பசியோடு வந்திருப்பதாகவும், ஏதாவது சிறிது சாப்பிட வேண்டும் என்றுஞ் சொல்லியனுப்பினன். அந்தணன் அவ்வாறே அவளிடஞ் சென்று கேட்டான். அவள், "அரசன் எவ்வாறு வந்திருக்கிறன்?" என்று கேட்டாள். அதற்கு அந்தணன், "அவனாவது அரசனாவது, ஒருக் கால் இதற்கு முந்திய காலத்தில் அரசனாக இருந்தானே என்னவோ இப்பொழுது விறகுத் தலையனாகக் காணப்படு கிறன்," என்றான். அதைக் கேட்டு அரசன் தங்கை, ஒரு கலயத்தில் கூழ் ஊற்றி, "இதை அவன் கையில் கொடுத்து விடு," என்று அந்தணன் கையில் கொடுத் தாள். அவன் அதனை அரசனிடங் கொண்டுபோய்க் கொடுத்தான். அரசன் கலயத்தை அவிழ்த்துக் கூழைப் பார்த்தான். 'இருக்கட்டும் நம்முடைய பசிக்கு இதில் சிறிது சாப்பிடுவோம்' என்று சிறிது சாப்பிட்டு விட்டு எஞ்சியதைக் கொல்லை வழியாகத் தங்கை வீட்டிற்கு வந்து அந்தக் கொல்லையிலேயே புதைத்துவிட்டுப் பத்துநாழிகை வழித் தொலையில் இருந்த தன்னுடைய நண்பன் ஒருவனின் வீட்டிற்குச் சென்றான்.

நண்பன் வீடு

அரசனுடைய நண்பன் அரசனை விறகுத் தலையனாகக் கண்டாலும் சிறப்பாக வரவேற்றுப் போற்றினன். நண் பனைப் பார்த்து, "ஏன் இவ்வாறு அடையாளம் தெரியா மல் போய்விட்டீர்கள்? நாடு என்னவாயிற்று? எத்தனை நாட்களாக இந்த நிலைமை? எப்பொழுது ஊரைவிட்டுப் புறப்பட்டீர்கள்? இத்தனை நாட்களாக எங்கிருந்தீர்கள்? எங்குச் சாப்பிட்டீர்கள்? நான் ஒருவன் இருப்பது உங்க ளுடைய நினைவுக்கு வரவில்லையா? ஏன் முன்னமே வர வில்லை?" என்று சொல்லிப் பல கேள்விகளைக் கேட்டான். அன்று இரவு பருப்பும் பாயசமுமாகச் சமையல் செய்யச் சொல்லி அரசனுக்கு வயிறு குளிர அமுதளித்தான். தன் மனைவியிடம் தனிமையில் போய் "அடியே! அவன் இதற்கு முன்னர்ப் பெரிய அரசனாக இருந்தவன். ஏதோ

கெட்ட காலத்தினால் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறான். நம்முடைய வயிற்றுக்குக் குறைவு வந்தாலும் அவன் வயிற்றுக்கு மட்டில் குறைவு செய்யாதே," என்று சொல்லி அறிவுரைகள் கூறி, அரசனை நன்றாகப் போற்றச் செய்தான்.

அரசன் உண்மையைக் கூறுதல்

அவளும் கணவன் சொற்படி அரசனை நன்கு போற்றி ஆகவேண்டியவைகளைச் செய்தாள். அரசன் தன்னுடைய நண்பன் வீட்டில் ஒரு திங்கள் மிகுந்த சிறப்புடன் தங்கியிருந்தான். பிறகு அரசன் அந்த நண்பனிடம், தான் புறப்பட்டு வந்த செய்தியையும் அவ்வாறே எல்லாவற்றையும் சரியாகக் கண்டதையுஞ் சொன்னான். தன் நாட்டிற்கு ஓர் ஆளை அனுப்பி அங்கிருந்து தன் விருதுகள் உடுப்புகள் படைகள் முதலான அரச அங்கங்கள் எல்லாவற்றையும் வரவழைத்துக் கொண்டு, தன் நண்பனும் உடன்வரத் தங்கை வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

தங்கை வீட்டில் தடபுடல்

இரண்டு நாழிகை வழிக்கு முன்னமே அறிக்கைக்காரர்கள் வழி தன் வரவைத் தங்கைக்குத் தெரியப்படுத்தினான். அவள் தமையனை எதிர் கொண்டழைக்கத் தன் கணவனை அனுப்பினாள். எல்லோருக்கும் சிறப்பாக விருந்திடுவதற்கு ஆகவேண்டியவைகளை யெல்லாம் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தாள். அரசன் தங்கை வீட்டையடைந்த பிறகு எல்லோரும் வேடிக்கையாகச் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பிறகு தங்கையானவள் எல்லோரையும் சாப்பிடுவதற்கு அழைத்துக் கொண்டு சென்றாள். எல்லோரும் சாப்பிடுவதற்கு உட்கார்ந்திருக்கையில், அரசன் திடீரென்று எழுந்தான். "இரண்டு நிமிடங்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருங்கள். இதோ வருகிறேன்" என்று அந்த வீட்டுப் புறக்கடைக்குச்சென்று அங்குத் தான் புதைத்து வைத்திருந்த கூழ்க்கலயத்தைத் தோண்டி எடுத்துக் கொண்டு வந்தான். எல்லோ

ரும் பார்த்திருக்க அந்தக் கலயத்தைத் தங்கையினுடைய கையிற் கொடுத்து, "எனக்கு விருந்து எதற்கு? இந்தக் கூழைப்போடு," என்று சொன்னான். தங்கையானவள் மிகுந்த நாணங்கொண்டவளாய்த், "தெரியாமற் செய்து விட்டேன் மன்னிக்கவேண்டும்," என்று சொன்னாள். அரசன் அவளுடைய வீட்டில் தண்ணீர்கூடக் குடிக்கமாட்டேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுத் தன் மாமனார் வீட்டை நோக்கிச் சென்றான்.

மாமனார் வீட்டில்

மாமனார் வீட்டை அடைவதற்கு முன்னரே தான் வருகிற செய்தியை ஆள் மூலமாகத் தெரியப்படுத்தினான். மாமனார் வீட்டார்கள் மாப்பிள்ளைக்கு விருந்து ஏற்பாடு செய்தார்கள். பள்ளியறையையும் அழகு செய்து வைத்தார்கள். அரசன் மாமனார் வீட்டையடைந்ததும், அடுத்த வீட்டு நட்டுவன், தன் மனைவி, கொலையாளிகள் எல்லோரையும் வரவழைத்தான். தான் கண்ட செய்திகள் முழுவதையும் மாமனார் மாமியார் ஆகியவர்களிடஞ் சொன்னான். நட்டுவன், தன் மனைவி, கொலையாளி ஆகியோரின் வாயினாலேயே எல்லாவற்றையும் தெளிவு படுத்தினான். தன் மனைவியைத் தூக்கிலிட ஏற்பாடு செய்துவிட்டுத் தன்னுடைய நாட்டிற்கு வந்து சேர்ந்தான். செட்டிப் பிள்ளையைக் கூப்பிட்டு, அவன் கொடுத்த அந்தச் சீட்டுக்காக அட்சர லட்சம் (எழுத்துக்கு நூறாயிரம்) பொன், வராகன், வெள்ளி முதலியன கொடுத்தான்; அவ்வாறே எல்லோரும் நடக்கவேண்டும் என்று நாடெங்கும் பறையறைந்து தெரியப்படுத்தினான்.

௬ய. நான்கு பழமொழிகள்

(2)

பெருங்காயச் செட்டி

ஓர் ஊரிலே ஓர் ஏழைச்செட்டி இருந்தான். அவன் தான் இறக்கும்போது, ஓர் ஏடு எடுத்து அதில்,

(௧) சிவ துணையின்றி நடக்காதே
(௨) சத்திரத்தில் படுக்காதே
(௩) நாலுபேர் சொல்வதைத் தள்ளாதே
(௪) உள்ளதைப் பெண்சாதியிடம் உரைக்காதே

என்று நான்கு வரிகள் எழுதி அதைத் தன்னுடைய பிள்ளை கையில் கொடுத்துவிட்டு, "இதுதான் உனக்குப் பொருள்; இதில் சொல்லியிருக்கிறபடி நீ நடந்தால் நல மடைவாய்," என்று கூறிவிட்டுக் கண்ணை மூடிவிட்டான். செட்டியின் மகனுக்குப் பெருங்காயச்செட்டி என்று பெயர்.

காக்கை கரையும் ஆலமரம்

பெருங்காயச்செட்டியானவன் தன் தகப்பனார் தனக்கு யாதொரு பொருளும் வைக்காமல் ஏடு ஒன்றைக் கொடுத்து விட்டு இறந்துபோய்விடவே, "இனிமேல் நாம் உயிர் வாழ வேண்டுமே என்ன செய்கிறது? வேறு எங்கேயாவது போய் வாழ்க்கைக்கு வழிதேடவேண்டும். தகப்பனாரோ 'சிவதுணையின்றி வழிநடக்காதே' என்று எழுதியிருக்கி றார். நமக்குத் துணை யார் வருவார்கள்? நாம் என்ன செய்கிறது?" என்று சொல்லி எண்ணமிட்டான். அப் பொழுது அவ்விடத்தில் ஒரு நண்டு ஓடியது. உடனே அவனுக்கு அந்த நண்டை வழித்துணையாகப் பிடித்துக் கொண்டு போகலாம் என்னும் எண்ணம் உண்டாயிற்று. அதனைப் பிடித்து ஒரு தண்ணீர்க் கலயத்தில் போட் டான். அந்தக் கலயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வழிநடந்து சென்றான். போகும் வழியில் ஒரு பெரிய ஆல மரம் காணப்பட்டது. அதற்குக் 'காக்கை கரையும் ஆல

மரம்' என்று பெயர். அந்த ஆலமரத்தடியில் யாராவது வந்து படுத்துக்கொண்டால் அந்த மரத்தில் இருக்கும் ஒரு காக்கை கரைந்து மனிதர்கள் வந்துள்ள செய்தியைத் தெரியப்படுத்தும். காக்கை கத்தியதைக் கேட்டவுடன் ஒரு கால சர்ப்பம் அவ்விடத்திற்கு வந்து மரத்தின் கீழ்த் தூங்கும் மனிதனைக் கடிப்பது வழக்கம். இச் செய்தி பெருங்காயச் செட்டிக்கு ஒன்றும் தெரியாது. அவன் அந்த ஆலமரத்தைக் கண்டதும், வெயில் மிகக் கடுமை யாக இருக்கிறது. சிறிதுநேரம் படுத்திருந்து போவோம்' என்று முடிவு செய்து ஆலமரத்தின் கீழே படுத்துத் தூங்கிவிட்டான். நண்டு வைத்திருக்கும் கலயத்தைக் கால்மாட்டில் வைத்திருந்தான். பெருங்காயச் செட்டி தூங்கினவுடனே காக்கை கத்திற்று. அதைக்கேட்டு ஒரு பெரும் பறைப்பாம்பு படம் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டுச் செட்டி படுத்திருக்கும் இடத்தை நோக்கி வந்தது. காக்கையின் ஒலியைக் கேட்டதும் நண்டு கலயத்தைவிட்டு வெளியில்வந்து செட்டியினுடைய காலைக் கவ்விற்று. உடனே செட்டி விழித்துக்கொண்டு பார்த் தான். தனக்குமுன் பாம்பு வருவதையும் அதை அறிந்து நண்டு காலைக் கவ்வினதையும் கண்டான். அவனுக்கு மிகுந்த வியப்பு உண்டாகிவிட்டது. உடனே அவ்விடம் விட்டு ஓடிப்போனான்.

வேற்றிடஞ் செல்லுதல்

வழியில் மாட்டுக்காரர் சிலரைக்கண்டு தான் தப்பி வந்த செய்தியை அவர்களிடஞ் சொன்னான். அதற்கு அவர்கள், "அஃது உன்னுடைய நல்வினை. எத்தனையோ பெயர் அந்த மரத்தின்கீழ் மாண்டுபோயிருக்கிறார்கள். அதற்குக் 'காக்கை கரையும் ஆலமரம்' என்று பெயர். இனிமேல் அங்கு எட்டிக்கூடப் பாராதே," என்றார்கள். பெருங்காயச்செட்டி தன் மனதிற்குள், "'சிவ துணையின்றி நடக்காதே' என்று தகப்பனார் சொல்லிக்கொடுத்த உறுதி மொழியல்லவா நம்மை இந்த நண்டுமூலமாகக் காப்பாற் றிற்று. இல்லாவிட்டால் இன்று பாம்பினால் மாண்டுபோ

யிருக்கவேண்டுமே,'' என்று வியப்படைந்துகொண்டே நடந்து பொழுதுபோகும் வேளையில் ஓர் ஊரையடைந்தான். அவ்விடத்தில் நாலு வீடு புகுந்து ஐயமேற்றுச் சாப்பிட்டான். பிறகு எங்கே படுத்துக்கொள்ளலாம் என்று எண்ணமிட்டான். அங்கிருந்தவர்கள், "இந்த ஊரில் அறச்சாலை ஒன்று இருக்கிறது. அங்குச் சென்றால் நன்றாகப் படுத்துக்கொள்ளலாம்,'' என்று சொன்னார்கள். 'சத்திரத்தில் படுக்காதே' என்று தகப்பனார் இரண்டாவது உறுதிச்சொல் எழுதிக்கொடுத்திருப்பதை நினைத்துக் கொண்டான். அறச்சாலையில் படுப்பதற்கு அஞ்சினான்.

அறச்சாலையிற் கொலை

ஊருக்கு வெளியில் ஒரு களத்துமேட்டிற்குப்போய் அங்குத் துணியை விரித்துப் படுத்துக்கொண்டான். நண்பகற்போதில் தங்கியிருந்த ஆலமரத்தின் நினைப்பு மனதில் பதிந்திருந்தபடியால் தூக்கம் பிடிக்காமல் பாம்பு வருவது போலும் தன்னைக் கடிப்பதுபோலும் கனவு கண்டுகொண்டிருந்தான். இவ்வாறு கனவு கண்டுகொண்டிருக்கையில் முதுகில் ஒரு பெரிய அடி விழுந்தது. உளறியடித்துக் கொண்டு எழுந்திருந்து பார்த்தான். பல கள்ளர்கள் இவன்முன் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் இவனைப் பார்த்துக், "கொடு உன்னுடைய கையில் இருக்கிறதை,'' என்றார்கள். பெருங்காயச் செட்டியானவன் கீழே விரித்திருந்த கந்தையை எடுத்து, "இதுதான் என்னுடைய கைப்பொருள்,'' என்றான். கள்ளர்கள், "சீ இவன் ஏழைப் பிச்சைக்காரப் பையல்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். செட்டியானவன் 'இனிமேலும் களத்துமேட்டில் இருந்துகொண்டிருந்தால் எத்தனை பெயர்கள் அடிப்பார்களோ என்னவோ தெரியவில்லையே' என்று நடுங்கிக்கொண்டு ஊருக்குள் ஓடிவந்தான். அவ்விடத்தில் அவன் கண்ட காட்சி என்ன? கள்ளர்கள் அறச்சாலையில் படுத்திருந்தவர்கள் எல்லோரையும் கழுத்தை வெட்டிப்போட்டு அவர்கள் கையில் இருந்த பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். என்

னுஞ் செய்தியைக் காதால் கேட்டான். அங்கு நடந்திருக்கும் படுகொலையைக் கண்ணாலும் பார்த்தான். "நாமும் இங்குப் படுத்திருந்திருப்போமேயானால் இந்தக் கொலையில் மாண்டிருப்போம் அல்லவா? அவவாறு மாண்டொழியாமல் தப்பினது நம்முடைய தகப்பனர் எழுதிக்கொடுத்த, 'சத்திரத்தில் படுக்காதே' என்னும் இரண்டாவது உறுதிச் சொல்லின் பலன் அல்லவா?" என்று எண்ணிக் களித்தான். இவ்வாறு இருக்கையில் ஊரார்கள் எல்லோரும் அவ்விடம் வந்து கூடினார்கள்.

பிணத்தை அடக்கஞ்செய்யச் சொல்லுதல்

அவர்கள் எல்லோரும் பெருங்காயச் செட்டியைப் பார்த்து, "அப்பா இந்த அறச்சாலையில் கிடக்கும் பிணங்களையெல்லாம் நீ அடக்கஞ்செய்வாயானல் உனக்கு நாங்கள் பிணத்துக்குப் பத்துப்பணம் வீதம் கூலி தருகிறோம். அன்றியும் பிணங்களிடத்தில் ஏதாவது ஒன்றிரண்டு பொருள்கள் இருந்தால் அவைகளும் உன்னுடையவைகள் தாம்," என்றார்கள். பெருங்காயச்செட்டியோ இரண்டு தடவைகளில் தன் தகப்பனர் எழுதிக்கொடுத்த உறுதிமொழிகளின் உண்மையைக் கண்டவனகையால், தகப்பனரின் உறுதிமொழிகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டவனுன். தகப்பனருடைய மூன்ருவதுமொழி 'நான்கு பெயர் சொல்வதைத் தள்ளாதே' என்றிருந்தபடியால், தான் அந்த ஊரார்கள் சொல்லும் பேச்சைத் தள்ள மனமில்லாமல், அவ்வாறே அந்தப் பிணங்களை அடக்கஞ்செய்வதாக ஒப்புக்கொண்டான். அஃது இவனுடைய நல்வினையே.

பொருள் பெறுதல்

பெருங்காயச் செட்டி பிணங்களை நன்ருக ஆராய்ந்து பார்த்து ஒவ்வொன்ருக அடக்கஞ்செய்துகொண்டு வந்தான். ஒரு செட்டியின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் ஒன்பது மாணிக்கங்கள் கட்டப்பட்டிருந்தன. அவைகளைப் பெருங்காயச் செட்டி ஒருவருக்குந் தெரியாமல் அவிழ்த்துத் தன் அரைஞாண் கயிற்றில் முடிபோட்டுக்கொண்

டான். பல பிணங்கள் கிடந்தன. அவைகளிலும் கள்ளர்கள் கொண்டுபோனவைபோகச் சில பொருள்கள் அகப்பட்டன. பிணங்களை அடக்கஞ் செய்ததற்காக ஊரார்கள் சிறிது பணங்கொடுத்தார்கள். பெருங்காயச் செட்டி 'இந்தப் பொருள்களைக்கொண்டு நாம் இனிமேல் வறுமைத் துன்பம் இல்லாமற் பிழைக்கலாம்' என்று எண்ணிக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். இவனுடைய மனைவியானவள் இவன் வருகிற முகக்குறியிலேயே இவன் கையில் பொருள் ஏறியிருப்பதாக அறிந்துகொண்டாள். மிக்க களிப்புடன் வரவேற்றுப் போற்றினாள். 'உள்ளதைப் பெண்சாதியிடஞ் சொல்லாதே' என்று தகப்பனார் எழுதிக் கொடுத்த நான்காவது உறுதிச்சொல் இவனுடைய உள்ளத்திலே பதிந்திருந்தமையால் ஒன்பது இரத்தினங்கள் அகப்பட்டதை அவன் தன்னுடைய மனைவியிடஞ்சொல்லவில்லை. கையில் இருந்த பணத்தை அவளிடம் கொடுத்து, "இதைக்கொண்டு நாலைந்து திங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிப் போட்டுக்கொள்," என்றான். அவள் அவ்வாறே செய்தாள்.

காளியின்கீழ் மணிகள்

பெருங்காயச் செட்டியின் ஊருக்குக் கிழக்கே இரண்டு நாழிகை வழித் தொலைவில் ஒரு காளிகோயில் இருந்தது. அங்கு ஒருநாள் பெருங்காயச்செட்டி தான் மட்டுந் தனிமையாகச்சென்று காளியைத் தூக்கிவிட்டு அதன்கீழ் தன்னுடைய இரத்தினங்கள் ஒன்பதையும் வைத்துவிட்டு வேண்டும்போது எடுத்துக்கொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். நாலைந்து திங்கள் சும்மா வீட்டில் இருந்தான். வீட்டில் சாமான்கள் யாவும் ஆய்விட்டன. ஆகவே பெருங்காயச் செட்டி தன்னுடைய மனைவியைப் பார்த்து, "அடியே! எனக்குச் சிறிது கட்டுச்சோறு கட்டிக்கொடு. நான் எங்கேயாவது போய்ப் பணம் தேடிக்கொண்டு வருகிறேன்," என்று சொன்னான். அவள் அவ்வாறே கட்டுச்சோறு கட்டிக் கொடுத்தாள்.

மாணிக்கங்களில் ஒன்றை விற்றல்

பெருங்காயச் செட்டி கட்டுச் சோற்று மூட்டையைத் தோளில் மாட்டிக் கொண்டு ஊரை விட்டுக் காளிகோவிலுக்குச் சென்றான். அங்கு ஒருவரும் இல்லாமல் இருக்கவே காளியைத் தூக்கி அப்புறம் வைத்தான். தான் அதன் அடியில் வைத்திருந்த மாணிக்கங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு, மறுபடியும் யாராவது பார்த்தால் ஐயப்படுவதற்கு இடமில்லாமல் காளியைச் சரியாக வைத்துவிட்டு அந்த ஒரு மாணிக்கத்துடன் அவன் அடுத்த பட்டணத்திற்குச் சென்றான். அங்குள்ள மணி வணிகர்களிடம் தன்னுடைய மாணிக்கத்தைக் காட்டினான். அவர்கள் எல்லோரும் இலட்சம் மொகராவுக்கு அதனை எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். அவ்வாறே முடிவு செய்து பணத்தை வாங்கிக்கொண்டு காளிகோவிலுக்கு வந்தான். கோவிலுக்கு அண்மையில் இருந்த ஓர் அரசமரத் தடியில் பத்து மொகாராத் தவிரப் பாக்கி மொகராக்களைப் புதைத்தான். பத்து மொகராக்களைக் கொண்டுபோய் மனைவியிடங் கொடுத்துச் செலவுக்கு வைத்துக்கொள்ளச் சொன்னான். அவள் அவைகளைச் செலவு செய்த பிறகு பணம் கேட்கும் போதெல்லாம் இரவு நேரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் அரசமரத்தடிக்குச் சென்று வேண்டிய அளவு மொகராக்களை எடுத்துக்கொண்டு வருவான். இவ்வாறு காலங் கழிந்துகொண்டு வந்தது. ஒரு பெரிய வீடு விலைக்கு வந்தது. இரண்டாயிரம் மொகராக் கொடுத்து வாங்கினான். இவ்வாறு சிறிது சிறிதாகப் பணத்தை யெடுத்துச் செலவு செய்துகொண்டு வந்தான். மனைவிக்கு உண்மையைச் சொல்லவே யில்லை.

மனைவியின் தொல்லை

இவ்வாறு இவன் சிறிது சிறிதாகப் பணங்கொண்டு வருகிறதையும் வீடும் நிலமும் வாங்குகிறதையும் மனைவியானவள் பார்த்து, "உங்களுக்கு இவ்வளவு பணம் ஏது? எனக்குச் சொல்லக்கூடாதா? சொல்லக்கூடாதா?" என்பாள். வெகு நாள்வரையிலும் சொல்லாமலே யிருந்தான்.

ஒருநாள் அவள் செய்யும் தொல்லை பொறுக்க முடியாமல், தான் ஒன்பது மாணிக்கங்கள் கொண்டு வந்ததையும் அவைகளில் ஒரு மாணிக்கத்தை மாற்றிச் செலவிடுவதையும் எஞ்சிய எட்டு மாணிக்கங்கள் காளியின் கீழ் இருப்பதையும் தன் மனைவியிடம் தன் தகப்பனார் சொல்லிய சொல்லை மறந்து சொன்னான். அவள் அதைக் கேட்டு மனது பூரித்திருந்தாள்.

மதிகெட்ட மாது

"பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்," என்னும் பெரியோர்களுடைய மொழி வீணாகுமோ? மதிகெட்ட மாதாகிய அவள் தன் கணவன் எட்டு மாணிக்கங்களைக் காளிகோவிலில் காளிக்குக் கீழே வைத்திருப்பதைத் தன்னுடைய பக்கத்து வீட்டுக் காரியாகிய தோழியிடம் சொல்லிவிட்டாள். ஒருவரிடமுஞ் சொல்லாதே என்றுங் கேட்டுக் கொண்டாள். ஆனாலும் அவள் சும்மா இருப்பாளா? தன்னுடைய கணவனிடம் மட்டும் சொல்லிவிட்டாள். அவன் அன்றிரவே காளிகோவிலுக்குச் சென்று காளியைத் தூக்கிவிட்டுப் பார்த்தான். அந்த எட்டு மாணிக்கங்களும் அகப்பட்டன. அவைகளை எடுத்துக் கொண்டு வந்து தன் வீட்டில் அடக்கம் செய்துவிட்டான்.

பித்துப்பிடித் தலைதல்

பெருங்காயச் செட்டி முதலில் தான் தொல்லை பொறுக்க முடியாமல் சொல்லிவிட்ட பிறகு, "ஐயோ சொல்லி விட்டோமே, 'உள்ளதைப் பெண்சாதியினிடம் உரைக்காதே,' என்று தகப்பனார் சொன்ன சொல் தவறினோமே," என்று மனம் பதை பதைத்து வருந்தினான். இரண்டு நாள் பொறுத்துக் காளிகோவிலுக்குச் சென்று அங்கே மாணிக்கங்களைப் பார்த்தான். அங்கு ஒன்றும் இல்லாமற் போகவே உடனே அவனுக்கு அறிவு மயங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டது. "கொண்டா என்னுடைய எட்டு மாணிக்கங்களை, கொண்டா என்னுடைய எட்டு மாணிக்கங்களை," என்று புலம்பிக் கொண்டு வெளியே

புறப்பட்டு விட்டான். மறுநாள் பெருங்காயச் செட்டியின் மனைவி தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதைக் கண்டு தன்னையே இகழ்ந்து நொந்துகொண்டாள். அயல்வீட்டுக் காரியை உசாவினாள். அவள் தனக்கு ஒரு பழியும் தெரியாது என்று கூறிவிட்டாள்.

அறச்சாலையில் செட்டி

பெருங்காயச் செட்டியானவன் பயித்தியம் பிடித்து அத்திப் பூ, ஆலம் பூ, எருக்கம் பூ எல்லாவற்றையும் மாலையிட்டுக் கொண்டு ஊர் ஊராக அலைந்து திரிந்தான். இறுதியில் ஓர் அரசனுடைய பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கு அந்த அரசன் வருகிற பரதேசிகளுக்கெல்லாம் உணவிட்டுத் தானே நேரிலே வந்து பந்தியைப் பார்ப்பது வழக்கம். அந்த அறச் சாலையில் பெருங்காயச் செட்டி சாப்பாட்டிற்கு வந்து உட்கார்ந்தான். சமையற்காரர்கள் இலைகளைப் போட்டார்கள். பரிமாறிக் கொண்டு வரும்போது இவனுடைய இலைக்கு என்ன காய்கறி கொண்டு வந்தாலும், "கொண்டுவா என்னுடைய எட்டு இரத்தினத்தை. கொண்டுவா என்னுடைய எட்டு இரத்தினத்தை," என்று சொல்லிக்கொண்டிருந்தானே யல்லாமல் வயிறு எவ்வளவு வாடினபோதிலும் ஒரு பிடி உணவு கூட வாயிற் போட்டுக் கொள்ளவில்லை. இவைகளையெல்லாம் தொலையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அரசன், இந்தப் பெருங்காயச் செட்டியிடம் வந்து இவன் சொல்வதைப் பார்த்து வியப்படைந்தான்.

ஓர் இரத்தினம் கொண்டு வருதல்

தன் சேவகர்களில் ஒருவனைக் கூப்பிட்டு, "நேற்று நாம் ஓர் இரத்தினம் வாங்கினோமே. அதை என்னுடைய மனைவி கையில் கொடுத்திருக்கிறேன். அதை வாங்கிக் கொண்டுவா. அதைக் கொடுத்தாலாவது இவன் ஒரு கவளம் சாப்பிடுவானா பார்ப்போம்," என்று கூறிச் சேவகனை அரண்மனைக்கு அனுப்பினான். அந்த இரத்தினம் பெருங்காயச் செட்டியினுடைய இரத்தினம்தான். இரத்

தினங்களைக் களவு செய்துகொண்டு போனவன் அவைகளில் ஒன்றை முதல்நாள் தான் அந்த அரசனிடம் கொண்டுவந்து விற்றுவிட்டுப் போனான். இரத்தினம் நன்றாக இருக்கவே அரசன் அந்த வணிகனிடம் "இன்னும் அகப்பட்டால் கொண்டுவா," என்று சொல்லியிருந்தான். அவன் மறுநாள் மாலையில் மேலும் இரண்டு இரத்தினங்கள் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தான்.

கொண்டா மற்றவைகளையும்

இரத்தினத்தைப் பெருங்காயச் செட்டிக்கு வாங்கி வரப்போன சேவகன் அரன்மனைக்குப் போய் அரசியைக் கண்டு அந்த இரத்தினத்தை வாங்கி வந்து அரசனிடங் கொடுத்தான். அரசன் அதனைப் பெருங்காயச் செட்டிக்கு முன்பாக வைக்கவே அதனை அந்தப் பைத்தியக்காரச் செட்டி கையில் எடுத்துக் கொண்டான். "எட்டு இரத்தினங்களில் ஒன்றுபோகப் பாக்கி ஏழு இரத்தினங்களைக் கொண்டுவா," என்றான். அரசனுக்கு 'இவனுடைய பைத்தியம் காரணப் பைத்தியம்' என்றும், 'இவனுடைய இரத்தினங்களைக் களவு செய்தவன் அந்த வணிகன்' என்றும் நன்றாகப் புலப்பட்டுவிட்டது. உடனே அரசன் அன்று மாலையில் இரத்தினவாணிகன் வந்ததும் அவனை விட்டு விடாமல் பிடித்துத் தன் முன்னே கொண்டு வருமாறு ஏற்பாடு செய்துவிட்டுத் தான் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

கள்ளனைப் பிடித்தல்

மாலையில் வணிகன் முதல்நாள் கூறிச்சென்றபடி இரண்டு இரத்தினங்கள் கொண்டு வந்தான். அரசன் பெருங்காயச் செட்டியை வரவழைத்து அவன்முன் அந்த இரத்தினங்கள் இரண்டையும் வைத்தான். பெருங்காயச் செட்டி அவைகளையும் எடுத்துக்கொண்டு, "ஏழில் இரண்டுபோகப் பாக்கி ஐந்து இரத்தினங்களையும் கொண்டு வா," என்றான். அரசன் உடனே அந்தக் கள்ள வணி

கனைப் பிடித்துக்கொண்டு, "உள்ளதைச் சொல்லாவிட்டால் உன்னுடைய தலையைக் கொய்துவிடுவேன்," என்ருன். அவன் நடந்த செய்தியைத் தெரிவித்துவிட்டான். அரசன் பாக்கி ஐந்து இரத்தினங்களையும் கொண்டுவரச் செய்து பெருங்காயச் செட்டியினிடங்கொடுத்தான். அவனுக்குப் பைத்தியம் அடியோடு நீங்கிவிட்டது. அவனும் தனக்கு இரத்தினம் கிடைத்த வரலாற்றையும் தன் தகப்பனுர் உறுதிமொழி சொன்ன வரலாற்றையும், அந்தப்படி தான் நடந்து வந்ததையும் சிறிது தவறிப்போகவே தனக்கு நேரிட்ட துன்பத்தையும் அரசனிடம் சொன்னுன். அரசன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இரத்தினங்களைக் களவு செய்தவனுக்கு நான்காண்டுக் காவல் தண்டனை விதித்தான். பொருளை உரியவனிடம் கொடுத்துப் போய் வரச்சொன்னுன். இரத்தினங்கள் யாவும் தனக்கு அரசனுடைய அருளால் கிடைத்தபடியால் அரசனுக்குக் கடுக்கன் செய்துகொள்ளுமாறு பெருங்காயச் செட்டி இரண்டு இரத்தினங்கள் கொடுத்தான். எஞ்சிய ஆறு இரத்தினங்களையும் தான் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். மனைவி கண்டு மகிழ்ந்தாள். பொருளை வீட்டில் வைக்காதபடியால் இவ்வளவு தொல்லைகளும் நேரிட்டதாகக் கணவனிடஞ் சொன்னுள். பொருளை வீட்டிலேயே வைக்குமாறு கேட்டுக்கொண்டாள். கணவனும் அவ்வாறே செய்தான். மனைவி பட்டுத்தேறியவளானபடியால் அதற்குப் பிறகு மிகுந்த விழிப்புடன் நடந்து கொண்டாள். இருவரும் நலமாக வாழ்ந்திருந்தனர்.

௪௧. அறிவுள்ள மனைவி

உலுத்தன்

தென் தேசத்தில் தொண்டைமான் நாட்டில் உலுத்தன் என்னும் பெயருடைய ஒரு பெருநிலக்கிழான் இருந்தான். அவனுக்கு அளவற்ற நிலபுலங்கள் இருந்தன. ஆயினும் அவன் ஒருவித இன்பத்தையும் நுகராமல் நல்வினையற்றவனாய் எப்போதும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தான். தொண்டைமான் நாடோ வானம் பார்த்த சீமை. காலங்களில் காடு கரைகளைச் சீர்திருத்திக் குளம் ஏரி முதலியவைகளைப் பழுதுபார்த்துத் தண்ணீரை நிரப்பிக்கொண்டால் அல்லவோ பயிர்த்தொழில் நடக்கும்? உலுத்தனோ ஒரு காசு ஒருவனுக்கும் உயிரோடு கொடான். இத்தகையோனுக்கு நிலபுலங்களில் இருந்து எவ்வாறு ஊதியம் கிடைக்கும்? நாளுக்கு நாள் இவனுடைய செல்வம் குறைந்துகொண்டே வந்தது. பயிர்த்தொழிலும், மற்றைத் தொழில்களில் எப்படியோ அப்படியே உலோபிகளும் உண்டு; ஊதாரிகளும் உண்டு. அவர்கள் என்ன உலோபிகளாக இருந்தபோதிலும் செலவில்லாமல் ஊதியம் கிடைக்கமாட்டாது என்கிற நியாயத்தைக் கைக்கொண்டு வேண்டிய மட்டும் பயிர்த்தொழிலில் செலவிடுவார்கள். ஆனால் உலுத்தனின் இயற்கை இந்த உலக நியாயத்திற்கு மாறுபாடாக இருந்தது. நாளுக்கு நாள் வறுமை மேலிட்டும் பணஞ்செலவிட அவனுக்கு அறிவு வரவில்லை.

உலுத்தனின் தருமம்

இவ்வாறிருக்கும்போது ஒருநாள் காலையில் ஒரு துறவியானவர் அந்த ஊருக்கு வந்தார். அவருடைய பெருமையும் புகழும் எங்கும் பரவியிருந்தபடியால் அவரைக் கண்டு வணங்கி அவருக்கு ஒருநாள் தனது இல்லத்தில் சாப்பாடு செய்து வைத்துத் தனது தொல்லைகளையெல்லாம் சொல்லிக்கொண்டு அவர் மூலமாய் ஏதாவது நன்மை பெறலாம் என்று உலுத்தன் முடிவு செய்தான். அவன் பிறந்த

நாள்முதல் அன்றுவரை அவன் செய்ய எண்ணிய முதலாவது அறம் இதுதான். உடனே உள்ளே சென்று தன்னுடைய மனைவிக்கும் இச் செய்தியைத் தெரிவித்தான். பிறகு துறவியிடஞ்சென்று மிகுந்த பணிவுடன் வணங்கி அன்று தன்வீட்டில் உணவு ஏற்று அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இவ்வாறு இவன் செய்ததைக் கண்டு அவ்வூரிலுள்ள ஒவ்வொருவரும் வியப்படைந்தார்கள். இதே மூலமாய் இவனுக்கு நல்ல மனப்பான்மையை உண்டுசெய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்ட அத் துறவியும் அவ்வாறே உணவருந்த வருவதாக ஒப்புக்கொண்டார்.

உலுத்தனின் வேண்டுகோள்

அன்றைக்கு உலுத்தன் வீட்டில் துறவியின் பிச்சைக்காக ஒரு பெரிய பார்ப்பன விருந்து நடைபெற்றது. துறவியும் சாப்பிட்டார். கூட்டம் கலைந்தது. உலுத்தனும் துறவியும் தனிமையாக இருக்கும் சமயத்தில் உலுத்தன் துறவியை வணங்கி, "அருள்புரியவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். துறவி உலுத்தனைப் பார்த்து, "உனக்கு ஏதாவது குறைகள் உண்டா?" என்று கேட்டார். உடனே உலுத்தன், "பெரியீர்! தங்களைப்போன்ற பெரியவர்களின் திருவருளினால் எனக்கு நிலபுலங்களில் யாதொரு குறைவும் இல்லை. ஆனால் என்னுடைய நிலங்களெல்லாம் பல சிற்றூர்களில் தனித்தனியாய் இருப்பதால் அவைகளுக்குத் தகுந்த வேலையாட்களை ஏற்படுத்திப் பார்க்க எனக்கு நம்பிக்கை வருகிறதே இல்லை. அவர்களுக்குக் கொடுப்பதற்கும் என் மனம் சரிப்படுகிறதில்லை. இவைகளையெல்லாம் கருத்தாய்ப் பார்த்து நன்மைபெற எனக்கு ஒரு வழி உண்டாக்கிக் கொடுக்கவேண்டும்," என்றான்.

துறவியின் அருள்

துறவி அறிவுப் பார்வையினால் இவனுடைய உலோப குணத்தைப் பார்த்து வியப்புற்றார். 'இவனுக்கு ஏதாவது

ஒரு நன்மையை உண்டாக்கவேண்டும்' என்னும் நல்லெண்ணத்துடனேயே அவனைப் பார்த்து, "அப்பா! மாணவா! நான் ஒரு வழி சொல்லுகிறேன், கேள். எனக்கு ஒரு மறை தெரியும். அதை நான் உனக்குக் கற்பிக்கிறேன். நீ அம் மறையை மூன்று திங்கள் உருவேற்றி வருவாயானால், மூன்றாந் திங்களின் இறுதியில் உனக்கு ஒரு பிரமராட்சதன் தோன்றுவான். அவன் நீ காலால் இட்ட வேலையைத் தலையால் செய்துகொண்டு ஒரு காசுகூடக் கூலிகேட்காமல் உனக்கு ஊழியஞ்செய்வான். அவனால் உன்னுடைய துன்பங்கள் முற்றிலும் நீங்கிவிடும். நீ நலம் பெறுவாய்," என்று சொன்னார்.

பிரமராட்சதன்

துறவி சொல்லியதைக்கேட்டு உலுத்தன் களிப்படைந்தான். அவருடைய திருவடிகளை வணங்கினான். அப்பொழுதே 'அந்த மறையைத் தனக்கு உரைத்தருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். துறவி தான் கிழக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு, அவனை மேற்கு முகமாக உட்காரச் சொன்னார். அந்த மறையை முறையாய் உரைத்தார். பிறகு விடைபெற்றுக்கொண்டு சென்றார். உலுத்தன் தனக்குக் கிடைத்த பெரும்பேற்றைக் கண்டு களிப்படைந்தான். முறைப்படி ஒருவிதமான குறைவும் இல்லாமல் மூன்று திங்கள் மறையை உருவேற்றினான். உருவேற்றி முடிந்தவுடன் ஒரே வடிவமாய் மண்ணுக்கும் விண்ணுக்கும் உருக்கொண்டு ஒரு பிரமராட்சதன் தோன்றினான். "என்னால் உமக்கு ஆகவேண்டியது என்ன? என்னைக் குறித்து ஏன் மூன்று திங்கள் தவஞ்செய்தீர்?" என்று இடி இடித்தாற்போல் கேட்டான்.

பிரமராட்சதன் அடங்குதல்

உருவத்தையும் தொனியையும் கண்டு ஒருவாறு உலுத்தன் நடுநடுங்கினான். ஆயினும் மந்திர வசத்தால் வந்தவன் தன் அடிமை என்ற எண்ணம் இவனுக்கு மேலிட்டிருந்தபடியால் சிறிதும் அஞ்சாமல், "நீ என்

அடிமையாகவேண்டும். என் கட்டளைக்கு உள்ளடங்கி நடக்கவேண்டும். இதற்காகத்தான் உன்னைக் குறித்துத் தவம் புரிந்தேன்,'' என்று உலுத்தன்சொன்னான். இதனைக் கேட்டதும் பிரமராட்சதனானவன் தன் பெரிய உருவத்தை யும் விகாரத் தொனியையும் விட்டு விட்டுப் பூனைபோல் அடங்கினான். ஏனென்றால் அது அம் மறையின் பலம். மறையினால் வசப்படுத்தப்பட்ட பிறகு தங்கள் தலைவர் களுக்கு உள்ளடங்கவேண்டியது பிரமராட்சதர்களின் கடமை. சிறிய வடிவங்கொண்ட அந்தப் பிரமராட்சதன், "அப்படியே ஐயா; நீங்கள் இட்ட வேலையைச் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால் ஒரு செய்தி தங்களிடம் மனுச் செய்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. எனக்கு ஒரு நாளும் ஒழிவின்றி வேலையை அளிக்கவேண்டும். எனக்கு ஊழியம் இடத்தவறினால் தங்களையே நான் அடித்துவிடுவேன்,'' என்றான். இதனைக்கேட்டு உலுத் தன் புன்னகை செய்தான். புன்னகையின் பொருள் என்னவெனில், "நமக்கோ இலட்சக்கணக்காய்க் காணிகள் இருக்கின்றன. இக் காணிகளோ ஒரே ஊரில் ஒரே இடத் தில் இராமல் பல சிற்றூர்களில் சில்லறை சில்லறையாகக் கிடக்கின்றன. அவைகள் உழவையும் நீரையும் கண்டு பல ஆண்டுகள் ஆயின. பழுதுபார்க்காத நமது ஏரிகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. இவ் வேலைகளுக்கெல் லாம் எத்தனை ஆயிரம் கூலிகள் வைத்தபோதினும் எவ்வளவுதான் கூலி கொடுத்தபோதினும் ஒன்றுவது சரிவர நமது விருப்பப்படி நடக்கப்போவதில்லை. இவ்வளவு தொழில்கள் நம்மிடம் இருக்க, இந்த ஒரு பிரமராட்சதன் 'நீர் எனக்கு ஊழியம் இடாவிட்டால் உம்மை நான் அடித்து விடுவேன்' என்கிறான். இவனுடைய பேதைமையே பேதைமை,'' என்பதுதான்.

வேலை இடுதல்

இவ்வாறு உலுத்தன் பலபடியாக எண்ணமிட்டு விட்டுத், தன் காணிகளையும் குளங்களையும் தனது அடிமை யாகிய பிரமராட்சதனுக்குக் காட்ட எண்ணினான். அன்

றைய தினம் அண்மையில் இருந்த இரண்டு ஏரிகளுக்கு அவனை அழைத்துப்போய்ப், "பார்த்தாயா இவைகளை. இவைகளுக்கு மண்வெட்டிக் கொட்டிப் பல ஆண்டுகளாயின. கரைகள் பல இடங்களில் உடைந்திருக்கின்றன. பயிர்த் தொழிலுக்குப் பற்றுக்கோடு தண்ணீராகையால் இந்த இரண்டு ஏரிகளையும் முதல்முதல் இரண்டுபனை ஆழம் மண் வெட்டிக் கரைகளைச் செவ்வையாய்க் கட்டிக் கலிங்குகளை ஒழுங்கு பார்த்து என்னிடம் வந்து சொல்வாயாக," என்று ஏற்பாடு செய்துவிட்டு உலுத்தனாகிய தலைவன் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான். இவனுடைய மனதில் 'இந்த வேலையைச் செய்துமுடிக்க இந்தப் பிரமராட்சதனுக்குப் பல திங்கள்கள் செல்லும்' என்று எண்ணம். ஏரிகள் ஒவ்வொன்றுமோ ஐந்தாறு குரோசம் (குரோசம் இரண்டு மைல்கள்) நீளமும் மூன்று நான்கு குரோசம் அகலமும் உள்ளவைகள்.

வேலை முடிந்தது

இவ்வாறு பிரமசாட்சதனுக்குக் கட்டளையிட்டு விட்டு உலுத்தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அன்று அவன் மனைவி மந்திரப் பெருமையால் அடிமை கிடைத்த மகிழ்ச்சியின் பொருட்டுச் சிறப்பாகச் சமையல் செய்து வைத்திருந்தாள். கணவனும் மனைவியும் தங்களுக்கு அன்று கிடைத்த பெருஞ் செல்வத்தைக் குறித்து மகிழ்ச்சியாகப் பேசிவிட்டு வயிறு நிரம்பப் புசித்துக் களிப்புடன் பாக்கு வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அதே சமயத்தில் பிரமராட்சதனும் தன் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து, "என் தலைவரே! தாங்கள் இட்டவேலையைச் செய்து முடித்துவிட்டேன். ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால் அவைகளைக் காட்டினால் நான் ஒழுங்கு படுத்திவிடுகிறேன். அருள் புரிந்து ஏரிகளை வந்து பார்க்கவேண்டும்," என்று கேட்டுக் கொண்டான். இதைக் கேட்டதும் உலுத்தனுடைய மனம் நடு நடுங்கிற்று. 'நாம் உயிர்தப்பி இந்தப் பிரமராட்சதனிடம் இருக்கவேண்டுமே!' என்று எண்ணினான்.

வேலையைப் பார்வையிடுதல்

உடனே மெய்பதற அந்த இராட்சதனோடு சென்று ஏரிகளைப் பார்த்தான். அங்குக் குற்றம் குறைகள் தனக்கு ஒன்றுஞ் சொல்லத் தெரியவே இல்லை. ஆயிரம் பொறியாளர்கள் (இஞ்சினியர்கள்) ஒரே இடத்தில் உட்கார்ந்து அவர்கள் மேற்பார்வையில் நடந்த வேலைபோல் அவ்வளவு அழகாயும் பலமாயும் இருந்தபடியால் ஒருவித வழுவுதலும் இவனுக்குத் தென்படவில்லை. திகைத்துப்போய், "நல்லது; வீட்டிற்குவா உனக்கு வேலையிடுகிறேன்," என்று சொல்லித் தனது அருமை அடிமையை இட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

மனைவியிடஞ் செய்தி கூறுதல்

இராட்சதனை வெளியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள்ளே புகுந்தான். தன் மனையாளைப் பார்த்து, "உனது கழுத்துத் தாலி இன்றுவரைக்குந் தான் என்று நீ எண்ணிக்கொள்ள வேண்டும். ஐயோ நான் தெரியாமல் என்னாலேயே கெட்டுப் போனேன். மந்திர பலத்தால் ஒரு பேயைப் பிடித்து அடிமையாக்கினது என்னுடைய உயிருக்கே இடுக்கணாக முடிந்துவிட்டது. இலட்சம் ஆட்கள் இடைவிடாமல் இருபதாண்டுகள் செய்துமுடிக்க வேண்டிய வேலையை, இந்தப் பேய் இரண்டு நாழிகையில் செய்து முடித்தால் நான் எப்படி இவனுக்கு எப்பொழுதும் வேலை கொடுக்க முடியும்? துறவியை நான் என்னுடைய நல்ல காலத்திற்காக வீட்டிற்கு அழைக்கவில்லை, என்பது இப்பொழுது தான் எனக்கு வெளியாயிற்று. இவ்வாறு இவன் வேலை செய்வான் என்று நான் அறிந்திருப்பேனேயானால், இவனை அடிமைப் படுத்தும் மறையை நான் கற்றுக் கொண்டே இருக்கமாட்டேன். இதே வகையில் இவன் நமக்கு ஆகவேண்டிய மற்றைத் தொழில்களைச் செய்து முடிக்க இரண்டு நாழிகை வெகு அதிகம். நான் என்ன செய்வேன்?" என்று கண்ணும் கண்ணீருமாய்க் கதறினான்; புலம்பினான்.

மனைவியின் தேறுதல்

இவ்வாறு வருந்திக் கொண்டு நின்ற தன் கணவனைப் பார்த்துச் சிறிதேனும் மனங்கலங்காத அறிவாளியான அவனுடைய மனைவி, "என் ஆருயிர்த் தலைவனே! நீங்கள் அஞ்சுதல் வேண்டாம். இடுக்கண் வந்த காலத்தில் நமக்குத் திறமை அதிகமாகவேண்டும். இப்பொழுது நீங்கள் மனங் கலங்குவது சரியன்று. உங்களுக்கு ஆக வேண்டிய வேலை எல்லாவற்றையும் அவனிடம் வாங்கிக் கொண்டு, எப்பொழுது இனிமேல் வேலை உங்களால் அவனுக்குக் கொடுக்க முடியாதென்று தோன்றுகிறதோ அப்பொழுது அவனை என்னிடம் அனுப்புங்கள். என்னால் கூடிய மட்டும் நான் அவனுக்கு ஏவலிடுகிறேன். ஒருக்கால் நான் இடப்போகிற ஏவலை அவன் செய்யாமல் ஓடிவிட்டாலும் ஓடிவிடுவான்," என்று தேறுதல் கூறினாள். இவ்வாறு இவள் இயம்பியதைப் பொருளற்ற வீண்சொல் என்று உலுத்தன் எண்ணினான். பிழைத்திருக்கும் வரைக்கும் இலாபம் என்னுங் கருத்தை மேற்கொண்டவனாய் அந்த இராட்சதனுக்கு வேலையிடத் தொடங்கினான். அவனுக்கு இருபத்தைந்து சிற்றூர்களில் நிலங்கள் இருந்தன.

மேலும் வேலை ஏவுதல்

அந்த நிலங்களையெல்லாம் வரப்புக் கட்டிவருமாறு ஏவினான். அவைகள் அரைநாழிகையில் முடிந்தன. வயல்களுக்குத் தண்ணீர் இறைக்கச் சொன்னான். கால் நாழிகையில் அவ் வேலை முடிந்துவிட்டது. தன்னுடைய மற்றை ஏரிகளையெல்லாம் செப்பனிடச் சொன்னான். நாற்றுகள் வாங்கிக் கொடுத்து நடவுசெய்யச் சொன்னான். புஞ்சைக் காடுகளை உழுது பயிரிடத் திட்டமிட்டான். இந்த வேலைகளெல்லாம் நொடியில் முடிந்தன. மேற்கொண்டு உலுத்தனால் வேலையிட முடியவில்லை. இராட்சதனோ, "எனக்கு என்ன வேலை இடப்போகிறீர்கள்?" என்று கேட்டு நெருக்கினான். அதற்கு உலுத்தன், "அப்பா! நான் உனக்கு இடவேண்டிய தொழில்களெல்லாம் முன்னரே இட்டாய் விட்டன. இனிமேல் நான் உனக்

குக் கொடுக்க வேண்டிய கட்டளைகள் ஒன்றும் இல்லை. உன்னுடைய தலைவி தனக்கு ஏதோ ஒரு சிறுவேலை நீ செய்யவேண்டியதாக இருக்கிறது என்று சொன்னாள். அதை நீ செய்து முடித்ததும் நான் உன்னுடைய கட்டுப் பாட்டுக்கு உள்ளாக வேண்டியவன்,'' என்றான்.

மனைவி வேலையிடுதல்

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அந்த இடத்திற்கு உலுத்தனுடைய மனைவி வந்தாள். தன் தலையில் இருந்து தொங்கின நீண்ட மயிர் ஒன்றை எடுத்து அந்த ராட்சதன் கையில் கொடுத்து, "அப்பா! குழந்தாய், நான் உனக்குக் கடினமான வேலை ஒன்றும் கொடுக்க வில்லை. இத்தனை நாழிகை மண்வெட்டி நாற் றுப் பிடுங்கி நடவு நட்டு உன் கைகள் இரண்டும் சிவந்து போயிருக்கின்றன. நீ இப்பொழுது எனக்குச் செய்ய வேண்டிய வேலை மிகு எளிது. இதோ பார்த்தாயா இந்த மயிரை எடுத்துக் கொண்டு போய் நேராக்கிக் கொண்டு வரவேண்டும்,'' என்றாள்.

பிரமராட்சதன் தோல்வி

மிகுந்த வணக்கத்துடன் அந்தப் பிரமராட்சதன் அந்த மயிரை வாங்கிக் கொண்டு அதை நேர் செய்யக் கருதினான். அடுத்தாற் போல் இருந்த ஓர் அரச மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்தான். தனது தொடையின் மேல் அந்த மயிரை மெதுவாய் வைத்துத் திரித்துப் பார்த் தான். என்னதான் திரித்தும் மறுபடி அவன் அதைக் கையில் தூக்கிப் பார்த்தால் மறுபடியும் வளையும். இரண் டொரு நாழிகை தன்னால் கூடிய மட்டும் பார்த்தான். அந்தச் சிறிய வேலையைச் சரிவரச் செய்து முடிக்கத் தன் னால் முடியாமல் இருக்கக் கண்டான். சிறிது நேரம் அறிவு மயங்கியிருந்தான். பொற் கம்பிகளையும் வெள்ளிக் கம்பி களையும் நேர் நிறுத்தத் தட்டார்கள் அவைகளை உலையில் வைத்து ஊதுவது இவனுடைய நினைவுக்கு வந்தது அவ் வாறு தானுஞ் செய்தால் ஏன் இந்த மயிர் நேர் நிற்காது

என்று எண்ணி மனமகிழ்ந்தான். பிறகு அவன் தன் தலைவி கொடுத்த அந்த மயிரை ஒரு தட்டான் உலையில் வைத்து ஊதிப்பார்த்தான். நெருப்புப் பட்டவுடன் அம் மயிர், "புஸ்" என்று ஒரு கெட்ட நாற்றத்துடன் பொசுங்கிப் போய்விட்டது. 'இட்ட வேலையைச் சரியாக முடிக்காமல் நான் எவ்வாறு என் தலைவியைப் பார்ப்பேன்' என்று அச்சமுற்று மறைந்தோடிப் போனான்.

கணவனும் மனைவியும் மகிழ்தல்

வெகு நாழிகை வரையில் வேலையாளாகிய பிரமராட்சதன் திரும்பி வராமல் இருக்கவே உலுத்தன் மனைவி மகிழ்ச்சியடைந்தாள். தன்னுடைய கணவனைப் பார்த்து, இன்பக் கண்ணீர் வடித்தாள். "என் ஆருயிர்த் தலைவரே! இனிமேல் நீங்கள் அஞ்சுதல்வேண்டாம். நம்மைப் பிடித்த பிசாசு நம்மை விட்டுவிட்டது," என்றாள். அதற்கு உலுத்தன் "நான் மூன்று திங்கள் உருவேற்றிக் கொண்டு வந்த பிசாசை நீ மூன்று விநாடியில் விரட்டி விட்டாய். உன்னுடைய திறமை மிக நன்றாக இருக்கிறது," என்று சொல்லி அவளைப் புகழ்ந்தான். பிறகு இருவரும் யாதொரு தொல்லையும் இல்லாமல் வாழ்ந்திருந்தார்கள்.

பின்குறிப்பு

இச் சிறு கதை, ஒருவாறு பேய் ஓட்ட ஒரு மரத்தில் மயிரைக் கொண்டு போய் ஆணியினால் அடித்து வைக்கும் வழக்கத்தை விவரிக்கிறதாகவும் சொல்லலாம்.

ருஉ. இரண்டு உடன் பிறந்தார்கள்
அல்லது
பேரவாப் பொல்லாதது

பஞ்சாங்கப் பார்ப்பான்

ஓர் ஊரில் ஒரு பஞ்சாங்கக்காரப் பார்ப்பான் இருந்தான் அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். தகப்பனுருக்கு எப்போதும் மூத்த பிள்ளையினிடத்தில் தான் விருப்பம் இருக்கும் என்று மக்கள் சொல்லுவார்கள். அவ்வாறே இந்தப் பஞ்சாங்கப் பார்ப்பானுக்கும் தன்னுடைய மூத்த மகன்மேல் மிகுந்த விருப்பம். அவனுக்கு இருந்த பொருள்களெல்லாம் இரண்டு எருமை மாடுகள்தாம். அவைகளில் ஒன்று நன்ருகப் பால்கறக்கும். மற்ருென்று மலடு. அவன் சாகுங்காலத்தில் கறவை மாட்டை மூத்த மகனுக்குக் கொடுத்துவிட்டு, இளைய மகன் கழுத்தில் மலட்டு எருமையைக் கட்டிவிட்டான். இருந்த வீட்டை இரண்டாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகங்கொடுத்தான். அவைகளில் இருவரும் தனித் தனியே வாழ்ந்து வந்தார்கள்.

தாய் தந்தையர்கள் மடமை

இளைய பையனுக்கு மூத்தவனிடத்தில் எப்பொழுதும் பொருமை உண்டாகும்படி தகப்பனே தன்னுடைய காலம் முதல் செய்துவிட்டான். சில வீடுகளில் இவ்வாறு தகப்பனுர்களே குழந்தைகளைக் கெடுத்துவிடுவது வழக்கம். அது மிகவும் தவறு. குழந்தைகளாயிருக்கும்போது இவ்வாறு ஒருவருக்கொருவர் பகைக்கும்படி செய்வது பெற்ருேர்களின் பெருந்தவருகும்.

இளையவன் மனவருத்தம்

இளையவன், 'நமக்கு வறட்டு மாட்டைக் கொடுத்து விட்டாரே; நம்முடைய தமையனைத்தானே அதிகமாக எண்ணிஞர்,' என்று எண்ணிஞன். ஒருநாள் தமையன்

இல்லாத சமயம் பார்த்து, அவன் வீட்டிற்குட் சென்று அவனுடைய மாட்டையும் கன்றுக்குட்டியையும் கொன்று விட்டான். மூத்தவன் வந்து பார்த்தான். மாடுங்கன்றும் போய்விடவே அவைகளை ஒரு சக்கிலியனிடங்கொடுத்து அந்தத் தோலைக்கொண்டு தனக்கு ஒரு தம்பட்டம் கட்டித்தரச் சொன்னான். அச் சக்கிலியன் அவ்வாறே கட்டிக்கொடுத்தான். தமையன் இதை எடுத்துக்கொண்டு போய் அடுத்த ஊரில் விற்றுவிட்டு வருவோம் என்று முடிவு செய்தான். அவ்வாறே அதனை எடுத்துக்கொண்டு அடுத்த ஊரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். நடு வழியிலே ஒரு பெருங்காடு. அக் காட்டிற் சென்றுகொண்டிருக்கும்போது பொழுது போய்விட்டது. தம்பட்டத்தோடு சென்றுகொண்டிருந்தவன் காட்டு விலங்குகளுக்கு அஞ்சினான். 'இம் மரத்தில் இராப்பொழுதைக் கழிப்போம்' என்று அங்கிருந்த ஒரு மரத்திலே ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

செல்வம் கிடைத்தல்

அவ்விடம் பெருங்காடானபடியால் அவனுடைய மனது திக்குத் திக்கென்று உதைத்துக்கொண்டே இருந்தது. இவ்வாறிருக்கையில் நள்ளிரவில் சில தீவட்டிக் கொள்ளைக் கொள்ளைக்காரர்கள் எவ்விடத்திலிருந்தோ ஏராளமான பொருளைக் கொள்ளையடித்துக்கொண்டுவந்து அம் மரத்தின் கீழே பங்குபோட்டுக்கொண்டிருந்தார்கள். தமையன் கள்ளர்களைப் பார்த்து மிகவும் அஞ்சினான். மரத்தில் இருந்தபடியே தன்னுடைய தப்பட்டையைப் பலமாக அடித்தான். அந்தப் பேரொலியைக் கள்ளர்கள் கேட்டவுடன் 'அரசனுடைய சேவகன் ஒருவன் நாம் இங்குப் பங்கு பிரித்துக்கொண்டிருப்பதைத் தொலையில் உள்ளவர்களுக்குத் தெரிவிக்கிறான்' என்று எண்ணினார்கள். பங்கு பிரித்துக்கொண்டிருந்த பணத்தை அப்படியே போட்டுவிட்டு விரைவாக ஓடிப்போனார்கள். அவர்கள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. தப்பட்டையை அடித்த பையனானவன் 'இதுவும் நம்முடைய நல்வினைதான்' என்று மிகுந்த

களிப்படைந்தான். உடனே கீழே இறங்கி வந்தான. பயனற்றவைகளையெல்லாம் போட்டுவிட்டுப் பொன்னையும் பொருளையும் மூட்டை கட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

தம்பி செய்தியறிதல்

தன்னுடைய மனைவியைத் தம்பி வீட்டிற்கு அனுப்பிப், பொன்னை அளந்து பார்ப்பதற்கு மரக்கால் வாங்கி வரச் சொன்னான். அவள் அவ்வாறே வாங்குவதற்குச் சென்றாள். தம்பியினுடைய மனைவி 'தன்னுடைய கொழுநன் என்ன கொண்டுவந்திருக்கிறார் பார்ப்போம்' என்று எண்ணினாள். மரக்காலின் அடிப்பாகத்தில் சிறிது மெழுகை ஒட்டிவைத்தாள். தமையன் பொன்களையெல்லாம் அளந்துவிட்டு மரக்காலைத் திருப்பியனுப்பிவிட்டான். அடியில் வைத்திருந்த மெழுகில் ஒரு பொன்காசு ஒட்டிக்கொண்டுவிட்டது. அதைத் தம்பியின் மனைவி பார்த்தாள். தன்னுடைய கணவன் வீட்டிற்கு வந்ததும், "உங்களுடைய தமையன் எங்கேயோபோய் ஏராளமாகப் பொன் தேடிக்கொண்டுவந்து மரக்காலால் அளந்து பார்த்திருக்கிறார். நீங்களும்போய் அவ்வாறு தேடிக்கொண்டு வாருங்கள்," என்று சொல்லி வற்புறுத்தினாள். தம்பி தமையனிடம் வந்து, "நீ எப்படிப் பொன் தேடிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு அவன் தான் தப்பட்டையைக் கையில் எடுத்துக்கொண்டுபோய் மரத்தில் உட்கார்ந்ததையும், கீழே கள்ளர்கள் களவுப்பொருள்களைப் பங்குபோட்டுக்கொண்டிருந்தபோது தப்பட்டையை அடித்ததையும் கள்ளர்கள் எல்லாப் பொருள்களையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடிப்போனதையுஞ் சொன்னான்.

இளையவன் உதைவாங்கிக்கொண்டுவருதல்

தமையன் கூறியவைகளையெல்லாம் தம்பி கேட்டான். தானுந் தன்னுடைய மாட்டைக்கொன்று தப்பட்டை கட்டச்செய்து அதனை எடுத்துக்கொண்டுபோய் வைத்துக்

கொண்டுமரத்தின்மேல் ஏறி உட்கார்ந்திருந்தான். அன்றிரவும் கள்ளர்கள் தாங்கள் கொள்ளையிட்ட பொருளைப் பங்கு போட்டுக்கொள்வதற்காக வழக்கம்போல் அந்த இடத்திற்கு வந்தார்கள். பங்குபோட்டுக்கொண்டிருக்கும்போது இளையவன் தப்பட்டையை அடித்தான். கள்ளர்கள் பார்த்தார்கள். 'நாமோ இவ்வளவு பேர் இருக்கிறோம்; மரத்தின்மேல் ஏறிப் பார்ப்போம்' என்று முடிவு செய்தார்கள். ஒருவன் மரத்தின்மேல் ஏறினான். அங்குத் தப்பட்டையுடன் இருந்த தம்பியைக் கண்டான். கீழே இழுத்துக்கொண்டு வந்தான். எல்லோருமாகச் சேர்ந்து அவனை உதை உதை என்று நன்றாக உதைத்துத் துரத்திவிட்டார்கள். அவ்வாறு நன்றாக உதைபடவே தம்பிக்குத் தாங்கமுடியாத வருத்தம் உண்டாகிவிட்டது. 'தனது மலட்டு எருமையும்போய்த் தான் உயிர் தப்பியது பிரமப் பிரயத்தனமாக முடியவே அவன், 'விட்டேனா அண்ணனை; அவன் என்னை அநியாயமாகக் கெடுத்தான்,' என்று உறுதி செய்துகொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

தம்பியின் சினம்

தம்பி வீட்டிற்கு வந்ததும் தமையன் அவனைப் போய்ப் பார்த்துச் செய்தியை உசாவினான். தம்பியானவன் தான் பட்ட துன்பத்தைச் சொல்லி, "நீ செய்த கெடுதிக்கு உன்னை விட்டேனா? நாளை உன் வீட்டில் நெருப்பு வைத்துவிடுகிறேன் பார்," என்றான். தம்பி சொன்னதைத் தமையன் கேட்டு அஞ்சினான். தாழைகளை வெட்டிக்கொண்டுவந்து தன் வீட்டின்பேரில் போட்டால் நெருப்பு மிகுதியாகப் பிடிக்காது என்று நினைத்து அப்படியே செய்துவைத்தான். ஆனால் அவன் அவ்வாறு செய்த ஏற்பாடு தம்பிக்குத் தெரியாது. அவன் தான் முதல் நாள் தமையனிடம் சொன்னபடி அவன் வீட்டில் தீயை வைத்தான். ஒரு பக்கம் சிறிது வெந்ததேயல்லாமல் தாழையின் பலத்தால் மற்றைப் பக்கங்களில் தீப் பிடிக்கவே இல்லை. தமையன் எரிந்து விழுந்த கரிகளை

வாரிக் கட்டிக்கொண்டு அடுத்த ஊர்க்கொல்லன் பட்டரையில் விற்றுக்கொண்டுவரப் போனுன்.

வழியில் சில முத்து வாணிகர்கள் எருதின்பேரில் முத்து மூட்டைகளைப் போட்டுக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். மாடுகள் தண்ணீர்த்தாகத்தால் வருந்திக்கொண்டிருந்தன. வாணிகர்கள் கரிமூட்டை கொண்டு வரும் தமையனைப் பார்த்து, "அப்பா இந்த மாட்டின் பேரில் இருக்கிற சுமைகளை உன்னிடம் வைத்துக்கொண்டு பார்த்திருப்பாயாகில் இந்த எருதுகளை அதோ தெரியும் குளத்தில் தண்ணீர் காட்டிக்கொண்டு வருகிறோம்," என்றார்கள். தமையன் அப்படியே ஒப்புக்கொண்டான். அவர்கள் அப்பக்கமாய் மறைந்தவுடன், தன் மூட்டையைப் போல் இருக்கும் அவர்களுடைய மூட்டைகளில் ஒன்றைத் தன் பக்கம் எடுத்துவைத்துக்கொண்டு தன்னுடைய கரி மூட்டைகளில் ஒன்றை அங்கு வைத்துவிட்டு ஒன்றுந் தெரியாதவன்போல் இருந்தான். அவர்கள் திரும்பி வந்து தங்களுடைய மூட்டைகளை எண்ணிப் பார்த்தார்கள். சரியாக இருக்கவே அவைகளை முன்போல மாட்டின்பேரில் போட்டுக்கொண்டு தங்கள் வழியே போய்விட்டார்கள். தமையனும் முத்து மூட்டையோடு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். முத்தை அளந்து பார்ப்பதற்கு மரக்கால் வாங்கி வருமாறு தன்மனைவியைத் தம்பி வீட்டிற்கு அனுப்பினுன். அவளும் முன் செய்ததுபோல் மரக்காலில் மெழுகை ஒட்டிவைத்துக் கொடுத்தாள். அளந்த பிறகு மரக்கால் திரும்பியது. அடியில் ஒட்டிக்கொண்டிருந்த முத்தைப் பார்த்து, "ஓகோ இவன் எங்கேயோ போய் முத்துக்கொண்டு வந்துவிட்டான்," என்று உறுதியாகத் தெரிந்துகொண்டாள் தம்பியின் மனைவி.

தம்பி மீண்டுஞ்சென்று உதைபடல்

தன் கணவன் வந்ததும் அவனிடம் முத்தைக் காண்பித்தாள். "தாங்கள் மூன்று வேளையும் சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்கள். உங்

களுடைய மூத்தவன் தினம் எங்கேயாவது போய்ப் பொன் முத்து முதலான பொருள்களைத் தேடிக்கொண்டு வருகிறான்," என்று சொன்னாள். இதனைக்கேட்டுத் தம்பியானவன் மிகுந்த நாணம் அடைந்தான். 'ஏது நாமும் அப்படி ஏதாவது தேடிக்கொண்டு வராதவரையில் இவள் நம்மை எளிதாக விடமாட்டாள்போல் இருக்கிறதே!' என்று எண்ணினான். தமையனிடத்தில் சென்று, 'தான் தெரியாத்தனமாக நெருப்பு வைத்துவிட்டதாகச் சொல்லித் தமையனிடத்தில் வருத்தம் தெரிவித்துக்கொண்டான். அவன் முத்துத் தேடிக்கொண்டுவந்த வழியைத் தனக்குக்கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

தமையன் உடனே தன் விடு எரிந்த கரியை எடுத்துக்கொண்டு போனதையும் முத்து வாணிகர்களைக் கண்டு மூட்டைகளை மாற்றிவிட்டதையும் சொன்னான். 'தம்பி தானும் அவ்வாறே செய்வதாகச் சொல்லிக்கொண்டு போனான். அன்றிரவே தான் மிகுந்த கரியைத் தேட வேண்டும் என்று முடிவு செய்தான். தன் மனைவியை எட்டிப் போகுமாறு சொல்லிவிட்டுத் தன் வீடு முழுவதையும் நெருப்பிட்டுக் கொளுத்தினான். ஒரு தூசிகூடப் பாக்கியில்லாமல் எல்லாம் கரியாகப் போய்விட்டன. கரிகளையெல்லாம் மூட்டை கட்டினான். இரண்டு வாடகை எருதுகளின்மேல் போட்டுக்கொண்டு தமையன் சொன்னவிடத்திற்குச் சென்றான், அங்குச் சிறிது நேரம் காத்துக்கொண்டிருந்தான்.

வழக்கப்படியே முத்துவாணிகர்கள் அந்த வழியாக வந்தார்கள். முதல் நாள் முத்து மூட்டையை இழந்தவன் மறுநாள், தம்பியின் முகச்சாடை தமையனுடைய முகச்சாடையைப் போல் இருந்த படியினால் அவனை முத்து மூட்டையைக் கவர்ந்து கொண்ட தமையனாகவே எண்ணினான். 'நல்லது; இன்றைக்கும் இவனிடம் மூட்டைகளை ஒப்புவிப்போம். இவன் முந்திச் செய்ததுபோல் இன்றைக்கும் பித்தலாட்டஞ் செய்வானாகில் பிடித்துக் கொண்டு உதைப்போம். என்று தன்னுடன் கூட இருந்த முத்து

வாணிகர்களுக்கெல்லாம் தெரியப்படுத்தினன். அவர்களும் அவ்வாறே தங்களுக்குள் ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

கரி மூட்டைகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தம்பியிடம் வந்து, "அப்பா! இந்த மூட்டைகளைச் சிறிது பார்த்துக் கொண்டிரு, நாங்கள் மாடுகளை ஓட்டிக் கொண்டு போய்த் தண்ணீர் காண்பித்து வருகிறோம்," என்றார்கள். தம்பியானவன் 'நம்முடைய நல்வினை இது, நமக்கும் முத்து மூட்டைகள் கிடைத்துவிட்டன' என்று எண்ணி மகிழ்ந்தான். அவர்களைப் பார்த்து "ஆகா அப்படியே செய்யலாம்," என்று சொன்னன். வாணிகர்கள் மூட்டைகளைத் தள்ளிவிட்டு மாட்டை ஓட்டிக் கொண்டு தண்ணீர் காட்டப் போனர்கள். அவர்கள் திரும்பி வருமுன் தம்பியும் மூட்டைகளை மாற்றிவிட்டான். வாணிகர்களுக்கு அவர்களுடைய நோக்கமெல்லாம் மூட்டைகளின் பேரில் இருந்தபடியால் இவன் செய்த பித்தலாட்டத்தைத் தொலையில் இருந்தே கவனித்துக் கொண்டார்கள். அவனிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்ததும் அவன் குடுமியைப் பிடித்துக் கொண்டு நன்றாக உதைத்தார்கள். தம்பியானவன், "ஐயோ பாவி தீமை செய்தானே! வீடும் போய்க் குடுமியும் பாதி அறுந்ததே!" என்று அலறினன். மிகுந்த துன்பப் பட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்தான்.

தமையனைக் கட்டிக்கொண்டு போடுதல்

'இவனை எளிதில் விடக்கூடாது. இரவில் திடீரென்று இவன் வீட்டிற்குள் புகுந்து இவனைக் கட்டிக்கொண்டு போய்ச் சுடுகாட்டில் வைத்துக் கொளுத்திவிட வேண்டும்,' என்று உறுதி செய்துகொண்டு தமையன் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவன் வீட்டிற்குச் சென்றான். உறங்கிக் கொண்டிருந்த அவனை ஒரு கோணியிற் போட்டுக் கட்டித் தலையில் தூக்கி வைத்துக் கொண்டான். இதற்குள் தமையன் விழித்துக் கொண்டு தான் தன்னுடைய தம்பி தலையில் இருப்பதை அறிந்து, "ஏன் தம்பி இவ்வாறு என்னைக்

கட்டிக் கொண்டு போகிருய்?" என்று கேட்டான். அதற்குத் தம்பி, "நீ எனக்குப் பலவாறு கெடுதி செய்து கொண்டு வருகிருய். ஆகையால் உன்னை ஒரே அடியாக ஒழித்துக்கட்ட முடிவுசெய்து தீவைத்துக் கொளுத்தி விடப் போகிறேன்," என்று சொல்லிக் கொண்டே சுடு காட்டை யடைந்தான். அங்கு மூட்டையை இறக்கி வைத்து அதன் வாயை நன்ருகக் கட்டினுன். பிறகு விறகு பொறுக்கி வரச் சென்ருன்.

கோனுன் சிக்குதல்

அவ் வாறிருக்கையில் ஓர் இடையன் அவ்விடம் எரியும் நெருப்பில் புகைச் சுருட்டுப் பற்ற வைப்பதற்கு வந்தான். யாரோ மனிதர்கள் வருகிருர்கள் என்பது கோணியில் இருக்கும் தமையனுக்குத் தெரிந்தது. அவன் உடனே "அப் பெண்ணும் அவளுடைய பொருளும் எனக்கு வேண்டாம். என்னை விட்டு விடு," என்று சொல்லிக் கொண்டிருந்தான். இதை இடையன் கேட்டு, "என்னப்பா செய்தி!" என்று உசாவினுன். அதற்குத் தமையன் "அப்பா! நீ தான் உனக்கு வேண்டுமானுல் ஒப்புக்கொள். எனக்கோ காடு வா வா என்கிறது. வீடு போ போ என்கிறது. எல்லாம் ஒழிகிற காலம். தலைநரைத்து விட்டது. என்னை ஒருசிறு பெண்ணுக்குத் திருமணஞ் செய்துவைக்க என் மாமா என் உடன்பாடு இல்லாமல் என்னைத் தூக்கிக் கொண்டு போகிருன்," என்ருன். உடனே இடையன் இவன் சொல்வதைச் சரியென்று நம்பினுன். 'சுடு காட்டுக்குக் கட்டுண்டு வந்ததில் ஏதோ கெடுதியிருக்கிறது' என்று எண்ணுமல், மிகுந்த பேரவாக் கொண்டான். கோணியில் இருந்த தமையனைப் பார்த்து, "உனக்குப் பதில் என்னை வைத்துக் கட்டிவை. நான் அந்தப் பெண்ணைத் திருமணஞ் செய்து கொள்ளுகிறேன்," என்ருன். அதற்குத் தமையன் இசைந்தான். இடையன் கோணியை அவிழ்த்து விட்டான். தனக்குப் பதிலாகச் சாக்கில் அவனைக் கட்டி விட்டு இடையனின் மாடுகளை ஓட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

தம்பி தமையனைக் காணுதல்

தம்பி இதற்குள் பல பட்ட மரங்களை ஒடித்து விறகு கட்டிக் கொண்டு சுடுகாட்டிற்கு வந்தான். விரைவாகத் தீ மூட்டினான். சாக்கைத் தூக்கி நெருப்பிலே போட்டான். 'தொலைந்தான் இவன். வீட்டிற்குச் சென்று இவனுடைய பொன்முத்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுவோம்' என்று ஆவலுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். தனக்கு முந்தியே தமையன் பல மாடு கன்றுகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்திருக்கக் கண்டான். அவனுக்கு மிகுந்த வியப்பு உண்டாகிவிட்டது. "இஃதென்ன புதுமையாக இருக்கிறது? உன்னை ஒரு நாழிகைக்கு முந்தித் தானே கொழுந்து விட்டெரியும் தீயில் தூக்கிப் போட்டேன். நீ எப்படித் தப்பித்துக் கொண்டு வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு மூத்தவன், "நீ என்னை நெருப்பிற் போட்டவுடன், நம்முடைய தகப்பனார் பாட்டனார் எல்லோரும் எனக்கு முன் வந்து தோன்றினார்கள். நம்முடைய தகப்பனார் என்னைப் பார்த்து, 'பையா! அப்பொழுது உனக்கு ஒரு மாடு தான் கொடுத்தேன் என்று என் நெஞ்சம் வேகாமல் நான் எரிந்தேன். இவ்விடம் விண்ணுலகத்தில் யாதொரு குறைவும் இல்லை. இந்தா இந்த மாடு கன்றுகளையெல்லாம் ஓட்டிக் கொண்டு போய், நீ நலத்துடன் வாழ்ந்திரு' என்று சொல்லி எனக்குக் கொடுத்தார்கள்," என்று சொன்னான். இதைக் கேட்டுத் தம்பி வியப்படைந்தான். 'நாமும் இவ்வாறு தீயில் விழுந்தால் நமக்கும் மாடு கன்றுகள் கிடைக்கும்' என்று எண்ணினான். தமையனைப் பார்த்து, "ஆனால், அண்ணா என்னையும் நாளைக்கு அவ்வாறு செய்கிறாயா?" என்று கேட்டான். மூத்தவன், "அதற்கென்ன? அப்படியே ஆகட்டும்," என்று ஒப்புக் கொண்டான்.

இளையவன் எரிந்தொழிதல்

மறுநாள் முழுவதும், 'எப்பொழுது இருட்டப் போகிறது, எப்பொழுது இருட்டப்போகிறது' என்று காத்துக் கொண்டிருந்தான். பொழுது போனவுடன் தம்பியான

வன் தமையனிடஞ் சென்று, தன்னைச் சுடுகாட்டில் எரித்து விடும்படியாகவும், தான் கட்டை முதலியவற்றை முந்தியே சுடுகாட்டிற்கு அனுப்பி இருப்பதாகவுஞ் சொன்னான். அவ்வாறே தமையன் தம்பியைக் கட்டித் தூக்கிக்கொண்டு போய் அவனை ஒழுங்கு செய்து வைத்திருந்த சிதையில் போட்டு எரித்துவிட்டு விடுவந்து சேர்ந்தான்.

முடிவுரை

இச் சிறுகதை 'பொறுமை பொல்லாது' என்று சொல்லுவதுடன், குழந்தைகளாயிருக்கும்பொழுது தம்பி தமையன்களுக்குள் ஒருவிதமான பகையை உண்டாக்கி வைத்தால் அது நீடித்து வளர்ந்து, உடன் பிறந்தார் தன்மையை முற்றிலும் அழிப்பதுடன், ஒருவனை மற்றொருவனுக்குப் பெரும்பகையாகவுஞ்செய்து அடியோடு அழித்து விடுகிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆகையால் இச் சிறுகதையைப் படிக்குஞ் சிறுவர்கள் தாங்கள் பெற்றோர்களாகுங் காலத்தில் தங்கள் பிள்ளைகளை ஒருவரை ஒருவர் பகைக்கும்படியாய், "நீ கெட்டிக்காரனோ அவன் கெட்டிக்காரனோ பார்ப்போம்," என்று சொல்லி அவர்களை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்காமல், எல்லாக் குழந்தைகளையும் ஒரே மாதிரியாகப் பாவித்து அன்பு செலுத்தி வரவேண்டும்.

[இக் கதையின் முடிவும் உலகப்புரட்டன் கதையின் முடிவும் ஒரேமாதிரியாக இருப்பதைப் படிப்பவர்கள் கவனிக்க வேண்டும்.]

௬௩. வத்சலே

பத்னி பாக்கியன்

தென்னுட்டிலே முன்னுளிலே பத்னீ பாக்கியன் என்னும் பெயருடைய ஒரு வணிகன் இருந்தான். அவன் வீட்டில் அறுபத்தைந்து எழுபது அகவையுள்ள அவனுடைய தாயும், இபத்தைந்துமுப்பது அகவையுள்ள வத்சலே என்னும் பெயருடைய அவனுடைய மனேவியும் இருந்தார்கள். வத்சலேயானவள் பத்னீ பாக்கியனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனுடைய வீட்டிற்கு வந்ததுமுதல் தன்னுடைய மாமியாரையே தெய்வமாகக் கொண்டாடினுள். நாள்தோறும் படுக்கையைவிட்டு எழுந்ததும் தன்னுடைய மாமியாரைக் கும்பிட்டு வணங்கிய பிறகுதான் வேறு வேலே பார்க்கத் தொடங்குவாள்.

மாமியாரிடத்தில் அன்பு

மாமியாருடைய கட்டளேயில்லாமல் ஒரு காரியமுஞ் செய்யமாட்டாள். சமையல் செய்யும் முன்னமே, "அம்மா! இன்றைக்குத் தங்களுக்கு எவ்வாறு சமையல் செய்ய வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டே அவள் கட்டளேப்படி செய்து முடிப்பாள். அன்றியும் முதன் முதலில் தன்னுடைய மாமியாருக்கு அன்புடனும் அச்சத்துடனும் அமுதளித்து முடிந்த பிறகே தன்னுடைய கணவனுக்குப் பரிமாறுவாள். மாமியார் எள்ளு என்பதற்குமுன் எண்ணெயாக நிற்பாள். அந்த ஊர்க்காரர்கள் எல்லோரும் வத்சலே தன்னுடைய மாமியாரிடம் நடந்துகொள்ளும் வகையைக் கதை கதையாகச் சொல்லுவார்கள். சிலர் வத்சலேயைப் பைத்தியக்காரி என்பார்கள். சிலர் அசடு என்பார்கள். பொதுவாக ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய அறிவு வத்சலேக்கு இல்லேயென்பது சிலருடைய எண்ணம். இதுதான் உண்மையென்பது போகப் போகத் தெரியவரும். பத்னீ பாக்கியனுக்குத் தன்னுடைய மனேவியின் குணம் ஒருவாறுதெரிந்தபோதினும் 'போனுல்

போகிறாள்: இவளால் தொல்லையொன்றும் இல்லை. நம்முடைய தாயாரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டி வருகிறாள். இதில் என்ன தவறு' என்று பேசாமல் இருந்துவிட்டான்.

மாமியார் சாவு

மனிதர்களுக்கு வாழ்நாள் நூறாண்டு என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமேல் உயிர் வாழ்ந்திருந்தவர்கள் மிகச்சிலரே. அதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே பத்னி பாக்கியனுடைய தாயார் இறைவன் திருவடி நிழலை அடைந்தாள். எண்பத்தைந்தாவது அகவையில் அவள் மாண்டது அவ்வளவு வருந்துதற்கு உரியது அன்று. நல்ல சாவு என்றே உலகம் அதனைக் கொண்டாடும். பத்னி பாக்கியனும் அவ்வாறே 'நம்முடைய தாயார் நாம் உயிருடன் இருக்கும்போதே நல்ல கதி அடைந்தாளே' என்று மகிழ்ச்சியடைந்தான். ஆனால் வத்சலையின் வருத்தமோ அளவிட்டுக் கூற முடியாததாக இருந்தது. பெருந்துன்பக் கடலில் அவள் ஒரே அடியாக மூழ்கிவிட்டாள். என்றைக்குக் கிழவி உடல் நலங் குன்றிப் படுத்தாளோ அன்றைக்கே வத்சலையினுடைய பாதி உயிர் போய்விட்டது. கிழவியைத் தன்னுடைய மடியில் தூக்கிப் போட்டுக்கொண்டே எவ்வளவோ மருந்துகள் கொடுத்தாள். பத்தியங்கள் கொடுத்துக் கொடுத்துப் பார்த்தாள். வாழ்நாள் இருந்தால் அல்லவோ மருந்து பலிக்கும்? மாமியார் உயிர் வாழ்ந்திருப்பதற்கு வத்சலையினுடைய நல்வினை பலமுள்ளதாக இல்லை. மாண்டாள் கிழவி. வருந்தினாள் வத்சலை.

வத்சலையின் வருத்தம்

'இனிமேல் நான் என்ன செய்வேன்' என்று அலறினாள். "யாரைக்கேட்டுச் சமையல் செய்வேன்? யாருக்கு முதலில் பரிமாறுவேன்?" என்று கதறினாள். பத்னீ பாக்கியன் இவளுடைய மனப்போக்கை நன்குணர்ந்தவன் என்று முன்னரே சொல்லியிருக்கிறோமே! அவன் தன் மனை

விக்கு ஆயிரம் வகையாகத் தேறுதல் சொல்லிப் பார்த்தான். என்ன சொல்லியும் நாளுக்கு நாள் வத்சலையின் துன்பம் அதிகரித்துக்கொண்டே போயிற்று. உடல் வாடி வதங்கித் துரும்பாகப் போய்விட்டது. அவள் தன்னுடைய கணவனைப் பார்த்து, "எனக்கு ஒரு மாமியார் கொண்டு வந்து கொடுங்கள். இல்லாவிட்டால் எனக்கு ஒன்றும் ஓடாது. நான் என்ன செய்வேன்? கடவுள் என்னை அவ்வாறு படைத்துவிட்டார்," என்று சொல்லிக் கதறத் தொடங்கினாள்.

கணவன் கவலை

பத்னீ பாக்கியன் தன்னுடைய மனைவியின் அறிவின்மையைக் கண்டு மனது இரங்கினான். 'ஐயோ இவ்வளவு அன்பு மாமியாரிடம் இந்தக் கலிகாலத்தில் யார் வைக்கப்போகிறார்கள்? இவள் பைத்தியக்காரி என்பதில் ஐயமில்லை. ஆனால் மாமியாரைப் பற்றிய பைத்தியம் ஒன்று தவிரப் பாக்கி ஒருவிதமான தீய குணமும் இவளிடத்தில் இல்லவேயில்லை. இதற்காக நாம் என்ன அறிவு சொன்னபோதினும் இவளுக்கு ஏறாது. இவளுடையஎண்ணத்தைத்தான் நாம் கெடுப்பானேன்," என்று ஒரு சூழ்ச்சி செய்தான்.

மரமாமியார்

ஒரு தச்சனிடஞ் சென்றான். அவனிடம் தன் மனைவியின் மாமிப் பைத்தியத்தைச் சொல்லி அவனால் ஒரு மரப்பதுமை செய்வித்தான். அதைத் தன்னுடைய வீட்டிற்குக் கொண்டுவந்து தன் மனைவி வத்சலையிடம் கொடுத்து, "அடியே இதோ பார்! உனக்கு ஒரு மாமியார் கொண்டுவந்தேன்," என்று சொன்னான். வத்சலையின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நகைத்தாள்; குதித்தாள்; இன்பக் கூத்தாடினாள். காணாததைக் கண்டதுபோல் களித்தாள். தன் வீட்டுக்கூடத்தில் ஒரு பலகையின் மேல் அதனை வைத்தாள். காலையில் எழுந்ததும் அதனை வணங்குவாள். நீராடிப் புடவை கட்டி நெற்றியில் குங்குமம்

அணிந்து மாமியாரிடம் வருவாள். "அம்மா! இன்றைக்கு என்ன சமையல் செய்கிறது?" என்று கேட்பாள். பதுமை ஒன்றும் பேசமாட்டாது என்று நாம் சொல்லவேண்டியதே யில்லை. ஆனால் வத்சலையின் கண்களுக்குப் பதுமையின் உதடுகள் அசைவதுபோலத் தோன்றும். உடனே அவள், "அப்படியா? உடம்பு சரியில்லை. மிளகுரசம் வேண்டுமா?" என்று தானே மாமியார் சொல்லுகிறதாகக் கற்பனை செய்துகொள்வாள். "அப்படியே செய்கிறேன் அம்மா," என்று சொல்லிவிட்டுப் போவாள்.

மாமியாருக்குப் படைப்பு

சமையலானவுடனே மரப்பதுமைக்குமுன் இலை போட்டுச் சோறு படைப்பாள். அவளுடைய உறவினர்கள் சமயம் பார்த்துச் சோற்றை இழுத்துக்கொண்டு போய் விடுவார்கள். இஃது அவர்களுக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது. வத்சலையோ தன்னுடைய மூடபக்தியினால் மாமியார் உணவைச் சாப்பிட்டுவிட்டதாக எண்ணி மகிழ்வாள். 'இவ்வளவு பைத்தியக்காரப் பெண் பிள்ளையும் இந்த உலகத்தில் இருக்கிறாளா' என்று அவர்கள் திகைப்படைந்திருந்தார்கள். ஆனால் உண்மையில் மாமியார் செய்தி ஒன்று நீங்கலாக மற்றைய எல்லாக் காரியங்களிலும் வத்சலை மிகுகெட்டிக் காரியாகவே நடந்துவந்தாள். அவளிடம் வேறு எத்தகைய அசட்டுத் தனமும் இல்லை.

பக்கத்து வீட்டு வஞ்சகி

இவளுடைய கணவன் பத்னிபாக்கியன் இரண்டு மூன்று திங்கள் வெளி நாட்டிற்கு வாணிக வேலையாகப் போய் வரும்படி நேரிட்டது. இவனுக்குக் கூட்டாக இவனுடைய அயல் வீட்டுக்காரனும் புறப்பட்டான். இவ்வாறு வீட்டை விட்டுப் போகுமுன் இரண்டு பேர்களும் வணிக முறை எப்படியிருக்குமோ யாதாக இருக்குமோ என்று எண்ணி வீட்டுக்கு வேண்டிய சாமான்களை ஐந்தாறு திங்கள்களுக்குக் காணுமாறு வாங்கி நிரப்பிவிட்டுப் புறப்பட்டார்கள். ஆடவர்கள் இருவரும் வாணிகத்தில் கூட்டாகச்

சேரவே பெண்கள் இருவரும் நட்புக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது. பக்கத்து வீட்டுக்காரன் மனைவியின் பெயர் வஞ்சகி. மிகு கெட்டிக்காரி. தன் பெயருக்கேற்ப வஞ்சனைகள் பலவற்றை நன்றாகச் செய்யக்கூடியவள். வத்சலையின் மாமிப்பைத்தியம் ஊர்முழுவதும் புகழ் பெற்றிருக்கையில் பக்கத்து வீட்டுக் காரிக்குச் செய்தி தெரியாமல் இருக்குமா?

அடுத்த விட்டுக்காரியின் அறிவுரை

ஆடவர்கள் இருவரும் ஊரைவிட்டுப் புறப்பட்டதும் பக்கத்து வீட்டு வஞ்சகி வத்சலை வீட்டிற்கு வந்தாள். வத்சலையைப் பார்த்து, "அடிபாவி! சண்டாளி! ஒழுங்கற்ற முறையில் அரைவயிற்றுச் சோறுபோட்டு மாமியாரை இவ்வாறு கொலை செய்கிறாயே! இது தகுமா? அடி பாதகி! மாமியார் உடம்பு துரும்பாகப் போய்விட்டதே. நாள்தோறும் மிளகு ரசம், இஞ்சித் துகையல், பொரித்த குழம்பு ஆகியவைகளைச் செய்து போட்டுப் போட்டுக் கெடுத்து விட்டாயே," என்று சொல்லிப் பரிதபித்தாள். இவ்வாறு இவள் இயம்பியது வத்சலைக்கு உண்மையென்று தோன்றிற்று. "ஆம் அடி அக்கா. நான் கிழவிக்குச் செரிக்குமோ செரிக்காதோ என்று நாள்தோறும் இவ்வாறுதான் பத்தியம் போடுகிறேன்," என்று சொன்னாள். அதற்கு அடுத்த வீட்டுக்காரி, "அடி பைத்தியக்காரி! இனிமேல் அப்படிச் செய்யாதே. பலவகைப் பலகாரங்களோடு நன்றாகச் சமையல் செய்து கொட்டடி," என்று கூறினாள். இதன் பிறகு வத்சலை, சோறு, மோர்க்குழம்பு, ஆமைவடை முதலிய பலவகைப் பண்டங்களைச் செய்து மாமியார்க்குப் படைத்தாள். வத்சலை மாமியாருக்குப் படைக்கிறபோது பார்க்க வருபவளைப் போல் பக்கத்து வீட்டு வஞ்சகி வருவாள். வத்சலை ஏதாவது எடுப்பதற்கு உள்ளே போகும்போது மாமியார் முன் பரிமாறியிருக்கும் அவ்வளவு சாப்பாட்டையும் மறைமுகமாக எடுத்துத் தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு போய்விடுவாள். தான் அடுப்பு மூட்டவேண்டும் என்கிற கவலையே இல்லாமல்

வைத்துக் கொண்டு நன்ருகப் புசிப்பாள். இவ்வாறு வஞ்சகி வீட்டில் புகையென்பதே இல்லாமல் நாள்தோறும் களவுச் சாப்பாடே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வஞ்சகியின் வீட்டில் அவள் கணவன் வாங்கிப் போட்டு விட்டுப்போன ஆறு திங்கள் சாமான்களில் ஒரு பிடியாவது குறையவே இல்லை. வத்சலை வீட்டிலே ஆறு திங்களுக் கென்று பத்னீ பாக்கியன் வாங்கிப் போட்டு விட்டுப் போன சாமான்கள் அவ்வளவும் மூன்று திங்கள் களிலேயே செலவாகிவிட்டன. மாமியார் உடம்பு சாமான் செலவாகாமல் எவ்வாறு தேறும்?

ஆடவர்கள் திரும்புதல்

இவ் வாறிருக்கையில் மூன்று திங்களிலேயே அவரவர் வாணிகத்தை முடித்துக் கொண்டு பத்னீ பாக்கியனும் அவன் கூட்டாளியாகிய பக்கத்து வீட்டுக்காரனும் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். பத்னீ பாக்கியன் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் அவன் மனைவி வத்சலை அவனை அன்புடன் வரவேற்ருள். நலத்துடன் திரும்பி வந்ததற்கு மகிழ்ச்சியடைந்தாள். கணவனைப் பார்த்து, "வீட்டிலே எல்லாச் சாமான்களும் தீர்ந்துபோய்விட்டன. இரண்டு நாளாக அடுத்த வீட்டில் அரிசி கடன் வாங்குகிறேன்," என்ருள். பத்னீ பாக்கியன் மிகுந்த வியப்படைந்தான். "நான் ஆறு திங்கள்களுக்குச் சாமான் வாங்கிப் போட்டு விட்டுப் போனேனே? அவ்வளவும் மூன்று திங்கள்களில் எவ்வாறு தீர்ந்துவிடும்? சாப்பிடுவது நீ ஒருத்தி தானே! நீ சாப்பிடுவது எனக்குத் தெரியாதா? ஆறு திங்கட் சாமான் மூன்று திங்கள்களில் எவ்வாறு முடிந்தது?" என்று கேட்டான்.

மாமியாரால் சாமான் குறைந்தது

வத்சலையானவள் கணவனைப்பார்த்து, "அஃதென்ன அப்படிச் சொன்னீர்கள்? அம்மாவை மறந்துவிட்டீர்கள் போல் இருக்கிறதே. நன்ருகச் சொன்னீர்கள் நான் ஒருத்தி என்று! அம்மா சாப்பிட வேண்டாமா? அம்மா

சாப்பிட்டால் தானே நாமெல்லாம் வாழலாம். நீங்களும் இல்லே. அம்மா உடம்பு இளைத்துப் போய்விட்டது என்று நான் நாள்தோறும் அவள் விருப்பப்படியே சமையல் செய்தேன். ஒருநாள் உளுந்து வடை வேண்டும் என்று விரும்பினுள். நிரம்பச் செய்து கொடுத்தேன். ஒருநாள் கொழுக்கட்டை வேண்டும் என்ருள். ஐந்துவகை செய்து கொடுத்தேன். ஓர் அணுவளவுகூட நான் வாயிற் போடவில்லே. எல்லாம் அம்மாவின் விருப்பப்படி சமையல் செய்துதான் செலவாயிற்று," என்று மிகுந்த களிப்புடன் கூறினுள். தான் கூறுவதைக் கேட்டுக் கணவனும் மகிழ்ச்சியடைந்து களிப்பான் என்று எதிர்பார்த்தாள்.

கணவன் உண்மையை உணருதல்

பத்னீ பாக்கியன் சிறிது சிறிதாக அவளே உசாவிச் செய்தியை உணர்ந்தான். எல்லாச் செய்திகளும் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கிவிட்டது. அவ்வளவும் பக்கத்துவீட்டு வீட்டுக்காரி செய்த படுமோசம் என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். வீணைகச் சாமான்கள் அழிந்துபோயின என்பதை அவன் எண்ணிப் பார்க்கவே அவனுக்கு மிகுந்த சினம் உண்டாயிற்று. அவன் மிகுந்த பதற்றத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். நடந்துள்ள காரியத்தைப் பகுத்தறியக் கூடிய அறிவு வத்சலேக் கேது? அவள் தன்னுடைய கணவனேப் பார்த்து, "நான் எவ்வளவோ தொல்லேப்பட்டு அம்மாவுக்கு எல்லாம் செய்து கொடுத்திருக்கிறேன். நீங்கள் ஏன் இப்படி வாய்திறவாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? மேலும் என்னவோ வாய்க்குள்ளேயே முணு முணுக்கிறீர்களே?" என்ருள். கணவனுக்குச் சினம் பொங்கி விட்டது. எவ்வளவோ மனதை அடக்கிப் பார்த்த போதினும் சினத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லே. "நீயும் உன் மரமாமியாரும் நாசமாய்ப் போக," என்று சொல்லிக் காலால் மரப்பதுமையை ஓர் உதை உதைத்தான். வத்சலேயையும் நையப்புடைத்தான். இவளோ தன்னுடைய மேலே விழுந்த அடியை ஒரு பொருளாக

மதிக்கவில்லை. "ஐயோ ஐயோ மாமியாரை உதைத்தீர்களே! தெய்வத்திற்குப் பொறுக்குமா? என்னைச் செருப்பால் அடியுங்கள். நான் கொண்டமனைவி. என்னைத் தாங்கள் எதுவேண்டுமோ செய்யலாம். காலைத் தூக்கித் தாயாரை உதைக்கலாமா? கால்புழுத்துப் போகுமே," என்று சொல்லிப் பதறினாள். பத்னி பாக்கியன் மேலும் வத்சலைக்குச் சில அடிகள் வழங்கினான். தன்மேல் ஒன்றின்மேல் மற்றொன்றாக விழும் அடிகளை அவள் கவனிக்கவில்லை. தன் மாமியார் மேல் அடி விழுந்து விடாமல் இருக்கும்படி இப்படியும் அப்படியுமாக ஓடிப் பதுமையைப் பாதுகாத்தாள். இறுதியில் பத்னி பாக்கியன் மாமியாரை வெளியில் தூக்கியெறிந்து வத்சலையையும் வெளியில் பிடித்துத் தள்ளிக் கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

வத்சலை வெளியேறுதல்

வத்சலை என்ன செய்வாள்? அரைநாழிகை தன் மாமியாரை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு அவள் மேல் பட்ட அடிகளையும் உதைகளையும் துடைத்துத் துடைத்துத் துன்பக் கண்ணீர் விட்டாள். பிறகு அவளைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு ஊரை விட்டுப் புறப்பட்டாள். காட்டு வழியாக நடந்தாள். இவ்வாறு ஒரு பெண்பிள்ளை தனியே புறப்பட்டுப் போவாளா என்று எண்ணுதீர்கள். வத்சலை எல்லாப் பெண்களையும் விடப் பேதைமையுடையவள். தன் முழு நம்பிக்கையையும் மாமியார் மீது வைத்திருந்தாள். தன் மாமியார் தன்னிடத்தில் இருக்கும் மட்டும் தனக்கு எல்லா வகையான நன்மைகளும் உண்டாகும் என்பது அவளுடைய எண்ணம். இந்தக் குருட்டுக் கொள்கை ஒன்று தான் அவளைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. வீட்டை விட்டு வெளியே புறப்பட்ட வத்சலை பொழுது போவதற்குள் ஆறு நாழிகை வழி நடந்துவிட்டாள். பொழுது போய் இருளான சமயத்திலே நடுக்காட்டிலே சிக்கிக் கொண்டாள். என்ன தான் மாமியார் பலம் இருந்த

போதிலும் அவளுக்கு அச்சம் மிகுதியாகிவிட்டது. இருளோ மைபோன்ற பேரிருள். முன்னும் போகமுடிய வில்லை; பின்னும் போகமுடியவில்லை. ஒரு மரத்தின்மேல் ஏறி இரவைக் கழிக்கலாம் என்று முடிவு செய்தாள். ஒரு பெரிய மரத்தின்மேல் ஏறி மாமியாரை மடியிற் போட்டுக் கொண்டு இரண்டு கிளைகள் விரிந்த ஒரு கவட்டையில் உட்கார்ந்தாள். தூக்கம் என்பது அடியோடு வரவேயில்லை. அச்சம் ஒரு பக்கம்; தூங்கினல் மாமியார் கீழே விழுந்து விடுவாளே என்று மனக்கவலை ஒரு பக்கம்.

கள்ளர்கள் வருதல்

இவ்வாறு இவள் இரவைக் கழிப்பதற்கு ஏறித் தங்கிய அந்த மரம் காட்டின் நடுவில் இருந்தது. நடுக் காட்டில் கள்ளர்கள் கூடி அதன் கீழ் உட்கார்ந்து சிறிதும் அச்சமற்றுத் தங்கள் கொள்ளைப் பொருளைப் பிரித்துக் கொள்ள அது நல்ல இடமாக இருந்தது. அவ் வகை யான காரியங்களுக்குச் சிறந்த இடம் அக் காட்டில் வேறு இல்லை. வத்சலை வந்து தங்கிய அன்றிரவில் ஏழு கள்ளர் கள் எங்கேயோ அளவற்ற பொருளைக் கொள்ளையடித்துக் கொண்டு அம் மரத்தின் கீழ் வந்து சேர்ந்தார்கள். தங்கள் கொள்ளைப் பொருளை ஏழு பங்காகக் கூறுபோட்டுப் பிரித் தார்கள்.

மாமியார் கீழே விழுதல்

கீழே பணங்கள் கிலு கிலு என்று ஒலிப்பதையும் கொள்ளை செய்த கோரத்தைக் கள்ளர்கள் பேசிக்கொள் வதையும் வத்சலை கேட்டாள். கள்ளர்களைக் கண்ணுலே பார்த்தாள். அவளுடைய உடல் பதறிற்று. என்ன தான் மாமியாருடைய துணையிருந்த போதினும் அவளுடைய கைகால்கள் உதறல் எடுத்தன. மாமியார் பதுமை தவறிக் கீழே விழுந்துவிட்டது. சிறிது நாட்களாக இந்தக் கள்ளர்களை அரசனும் கொத்தவாலும் கண்டு பிடிப் பதற்கு முயற்சி செய்து தேடிக் கொண்டிருக்கிருர்கள் என்னுஞ் செய்தியைக் கள்ளர்கள் கேள்விப்பட்டிருந்தபடி

யால் கீழே விழுந்த மரக்கட்டையைக் கொத்தவால் என்று நடுங்கிக் கள்ளர்கள் அவ்வளவு பேரும் பங்கு பிரித்த பொருள்களை அப்படியப்படியே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். இரண்டொரு கள்ளர்கள் சிறிது தொலை ஓடிப்போய்த் திரும்பிப் பார்த்தார்கள். மாமி விழுந்தவுடன் மருமகள் கீழே இறங்கி மாமியாரை எடுப்பதற்கு எண்ணினாள். கள்ளர்கள் ஓடிப்போனதைக் கண்டு அச்சம் நீங்கிக் கீழே இறங்கிவந்தாள். திரும்பிப் பார்த்த கள்ளர்கள் மருமகளை அரசன் என்று எண்ணினார்கள். 'இனிமேல் நாம் இங்கு இருப்பதில் பயனில்லை. பிழைத்தோம் பிழைத்தோம்,' என்று ஒரே ஓட்டமாக ஓடிப்போனார்கள்.

வத்சலை விடுதிரும்புதல்

கீழே வந்த வத்சலை தன் மாமியாரைச் சுற்றிப் பணக்குவியல் இருப்பதைக் கண்டாள். பணத்தைக் கண்ட மகிழ்ச்சியினால் அவளுடைய துன்பங்கள் யாவும் பறந்துபோய்விட்டன. 'நல்லது; நேற்றுக் காலைத்தூக்கி உதைத்தாரே! அரிசி பருப்பு வீட்டில் தீர்ந்துவிட்டதற்கு அடித்தாரே! இதோ அளவற்ற பொருளை எங்கள் அம்மா கொடுத்தாளே! இதற்கு என்ன சொல்லப்போகிறார்?' என்று மனதிலே எண்ணிக்கொண்டாள். அவ்வளவு பணத்தையும் எடுத்து மூட்டைகட்டினாள். மாமியாரையும் தோளில் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

கணவன் தேடிவருதல்

வீட்டில் பத்னி பாக்கியனுடைய நிலைமையைச் சிறிது உசாவுவோம். சாமான்கள் எல்லாம் வீணாகப் போனதைக் குறித்து அவன் மனம் வருந்திச் சினங்கொண்டு மனைவியைக் கண்டபடி அடித்துவிட்ட போதினும் பிறகு அவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. 'ஒன்றுந் தெரியாத பெண்பிள்ளையை வீணாக அடித்துவிட்டோமே!' என்று உள்ளம் வருந்தினான். மாமியார் செய்தி ஒன்று நீங்கலாக

மற்றைய எல்லாக் காரியங்களிலும் அவள் சரியாக நடந்தாள். மாமியாரிடம் மூடபக்திதானே அவளைப் பிடிக்கிறது. அதில்தான் அவள் என்ன ஆயிரம் ஐந்நூறு என்று அழித்துவிட்டாள்? ஒன்றுமில்லையே வேறு ஆதரவு அற்றவளும், சூதுவாது தெரியாதவளுமான ஒருத்தியை வீணாக அடித்துத் துரத்தினேமே!' என்று பலவாறு எண்ணி வருந்தினான். பொழுதுவிடிந்தவுடன் அவள் போனவழியைக் கேட்டுக்கொண்டு காட்டுக்குள்ளே புகுந்து தேடிக்கொண்டு சென்றான். நாலைந்து நாழிகை வழிபோனபின் தன் மனைவி தூக்கமாட்டாத மூட்டை ஒன்றைத் தூக்கிக்கொண்டு மாமியாரோடு வந்துகொண்டிருப்பதைக் கண்டான். மூட்டையில் என்ன என்று மனைவியை உசாவினான். அதற்கு அவள், "நேற்று வீணாகக் காலைத்தூக்கி அம்மாவை உதைத்தீர்களே! வீட்டில் அரிசி பருப்புத் தீர்ந்து போய்விட்டது என்று பதறினீர்களே! நேற்று இரவு அம்மா எவ்வளவு பணம் தேடிக்கொடுத்தாள் பாருங்கள்; இனிமேலாவது அம்மாவிடம் அன்பாக இருங்கள்," என்று சொன்னாள். பத்தினி பாக்கியன் எல்லாச் செய்திகளையும் ஒவ்வொன்றாக உசாவினான். பணம் கிடைத்த விதம் அவனுக்கு நன்றாக விளங்கிவிட்டது. அவன் தன்னுடைய மனைவியைப் பார்த்து, "ஆம் நீ சொல்வது உண்மைதான். அம்மாதான் இவ்வளவு பணத்தையுங் கொடுத்தாள். இன்னும் நன்றாக அம்மாளைப் பாரு," என்று சொன்னான். இரவாகும் வரையில் இரண்டு பேரும் ஓரிடத்தில் தங்கியிருந்தார்கள். இரவில் இரண்டு பேரும் மரப்பதுமை, பணமூட்டை ஆகியவைகளுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தன் கணவன் மாமியாரைக் காப்பாற்றுவதற்கு மனமார உடன்பாடு கொடுத்துவிடவே வத்சலை மரக்கட்டையை முன்னிலும் மிகுந்த அன்புடன் போற்றி வந்தாள்.

வஞ்சகியின் வேலை

வத்சலை பணத்தோடு திரும்பிவந்த செய்தி அடுத்த வீட்டுக்காரியான வஞ்சகிக்குத் தெரிந்துவிட்டது. அவள்

வத்சலையிடம் வந்து பேச்சுக்கொடுத்தாள். மாமியார் எவ்வாறு பணந்தேடிக் கொடுத்தாள் என்பதை மெது வாக உசாவினாள். வத்சலை தனது மனப்போக்குப்படி நடந்தவைகளையெல்லாஞ் சொல்லி, "எல்லாம் எங்கள் அம்மாளுடைய பாக்கியம்," என்று முடித்தாள். வஞ்சகி எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டாள். அந்த மரத்தின் அடையாளம் முதலியவைகளையுந் தெரிந்துகொண்டாள். வஞ்சகி தன்னுடைய நோக்கத்தை ஒருவரிடமுஞ் சொல்ல வில்லை. தானும் ஒரு மரப்பதுமை செய்து எடுத்துக் கொண்டு அந்தக் காட்டிற்குச் சென்றாள். மரத்தில் இருந்து கள்ளர்களை மிரட்டிப் பணத்தை மூட்டை கட்டி வர முடிவு செய்தாள். வஞ்சகி சூழ்ச்சிக்காரியாகவும் திறமையுடையவளாகவும் இருந்தபடியால் வத்சலையிடம் கேட்டபடி அதே மரத்திற்சென்று தங்கினாள். தெய்வமும் இவளுடைய பங்கில் இருந்தபடியால் இவள் பதுங்கியிருந்த அன்று இரவும் கள்ளர்கள் ஏழுபேரும் வழக்கப்படி அந்த இடத்திற்கு வந்து பங்கு பிரிக்கத் தொடங்கினார்கள். ஏழு பாகம் போட்டுத் தத்தம் பங்கை எடுத்து மூட்டை கட்டப்போகுஞ் சமயத்தில் வஞ்சகி மரப்பொம்மையை வீசினாள்.

வஞ்சகிக்கு வந்த தொல்லை

மரப்பொம்மை கீழே விழுந்ததும் கள்ளர்கள் நடுங்கினார்கள். நாள்தோறும் மிகு தொல்லைப்பட்டுத் தேடிக் கொண்டுவரும் பொருளை இழந்துவிட யாருக்காவது மனம் வருமா? முதலில் அஞ்சி ஓடத்தொடங்கியவர்கள் பிறகு மரக்கட்டையைப் பார்த்துவிட்டு அச்சம் நீங்கினார்கள். 'வந்தது வரட்டும் மரத்தின் மேலே ஏறித் தேடிப் பார்ப்போம்' என்று ஏறித் தேடினார்கள். வஞ்சகி சிக்கிக் கொண்டாள். அவளைப் பிடித்துக் கீழே இழுத்துக் கொண்டுவந்தார்கள். "இவ்வாறு எங்களை நீயா மோசஞ் செய்கிறாய்?" என்று சொல்லி நையப்புடைத்தார்கள். முன்னம் ஒரு தடவை பொருளைக் கைப்பற்றிக்கொண்டு சென்றது தானல்ல என்றுசொல்லி வஞ்சகி எவ்வளவோ

கதறிப் பார்த்தாள். கள்ளர்கள் வஞ்சகியின் கதறலைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. "இரு உன்னைப் பார்த்து எல்லோரும் காறி உமிழும்படி செய்கிறோம்," என்று கூறி அவளுடைய கூந்தலையும் மூக்கையும் அறுத்து விரட்டி விட்டார்கள். இழிவடைந்த வஞ்சகி ஊரைப் பார்க்க ஓடினாள். இதற்குள் அவளுடைய கணவன் மனைவியைக் காணோம் என்று ஊரெங்குந் தேடிக்கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வருதல்

பொழுதுபோய் ஒரு நாழிகைக்கெல்லாம், முதலில் எவ்வாறு சொல்லாமற் போனாளோ அவ்வாறே வீட்டிற்குவந்து தன்னுடைய கோலத்தைக் கணவனிடம் காட்டினாள். அவன் அவளுடைய செய்தியைக் கேட்டான். பிறகு "உன்னுடைய பேரவாவுக்குத் தகுந்த கூலி கிடைத்தது. கள்ளங் கபடமற்ற வத்சலையை வஞ்சித்த தன் பலனை நுகர்," என்று சொன்னான்.

கருத்து

இந்தக் கதைக்கு 'அவாப் பொல்லாதது' என்பது ஒரு கருத்தாக இருந்தாலும், "பொன்னாலாகிய மருமகளானாலும் மண்ணாலாகிய மாமியார் ஒருத்தி வேண்டும்," என்பதும் கருத்தாகும். கதையில் வருகிற மாமியார் மரத்தாலாகிய மாமியார்.

௬௬. வேளை கூடும்பொழுது எல்லாம் கூடிவரும்

ஓர் அந்தணன்

ஓர் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் பொதுவான குடித்தனக்காரன். அதிக அறிவாளியும் அல்லன். ஆற்றல் படைத்தவனும் அல்லன். ஒன்றுந் தெரியாத அறிவிலியும் அல்லன். நடுத்தரமான நிலையில் இருந்தான். அவனுடைய இவ்வுலக வாழ்க்கைக்குத் துணையாக மனைவி ஒருத்தி இருந்தாள். அவளுடன் கூடி மனமொத்து வாழ்ந்துவந்தான். ஆயினும் உலக வாழ்வைச் சிறப்பிப்பதற்கு மக்கட்பேறு மட்டும் அற்றவனாக இருந்தான். பிறகு அவன், மக்கட் செல்வம் மட்டும் நமக்கு இல்லாதவரையில் இவ்வுலக நன்மைபோய் விடுவதுடன் மறுமையிலும் நல்லகதி ஏற்படமாட்டாது' மக்கட்பேற்றை விரும்பி உலகத்தினர் எவ்வளவோ தவஞ் செய்கிறார்கள். நாம் எப்பாடுபட்டாயினும் இப்பிறப்பில் மக்கட்பேற்றை அடையவேண்டும் என்று முடிவு செய்தான். நன்றாக ஆராய்ந்து எண்ணமிட்ட பிறகு மறுமணம் புரிந்துகொள்ள எண்ணினான்.

மறுமணம்

தன்னுடைய எண்ணத்தை மூத்தவளுக்குத் தெரியப்படுத்தினான். மறுமணத்திற்கு அவள் சிறிதும் இணங்கவில்லை. 'மறுமணம் செய்துகொள்ளக் கூடாது' என்று தடுத்துக்கொண்டே இருந்தாள். 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்பது பழமொழி. நாள்தோறும் இரண்டு மூன்று தடவை அவளை மறுமணத்தின் பொருட்டு நெருக்கிக்கொண்டுவரவே கணவனுடைய தொல்லை பொறுக்க முடியாமல், 'அப்படியே செய்துகொள்ளுங்கள்,' என்று அவளும் உடன்பாடு கொடுத்தாள். ஆயினும் நல்ல எண்ணத்துடன் உடன்பாடு கொடுத்தவள் அல்லள். 'இப் பார்ப்பான் இப்போது செய்துகொள்ளட்டும். நம்மால் அந்த இளையாளை ஒழித்

துக்கட்ட முடியாதா?" என்று நினைத்துக்கொண்டுதான் உடன்பாடு கொடுத்தாள். அவ்வாறே அந்தணன் வேறோர் ஊருக்குச்சென்று ஒரு பெண்ணை மணந்துகொண்டு அந்த இளையாளோடு வீடுவந்து சேர்ந்தான். மூத்தாளும் இளையாளும் அக்காள் தங்கைகளைப்போல மனமொத்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். மூத்தாள் மட்டும் 'இளையாளை எப்பொழுதாவது கொன்றுவிடவேண்டும்' என்று எண்ணியிருந்தாள். ஆயினும் உடனே செய்தால் மக்கள் ஐயப்படுவார்களாகையால் அதற்குத் தகுந்த காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

இளையவள் கருப்பம்

இவ்வாறிருக்கையில் இளையவள் கருப்பவதியானாள். அந்தணனுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மேலும் அவனுக்கு முதிர்ந்த அகவையில் உண்டான செல்வமாதலால் வெகுவாய் அதனைக் கொண்டாடினான். முறைப்படி காப்புச் சிமந்தம் முதலியவைகளைச் செய்தான். திங்கள் அதிகமாகவே இளையாளுடைய தாய் தகப்பன்மார்கள் தங்களூரில் பிள்ளைப்பேற்றை வைத்துக்கொள்வதற்காக அழைத்துக்கொண்டு போனார்கள். அங்கு அவள் யாதொரு குறைவும் இன்றி நலத்துடன் தங்கியிருந்தாள்.

மூத்தாளுடைய வஞ்சனை

இவ்விடத்தில் மூத்தாள் வெகுநாளாய் இளையாளின் பேரில் குறி வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று சொல்லியிருக்கிறோம் அன்றோ? மூத்தாளுடைய பொறாமை இளையாள் கருப்பமாகவே அதிகமாயிற்று. அந்தணனுக்கோ உடல் மூத்தாளிடமும் உயிர் இளையாளிடமுமாக இருந்தன. நாள்தோறும் தன்னுடைய மூத்த மனைவியிடம் வருவான். "அடியே சோறு சிறிது பிசைந்து கொடு, அவளைப் போய்ப் பார்த்து வருகிறேன்," என்பான். மூத்தாள் 'இதுதான் சமயம்; இச் சமயத்தில் யாரும் ஐயப்படாதவகையில் அவளை முடித்துவிடுவோம்' என்று முடிவு செய்தாள். "ஆம்; நாளைக்கு நெய்யில் அப்பம்

செய்து தருகிறேன். அவளோ கருப்பமாக இருக்கிருள். அவளிடம் நூறு அப்பம் கொண்டுபோய்க்கொடுத்து நன்ருகத் தின்னச்சொல்லிப் பார்த்துவிட்டு வாருங்கள். உங்களுடைய வழிப்பயணத்திற்கு வேறு கட்டிக்கொடுக்கிறேன். இல்லாவிட்டால் அவளுக்குக் கட்டிக்கொடுக்கிற பலகாரத்தை நீங்கள் நடுவழியிலேயே தின்றுவிடுவீர்களே," என்ருள். அதற்குப் பார்ப்பான், "இல்லையடி இல்லை. அவளுக்கு ஒரு வெண்கலப் பானையில் நூறு அப்பம் தனியாய்ச் சிறிது வேப்பிலைக் கொத்துப் போட்டுவைத்துக் கொடு. எனக்கு அந்தச் சின்னச் சவுக்கத்தில் சிறிது முடிந்து கொடு," என்ருன். அந்தப்படியே மறுநாள், கணவன் போனல் மாங்கல்யம் போய்விடுமாகையால் மூத்தாள் தன் கணவனுக்கு மட்டும் பத்துப் பதினைந்து அப்பம் நெய்யில் சுட்டுக் கொடுத்துத், தன் சக்களத்தியாகிய இளையாளுக்கு மாவில் சிறிது நஞ்சைக் கலந்து, நூறு கொதியப்பம் வார்த்து வெண்கலப் பானையில் வைத்துக்கொடுத்தாள். கணவன் எப்போது எப்போது என்று காத்திருந்தவனுகையால், வெண்கலப்பானையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு, தன் சவுக்க மூட்டையைத் தோளில் போட்டுக்கொண்டு வெயிலைப் பாராமல் வழி நடந்தான்.

வழியில் தங்குதல்

விரைவாக நடந்து பொழுதுபோகிற சமயத்தில் மூன்று காத தொலை போய்விட்டான். அந்தணனுக்கு உடலில் மிகுந்த அலுப்பு உண்டாகிவிட்டது. வழியில் ஓர் அறச்சாலையும் குளமுந் தோன்றின. குளத்தில் இறங்கிக் கை கால்களைக் கழுவி இறைவழிபாடு முதலிய நாட்கடன்களைச் செய்தான். பிறகு தன் மனைவி துணியில் முடிந்து கொடுத்த அப்பத்தை அவிழ்த்துச் சாப்பிட்டான். நடந்த அலுப்பினல் அவனுக்குப் பெருந்தூக்கம் வந்துவிட்டது. தன்னை யறியாமல் உறங்கிவிட்டான். அந்தணன் கொண்டு வந்த அப்பப்பானை அவனுடைய தலைமாட்டிலே இருந்தது.

சோதிநகரத்து மன்னன்

அந்த அறச்சாலைக்கு ஐந்து நாழிகை வழித்தொலைவில் சோதிநகரம் என்னும் பெயருடைய நகரம் ஒன்று இருந்தது. அந்த நகரத்து அரசன் வெகுநாள் மக்கட்பேறில்லாமல் இறைவியை நோக்கித் தவஞ்செய்து அத் தெய்வத்தின் திருவருளால் ஒரு பெண்ணைப் பெற்றான். அப் பெண்ணின் அழகு உலகத்தில் உள்ள அழகுகளையெல்லாம் உருட்டித் திரட்டி வைத்தாற்போலக் காணப்பட்டது. அவளை அரசன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். அவள் மங்கைப் பருவம் அடைந்ததும் தகுந்த கணவன் ஒருவன் அகப்படாதபடியினால் திருமண விழாவை நடத்தாமல் இருந்தான். அரசனுடைய அருமை மகளாதலால் அவளுடைய செல்வச் சிறப்பைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவள் உட்காரும் பலகைகள் எல்லாம் தங்கப் பலகைகள். கட்டில்கள் தங்கக் கட்டில்கள்! எல்லாங் கற்கள் இழைக்கப்பட்டு மிகுந்த பேரொளியுடன் விளங்கின.

அப்புக்காத்தான்

இந்தச் சோதி நகரத்து அரசனுக்கும் அப்புக்காத்தான் என்ற பெயரோடு விளங்கிய ஒரு கள்ளர் தலைவனுக்கும் பெரும்பகை நேரிட்டிருந்தது. எனெனில் அப்புக்காத்தானுக்கு ஓர் அருமை மகன் இருந்தான். அவன் வகுப்பில் கள்ளனாக இருந்தபோதிலும் அழகிலும் நற்குண நற்செய்கைகளிலும் சிறந்தவனாக இருந்தான். தன் மகனுக்குச் சோதி நகரத்து இளவரசியை அப்புக்காத்தான் கேட்டுக்கொண்டிருந்தான். மாப்பிள்ளை என்ன அழகாக இருந்தபோதிலும் வகுப்புக் கள்ள வகுப்பானபடியால் சோதிநாட்டரசன் அவனுக்குப் பெண்ணைக் கொடுக்க இசையவில்லை.

இளவரசியைக் கவர்தல்

ஒரு நாள் அப்புக்காத்தான் என்னும் கள்ளத் தலைவன் தன் ஆட்களில் சரியாக நூறு பெயர்களைக்

கூப்பிட்டு அவர்களிடம் "சோதிநகரஞ் சென்று மை வித்தைகளால் இளவரசி தூங்கும் அறைக்குப்போய் அவளுடைய தூக்கம் கலையாமல் அவளைக் கட்டிலோடு தூக்கிக் காட்டுக்குக் கொண்டுவந்துவிடுங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்கள் எல்லோரும் அப்படியே புறப் பட்டுச்சென்றார்கள். மையின் பலத்தால் இளவரசி தூங்கும் அறைக்குப்போய்க் கட்டில் சிறிதும் அசையாதபடி தூக் கிக்கொண்டு ஐந்து நாழிகை வழித்தொலைவில் இருக்கும் அறச்சாலை பக்கம் வந்து சேர்ந்தார்கள். அன்றிரவு தான் அந்தணன் அப்பத்தோடு அங்குவந்து தூங்கினான். கள்ளர்கள் கட்டிலை அறச்சாலையில் இறக்கினார்கள். குளத் திற்குப்போய்த் தண்ணீர் குடித்துவருவோம் என்று புறப் பட்டார்கள். அப்பத்தின் மணம் அவர்களுடைய மூக் கைத் துளைத்தது. 'இந்த இடத்தில் இத்தகைய மணம் வரக் காரணம் யாது?" என்று பார்த்தார்கள். அந்தணன் உறங்குதலையும் அப்பப் பானை அவன் தலைமாட்டில் இருப் பதையுங் கண்டார்கள். அப்பப்பானையைத் திறந்து பார்க்கவே சரியாக நூறு அப்பங்கள் இருந்தன. 'இது வும் நம்முடைய நல்லகாலந்தான்' என்று எண்ணி ஆளுக்கு ஓர் அப்பமாகத் தின்றுவிட்டார்கள். இந்த அப்பங்கள் மூத்தாள் நஞ்சு கலந்து செய்து சக்களத்தியைக் கொல் லும்பொருட்டுக் கொடுத்தது என்று நாம் முன்னரே சொன்னோமே! இவைகளைத் தின்ற பிறகு கள்ளர்கள் எவ் வாறு பிழைக்கக்கூடும்? எல்லோரும் ஒருசேர இறந்தனர்.

அந்தணன் பிணங்களை வெட்டுதல்

கள்ளர்களில் ஒருவன்கூட உயிர் பிழைக்கவில்லை. சிறிது நேரம் பொறுத்து அந்தணன் கண் விழித்துப் பார்த்தான். தலைமாட்டில் இருந்த வெண்கலப்பானை காணப்படவில்லை. தனக்கு எதிரில் நூறு பெயர்கள் கத்தியுங் கையுமாகப் படுத்திருப்பதைக் கண்டான். 'இவர் கள்தாம் நம்முடைய அப்பத்தைத் தின்றிருக்கவேண்டும்' என்று எண்ணினான். அவர்களுள் ஒருவனுடைய கையில் இருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு 'நல்லது என்ன

தான் ஆகிறது பார்ப்போம்' என்று அந்தணன் ஒவ்வொருவனுய் வெட்டிக்கொண்டே போய்க் கடைசிக் கள்ளனையும் வெட்டிவிட்டான். இவர்கள் எல்லோரும் பிணங்கள் என்ருவது அல்லது இவர்கள் தன்னுடைய நஞ்சு கலந்த அப்பத்தைத் தின்று மாண்டார்கள் என்ருவது அல்லது மூத்தாள் இளையாளைக் கொல்வதற்காக நஞ்சு கலந்த அப்பத்தைச் சுட்டுக்கொடுத்தாள் என்ருவது அந்தணனுக்குச் சிறிதும் தெரியவே தெரியாது. அவர்களைக்கொன்று விட்டுக் குளத்திற்குப்போய்க் கை கால்களைக் கழுவிக் கொண்டு அறச்சாலைக்கு வந்தான்.

இளவரசியைக் காண்டல்

அறச்சாலையின் ஒரு மூலையில் பேரொளியாக வைக்கப்பட்டிருந்த இரத்தினக்கட்டிலைக் கண்டான். அதனிடம் போய்ப் பார்த்தான். அழகே பெண்ணுருக்கொண்டு வந்தாற்போல் அமைந்த பேரழகு பொருந்திய இளவரசியைக் கண்டான். சிறிது அறிவுடையவனுகையால் கட்டிலில் தூங்கும் பெண்ணையும் எதிரில் தான் கொன்ற கள்ளர்களையும் பார்த்தான்.

அந்தணன் சூழ்ச்சி

'ஓகோ! இவர்கள் கள்ளர்களாக இருக்கவேண்டும். இந்தப் பெண்ணை எங்கிருந்தோ களவுசெய்துகொண்டு வந்திருக்கவேண்டும். எல்லாம் இவளைக்கேட்டால் தெரியும்' என்று எண்ணி அவளை எழுப்பினுன். இளவரசி விழித்தெழுந்தாள். தான் வழக்கமாகத் தூங்கும் அறையிலில்லாமல் வேருேர் இடத்தில் இருப்பதையும் தன்முன் ஓர் ஆள் நிற்பதையுங் கண்டு அஞ்சினுள். அந்தணன் அப்பெண்ணைப் பார்த்து, "அஞ்சவேண்டாம்," என்று கூறினுன். மேலும் அவளைக் கவர்ந்துகொண்டுவந்த நூறு கள்ளர்களையுங்கொன்றுவிட்டதாகச் சொன்னுன்.

இளவரசி மகிழ்ச்சி

இளவரசி மிகுந்த வியப்படைந்தாள். "இவன் அல்லவோ சூரன்? நூறு பேர்களை ஒருங்குசேரக் கொன்ரு

னன்றோ" என்று மகிழ்ந்தாள். 'கள்ளர்கள் அப்புக்காத் தானுடைய ஆட்களாகத்தான் இருக்கவேண்டும்' என்று உள்ளத்தில் உறுதி செய்துகொண்டாள். அந்தணனைப் பார்த்து, "இந்த உலகத்தில் தங்களைப்போல் ஒத்த வீரர் களை நான் பார்த்ததில்லை. எனக்குத் தலைவர் நீங்களே. இந்த நூறு அரக்கர்களுடைய கையினின்றும் என்னை விடுவித்தீர்களன்றோ? இன்னும் விடியற்காலை வரையில் என்னை விடாமற் காத்து என் தந்தையாரிடம் ஒப்புவித்து என்னை மணம் புரியவேண்டும்," என்று சொல்லி வேண் டிக்கொண்டாள். வலுவில் தனக்குவந்த செல்வத்தைக் கண்டு அந்தணன் களிப்படைந்தான். அவ்வாறே செய்வ தாக ஒப்புக்கொண்டான்.

அரசன் தேடிவருதல்

இவ்வாறு இங்கு இருக்கையில் அரசன் அரண்மனை யிலோ இளவரசியைக் காத்திருந்த வேலைக்காரிகள் விழித் தெழுந்து பார்த்தார்கள். இளவரசியைக் காணுமல் திடுக் கிட்டார்கள். உடனே விரைந்தோடி அரசனிடம் தெரி யப்படுத்தினர்கள். அரசனுக்கு ஐயம் அப்புக்காத்தானிட மாகையால் கட்டிலுடன் பெண் காணுமற்போயிருக்கவே அவன்தான் கொண்டுபோயிருக்கவேண்டும் என்று எண்ணினன். உடனே படையைத் திரட்டிக்கொண்டு காட்டு வழியாகப் புறப்பட்டான். ஐந்து நாழிகை வழி வந்ததும் அறச்சாலையில் தன்னுடைய பெண்ணும் அந் தணனும் இருப்பதையும் நூறு கள்ளர்கள் வெட்டுண்டு கிடப்பதையுங் கண்டான். ஆவலுடன் ஓடிவந்து தன் னுடைய பெண்ணை வாரியெடுத்தான். "நீ யாதோர் இடுக்கணுமில்லாமல் பிழைத்திருக்கிருயா?" என்று வினவினன். இளவரசி அந்தணனைச் சுட்டிக்காட்டி, "இந்த வீர அந்தணரால் எனக்கோர் குறைவும் இல்லை. இவர்தாம் என்னைக் காப்பாற்றினவர். இவர்தாம் உங்க ளுடைய மாப்பிள்ளையாகவேண்டும்," என்று சொன்னாள். அரசன் நடந்த செய்தியைக் குறித்து அந்தணனையும் உசாவினன். அந்தணன் எல்லாச் செய்திகளையும் நன்ரு

கத் தெரிந்துகொண்டுவிட்டபடியால், தான் நூறு பெயர்களை எதிர்த்துப் போர் புரிந்ததாக ஒன்றுக்குப் பத்தாகப் புளுகினான். அதனைக்கேட்டு அரசன் மகிழ்ந்தான்.

அந்தணனுக்குப் பட்டம்

அரசன் இவைகளையெல்லாம் பார்த்து வியப்புற்று அந்தணனுக்கு "**நூறு பெயர்களுக்கு நமன்**" என்று பட்டம் வழங்கினான். தன்னுடைய ஊருக்கு இட்டுக்கொண்டு போய்த் தன் பெண்ணையுங் கட்டிக்கொடுத்தான். அன்றியும் அரசனுக்கு ஆண் மக்கட்பேறின்மையால், 'நமக்குப் பிற்காலத்தில் நம்முடைய நாட்டையாளுவதற்குக் கடவுள் இவரைத்தான் அனுப்பினாரோ என்னவோ' என்று நினைத்து மகிழ்ந்தான். அப்புக்காத்தானும் நூறு பெயர்களைக் கொன்ற நமன் அங்கு இருக்கிறான் என்று அன்று முதல் சோதிநகரத்தரசன் பெண்ணைத் தன் பிள்ளைக்குக் கேட்கும் எண்ணத்தையே அடியோடு விட்டுவிட்டான். பெண்ணும் மாப்பிள்ளையும் அந்த நகரத்தில் இரதியையும் மன்மதனையும்போல் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

கொட்டைப்பானைக் கரி

அந்தச் சோதிநகரத்தில் ஒரு பெருந் தீங்கு நெடு நாட்களாக இருந்துகொண்டிருந்தது. அஃதாவது அவ்வூரில் காசாரம் என்றொரு பெரும் பொற்றாமரைக் குளம் உண்டு. அக் குளத்தில் கொட்டைப்பானைக்கரி என்றொரு முதலை இருந்தது அதனுடைய கொட்டத்தை யாராலும் அடக்கமுடியவில்லை. மக்கள் அம் முதலை சொன்னபடி ஆடிவந்தார்கள். தினம் ஒருவன் அந்த ஊரில் இருந்துபோய் அந்த முதலைக்கு இரையாவது வழக்கம். அவ்வாறு முதலை உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அகவை பத்துள்ள ஒரு பையனுடைய முறை வந்தது. அவன் தன்னுடைய தாயாருக்கு ஒரே பிள்ளை. பிள்ளைக்குப் பதிலாகத் தாயார் போகலாம் என்றாலோ தனக்குப் பிற்காலத்தில் பிள்ளையைக் காப்பாற்ற வேறு மனிதர்கள்

இல்லை. பிள்ளையே போய்த்தீரவேண்டும். இந்தப் பிள்ளையினுடைய தாய், அரசனுடைய மாப்பிள்ளை நூறு கள்ளர்களைக் கொன்றுவிட்ட கதையைக் கேட்டிருந்தவளாதலால் மாப்பிள்ளையினிடஞ்சென்று "நூறு பெயர்களைக் கொன்ற உமக்கு இந்த முதலை ஒரு பொருளா? அதையும் இன்று போய் ஒழித்துவிட்டால் உமக்கு எவ்வளவோ நல்வினையுண்டு. எத்தனையோ பெயர்களை அது தின்று விட்டது. இன்னும் எத்தனை பெயரை அது தின்னக் காத்திருக்கிறதோ தெரியவில்லை. அதனை நீங்கள் தாம் ஒழிக்கவேண்டும்," என்று கூறியதுடன் தான் அன்று அருமைக் குழந்தையைப் பறிகொடுக்கவேண்டியதாக இருப்பதையும் எடுத்துரைத்து அலறினாள். இவ்வாறு அவள் மாப்பிள்ளையாகிய அந்தணனிடம் சொல்லுபோது அரசனுடைய மகளும் கூட இருந்தபடியால் அவள் தன்னுடைய கணவனைப் பார்த்து, "என் ஆருயிர்த் தலைவரே! இந்தக் கிழவி சொல்வது உண்மையே. பலபேர் அந்த முதலைக்கு இரையாகிவிட்டார்கள். அஃது இன்னும் எத்தனை பெயர்களைக் கொல்லக் காத்திருக்கிறதோ தெரியவில்லை. அதனுடைய தொல்லை மிகுதியாகிவிட்டது. நூறு பெயர்களை வெட்டியெறிந்த தங்களுக்கு இந்த முதலை ஒரு பொருளா? ஆகவே போய் அம் முதலையைக் கொன்றுவிட்டு வாருங்கள்," என்று சொன்னாள்.

அந்தணன் முதலையைக் கொல்லுதல்

மாப்பிள்ளையாகிய அந்தணன் தான் பின்தங்கினால், தன்னுடைய தகுதி வெளிப்பட்டுவிடுமாகையால் எப்படியாவது நாம் போகத்தான் வேண்டும் என்று முடிவு செய்தான். கள்ளர்களைக் கொல்ல ஆற்றலைக் கொடுத்த கடவுள் முதலையைக்கொல்ல ஒருவழியைக் காட்டிக் கொடுத்தால்தான் தனக்குத் தற்செயலாக வந்த சீர்த்தியைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்றும், இல்லாவிடில் நமக்கு நல்வினை இவ்வளவுதான் என்று மாண்டுபோக வேண்டும் என்றும் உறுதிப்படுத்திக் கொண்டான். உடனே தன்னுடைய மாமனாராகிய அரசரிடம் விடை

பெற்றுக்கொண்டு, "அறுக்கமாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட்டு அரிவாள்" என்னும் பழமொழிக்கு ஏற்பக் கூர்மையான ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு முதலை இருக்கும் காசாரம் என்னும் குளத்திற்கு வந்து சேர்ந்தான்.

ஆலமரம்

அந்தக் குளக்கரையில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. முதலைக்கு அஞ்சி ஆயுதங்களுடன் அம் மரத்தில் ஏறிவிட்டான். மக்கள் தொலையில் இருந்து பார்த்து, 'இவன் போர்செய்வதில் மிகவல்லவன். அவ்வளவு உயரத்தில் இருந்துகொண்டு கீழிருக்கும் முதலையைக் குத்தப் போகிறான்' என்று எண்ணி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதங்கள் விழுதல்

அந்தணன் பருத்த ஆளாக இருந்தான். மரத்தில் ஏறும்போது முதலை இவனைப் பார்த்தது. 'நாள்தோறும் நமக்கு இளைத்தவன் வருவான். இன்று நல்ல கொழுத்த ஆள் கிடைத்திருக்கிறான். இவன் ஏன் மரத்தில் ஏற வேண்டும். நம்மை விட்டுத் தப்பிப்போகப் பார்க்கிறான் போல் இருக்கிறது. நாமும் இவனை விடக்கூடாது' என்று அந்த முதலையும் மரத்திற்கு அண்மையில் வந்து நின்று முகத்தை மேலெடுத்துப் பார்த்தது. இது பார்த்த பார்வையிலேயே மேல் இருந்த மாப்பிள்ளைக்குக் கைகால் நடுக்கம் எடுத்துவிட்டது. கையில் இருந்த ஆயுதங்களெல்லாம் ஒவ்வொன்றுகக் கீழே விழுந்தன. தொலைவில் இருந்து பார்த்தவர்கள் அந்தணன் படைக்கலத்தை முதலையின் மேலே செலுத்துவதாக எண்ணினார்கள். விழுந்த ஆயுதங்களெல்லாம் மிகக் கூர்மையானவைகள். அவைகளில் ஒன்று முதலையின் வாயில் விழவே முதலை மாண்டது மாப்பிள்ளையாகிய அந்தணன் தனக்குக் கடவுள் திருவருள் புரிந்ததை எண்ணி மகிழ்ந்தான். மரத்தை விட்டுக் கீழே இறங்கித் தான் முதலையைக் குத்திவிட்ட

தாக அட்டகாசஞ் செய்தான். மக்கள் எல்லோரும் விரைவாக ஓடிவந்து மாப்பிள்ளையினுடைய சூரத் தனத்தைக் கொண்டாடினார்கள். அரசன் வாத்திய முழக்கங்களுடன் மாப்பிள்ளையை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு சென்றான். அன்று உண்டான மகிழ்ச்சியால் ஊராருக்கு விருந்திட்டான். மாப்பிள்ளைக்கு, "நூறு பெயருக்கு நமனும், முதலைக்கு மறலியாம்," என்று பட்டப் பெயரை நீட்டினான். இவ்வாறு அந்தணனுக்கு நல்ல காலத்தால் தொட்டதிலெல்லாம் வெற்றி வந்து கொண்டேயிருந்தது.

அப்பய்யராசன்

சோதி அரசன் சின்ன அரசன். சோதியரசனுக்குப் பெரியவனாகவும் சோதியரசனிடம் கப்பம் வசூல் செய்பவனாகவும் அப்பய்யராசன் என்றொரு பேராழி மன்னன் இருந்தான். அவனுக்குச் சோதியரசன் ஆண்டுதோறும் ஒழுங்காகக் கப்பம் கட்டுவது வழக்கம். அதிவீர அந்தணனை மாப்பிள்ளையாக அடைந்த பிறகு சோதியரசன் கப்பத்தை ஒழுங்காகக் கட்டாமல் இரண்டோராண்டு சாக்குப் போக்குச் சொல்லிவந்தான். அப்பய்யராசன் மாப்பிள்ளைப் பலத்தினால் இவன் சாக்குப் போக்குச் சொல்லுவதாக அறிந்துகொண்டான். சோதி நகரத்தை வெற்றிகொள்ள எண்ணினான். தன்னுடைய படைகளைத் திரட்டிக்கொண்டு போருக்கு வந்துவிட்டான்.

அப்பய்யன் போருக்கு வந்துவிட்டதைக் கேள்விப்பட்ட சோதியரசன் தன் மருமகனிடஞ் சென்று, "நூறு பெயர்களைக் கொன்றதும் பெரிதல்ல. முதலையை அழித்ததும் பெரிதல்ல. அதோ கடலைப்போலப் பொங்கி வந்து பாளையம் அடித்திருக்கும் அப்பய்ய மன்னனைத் தோற்கடித்தால்தான் தங்களைச் சூரன் என்று நான் சொல்லுவேன்," என்றான்.

அந்தணன் போருக்குப் போதல்

உடனே மருமகன் 'இந்தச் சமயத்தில் நாம் விட்டுக் கொடுத்தால் நம்முடைய சாயம் வெளுத்துப் போகும்'

என்று எண்ணினன். "நான் போருக்குப் போய் வருகிறேன். எனக்கு மிக விரைவாகச் செல்லக்கூடிய ஒரு குதிரையும் இரண்டு கத்தியும் கொடுங்கள்," என்ருன். அரசன் அவ்வாறே கொடுக்குமாறு கட்டளையிட்டான். குதிரை லாயத்தில் எவராலும் ஏறி நடத்த இயலாத ஒரு பெரிய முரட்டுப் பஞ்சகலியாணிக் குதிரை இருந்தது. அதைக்கொண்டு வந்து மாப்பிள்ளையை அதில் வைத்து இடுப்பை அறுக்காமலிருக்க நல்ல நூல் கயிறுகளைப் போட்டுக்கட்டிக் கத்தியையும் கையில் கொடுத்துக் குதிரையை விரட்டி விட்டார்கள்.

மருமகன் குதிரைச் சவாரி

ஒருநாளும் சவாரி செய்யப்பெருத மதங்கொண்ட குதிரை யாகையால், குதிரை பறக்கத்தொடங்கியது. 'இன்றுதான் இந்த உலகத்தில் நமக்குக் கடைசிநாள்' என்று மருமகன் முடிவு செய்துகொண்டு குதிரையின் பிடரியைப் பலமாகப் பிடித்துக்கொண்டான். தெய்வம் விட்டவழி விடட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டான். குதிரையானது பகைவர்கள் பாளையம் அடித்திருக்கும் பாதையிற் போகையில் வழியில் ஒரு பெரிய ஆறு வெள்ளத்தால் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அதில் குதிரை குதித்து நீந்தி மருமகனுடன் அக்கரை போய் ஏறிற்று. மருமகனல் துன்பம் பொறுக்கமுடிய வில்லை. கரையின் மீதில் குதிரைக்கு இருபக்கங்களிலும் காணப்பட்ட இரு பனைமரங்களை இருகைகளாலும் மாப்பிள்ளை பற்றிக்கொண்டு குதிரையை நிறுத்தப் பார்த்தான். குதிரை இன்னும் விரைவாக ஓடத்தொடங்கியது. வேர் அறுந்து விழுந்துபோகக் காத்திருந்த அந்தப் பனை மரங்கள் மருமகன் கைகளோடு வந்துவிட்டன.

அப்பா! அய்யா!!

மருமகன் மரங்களோடு குதிரையில் இருந்துகொண் டிருந்தான். முன்னமேயே இவன் இடுப்பில் கட்டப் பட்டது நூல் கயிறு என்று சொன்னேமே! குதிரை

ஆற்றுவழியாய் விழுந்தோடும் போது கயிறுகள் இறுக்கவே மருமகனுக்கு உண்டான துன்பம் பொறுக்கமுடியவில்லை. "அப்பா அய்யா! அப்பா அய்யா?!" என்று அலறிக்கொண்டிருந்தான். கையில் அகப்பட்ட பனை மரங்களை மட்டும் விடாமல் இருந்தான். குதிரை பாளையத்தை நோக்கி விரைவாகப் பறந்து சென்றது.

பகைவர் படைகள் ஓடிப்போதல்

சோதி நகரத்து அரசன் அமைச்சர்கள் முதலான எல்லோரும் ஏழாவது மாடியில் ஏறிப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பனை மரங்களைத் தாங்கிய கைகளோடு அந்தணன் பகைவர்களுடைய பாளையத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்து மிகுந்த வியப்படைந்தார்கள். 'அப்பா அய்யா' என்று இவன் போடும் இரைச்சலையும் கையில் பிடித்து வரும் பனைமரமான ஆயுதங்களையும் அப்பய்ய மன்னன் பார்த்தான். 'ஓகோ! இவன் அப்பய்யா என்று நம்முடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறான். இந்தப் பனைமரம் விழுந்தால் நாம் துவையலாய் விடுவோமே,' என்று எண்ணிப் பாளையத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடினான். "யதா ராசா ததா பிரசா," என்பது பழமொழி. அரசன் எப்படியோ அப்படிக் குடிகள் என்பது இதனுடைய பொருள். ஆகவே அப்பய்ய மன்னனுடைய படைகளும் தங்கள் தங்கள் பாளையங்களோடு ஓடிவிட்டன. சோதிநகரத்தில் இருந்து சோதியரசன் இவைகளையெல்லாம் பார்த்து, "நம்முடைய மருமகனைப் போல் வீரன் இந்த உலகில் இல்லை. அப்பய்ய மன்னனைத் துரத்திவிட்டான்," என்று வெற்றி முரசு அடித்துக்கொண்டு மருமகனை அழைக்க வந்தான்.

சூரன்

இதற்குள் குதிரையும் திமிர் எல்லாம் அடங்கி ஊரைப் பார்க்கத் திரும்பிட்டது. பகைவர்கள் ஓடிப் போனதையும் மாமனார் அழைக்க வருதலையும் மருமகன் கண்டான். தன்னுடைய துன்பம் எவ்வளவு இருந்த

போதிலும் அதனை வெளியே காட்டிக்கொள்ளாமல், தான் போர் செய்து அப்பய்யனைத் துரத்திவிட்டதாகச் சொன்னான். அரசன் தன்னுடைய மருமகனுக்குச் 'சூரன்' என்னும் பட்டத்தைக் கொடுத்து வாழ்த்தி வீட்டிற்கு அழைத்து வந்தான்.

அப்பய்யன் கடிதம்

இதற்குள் ஓடிப்போன அப்பய்யன், "தங்கள் மருமகன் உள்ளவரையில் நான் தங்கள் நாட்டிற்குக் கப்பம் கட்டுகிறேன்," என்று சோதியரசனுக்குக் கடிதம் எழுதியனுப்பினான். இவ்வாறு மூன்று தடவைகளிலும் அந்தப் பார்ப்பான் தெய்வத் திருவருளால் வெற்றியடைந்தான்.

அந்தணன் வாழ்க்கை

மருகனாகிய அந்தணன் பிறகு ஆட்களையனுப்பித் தன் மூத்த மனைவியையும் சோதிநகரத்திற்கு அழைத்துக் கொண்டான். இளைய மனைவிக்கு ஒரு மகன் பிறந்து ஐந்தாண்டுகளாக வளர்ந்திருந்தான். அவர்கள் இருவருக்கும் தன்னுடைய செய்திகளையெல்லாஞ் சொன்னான். மூத்தாளைப் பார்த்து, "நீ பலகாரஞ் செய்து கொடுத்த நற்காலம் இவ்வளவு செல்வம் எனக்குக் கிடைத்தது," என்றான். அவள் வெட்கித் தான் செய்த வஞ்சகத்தைச் சொன்னாள். "போனது போய்விட்டது. இனிமேல் ஒருக்காலும் அவ்வாறு செய்யமாட்டேன். என் பேரில் ஐயங்கொள்ள வேண்டாம்," என்றாள். அந்தணனும் அவள் செய்த குற்றம் தனக்கு நன்மையாகவே முடிந்தபடியால் அவள் குற்றத்தை மன்னித்துவிட்டான். மூன்று மனைவியருடன் நீண்டகாலம் சோதி நகரத்தை அரசாட்சி செய்துகொண்டிருந்தான்.

இச் சிறு கதையின் கருத்து வேளைவரும் பொழுது எல்லாம் நன்மையாக முடியும் என்பதாம்.

௬௫. உலகப்புரட்டன்

ஏழு பிள்ளைகள்

ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் கடைசிப் பிள்ளையின் பெயர் உலகப்புரட்டன். இச் சிறுவன் உலகம் எல்லாவற்றையும் ஒரே வாயில் போட்டுக்கொள்ளக் கூடிய வன். ஆகவே இவனுக்கு இப் பெயர் மிகப் பொருத்த மாகவே இருந்தது. ஒருநாள் இரவில் நிலவு நன்ருகக் காய்ந்து கொண்டிருந்தது. தகப்பன் தன்னுடைய ஏழு மக்களையும் வரவழைத்து அவர்களுடைய அறிவுத் திறமையை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினுன்.

அறிவாராய்ச்சி

முதலில் மூத்தவனைப் பார்த்து, "இந்தக் குளிர்ந்த நிலவில் என்ன செய்தால் நலம் என்று உனக்குத் தோன்றுகிறது?" என்று கேட்டான். அதற்கு அவன் "ஏற்றம் பிடித்துத் தண்ணீர் இறைத்தால் இளைப்பில்லா மல் இருக்கும்," என்ருன். பிறகு இரண்டாவது பையனைப் பார்த்து அவ்வாறே கேட்டான். அதற்கு அவன் "இந்த நிலாவில் வழி நடந்தால் நன்ருக இருக்கும்," என்ருன். இவ்வாறே ஒவ்வொருவனையுங் கேட்டான். அதற்கு மூன்ருவது பையன், "ஏர் உழுது சாலடித்தால் நன்ருக இருக்கும்" என்ருன். நான்காவது பையன் "நாற்றுநட்டால் நன்ருக இருக்கும்" என்ருன். ஐந்தாவது பையன் "புன்செய் களைக் கொத்திவிட்டால் நன்ருக இருக்கும்" என்ருன். ஆருவது பையன் "நிலாச் சாப்பாடு சாப்பிட்டால் நன்ருக இருக்கும்" என்ருன். ஏழாவது பையன் "நல்ல பங்களா உப்பரிகையில் அழகிய தேவமாதர்களைப் போன்ற பெண் களுடன் விளையாடிக்கொண்டிருந்தால் நன்ருக இருக்கும்" என்ருன்.

உலகப் புரட்டன்

தந்தையானவன் தன்னுடைய மூத்த பிள்ளைகள் ஆறுபேரும் கூறிய மறுமொழியில் எத்தகைய சினமுங்

கொள்ளவில்லை. பொறுமையோடு "இவ்வளவுதானு இவர்களுடைய மனவிருப்பம்" என்று கேட்டுக்கொண்டிருந்தான். ஏழாவது பையனுகிய உலகப்புரட்டன் சொன்ன மறுமொழியைக் கேட்கவே அவனுக்கு அடக்கமுடியாத சினம் உண்டாகிவிட்டது. உலகப் புரட்டனைப் பார்த்து, "நீ கெட்டாய் கழுதை! இனிமேல் என்முன் நில்லாதே," என்றுகூறி இகழ்ந்து வைதான்.

வெளியேறுதல்

தந்தை இகழ்ந்து பேசவே உலகப் புரட்டனுக்கு மிகுந்த நாணம் உண்டாகிவிட்டது. 'இனிமேல் நாம் இங்கிருந்தால் நமக்கு மிகுந்த இழிவு ஏற்படும். ஊரைவிட்டு ஓடிப்போவதே நல்லது' என்று முடிவுசெய்து வீட்டை விட்டு வெளியேறினான். நான்கு ஐந்துநாள் நடந்தான். இறுதியில் ஒரு காட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். ஓரிடத்தில் ஒரு கிழவி தங்கியிருந்தாள் அவளிடத்திற்குப் போய் வேலைக்காரனுக அமர்ந்தான்.

சென்ற ஆண்டு

அக் கிழவி மிகுந்த கையழுத்தக்காரி. காலை முதல் மாலை வரையில் உலகப் புரட்டனிடம் வேலை வாங்கிக் கொண்டு இரவில் அரைவயிற்றுக் கஞ்சி ஊற்றுவாள். தோசை, அப்பம் முதலிய பலகாரங்கள் சுட்டுக் காட்டுக்கு விறகு வெட்டவரும் ஆட்களுக்கு விற்று விற்றுக் காசைப் பெட்டியிற் போட்டுக்கொள்வாள். முப்பது நாற்பது ஆண்டுகளாக அவளுக்கு அவ்வாறு வாணிகம். அதில் மிகுந்த பணந்தேடி அவைகளைத் தங்கக் காசுகளாக மாற்றி ஒரு பெரிய மூட்டையாகக் கட்டி எப்போதும் தலை மாட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பாள். அந்த மூட்டையை எப்படியாவது தட்டிக்கொண்டு போய்விட வேண்டும் என்று உலகப்புரட்டன் அதில் குறிவைத்துக் கொண்டிருந்தான். உலகப்புரட்டன் அக் கிழவியிடம் வேலைக் கமர்ந்தபோது அக் கிழவி உலகப் புரட்டனைப் பார்த்து, "உன்னுடைய பெயர் என்ன?"வென்று கேட்

டாள். அதற்கு உலகப்புரட்டன், "என்னுடைய பெயர் 'சென்ற ஆண்டு'" என்று சொல்லியிருந்தான். அதற்கு அக் கிழவி, "இஃதென்ன புதுமை! இப்படியும் ஒரு பெயர் இருக்குமா?" என்று கேட்டாள். உலகப்புரட்டன், "இவ் வாறுதான் என்னுடைய தாய் தந்தையர்கள் எனக்குப் பெயரிட்டிருக்கிறார்கள்," என்று சொல்லி அவளுடைய ஐயத்தைப் போக்கினான்.

கம்பி நீட்டுதல்

அவள் பெருங்கிழவி யாகையால் உலகப்புரட்டனை வேலைக்கு வைத்துக்கொண்ட போதினும் இவனிடம் நம்பிக்கை யற்றவளாகவே இருந்தாள். இவ்வாறிருக்கை யில் ஒருநாள் உலகப்புரட்டன் தவலை, அண்டா முதலிய ஏனங்களில் இருந்த தண்ணீரையெல்லாம் வெளியிற் கொண்டுபோய் ஊற்றிவிட்டுக் கிழவியோடு சாப்பிடு வதற்கு உட்கார்ந்தான். கிழவி சாப்பிட்டுவிட்டு எழுந் திருந்தாள். கைகழுவுவதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கவே தண்ணீர் கொண்டு வருவதற்குக் கொல்லைப் பக்கஞ் சென்றாள். உலகப்புரட்டன் இதுதான் தகுந்த சமயம் என்று மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு நடுக்காட்டில் புகுந்து ஓடிவிட்டான். கிழவி கையைக் கழுவிக்கொண்டு திரும்பி வருவதற்குள் அவளிடம் இருந்த 'சென்ற ஆண்டு'போன இடம் தெரிய வில்லை. கிழவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண் டாள். "சென்ற ஆண்டு களவு செய்துகொண்டு போய்விட் டானே!" என்று சொல்லிக் கூக்குரலிட்டாள். விறகு வெட்டிக் கொண்டிருந்த இரண்டொரு குடியானவர்கள் கிழவியினுடைய கூக்குரலைக் கேட்டு ஓடிவந்தார்கள். கிழவி கூறியதைக் கேட்டு நகைத்தார்கள். "அடிபோடி பைத்தியக்காரி! சென்ற ஆண்டு களவுசெய்து கொண்டு போனால், இந்த ஆண்டில் என்ன செய்யச் சொல்லுகிறாய்? இதுவரையில் என்ன செய்துகொண்டிருந்தாய்! உறங்கிக் கொண்டா இருந்தாய்?" என்று சொல்லிக் கேலி செய்தார் கள். கிழவியானவள் சென்ற ஆண்டு என்பது ஒரு மனி

தனுடைய பெயர் என்று எவ்வளவு தான் கூறியபோதினும் ஒருவரும் கவனிக்கவே இல்லை. இவ்வாறு உலகப்புரட்டன் கிழவியை வஞ்சித்து அவள் முப்பது நாற்பது ஆண்டுகளாகச் சேர்த்து வைத்திருந்த அவ்வளவு பணத்தையுந் தட்டிக்கொண்டு போய்விட்டான்.

கரடி

உலகப்புரட்டன் கிழவியின் பணமூட்டையோடு சிறிது தொலை போய்க் கொண்டிருக்கையில் அவனை ஒரு கரடி வழிமறித்துக்கொண்டது. கரடியானது இவனுடைய தலையின்மேல் இருக்கும் மூட்டையில் முன்னங்காலில் ஒன்றை வைத்துப் பிடித்துக்கொண்டது. இவன் கரடியின் மற்றொரு முன்னங்காலைத் தன்னுடைய ஒரு கையினால் பிடித்துக்கொண்டு அக் கரடியை மெதுவாகத் துரத்தி விடுவதற்காக அதைச் சுற்றிக்கொண்டே வந்தான்.

ஒரு முகமதியன்

அப்பொழுது அந்த வழியாக ஒரு முகமதியன் எங்கேயோ போய்க் கொள்ளையடித்துவிட்டுப் பணத்தையெல்லாம் ஒரு பெரும் பஞ்சகலியாணிக் குதிரையின் மேல் போட்டுக்கொண்டு அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்தான். வழியில் ஒருவன் கரடியைப் பிடித்துக்கொண்டு சுற்றுவதையும் அவன் தலையில் இருந்து பணஞ் சொரிவதையும் பார்த்து முகமதியன் வியப்படைந்து நின்றான். கிழவியிடம் கொள்ளையடித்துக் கொண்டுவந்த பணமூட்டை உலகப்புரட்டனுடைய தலையில் இருப்பதை நண்பர்கள் அறிவார்கள். அம் மூட்டையில் கரடியினுடைய முன்னங்கால் நகம் படவே துணி கிழிந்துபோய் விட்டது. அந்த ஓட்டையின் வழியாகக் கரடி முன்னங்காலை வைத்த இடத்தையொட்டிப் பொன்காசுகள் கீழே விழுந்து கொண்டிருந்தன. இவைகளையெல்லாம் முகமதியன் பார்த்துக் கரடியின் முன்னங்காலில் இருந்தே காசுகள் விழுவதாக நினைத்துக் கொண்டான். இவ்வாறு முகமதியன் கொண்ட தப்பெண்ணத்தையும் உலகப்புரட்டன் அறிந்துகொண்டான்.

முகமதியனை எய்த்தல்

முகமதியன் உலகப்புரட்டனைப் பார்த்து, "இஃதென்ன செய்தி?" என்று உசாவினான். அதற்கு உலகப் புரட்டன், "நீ போ கிட்ட வராதே. என் கரடி கொட்டுகிற காசைக் கொள்ளையடிக்கப் பார்க்கிறாயா? என்ன?" என்று அதட்டினான். இதைக் கேட்டதும் முகமதியனுக்கு வியப்பு மிகுதிப்பட்டது. அவன், "இக் கரடி எப்படிக் காசைக் கொடுக்கிறது?" என்று கேட்டான். அதற்கு உலகப் புரட்டன், "மந்திரம் ஒன்று இருக்கிறது. அதைப் பதினாயிரந்தடவை உருப்போட்டு இந்தக் கரடியைப் பிடித்துச் சுற்றினால் தங்கக் காசு சொரியும். அந்த மந்திரம் எனக்குப் பலித்திருக்கிறது. ஆகவே காசு சொரிகிறது," என்றான்.

உலகப்புரட்டன் உரைத்ததை முகமதியன் உண்மையென்று நம்பினான். உலகப்புரட்டனைப் பார்த்து, "நான் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகப் பட்டாளத்தில் ஊழியஞ்செய்து ஏதோ சில பொருள்கள் தேடி அதனைக் குதிரையின் பேரில் போட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். அவைகளை நீ குதிரையோடு எடுத்துக்கொள்வாயானால் நான் இக் கரடியை வாங்கிக்கொண்டு மந்திரத்தை உருப் போடுகிறேன்," என்று சொன்னான். உலகப்புரட்டன், 'சரி இவன் ஒரு பெரிய மூடன். நமக்கு வழியில் வலிய வந்து வாய்த்தான்' என்று எண்ணிக்கொண்டான்.

மந்திரம்

பிறகு முகமதியனிடம், "கோசுவும் தன் கையால் எட்டே சாண்," என்னும் ஒரு மொழியைச் சொல்லி, "இது மிக உயர்ந்த மந்திரம். இதனை நீ பதினாயிரம் தடவை உருப்போடுவாயானால் பொன்காசு சொரியும்," என்று கூறி உருப்போடச் சொல்லிக் கரடியைப் பிடித்து முகமதியனுடைய கையிலே கொடுத்தான். கீழே விழுந்த காசுகளையெல்லாம் பொறுக்கிக்கொண்டு தலையில் இருந்த சுமையை எடுத்து முகமதியனுடைய குதிரையின்மேல்

போட்டுக்கொண்டு ஒரு வழியைப் பிடித்து விரைவாகச் சென்றான். உலகப்புரட்டன் புறப்படுவதற்கு முன்னே முகமதியன் அவனைப் பார்த்து, "நீ இருக்குமிடம் எங்கே?" என்று கேட்டான். அதற்கு உலகப்புரட்டன், "மதுரை புதுத்தெரு," என்று மறுமொழி கூறிவிட்டுச் சென்றான். இங்கே முகமதியன் கரடியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, "கொசுவுந் தன் கையால் எட்டே சாண்," என்று உருப்போட்டுக்கொண்டே இருந்தான்.

பணியாரக் கிழவி

உலகப்புரட்டன் போகும் வழியில், ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. அதன் கரையில் ஒரு கிழவி ஒரு கூடை நிறையப் பணியாரம் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந் தாள். ஆற்றின் அக்கரையிலே அவளுடைய மகள் வீடு இருந்தது. ஆற்றில் தண்ணீர் குறைந்த உடனே போவோம் என்று அவ்விடத்தில் காத்திருந்தாள். அந்தச் சமயத்தில் உலகப்புரட்டனும் அங்குப்போய்ச் சேர்ந்து, "நீ யாரம்மா? ஏன் இங்கு இருக்கிறாய்?" என்று வினவி னான். அதற்கு அவள், "அப்பா! அக்கரையில் என் னுடைய மகள் வீடு இருக்கிறது. அவளைப் பார்ப்பதற்குப் பணியாரஞ் சுட்டுக்கொண்டு வந்தேன். இந்தக் காட்டாற் றில் வெள்ளம் வந்திருக்கிறது. இன்னும் நான்கு நாழி கைக்குள் வற்றிவிடும். அப்புறம் அக்கரை போகலாம் என்று காத்திருக்கிறேன்," என்று சொன்னாள். அவளும், "நீ யார்? உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட் டாள். அதற்கு அவன், "என் பெயர் உப்பிந்தா என் பார்கள். நானும் அக்கரை போகிறேன். வேண்டுமானால் இரண்டு நடையில் உன்னையும் உன் பணியாரக் கூடையை யும் அக்கரைக்குக் கொண்டுபோகிறேன். முதலில் உன் கூடையைக் கொடு. அப்புறம் உன்னைக் குதிரையில் இரண்டாம் நடை அழைத்துப்போகிறேன்," என்றான். அதற்கு அவள், 'இவனைப் பார்த்தால் நல்ல பணக்காரன் போல் காணப்படுகிறான். இவன் நமக்கு யாதுங் கேடு

செய்யமாட்டான்' என்று எண்ணினாள். பணியாரக் கூடையை அவனிடங் கொடுத்தாள்.

உப்பிந்தா! உப்பிந்தா!!

உலகப் புரட்டன் பணியாரக் கூடையை எடுத்துச் சென்றான். அவனுக்குப் பசி பொறுக்கமுடியாமல் இருந்தது. நடு ஆற்றிலேயே கூடையை அவிழ்த்து உள்ளே வைக்கப்பட்டிருந்த பணியாரங்களைச்சாப்பிட்டுக்கொண்டே போனான். அதைப் பார்த்து இக்கரையில் காத்திருந்த கிழவி, "அடே அப்பா! உப்பிந்தா, அடே அப்பா! உப்பிந்தா! பணியாரத்தைத் தின்காதே," என்று இரைச்சலிட்டாள். அதை உலகப்புரட்டன் கேட்டு, "எனக்கு உப்பு வேண்டாம்; உப்பிருக்கிறது பணியாரத்தில்," என்று அக்கரைக்குப்போய்த் தனக்கு விருப்பமான வழியில் குதிரையைச் செலுத்திக்கொண்டு போய்விட்டான். நினைத்தவேளையில் பசிக்குச் சாப்பிடுவதற்கு அவனுக்குப் பலகாரமும் அகப்பட்டுவிட்டது. இக்கரையில் இருந்த கிழவியோ, "உப்பிந்தா உப்பிந்தா," என்று கத்திக்கொண்டிருந்தாள். அவனும் கண்ணுக்குத் தெரிந்தவரையில், "எனக்கு உப்பு வேண்டாம்; எனக்கு உப்பு வேண்டாம்," என்று சொல்லிக்கொண்டே போனான். பிறகு அவளும் காட்டில் இருந்த கிழவி, பொருளையுங் குதிரையையும் பறிகொடுத்த முகமதியன் ஆகியவர்களைப்போல் உலகப்புரட்டனால் வஞ்சிக்கப்பட்டு அக் காட்டாற்றின் கரையில் உட்கார்ந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு புலம்பியழுதுகொண்டிருந்தாள்.

குதிரை இலத்தியில் தங்கக்காசு

உலகப்புரட்டன் பொழுதுபோகிற சமயத்தில் ஒரு சிற்றூருக்குப் போய்ச்சேர்ந்தான். அந்த ஊரில் எங்குப் போய்க்கேட்டாலும் தங்குவதற்கு, "இடமில்லை இடமில்லை," என்று சொன்னார்கள். கடைசியாய்த் தாசித் தெரு ஒன்றுக்குச் சென்றான். ஒருத்தி வீட்டுத் திண்ணையில் தங்கினான். வாசலில் இருந்த பூவரச மரத்தில் குதி

ரையைக் கட்டி வைத்தான். பிறகு படுத்து நன்ருக உறங்கிவிட்டான். விடிவதற்கு மூன்று நான்கு நாழிகை நேரம் இருக்கும்போது விழித்துக்கொண்டு பார்த்தான். குதிரை இலத்தி போட்டிருந்தது. உடனே உலகப்புரட்டன் எழுந்திருந்து ஒவ்வொரு இலத்திக்குள் இரண்டிரண்டு தங்கக் காசுகளை நுழைத்து வைத்தான். அல்லாமலும் இலத்தியை யாராவது எடுத்துக்கொண்டு போய்விடாமல், தூங்குகிறவன்போல விழித்துக்கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான்.

வேலைக்காரி

விடிய ஒரு நாழிகை இருக்கும்போது அத் தாசி வீட்டு வேலைக்காரி வந்து வாசலைக்கூட்டிப் பெருக்கினுள். பிறகு குதிரையின் இலத்திகளை எடுக்கப்போனுள். உடனே உலகப்புரட்டன் திடீரென்று எழுந்திருந்தான், "அம்மா! அந்த இலத்திகளெல்லாம் பொன் காசுகளாகும். அவை களைத் தொடாதே," என்ருன். இதைக்கேட்டு வேலைக் காரி மிகுந்த வியப்படைந்தாள். 'இப்படி நாம் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. குதிரையாவது பொன் லத்தி போடவாவது,' என்று எண்ணினுள்.

தாசிக்குச் செய்தி கூறுதல்

விரைவாக உள்ளே சென்று தாசியை எழுப்பினுள். "வாசலில் யாரோ ஒருவன் குதிரையை மரத்தடியில் கட்டி யிருக்கிருன். குதிரையினுடைய இலத்தியை எடுக்கப் போனுல், 'பொன் காசு லத்தி அவைகளை எடுக்காதே' என்கிருன்," என்று சொன்னுள். வேலைக்காரி விளம்பிய தைக் கேட்டதும் தாசிக்கு அளவற்ற வியப்பு உண்டாகி விட்டது. உடனே வெளியிற் சென்று அங்கு வெகு பகட் டாகப் படுத்திருக்கும் உலகப்புரட்டனைக் கண்டாள். அவனைப் பார்த்து, "நீங்கள் யார்? உங்களுடைய குதிரை பொன் காசு லத்தியிடுகிறதாமே! அஃது எப்படி?" என்று கேட்டாள்.

தாசியை ஏமாற்றுதல்

உலகப்புரட்டன் தாசியைப் பார்த்து, "எனக்கு ஒரு யோகிசுவரர் ஒரு மந்திரத்தைச் சொல்லிக்கொடுத்திருக்கிறார். அதை ஒரு திங்கள் இந்தக் குதிரையின் பேரில் ஓதினேன். அந்த மறைமொழியின் ஆற்றலால் இப்பொழுது இக் குதிரை பொன்காசு லத்தியிடுகிறது." என்று சொன்னான். 'இவ்வாறும் உலகத்தில் உண்டோ' என்று அந்தத் தாசியானவள் மிகுந்த வியப்படைந்தாள். அவள் மிகுந்த பொருளாசை கொண்டவளாகையால், 'நாம் மெதுவாக அந்த மந்திரத்தைக் கற்றுக்கொண்டு இக் குதிரையையும் வாங்கிக்கொள்ளுவோமானால், குதிரை லத்தியிடும் பொழுதெல்லாம் பொன்காசு கொடுக்கும்,' என்று எண்ணினாள். குதிரை போட்டிருந்த லத்தியைப் பார்த்தாள். பொன் காசுகள் இருந்தன. பிறகு அவள் உலகப்புரட்டனைப் பார்த்து, "ஐயா! நான் இவ்வளவு நாட்களாகத் தேடியது ஐம்பதினாயிரம் வராகன் இருக்கிறது. அதை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் அந்த மந்திரத்தோடு இந்தக் குதிரையை எனக்குக் கொடுப்பீர்களா?" என்று கேட்டாள். உலகப்புரட்டன் முதலில் உடன்படாதவன்போல் நடித்தான். பிறகு தாசியினுடைய கட்டாயத்திற்காகக் கொடுப்பவன்போல் ஒப்புக்கொண்டான்.

வெள்ளாட்டின் முட்டை வெகு ருசி

பிறகு உலகப்புரட்டன், "வெள்ளாட்டின் முட்டை வெகு ருசி," என்னும் ஒரு மந்திரத்தைத் தாசிக்குக்கூறி அதை ஒரு திங்கள் ஓதும்படியாகக் கூறிவிட்டு அவள் கொடுத்த பெரும்பொருளை வாங்கிக்கொண்டான். மிக விரைவாகப் போகக்கூடிய ஒரு வண்டியைத் திட்டஞ் செய்துகொண்டு, கிழவி, முகமதியன், தாசி ஆகிய மூவரிடமிருந்தும் ஏமாற்றிப் பறித்த பணம் எல்லாவற்றையும் அந்த அந்த வண்டியிற் போட்டுக்கொண்டு மற்றோர் ஊருக்குச் சென்றான். அந்தத் தாசியும் அவன் புறப்படுவதற்குமுன் "உங்கள் ஊர் எது?" என்று கேட்டாள்.

அதற்கு அவன் தன்னுடைய ஊர் மதுரை என்றும் அங்குத் தான் புதுத்தெரு என்னும் பெயருடைய ஒரு தெருவில் குடியிருப்பதாகவும் கூறிவிட்டுப் போய்விட்டான்.

பெண்ணின் அகமுடையான்

உலகப்புரட்டன் அன்று பகலெல்லாம் வழிநடந்து மாலையில் நான்கு நாழிகைப் பொழுதிருக்கும்போது ஓர் ஊரையடைந்தான். அன்று ஒரு வீட்டில் சோபன கலியாணம். உலகப்புரட்டன் மிகப் படாடோபமாகவே அந்த ஊருக்குள் வந்தான். வந்தவன் முன்பின் தெரியாம லிருந்துங்கூடப் புதுமை நடக்கும் வீட்டிற்குச் சென்றான். அவன் பெரிய பணக்காரன் என்று அந்த வீட்டில் இருந் தவர்கள் எண்ணிக்கொண்டார்கள். அவனுக்கு ஓர் அறையைக் காலிசெய்து கொடுத்து அதில் தங்கியிருக்கச் சொன்னார்கள். சாப்பாடு முதலியவைகளையும் சிறப்பாக நடத்தினார்கள். வீட்டுக்காரர்கள் உலகப்புரட்டனைப் பார்த்துத், "தங்களுடைய பெயர் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "என்னுடைய பெயர், பெண்ணின் அகமுடையான்," என்று சொன்னான். அவர்கள் இப்படியும் ஒரு பெயர் இருக்கிறதுபோலும் என்று எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டார்கள்.

மணப்பெண் பொருளால் மயங்குதல்

இரவு நடக்கவேண்டிய சடங்குகளெல்லாம் நடை பெற்றன. மணப்பெண்ணை அவளுடைய கணவன் இருந்த அறைக்கு அனுப்பிவைத்தார்கள். அவள் தன்னுடைய கணவன் இருந்த அறையை விட்டு விட்டுத் தவறுதலாக உலகப்புரட்டன் இருந்த அறைக்குள் புகுந்துவிட்டாள். உள்ளே அவள் வந்ததும் உலகப்புரட்டன் அவள் முன்பு தான் கொண்டு வந்திருந்த காசுகளையெல்லாம் பரப்பினான். "நீ மட்டும் என்னைக் கணவனாக அடைவாயாகில் இந்தப் பணம் இவ்வளவும் உன்னுடையதே. நீ தவறுதலாக வந்தது உனக்கும் எனக்கும் நன்மை என்றுநினை," என்று சொன்னான். அவன் சொன்ன சொல்லினாலும்

காட்டின பணத்தினலும் அவள் மயங்கினள். "அவனையே கணவனக அடைந்து விட்டதாகவும், தன்னுடைய நல்வினைதான் தன்னை அன்று அந்த அறையில் கொண்டு வந்து விட்டதாகவும், அவன் எங்கு அழைத்தாலும் தான் வருவதற்கு உடன்படுவதாகவும்" கூறினள்.

பெண்ணைக் கடத்திப்போதல்

உலகப்புரட்டன் மணப்பெண் கூறியதைக் கேட்டதும் 'இதுவும் நம்முடைய நல்வினையே. நமக்கு ஒரு பெண் ஒரு காசுகூடச் செலவில்லாமல் மனைவியாகக் கிடைத்தாள். இன்னும் சிறிது நேரம் இங்கிருப் போமானல் இவளுடைய மனம் ஒரு சமயம் மாறினலும் மாறும். நாம் இப்பொழுதே ஓடிப்போகவேண்டும்,' என்று முடிவுசெய்தான். வாசற் புறத்தில் இருந்த கதவைத் திறந்து தன் பணமூட்டையை எல்லாம் எடுத்துப் பாதியைத் தன் தலையிலும் பாதியை அவளுடைய தலையிலுமாக வைத்துக்கொண்டு புறப்பட்டான். வண்டிப் பேட்டைக்குச் சென்று நல்லவண்டி ஒன்றை வாடகைக்குப் பேசிக்கொண்டு மதுரையை நோக்கிப் போய்விட்டான்.

வீட்டுக்காரர்கள்

பெண்வீட்டுக்காரர்கள் காலையில் எழுந்து பார்த்தார்கள். மாப்பிள்ளையின் அறைக்குப் பெண் வரவில்லை யென்று தெரிந்துகொண்டு புதிதாக வந்த மனிதனைப் பார்த்தார்கள். அவனையுங் காணவில்லை. 'ஓகோ! புதிதாக வந்தவன்தான் பெண்ணை அழைத்துக்கொண்டு ஓடியிருக்கவேண்டும்' என்று நினைத்தார்கள். "கூ-கூ பெண்ணின் அகமுடையான் எங்களுடைய பெண்ணை அழைத்துக்கொண்டு ஓடிப் போய்விட்டான்," என்று கூச்சலிட்டார்கள். இதனைக் கேட்ட மக்கள் நகைத்தார்கள்: "பெண்ணின் அகமுடையான் பெண்ணைத் தன்னேடு அழைத்துக்கொண்டு போகாமல் பிறகு உங்கள் வீட்டிலேயேயா விட்டு விட்டுப் போவான்?" என்று கேட்டு வைதார்கள்.

மதுரையில் வாழ்க்கை

இவ்வாறு உலகப்புரட்டன் தான் பார்த்த ஒவ்வொருவரையும் வஞ்சித்து அவர்களுடைய பொருள்களையுங் கவர்ந்துகொண்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே புதுத்தெருவில் ஒரு நல்ல வீட்டை வாங்கிக்கொண்டு, அதில் தான் கொண்டு வந்த பெண்ணைத் திருமணஞ் செய்துகொண்டு கணவனும் மனைவியும் தங்கள் விருப்பம்போல் சிறப்பாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

வஞ்சிக்கப்பட்டவர்கள் வருதல்

உலகப்புரட்டனால் வஞ்சிக்கப்பட்டவர்களுடைய கதி என்னவென்று சிறிது உசாவுவோம். காட்டுக் கிழவி பணத்தின் மேலேயே உயிரை வைத்துக் கொண்டிருந்தவளாகையால், எப்படியாவது சென்றஆண்டைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று புறப்பட்டு வந்து கொண்டிருந்தாள். வழியில் முகமதியன் கரடியைப் பிடித்துக்கொண்டு தொல்லைப்படுவதைக் கண்டு என்ன செய்தி என்று கேட்டாள். அதற்குள் அவனுக்குப் பதினாயிரம் தடவை உருப்போட்டான போதிலும் ஒன்றும் பலிக்கவில்லை. ஆகவே அவன் அந்த உலகப்புரட்டன் தன்னை வஞ்சித்துவிட்டதாகத் தெரிந்து கொண்டு தான் பைத்தியக்காரனான செய்தியைக் கிழவியிடம் கூறி அலறினான். அதற்குக் கிழவியானவள், "அஞ்சாதே! அவன் என்னையும் வஞ்சித்துவிட்டுப் போயிருக்கிறான். நாம் இருவரும் போய் அவனைக் கண்டு பிடித்துத் தக்கவாறு ஒறுத்து அறிவு புகட்டிவிட்டு நம்முடைய பொருளை மீட்டுக்கொண்டு வருவோம்," என்று சொன்னாள். உடனே முகமதியன் கரடியைவிட்டு விட்டுக் கிழவியோடு புறப்பட்டான்.

இரண்டொரு நாள் வழிநடந்து தாசியிருக்கும் ஊரை அடைந்தார்கள். தாசிக்கும் அதற்கு முன்னமேயே அவளுக்கு உரைத்த மந்திரம் உருவேற்றியாகி விட்டது. ஆனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. குதிரை வெறும்

லத்திதான் போட்டுக் கொண்டிருந்தது. அவள் தேடி வைத்திருந்த ஐம்பதினாயிரம் வராகன் பொருளும் போய் விட்டது. அவளும் இவர்களிடத்தில் தன்னுடைய துன் பத்தைச் சொல்லி முறையிட்டாள். பிறகு மூவரும் புறப் பட்டு மதுரையை நோக்கிச் சென்றார்கள். வழியில் ஓர் ஊரில் தங்கும்போது அவ்வூர், உலகப்புரட்டன், பெண்ணின் அகமுடையான் என்று பெயர் சொல்லிப் பெண் வீட்டுக் காரர்களை ஏமாற்றிய இடமாக இருந்தது. அந்தப் பெண் வீட்டுக்காரர்களும் இவர்களைப் பின்தொடர்ந்தார்கள். இவ்வாறு நான்கு பேர்களும் புறப்பட்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இறுதியில் மதுரை புதுத்தெருவை அடைந்து உலகப்புரட்டனைக் கண்டுபிடித்தார்கள்.

உலகப்புரட்டன் வரவேற்பு

உலகப்புரட்டன் தன்னால் வஞ்சிக்கப்பட்டவர்களை யெல்லாம் கண்டான். 'நாம் செய்த கெடுதியை மனதில் வைத்துக்கொண்டுதான் இவர்கள் வந்திருக்கிறார்கள்' என்று அறிந்துகொண்டான். என்றாலும் அதனை வெளிக் குக் காட்டிக்கொள்ளாமல் வந்தவர்களை அன்புடனும் பரி வுடனும் வரவேற்றான். முகமதியனையும் தாசியையும் பார்த்து, "நான் சொல்லிக்கொடுத்த மந்திரங்கள் பலித்த னவா?" என்று கேட்டான். அவர்களுக்கு உள்ளுக் குள்ளே வயிற்றெரிச்சல் இருந்தபோதினும் வெளிக்கு "எல்லாம் பலித்தது" என்றார்கள். "சரி; நாழிகையாய் விட்டது. எழுந்திருந்து நீராடுங்கள். சாப்பாட்டை முடித் துக்கொண்டு பிறகு எல்லாவற்றையும் பேசிக்கொள்வோம்" என்றான். அவ்வாறே அவர்கள் நீராடச் சென்றார்கள். உடனே உலகப்புரட்டன் தன்னுடைய மனைவியை அழைத்து, "அடியே நீ எனக்குப் பூசைக்குச் சாமான்க ளெல்லாம எடுத்துவை. அவைகளோடு ஓர் உலக்கை யையும் வைத்துவை. நீ ஒரு கிழவி மாதிரி கோலம் பூண்டு கொள். நிவேதனம் கொண்டுவந்து வைக்கும்போது நான் உன்னை உலக்கையால் அடிக்கிறேன்; நீ உடனே உள்ளே போய்க் கிழக்கோலத்தை மாற்றிவிட்டுச் சிறு

பெண்போல் கோலம்பூண்டுவா; பார், ஒரு வேடிக்கை நடக்கும்,'' என்றான். அவளும் அவ்வாறே செய்ய ஒப்புக் கொண்டு, "அஃது என்ன வேடிக்கை?'' என்று கேட்டாள். அதற்கு உலகப்புரட்டன், "அதை இப்பொழுது சொன்னால் இனிமை போய்விடும். பிறகு உனக்கே தெரியும்,'' என்று மறுமொழி கூறிவிட்டான். அவளும் கணவனுடைய கட்டளைப்படியே பூசைக்கு எல்லாப் பொருள்களும் எடுத்துவைத்து அவைகளோடு உலக்கையையும் எடுத்து வைத்தாள். பிறகு கிழவிக்கோலம் பூண்டு கொண்டிருந்தாள்.

உலக்கை மோசடி

நீராடுவதற்குச் சென்ற நால்வரும் நீராடிவிட்டுத் திரும்பிவந்தார்கள். அவர்களையெல்லாம் தன்முன் உட்காரவைத்து, "நான் நாராயண பூசை பண்ணுகிறேன். அது முடிந்தவுடன் சாப்பிடுவோம்,'' என்றான். பிறகு பூசை செய்வதற்கு உட்கார்ந்தான். அவர்கள் எல்லோரும் இவனுடைப் பூசையைப்பார்த்தார்கள். 'இவன் நமக்கு என்ன கேடு செய்தாலும் நாராயண பக்தனாக இருக்கிறான்' என்று எண்ணி இவனிடம் மகிழ்ச்சியடைந்தார்கள். இதற்குள் பூசை முதலியன பெரும்பாலும் முடிந்துவிட்டது. அவனுடைய மனைவி நிவேதனங் கொண்டுவந்து வைத்தாள். அவளுடைய கணவன் சொல்லியபடியே தொண்டுகிழவிக்கோலம் பூண்டிருந்தாள். உலகப்புரட்டன் அவளைப்பிடித்து உலக்கையால் இடி இடி என்று இடித்து உள்ளே பிடித்துத் தள்ளினான். 'எல்லோரும் இவனுக்குப் பைத்தியம்போல் இருக்கிற'தென்று கையைப் பிடித்துக்கொண்டார்கள். அவன், "விட்டுவிடுங்கள் கையை. இவளை நான் அடிப்பதாக நீங்கள் எண்ண வேண்டாம். நாள்தோறும் ஒவ்வொரு கிழவி இவ்வாறு உலக்கையிடி பட்டு வருவது வழக்கம். இடிபட்ட உடனே அவளுடைய கிழத்தனம்போய்ச் சிறுபெண்ணாய்விடுவாள்,'' என்று சொல்லிக்கொண்டே அடித்தான். அவன் கூறிய எல்லாம் உண்மை என்று எண்ணும்படியாக அடி-

பட்டுக்கொண்டு சென்ற கிழக்கோல மனைவி கிழக்கோலத்தைக் களைந்துவிட்டு இளம்பெண்ணாக வந்து நிவேதனத்தை உள்ளே எடுத்துக்கொண்டு சென்றாள்.

மீண்டும் ஏமாறுதல்

இவைகளையெல்லாம் பார்க்கவே வந்தவர்களுக்கு மெதுவாய் 'இந்த உலக்கையைக்கொண்டுபோய்விடவேண்டும். இதில் வெகு எத்து இருக்கிறது' என்னும் எண்ணம் உள்ளத்தில் தோன்றிவிட்டது. அவன் தங்களுக்கு முன்பு செய்த கெடுதிகளையெல்லாம் மறந்துவிட்டார்கள். தாசியானவள் 'நம்முடைய வீட்டில் நான்கு ஐந்து கிழவிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் உலக்கைப் பூசைபோட்டால் சிறு பெண்களாகிவிடுவார்கள். பொருள் மிகுதியாகக் கிடைக்கும் என்று முடிவு செய்தாள். முகமதியனுக்கு நான்கு ஐந்து மனைவியர் எல்லோரையும் இளம் பெண்களாகச் செய்யவேண்டும் என்று அவனும் எண்ணினான். இவ்வாறே மற்றவர்களும் எண்ணினார்கள்.

உலக்கையை வாங்கிப்போதல்

உடனே எல்லோருஞ் சேர்ந்து, "தாங்கள் அன்பு கூர்ந்து எங்களிடம் உலக்கையைச் சிறிது நாளைக்குக் கொடுத்துவைப்பீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன் சிறிதும் இணங்காதவன்போல் முதலில் நடித்தான். பிறகு அவர்களுடைய கட்டாயத்திற்கு உட்பட்டுக் கொடுக்கிறவனைப்போலக் கொடுத்தான். ஒவ்வொருவரும் சிறிது சிறிது நாளைக்கு வைத்துக்கொண்டு மந்திரம் ஓதித் தங்கள் தங்கள் வீட்டிலிருக்கும் கிழங்களின்மேல் செலுத்துகிறது என்று முடிவு செய்தார்கள். "அதற்கு மந்திரம் யாது?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "நமோ நாராயணாய" என்பதை உபதேசஞ்செய்து, "இந்த மந்திரத்தை ஒரு வாரம் ஓதி உலக்கையைக்கொண்டு இடிப்பீர்களாகில் கிழவிகள் குமரிகளாக மாறிவிடுவார்கள்," என்றான். வந்தவர்கள் உலக்கையை வாங்கிக் கொண்டு தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள்.

தாசியானவள் 'முதலில் தான் ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று முதலில் உலக்கையை அவள் வாங்கிக் கொண்டு சென்றாள். முகமதியன் பத்துநாள் பொறுத்துத் தான் வருவதாகவும் அப்பொழுது உலக்கையைத் தான் வாங்கிக்கொள்வதாகவும் சொல்லிவிட்டுப்போனான்.

கிழவிகள் மாளுதல்

தாசி எட்டுநாள் மந்திரம் ஓதினாள். பிறகு ஒவ்வொரு கிழவியாய் மூன்று நான்கு கிழவிகளை நசுக்கினாள். அவர்கள் எல்லோரும் மாண்டு தொலைந்தார்கள். யாருங் குமரிகளாகத் திரும்பி வரவில்லை. "ஒருகால் நாம் ஓதியதில் உரு சரியாக ஏறவில்லையோ என்னவோ? முகமதியன் கையில் கொடுத்துப் பார்ப்போம்," என்று அவனிடம் கொடுத்தாள் அவனும் மந்திரம் ஓதித் தன் மனைவிகளையெல்லாம் கொன்று தொலைத்துவிட்டான். அவர்கள் இரண்டு பெயர்களுக்கும் பயனில்லாமல் போகவெ எல்லோரும உலகப்புரட்டன் செய்தது வஞ்சனை என்று அறிந்துகொண்டு, 'இவ்வாறே இவன் நம்மை ஏய்த்து வருகிறான். இந்தத்தடவை அவனைக் கட்டிக்கொண்டு போய் எங்கேயாவது கொன்றுவிட்டு வந்து அவனுடைய பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டுவர வேண்டும்' என்று எல்லோரும் ஒரே மனதாக முடிவு செய்தார்கள். 'அவன் எவ்வாறாவது நம்முடைய கண்ணிற் பொடி தூவ வருவான். அதற்கு ஏமாந்துபோகாமல் காரியத்தை முடித்துக்கொண்டு வரவேண்டும்' என்று புறப்பட்டு மதுரைக்கு வந்துசேர்ந்தார்கள்.

உலகப்புரட்டனை மூட்டை கட்டுதல்

மதுரைக்கு வந்து சேர்ந்தவர்கள் உலகப்புரட்டன் வீட்டிற்குச் சென்று உசாவினார்கள். அவன் நீராடுவதற்குப் போயிருக்கிறான் என்று தெரிந்துகொண்டு, ஒரு கோணியை எடுத்துக்கொண்டு உலகப்புரட்டன் குளித்துக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றார்கள். அங்கு அவனைக் கண்டுபிடித்துக் கோணியிற்போட்டுக் கட்டி

ஞர்கள். பக்கத்தில் இருந்த ஒரு பெரிய மலையின் உச்சிக்குக் கொண்டுபோய் அங்கிருந்து கீழே உருட்டிவிடுகிறதென்று முடிவு செய்தார்கள். தலையின்மேல் தூக்கிக் கொண்டு மலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

உலகப்புரட்டன் ஓடிப்போதல்

வழியிலே ஓரிடத்தில் மூட்டையை வைத்துவிட்டு எல்லோரும் சிறிது தொலையிலே போய்க் காலைக்கடனை முடித்துக்கொண்டு வருவோம் என்று சென்றார்கள். அப்பொழுது மூட்டையில் இருந்த உலகப்புரட்டன், "அந்தப் பெண் எனக்கு வேண்டாம். அந்தப் பெண் எனக்கு வேண்டாம். வேறு யாருக்காவது திருமணஞ்செய்து கொடுத்துவிடு," என்று ஓயாமற் சொல்லிக்கொண்டேயிருந்தான். அப்பொழுது அவ்வழியே கிடைமாடுகளை ஓட்டிக்கொண்டு இடையன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவன் மூட்டையை அவிழ்த்து, "என்ன செய்தி? என் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு உலகப்புரட்டன், "அடுத்த ஊரில் எனக்கு ஒரு மனைவியைத் திட்டஞ்செய்து என்னை அவளுக்குத் திருமணஞ்செய்து கொடுப்பதற்காக அழைத்துக் கொண்டுபோகிறார்கள். எனக்கு எப்படி அவளைத் திருமணஞ்செய்துகொண்டு வாழப்போகிறோம் என்று கவலையாக இருக்கிறது." என்றான். இடையனுக்குப் புத்தி பிடரியிலே ஆகையால் அதைக்கேட்டதும் அக் கோனன், "அப்படியானால் அப் பெண்ணை நான் திருமணஞ்செய்து கொள்ளும்பொருட்டு என்னை இந்தக் கோணியில் கட்டி விடு," என்றான். உலகப்புரட்டன் உடனே அவனை அக் கோணியில் போட்டுக் கட்டிவிட்டு, அவனுடைய கம்பளியைத் தன் தலையில் போட்டுக்கொண்டு இடையனுடைய மாடுகளையெல்லாம் அடுத்த ஊருக்கு ஓட்டிக்கொண்டு போய் மாடுகளையெல்லாம் விற்றுப் பணத்தை மூட்டை கட்டித் தலையில் வைத்துக்கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தான்.

உலகப்புரட்டனை மீண்டுங் காணுதல்

காலைக்கடனை முடிக்கச்சென்றவர்கள் திரும்பிவந்தார்கள். இடையனை வைத்துக்கட்டியிருந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டுபோய் உருட்டினார்கள். உலகப்புரட்டனுடைய பணத்தை எடுத்துக்கொண்டு போக எண்ணியவர்களாய்த் திரும்பி மதுரையில் உள்ள அவனுடைய வீட்டிற்கு வந்தார்கள் அவர்கள் வருகிற சமயத்தில் அவன் அவர்களுக்கு முன்னமேவந்து தான் மாடு விற்றுக் கொண்டுவந்த பணத்தை எண்ணிவைத்துக்கொண்டிருந்தான். உருட்டிவிட்டு வந்தும் சிறிதேனும் அழிவில்லாமல் அவன் பணம் எண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவர்கள் திகைத்தார்கள். "உன்னை ஒரு சாமத்திற்கு முன்னர் சிக்கித்தாமலையில் உருட்டினோமே நீ எப்படி இங்குவந்து சேர்ந்தாய்? எங்கிருந்து இவ்வளவு பணம் கொண்டுவந்தாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "நீங்கள் நாள்தோறும் என்னை இவ்வாறு உருட்டிவிட்டால் மிக நல்லது. நீங்கள் உருட்டிவிட்டு அப்புறம் போனதும் முருகக் கடவுள் என்முன்வந்து நின்று என்னை விண்ணுலகத்திற்குக் கொண்டுபோய்விட்டார். அங்கு எனக்கு முன்னர் என்பாட்டனார் முதலியோர் போயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் என்னைக்கண்டு மகிழ்ந்து களித்தார்கள். நான் ஒரு மூட்டை பணந்தான் தூக்கக் கூடுமாகையால், ஒரு மூட்டை பணத்தை என் தலையில் வைத்து என்னை அனுப்பினார்கள். நான் பணத்தைப் பெற்றுக்கொண்டு அங்கேயே எண்ணுவதற்கு நேரமில்லாதபடியினால் இவ்விடம் வந்து எண்ணுகிறேன்," என்றான்.

பகைவர்கள் தொலைதல்

அவர்கள் எல்லோரும் உலகப்புரட்டனைப் பார்த்து, "அப்பா! எங்களையும் அப்படியே உருட்டிவிடுவாயாகில் எங்களுக்கும் உன்னைப்போல் செல்வம் கிடைக்கும்," என்றார்கள். உடனே அவன் அவர்களைக் கோணியில் கட்டி வண்டியிற்போட்டுச் சிக்கித்தாமலைக்குக் கொண்டுபோய்

உருட்டிவிட்டுவந்தான். எங்கேயாவது மலையில் இருந்து உருட்டப்பெற்றவர்கள் பிழைப்பார்களா? அவர்கள் எல்லோரும் மாண்டார்கள். உலகப்புரட்டனும் இனிமேல் அவர்கள் நம்மைப் பிடிக்கமாட்டார்கள் என்று மகிழ்ந்திருந்தான்.

முடிவுரை

அவர்கள் எல்லோரும் அவாவினாலேயே கெட்டவர்களாகையால் 'அவா மிகப்பொல்லாதது' என்பது இச் சிறுகதையின் கருத்தாம்.

---

௬௬. தஞ்சாவூர் எத்தனும் திருச்சினாப்பள்ளி எத்தனும்

தலைவெட்டி

தஞ்சாவூரில் தலைவெட்டி என்ற பெயர்போன ஓர் எத்தன் இருந்தான். அவன் முதல்தரமான போக்கிரி. அவன் தொழிலோ நாள்தோறும் மக்களை ஏமாற்றிப் பணந்தேடுவது; பொய்ப்பிராது; கோள், சூது, வாது, கொலை முதலிய எல்லாத் தீயகுணங்களும் தலைவெட்டியின் உடன் பிறப்பாக இருந்தன. எவ்வளவு அறிவாளியாகவும் நல்லவனாகவும் ஒருவன் இருந்தபோதினும் அவனை எப்படியாவது தலைவெட்டி தன் வலையிற் சிக்கச் செய்துவிடுவான். ஒருமுறை இந்த எத்தனின் வலையில் அகப்பட்டவர்கள் மறுமுறை அவனைத் தொலையிற் காணும்போதே ஓடி ஒளிவார்கள். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் பொய்யனாய், எல்லோருக்கும் கொடியவனாய்ப் பலவகையான தொல்லைகளை மக்களுக்குச்செய்துகொண்டு தஞ்சாவூரில் தலைவெட்டி பத்துப்பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தான். அவன் குறைந்த பட்சம் நூறு பொய்யாவது ஒருநாளைக்குச் சொல்லாமல் கதிரவன் மறைவதில்லை என்பது அவன் மனச்சாட்சிக்குத் தெரிந்த செய்தி

எல்லோரும் அறிந்துகொண்டார்கள்

எத்தனை நாள்தான் ஒருவனுக்கு அவனுடைய நற்காலம் நிற்கும்? எவ்வளவு கெட்டிக்காரனுக இருந்தபோதிலும் தலைவெட்டிக்கு வருமானம் குறையத் தொடங்கியது. முன்போல் தன் வலையில் மக்கள் சிக்கிக்கொள்ளாமல் தப்பிப்போவதையும், தன் தலையைக் கண்ட அளவில் மக்கள் ஓடி ஒளிவதையும், கதவுகளைத் தாளிடுவதையும் தலைவெட்டி கண்டான். தலைவெட்டி என்ருல் போக்கிரி என்பது தஞ்சாவூரில் அரைஞாண் கயிறு கட்டாத குழந்தைகளுக்குக்கூடத் தெரிந்துவிட்டது. 'இனிமேல் நாம் இங்கிருந்துகொண்டு காலங்கழிப்பது துன்பம்' என்பதைத் தலைவெட்டி நன்ருக அறிந்துகொண்டான். ஒருநாள் தன்னுடைய மனைவியை நோக்கிப் பின்வருமாறு சொல்லலாஞன்:

மனைவியிடஞ் சொல்லுதல்

"என் கண்மணியே! உன்னுடைய நல்வினையிஞல் நாம் இருவர்களும் இவ்வளவு காலமாக எவ்வளவோ சிறப்புடன் இந்த ஊரில் வாழ்ந்துகொண்டிருந்தோம். நானும் என்னுடைய வழியில் ஓடி ஓடி எவ்வளவோ ஆயிரக்கணக்காய்த் தேடினேன். விருப்பம்போற் செலவு செய்தேன். எத்தகைய வருத்தமும் இல்லாமல் கூடை கூடையாகப் பணத்தை வாரிக் குவித்து வந்தேன். ஆனல் இப்பொழுது காலமோ முன்போல் இல்லை. நான்காண்டுச் சிறுவன் முதல் சட்டம் பேசத் தொடங்கிவிட்டான். மக்கள் எல்லோருக்கும் என்னுடைய தகுதி நன்ருகத் தெரிந்துவிட்டபடியால் ஒருவஞவது எளிதில் என் வலையில் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பவேண்டிய வழிகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும் தேடிக்கொள்ளுகிருன். ஆகையால் இனிமேல் இந்த ஊரில் இருப்பதில் எத்தகைய பயனும் இல்லை. ஒருவித பயனும் அற்று எல்லோரும் நம்முடைய குணத்தை நன்ருக அறிந்த பிறகு இந்த ஊரில் இருப்பதைவிட வேறு எங்கேயாவதுபோய்ப் பிழைக்க எண்ணியிருக்கிறேன். நாம் இதுவரையில் தேடிய பொருளில்

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் காலந்தள்ளக் கூடிய அளவுக்குப் பொருள்கள் நம்மிடம் உள்ளன. இதை வைத்துக்கொண்டு நீ இங்கேயே நலத்துடன் வாழ்ந்துகொண்டிரு. நான் வேறு எங்கேயாவதுபோய் இனிமேல் நாம் தங்கியிருக்கக் கூடிய ஊரைக்கண்டு பிடித்து வருகிறேன். உன்னை மறுபடியும் நான் பார்ப்பதற்குள் பலபெயருக்குக் கெடுதி செய்து பதினாயிரம் பொன்னாவது கொண்டுவரக்கூடியவன் என்பதை உன்னிடத்தில் சொல்லவும் வேண்டுமோ?" என்றான்.

தலைவெட்டியின் மனைவி

தலைவெட்டி கூறியதைக் கேட்டதும் அவனுடைய மனைவி, "என்னுருயிர்த் தலைவனே! தாங்கள் இப்பொழுது சொன்னவெல்லாம் தாங்கள் ஒரு பெரிய பேராண்மையாளர் என்பதைக் காட்டுகின்றன. நான் ஏதோ பெண்பாலாயிற்றே, தாங்கள் பணந்தேட வெளியில் புறப்படுவதற்கு நான் ஏதாவது தடை செய்யக்கூடும் என்று நீங்கள் எண்ணியிருக்கலாம். அத்தகைய ஐயம் எள்ளளவு கூடத் தங்கள் மனதில் இருக்கவே வேண்டாம். களிப்புடன் தாங்கள் போய்வர என்னுடைய முழு உடன்பாட்டையுங் கொடுத்துவிட்டேன். எங்கே போனாலும் தாங்கள் வெற்றியோடு வருவீர்கள் என்பதைக் குறித்து நான் ஐயப்படவே இல்லை. ஆனால் இந்த ஊரில் மட்டும் என்னுடைய துணிவு முன்போல் இல்லாமல் குறைந்துபோய் விட்டது," என்று சொன்னாள்.

கட்டுச்சோறு

பிறகு தலைவெட்டியின் மனைவி அப்பொழுதே தன்னுடைய கணவனைப் பயணப்படுத்தி அனுப்ப எண்ணினாள். உள்ளே சென்றாள். ஒரு பெரிய களிமண் உருண்டையை ஒரு கையிலும் மற்றொரு கையில் சிறிது சோற்றுப் பருக்கைகளையும் எடுத்துக்கொண்டுவந்து தன் கணவனுக்கு முன் நின்றாள். இவ்வாறு இவள் உட்புகுந்து திரும்பி வந்ததன் பொருள் தலைவெட்டிக்கே நன்கு புலப்பட

வில்லை. அவள் தான் கொண்டுவந்த களிமண் உருண்டையையும் அழகாகவும் திரட்சியாகவும் உருட்டினாள். பார்ப்பவர்களுக்கு அடியிற் களிமண் இருக்கிறது என்னுஞ் செய்தி சிறிதேனும் தெரியாதபடி அழகாகச் சோற்றுப்பருக்கைகளை உருண்டையின்மீது ஒட்டிவைத்தாள். முற்றிலும் பருக்கைகள் பதிக்கப்பட்ட பிறகு அவ்வுருண்டை ஒரு கட்டுச்சோற்று உருண்டையைப்போல் காணப்பட்டதேயல்லாமல் சிறிதேனும் ஐயத்திற்கு இடமாகவில்லை. உண்மையான கட்டுச்சோற்று முட்டையைப் போலவே விளங்கிற்று. இப்பொழுதுதான் தலை வெட்டிக்குத் தன் மனைவி இதுவரையில் செய்த வேலையின் பொருள் விளங்கிற்று.

தலைவெட்டி தலைவியை வியத்தல்

அவன் தன் மனைவியைப் பார்த்து, "மிக நன்று! இப்பொழுதுதான் நீ தலைவெட்டியின் உண்மையான மனைவி. நீ செய்த காரியத்தால் எனக்கு உண்டான வியப்பை வெளிப்படுத்த எனக்கு நா எழவில்லை," என்றான்.

மனைவியின் மறுமொழி

இதைக்கேட்டதும் அவள், "நான் இன்றைக்குத் தானா தங்கள் மனைவி? இவ்வளவு காலமாகத் தங்களோடு பழகிய எனக்கு இந்தச் சூழ்ச்சியாவது தெரிய வேண்டாமா? நம்முடைய வீட்டுச்சோறு வீணாகச் செலவாவானேன்? தாங்கள் மற்றோர் இடத்தை நாடிச் செல்லும்பொழுதே வழியில் சகுனம்போல் இந்தக் களிமண் உருண்டையை ஒரு வழிப்போக்கனுடைய தலையிலே கட்டிவிட்டு அவனுடைய நல்ல உணவை ஏன் ஏமாற்றி வாங்கிச் சாப்பிடக்கூடாது? என்று இப்படிச் செய்தேன்," என்றாள். இதைக்கேட்ட தலைவெட்டி, "உன்னுடைய வியக்கத்தக்க அறிவுக்கு என் கண்படாமல் இருக்கவேண்டும். நான் திரும்பி வரும்வரையில் கடவுள் உன்னைப் பாதுகாக்க வேண்டும்," என்று வாழ்த்துரை கூறி

விட்டு, அச்சோற்று மூட்டையை நலுங்காமல் தூக்கித் தோளிற் போட்டுக்கொண்டு தன் மனைவியிடம் சொல்லிக் கொண்டு தஞ்சாவூரைவிட்டுத் திருச்சினப்பள்ளியை நோக்கிப் புறப்பட்டான்.

கணசுப்பன்

நாம் இதுவரையிலும் தஞ்சாவூர் எத்தனை தலை வெட்டியைப்பற்றிப் பேசிவந்தோம். அவனைத் தஞ்சா வூரைவிட்டுப் புறப்படவுஞ்செய்தோம். இனிமேல் மற் றொரு எத்தனை திருச்சினப்பள்ளி எத்தனைப் பற்றிச் சிறிதுசுருக்கிச் சொல்லுவோம். திருச்சினப்பள்ளியிலும் தலைவெட்டி தஞ்சாவூரில் எப்படி இருந்தானோ அதுபோல் கணசுப்பன் என்றொரு போக்கிரி யிருந்தான். இவனுடைய தொழிலும் தலைவெட்டியைப்போலவே. இவனும் பல நாள் திருச்சினப்பள்ளியில் நன்கு வாழ்ந்து பிறகு தன் குணமும் நடவடிக்கையும் அவ்விடத்திய மக்களுக்குப் புலப்பட்டுவிடவே, இனிமேல் நாம் திருச்சினப்பள்ளியில் வாழ்வது பயனில்லை என்று அறிந்தான். வேறு எங் கேனுஞ்சென்று தன்னுடைய தொழிலை நடத்திப் பிழைக்க எண்ணினான். அவனும் தன்னுடைய ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தஞ்சாவூரைநோக்கி வழிநடந்து வந்துகொண் டிருந்தான். கணசுப்பன் பயணப்படும்பொழுது அவன் மனைவி ஒரு சிறு ஏனம் நிரம்ப மணலை நிரப்பி அதற்கு மேல் கால் அங்குலம் அரிசியைத் தூவி அவனிடம் வழிக் குப் பயன்படுத்தும்படி கொடுத்திருந்தாள்.

இருவரும் ஒன்று கூடுதல்

இவ்வாறு வழியில் புசிக்க ஏதோ ஒருவித ஏற்பாட் டுடன் இவ்விருவர்களும் தங்கள் தங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டு நடந்துவந்துகொண்டிருந்தார்கள். தலைவெட்டி தஞ்சாவூரை விட்டுத் திருச்சினப்பள்ளியை நோக்கியும், கணசுப்பன் திருச்சினப்பள்ளியைவிட்டுத் தஞ்சாவூரை நோக்கியும் வந்துகொண்டிருக்கையில்; தற்செயலாக இரு வரும் கொள்ளிடம் ஆற்றுக்கரையில் ஒருநாள் காலை பத்து

நாழிகைக்கு ஒருவரை ஒருவர் கண்டார்கள். இவ்வளவு புகழ்பெற்ற போக்கிரிகளை எவ்வளவு காலத்திற்குப் பிரித்து வைக்கிறது என்று கடவுளே அருள்கூர்ந்து இவர்களை ஒன்றுபடச் செய்தாரோ என்னவோ என்று எண்ணும்படியாக இருந்தது இவர்கள் ஒன்றுகூடியது. ஆனால் இவ்விருவர்களுக்கும் ஒருவருடைய குணம் மற்றவர்கட்குத் தெரியாது. ஒவ்வொருவருந் 'தாம்தாம் கெட்டிக்காரர்கள் என்றும் மற்றொருவனை ஏமாற்றிவிடவேண்டும்' என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

உரையாடி மகிழ்தல்

இவ்வாறு இவர்கள் ஒன்றுகூடியவுடனே தலைவெட்டி கணசுப்பனைப் பார்த்து, "இன்றையத்தினம் நல்ல நாள்; தங்களைக் கண்டேன். தங்களுடைய திருமுகம் திருமகளின் திருவருள் பொருந்தியதாக இருக்கிறது. இத்தகைய தங்களுடைய திருக்காட்சியை இன்றைக்கு நான் அடைந்ததும் என்னுடைய நல்வினைதான். தங்களுடைய திருப்பெயர் என்ன? திருமேனியே இவ்வளவு சிறப்புப் பொருந்தியதாக இருக்கிறதே! தங்களுடைய திருப்பெயரை நான் கேட்டு மகிழ்ச்சியடைய வேண்டாமா?" என்றான்.

கணசுப்பன்

கணசுப்பன் தன்னுடைய பெயரைச் சொல்லாமலே "நான் ஒரு வழிப்போக்கன். திருச்சினுப்பள்ளில் இருந்து தஞ்சாவூருக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். தங்களைப் பார்த்தாலே என் உள்ளத்தில் எவ்வளவோ மகிழ்ச்சி உண்டாகிறது. காரணம் இன்னதென்று சொல்ல முடியவில்லை. தாங்கள் சிறந்த குணமுடையவர்களாகவே இருக்கவேண்டும். தாங்கள் யார் தெரியவில்லையே?" என்றான்.

தலைவெட்டி

கணசுப்பனுடைய மொழிகளைக் கேட்ட தலைவெட்டி தானும் விழிப்பாகவே தன்னுடைய பெயர் தொழில்

முதலியவைகளைச் சொல்லாமல், தானும் ஒரு வழிப் போக்கனென்றும், தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டுத் திருச்சினாப்பள்ளிக்குப் போய்க்கொண் டிருப்பதாகவுஞ் சொன்னான்.

நீராடுதல்

பிறகு இரண்டுபேரும் மிகச் சாதுக்களைப்போல ஒருவனை மற்வெருருவன் சிறிதும் கவனிக்காத மாதிரியில் நீராடல் முதலிய தங்களுடைய காரியங்களைச் செய்து முடித்தார்கள். தலைவெட்டி தன்னுடைய களிமண் கட்டுச் சோற்றை மெதுவாகச் சமயம்பார்த்து மாற்றிவிடுவதற்கு வழிதேடிக்கொண்டிருந்தான். அதேமாதிரி கணசுப்பனும் தன்னுடைய மணல் கலந்த அரிசியை ஒருவாறு நியாயமான சோற்றுக்கு மாற்றிவிடவேண்டும் என்று இலக்குப் பார்த்திருந்தான் என்பதை நாம் இங்கு எடுத்துரைக்கவும் வேண்டுமோ? இந்த இரண்டு பேருக்குள் ஒவ்வொருவனும் மற்றவனிடம் புசிப்பதற்கு இருந்த பொருளைத் தங்கள் தங்களுக்குள் அறிந்துகொண்டுவிட்டார்கள். தலைவெட்டி முதல்முதலில் தானாகவே பேசத்தொடங்கினான்.

தலைவெட்டியின் ஏமாற்றுரை

"என் வீட்டுக்காரி ஒரு கழுதை. அவளுக்கு என்ன சொன்னாலும் அறிவு என்பதுமட்டும் அடியோடு இருக்கிறதில்லை. எனக்கு இரண்டு நாட்களாக நீர்க்கோவை பிடித்திருக்கிறது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் ஈரச்சோற்றைக் கட்டிக்கொடுத்திருக்கிறாள். இதை இந்தப் பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு இப்பொழுது சாப்பிட்டால் நஞ்சு வேறு வேண்டியதில்லை. இவ்விடத்தில் அண்மையில் வேறு சிற்றூர் இருப்பதாகவுந் தெரியவில்லை. சிறிது அவல் அல்லது பொரிமாக் கிடைத்தால் அதைச் சாப்பிட்டுவிட்டு இந்தக் கட்டுச்சோற்றை வேறு யாரிடமாவது கொடுத்துவிடலாம்," என்றான்.

கனசுப்பனின் ஏமாற்றுரை

இவ்வாறு தலைவெட்டி இயம்பியதைக் கேட்கக் கேட்கக் கனசுப்பன் மனதில் உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உடனே, அவன் தலைவெட்டியைப் பார்த்து, "ஐயா! தாங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு மிகுவருத்தமாக இருக்கிறது. ஆம்; முன்னரே நீர்க் கோவையாக இருக்கும்போது ஈரச்சோற்றைப் புசிப்பது கெடுதல். மேலும் வீட்டிலிருக்கும்போது நாம் என்ன செய்தாலும் செய்யலாம். வீட்டைவிட்டு வெளியே புறப் பட்டு இவ்வாறு சுற்றித்திரிந்து கொண்டிருக்கும்போது உடல்நலத்தை மிகுந்த விழிப்புடன் பார்த்துக்கொள்ள வேண்டும். எனக்கோ இப்பொழுது பசி மிகுதியாக இருக் கிறது. ஏதாவது கிடைத்தால் போதும்போல் இருக் கிறது. என் வீட்டுக்காரியோ பச்சரிசியை இந்த ஏனத்தில் கொடுத்து வழியனுப்பி யிருக்கிருள். இனி அதைக் கொதிக்கவைத்து அது பொங்குகிற வரையில் என்னுடைய பசி தாங்காது. தங்களுக்கு உடல்நலம் இல்லை என்று தாங்கள் சொல்லுகிறபடியால், வேண்டுமானுல் தங்களுக்கு என்னுடைய அரிசியைக் கொடுக்கிறேன். அதே ஏனத் தில் சமையல்செய்து சுடச்சுடச் சாப்பிடலாம். இரண் டொரு நாழிகைதானே கூட ஆகப்போகிறது. தாங்கள் முதலிற் புசித்துவிட்டுப் பிறகு ஏதாவது பாக்கியிருந்தால் அதை எனக்குக் கொடுங்கள்; நானும் சுடச்சுட இரண்டு கவளமாவது சாப்பிட்டதாகப் பெயர் பண்ணுகிறேன்," என்ருன்.

மாற்றிக்கொள்ளுதல்

உடனே இரண்டு பேர்வழிகளும் தங்களிடமிருந்த மூட்டைச் சோற்றையும் அரிசியையும் மாற்றிக்கொள்ள உடன்பட்டார்கள். இருவரும் ஒருவரை மற்றவர் மோசஞ் செய்வதாக எண்ணிக்கொண்டு மனத்திற்குள்ளே மகிழ்ந் தார்கள். ஆனுல் முதன்முதலில் தன்னைத் தனக்குச் சரி யான ஆள் ஒருவன் மோசஞ் செய்துவிட்டான் என்பதைக் கணசுப்பன் கண்டுகொண்டு வியப்புக்கடலில் மூழ்கினுன்.

வியப்புச் சிறிது அடங்கியதும் தலைவெட்டி தானும் வஞ்சிக்கப்பட்டதை அறிந்துகொண்டானா இல்லையா என்பதைப் பார்க்கத் திரும்பினான். ஆனால் அவ்வளவு விரைவாகத் தஞ்சாவூர் எத்தன் தானும் மோசம் போனதை அறிந்துகொள்ளவில்லை. அவன் மூன்று கல்லைக் கரையோரம் வைத்து அடுப்புண்டாக்கினான். சிறிது சுள்ளிகள் பொறுக்கிவந்து அடுப்பு மூட்டினான். சமையல் ஏனம் ஒன்றேயாகையால் நிறைகண்டமாக உலை வைக்க அரிசியைக் கழுவத் தொடங்கினான். தண்ணீரில் இறங்கி ஏனத்தில் தண்ணீரை முகந்தான். தண்ணீர் மொள்ளும் விரைவால் மணல்மேலும் அரிசி கீழுமாகப் போகக்கண்டு திடுக்கிட்டான். தன்னையும் மோசஞ்செய்யக் கூடிய ஆள் ஒருவன் இந்த உலகத்திலே இருந்தானா என்று எண்ணிஎண்ணி வியந்து திகைத்தான். தானும் வஞ்சிக்கப்பட்டதில் ஐயம் சிறிதேனும் இல்லையாகையால் தான் செய்த மோசத்தையும் அதனால் திருச்சினாப்பள்ளி யான் அடைந்திருக்கும் வியப்பையும் ஒருவாறு பார்ப்பதற்காக அவனிருந்த பக்கம் தலைவெட்டி தன் கண்களைத் திருப்பினான். திரும்பிப்பார்த்த உடனே கணசுப்பன் புன்னகையுடன் ஓடிவந்து தலைவெட்டியைப் பார்த்து, "என்னைத் தாங்கள் இவ்வாறு மோசஞ் செய்யலாமா அண்ணா?" என்று கேட்டான். அதற்குப்பதில் தலைவெட்டியும் "என்னைமட்டுந் தாங்கள் இப்படி மோசஞ் செய்யலாமா?" என்று கேட்டான்.

மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர், கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முது காட்டில் காக்கை உகக்கும் பிணம்," என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். உடனே இந்த இரண்டுபேரும் ஒருவன் மற்றொரு சரிநிகர்சமான துணையாளை அடைந்ததற்காக மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். பசி, வெயில் இவைகளைக்கூடக் கவனிக்காமல் நீடித்த நேரம் அவ்விடத்திலேயே உட்கார்ந்து தங்கள் தங்கள் பெருமைகளையும் திருவிளையாடல்களையும், தன்மைகளையும்

பற்றிப் பேசத்தொடங்கினூர்கள். ஒவ்வொருவரும் ஏதோ கடவுள் செயலால் தமக்கு எல்லாவகையிலும் ஒப்பான மற்றொருவனைக் கண்டுகொண்டதற்காக மிகவும் மகிழ்ந் தார்கள். தம்மை ஒன்றுபடுத்தியதற்காகக் கடவுளைப் பாராட்டினூர்கள். இவ்வாறு ஐந்தாறு நாழிகைப்பொழுது பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு ஒருவன் மற்றொருவ னைப் பார்த்து, "நாம் இருவரும் ஒரே தொழிலாளிகள்; அத் தொழிலில் வெகு சூழ்ச்சியாக ஏராளமான பொருள் தேடியவர்கள்; நன்ருக உண்டு மகிழ்ந்தவர்கள். அத் தொழிலின் புதுமையை மற்ற இடங்களினும் காட்டுவதற் காகச் சொந்த ஊரையும்விட்டுப் புறப்பட்டவர்கள். இச் செய்தி இப்பொழுது நன்ருகத் தெரிந்துவிட்டது. ஆகை யால் நமது தொழிலிலேயே நாம் ஒருவருக்கொருவர் கெடுதி செய்துகொள்ளாமல் ஒத்து வாழ்ந்து உடன்பிறந்தவர் களைப்போல நடந்துகொள்ளவேண்டும். அதற்கு இந்தக் கணம்முதல் நாம் பிரியா நண்பர்களாகக் கூடுதல்வேண் டும். நம்முன் ஒருவனும் நிகராகமாட்டான். நமது தொழி லில் நமக்குக் கிடைக்கும் வரும்படி ஆளுக்குப் பாதி," என்ருன். அதற்கு மற்றவனும் உடன்பட்டான். அந்தக் கணம்முதல் இரண்டுபேரும் ஆருயிர் நண்பர்களானூர்கள்.

மேலும் வழி நடத்தல்

இச் சமயத்தில் கதிரவன் மறைந்தான். அவன் மறைந்தது 'இந்த எத்தர்கள் இரண்டுபேரும் ஒன்றுகூடி யிருக்கிருர்களே நம்முடைய நிலைமைக்கே ஏதேனும் தொல்லைவருமோ என்னவோ என்று அஞ்சி ஒளிந்து கொண்டதைப் போன்றிருந்தது. பொழுதுபோய்விடவே இந்த இரண்டு நண்பர்களும் ஒரு காட்டில் நுழைந்து சென்ருர்கள். காலைமுதல் ஒன்றுஞ் சாப்பிடாதவர்களா கையால் ஏதாவது ஓர் ஊரைக் கண்டுபிடித்துப் பிச்சை யாவது வாங்கவேண்டும் என்று எண்ணி மிகு விரைவாக நடந்தார்கள். இவர்கள் சென்ற வழியோ நல்ல காசாங் காடு மனித நடமாட்டம் இருப்பதாக இவர்களுக்கு வெகு நாழிகை வரையில் தோன்றவில்லை. கடைசியாக மின்

மினிப் பூச்சியைப்போல் ஒருசிறு வெளிச்சம் இவர்களுக்குத் தெரிந்தது. அதைக் குறியாகவைத்து நடந்து அக் குடிசையை அடைந்தார்கள்.

கைகாரக்கிழவி

அக் குடிசை ஒரு கிழவியினுடையது. அவளுக்கு அகவை அறுபது எழுபது இருக்கலாம். அவள் சிறு பருவத்தில் பலவகையான துன்பங்களை நுகர்ந்து இறுதியில் அக் காட்டை அடைந்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாள். இரவில் மக்கள் இயக்கமற்றதாக அந்த இடம் காணப்பட்ட போதினும் பகலில் அஃது அவ்வளவு மோசமான இடமன்று. அக்காட்டில் புல் மிகுதியாகையால் மாடு மேய்ப்பவர்கள் பலர் அவ்விடத்திற்கு மாடு மேய்க்க வருவது வழக்கம். அவர்களுக்கெல்லாம் இட்டலி தோசை முதலிய பலகாரங்கள் செய்து விற்றுக் கிழவி காசுதேடி நிலம் முதலியவைகள் வாங்கி நலத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஒரு காசுத் தோசையை மூன்று காசுக்கு விற்பாள். அந்தக் காட்டில் அவள் ஐந்துகாசு சொன்னாலும் கொடுத்துத்தான் வாங்கவேண்டும். அந்தக் காட்டில் மாட்டையும் ஆட்டையும் ஒட்டி அலைந்து திரிந்து களைத்து வருகிறவர்களுக்கு அவள் என்ன கொடுத்த போதிலும் அஃது அமுதமாகத்தான் இருக்கும். இவள் நல்ல வாணிகஞ்செய்து பொருள் தேடி வெகு பணந் தொகுத்து வைத்திருந்தாள். இத்தகைய கிழவியின் குடிசைக்கு நம்முடைய நண்பர்களாகிய எத்தர்கள் அன்றிரவு வந்துசேர்ந்து கதவைத்தட்டினார்கள்.

குடிசையில் தங்குதல்

"யார் கதவைத்தட்டுகிறது?" என்று உள்ளிருந்தபடியே கிழவி ஒருதடவை கேட்டாள், "அம்மா! நாங்கள் இரண்டு வழிப்போக்கர்கள். காட்டிற் பொழுதுபோய்விட்டது. வெகு பசியாக இருக்கிறது. என்ன கேட்டாலும் கொடுக்கிறோம். சிறிது உணவும் இரவில் தங்கிப் போவதற்குச் சிறிது இடமுங்கொடுக்கவேண்டும்," என்றார்கள். மறுபடியும் கிழவி, "யார் கதவைத்தட்டுகிறது?" என்று

கேட்டாள். இரண்டாவது தடவையும் எத்தர்கள் அதே விதமாகப் பதில் உரைத்தார்கள். மறுபடியும் மூன்ருவது தடவை கிழவி அதேவிதமாகக் கேட்டாள். எத்தர்களும் மூன்ருவது தடவை அதே மறுமொழி கூறினர்கள். இவ்வாறு மூன்றுதடவை பதில் எதிர்பார்ப்பானேன் என்று சிலர் ஐயப்படலாம். இரவில் குட்டிச்சாத்தான் முதலான பேய்கள் கதவுகளைத் தட்டி மக்களை வெளியில் அழைத்துப் போய்த் துன்பப்படுத்தும் என்பதாக ஒரு நம்பிக்கை உண்டு. ஆனல் குட்டிச்சாத்தான் என்பது உள்ளிருந்து கேள்வி கேட்கும்பொழுது மூன்று தடவையும் பதிலளிக்காது. இரண்டுதடவை கேள்விக்குப் பதில் சொல்லி விட்டு மூன்ருவது தடவையும் கேள்விகேட்டால் அதற்கு மறுமொழி கூருமலே போய்விடும். அக்காலத்தில் கதவை இடிப்பவன் மனிதன என்று தெரிந்துகொள்வதற்கு மூன்றுதடவை வீட்டுக்காரர்கள் கேள்வி கேட்பது வழக்கம். மூன்ருவது தடவை மறுமொழி வந்தால்தான் கதவைத்திறப்பார்கள். இக் கொள்கையை எண்ணியே இக் கிழவியும் இவ்வாறு செய்தாள். மூன்ருவது தடவை மறுமொழி வந்தவுடன் மிகுந்த மகிழ்ச்சியோடு கதவைத் திறந்தாள். தன்வீட்டில் இருந்த அமுதையும் தோசை இட்டலி முதலியவைகளையும் வயிறுநிரம்ப அளித்தாள். அவர்களும் பசியின் கொடுமையால் நன்ருகச் சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்த பிறகு எத்தர்கள் இருவரும் தாங்கள் வழிப்போக்கர்கள் என்றும் ஏதாவது தொழில் செய்து பிழைப்பதற்காக ஊரைவிட்டுப் புறப்பட்டிருப்பதாகவும் சொன்னர்கள். கிழவிக்குத் தெரிந்த மட்டும் எங்கேயாவது வேலை கிடைக்குமா என்று கேட்டார்கள். தங்களால் கூடியமட்டும் தங்களுடைய ஆற்றலுக்குத் தக்கபடி அச்சமயத்தில் அவ்வளவு அன்பாகத் தங்களுக்கு உணவளித்ததற்காக அவளைப் பாராட்டிப் போற்றினர்கள்.

கிழவி வேலை சொல்லுதல்

எத்தர்கள் இயம்பியதைக் கிழவி கேட்டாள். மிகுந்த களிப்படைந்தவளாகக் காட்டிக்கொண்டு இவர்களைப்

பார்த்து, "அப்பா! உங்களைப் பார்த்தால் என்னுடைய குழந்தைகளைப் பார்த்தாற்போல் இருக்கிறது. நீங்களோ இளைஞர்கள். எனக்குப் பல பிள்ளைகள் பிறந்து இறந்து போய் விட்டார்கள். இப்பொழுது எனக்கு ஒருகதியும் இல்லை. உங்களுக்குத் தடையில்லாத வரையில் என்விட்டிலேயே என் குழந்தைகளைப்போல நீங்கள் இருக்கலாம். சாகும்போது யார் எதை வாரிக்கொண்டு போகப்போகிறார்கள்? ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு வயிறுகுளிர நன்றாகச் சோறுபோடுவேன். நீங்கள் என்னுடைய குழந்தைகள் அல்லவா? நீங்கள் உங்களுடைய தாயாருக்குச் செய்யவேண்டியது இரண்டுண்டு. என்னிடத்தில் குள்ளி என்று ஒரு பசுமாடு இருக்கிறது. அதை ஒருவன் ஓட்டிக் கொண்டுபோய் மேய்த்துவரவேண்டும். அதன் பெயரோ குள்ளி. வெகு அடக்கமான மாடு. வெகுசாது; கூப்பிட்டால் பின்னாலேயே வந்துகொண்டிருக்கும். இந்தக் குடிசைக்கு அரை நாழிகை வழித் தொலையில் ஒரு குளமும் நாவல் மரமும் இருக்கின்றன. அங்குதான் முழங்கால் உயரம் புல் வளர்ந்திருக்கிறது. அங்குக் காலையிலே ஓட்டிக் கொண்டு போய்த் தும்பை அவிழ்த்துவிட்டால் அது தெய்வமே என்று மேய்ந்துகொண்டிருக்கும். அப்பொழுது மாட்டை ஓட்டிக்கொண்டு போனவன் நாவல் மரத்தில்ஏறி வேண்டியமட்டும் பழங்களைப் புசிக்கலாம். குளத்தோரத்தில் உள்ள மரத்துநிழலில் நண்பகல் முழுவதும் குளிர்ந்த காற்றில் தூங்கலாம். இஃது ஒருவன் செய்யவேண்டிய வேலை. மற்றொருவன் என்கொல்லையில் 4, 5 சிறிய கீரைப் பாத்திகள் இருக்கின்றன. இவைகளுக்குத் தண்ணீர் ஒரு சிறு கிணற்றில் இருந்து மொண்டு ஊற்றவேண்டும். பாத்தி நிரம்பத் தண்ணீர் பாய்ச்சினால்தான் வயிறு நிரம்பக் கீரையும் குழம்புஞ் சாப்பிடலாம். மாட்டை ஓட்டி வந்து மாலையில் கட்டினால்தான் தயிர், மோர், நெய் ஆகிய வைகளை நன்கு சாப்பிடலாம். உங்களிருவர்களில் ஒருவன் மாட்டைக் காலையில் ஓட்டிக்கொண்டு போகலாம். மற்றொருவன் கீரைப்பாத்திகளுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம். இஃது உங்களுக்குப் பிடித்தால் நீங்கள் இங்கேயே இருக்க

லாம். எனக்கோ அகவை எழுபது எழுபத்திரண்டுக்கு மேல் ஆய்விட்டது. இன்னும் ஓராண்டு இருப்பேனே அல்லது அதுகூட இல்லையோ? 'ஆண்டு அறுபதுக்கு மேல் அறிவும் தடுமாறும்' என்பது பழமொழி. என்ன உறுதி? என்ன நிலைவாழ்வு? இருந்தமட்டும் இருக்கிறது. என்கையில் என்ன இருக்குமோ அஃது உங்களுடையது தான். என்ன உடன்பாடா?'' என்று கேட்டாள்.

எத்தர்கள் உடன்பாடு

இவ்வாறு கிழவி இவ்வளவு விருப்பத்துடனும் பற்றுதலுடனும் சொன்னால் யாருக்குத்தான் மறுத்துக் கூறுவதற்கு மனம்வரும்? மேலும் எத்தர்களோ அன்றெல்லாம் துன்பப்பட்டவர்கள். இரண்டொரு நாளாவது இருந்து பாட்டியின் பணத்தை அடித்துக்கொண்டு போகாமல் அந்தக் காட்டைவிட்டுப் புறப்படுகிறவர்கள் அல்லர். அவள் இடுவதாகச் சொன்ன தொழில்களோ மிக எளியவை! அடக்கமான ஒரு பசுமாட்டை மேய்ப்பதும், நான்கு கீரைப்பாத்திகளுக்குத் தண்ணீர் எடுத்து ஊற்றுவதும் என்ன தொல்லை? ஆகவே அவர்கள் இருவரும், "அப்படியே ஆகட்டும் அம்மா. உன்னுடைய கட்டளையை மீறி நாங்கள் நடக்கப்போகிறதில்லை,'' என்றார்கள். கிழவி மிகுந்த களிப்படைந்தாள். மேலும் அவர்களுடைய பசிக்கு அரைப்படி சுண்டல் கொடுத்தாள். வெகு நாழிகை வரையில் பேசிக்கொண்டிருந்தாள். 'தங்களுடைய நல்வினையினால் தங்களுக்கு ஒரு பைத்தியக்காரக் கிழவி அகப்பட்டாள்' என்று எண்ணிக் களிப்படைந்தார்கள் எத்தர்கள். நடந்த வருத்தமும் உண்ட வருத்தமும் அவர்களுக்கு அதிகப்படவே மெய்ம்மறந்து நன்றாகத் தூங்கினார்கள்.

கணசுப்பன் மாடுமேய்க்கப் போதல்

மறுநாள் பொழுது விடிந்தது. எத்தர்கள் இருவரும் பல் விளக்கிக்கொண்டு வந்தார்கள். கிழவி அவர்களுக்கு வயிறு நிரம்பப் பழைய உணவு போட்டாள். அன்றிரவு நன்றாகச் சமையல்செய்து முதல்தரமான உணவு அளிப்பதாகவும் சொன்னாள். நடுப்பகலில் குளக்கரையில் சாப்பிடு

வதற்குக் கணசுப்பனுக்குக் கனத்த மூட்டை ஒன்றையுங் கையில் கட்டிக்கொடுத்தாள். அவன் இரண்டு வேளைச் சாப்பாட்டிலும் பாட்டி பேச்சிலும் உள்ளம் பூரித்துப் போனான். குள்ளியைக் கட்டவிழ்த்துக் கையிற் பற்றிக் கொண்டு குடிசையைவிட்டுப் புறப்பட்டான். தலைவெட்டியோ கிரைப்பாத்திகளுக்குத் தண்ணீர் இறைப்பதற்காகக் குடிசையிலேயே தங்கினான்.

குள்ளியைக் கணசுப்பன் ஓட்டிக்கொண்டு போன போது அது மிகுசாதுவாகத்தான் இருந்தது. நமது நாட்டுப் பசுமாடுகளே பெரும்பாலும் சாதுக்கள்தாம். ஆனால் அவைகளிலும் சில கொண்டிகள் இருக்கின்றன அன்றோ? அவ்வாறு ஏன் குள்ளியும் இருக்கக்கூடாது? கிழவி மோசஞ்செய்ய இப்படிப் பேசலாம் என்று அவள் சொல்லும்போது கணசுப்பன் எண்ணியிருக்கக்கூடும். அப்படித் தான் கொண்ட எண்ணம் பொய்யென்பதைத் தான் ஓட்டிக்கொண்டு போகும்போது தெரிந்துகொண்டான். ‘நம்முடைய இடத்தில் நல்வினை இருக்கிறது. இல்லாமலா கிழவியைக் கண்டோம்’ என்று அவன் எண்ணிக்கொண்டான். அவனுக்கு மகிழ்ச்சி மிக அதிகமாக இருந்தது. கிழவி கூறியபடி குளத்தங்கரையை அடைந்தான்.

கணசுப்பன் எண்ணம்

அவ்விடம் போனதும் தும்பைத்தெறித்து மாட்டைப் புல்லில் ஓட்டினான். அப்பொழுதும் அது அடக்கமாகத் தான் இருந்தது. நாலைந்து வாய்ப்புல்லை மேய்ந்தது. ‘நல்லது இனி நாம் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்வோம். நேற்றிரவு பாட்டியுடன் வெகுநாழிகை பேசினோம் போதுமான தூக்கம் தூங்கவில்லை. நாவல் மரத்தடியில் படுப்போம்’ என்று கணசுப்பன் கணப்போது எண்ணினான்.

குள்ளியின் ஓட்டம்

ஆனால் இவனுடைய எண்ணங்கள்யாவும் ஒரு கணப் போதில் பொய்யாகப் போய்விட்டன. பசுவானது நான்கு

வாய்ப்புல்லை மேய்ந்துவிட்டுப் பறக்கத்தொடங்கியது. என்ன செய்வான் கணசுப்பன்? மாடு ஓடிவிட்டாலோ மாலையிற் சுடுசோறு கிடைக்காது. சுடுசோற்றுக்குப் போவானேன்? பிறகு கிழவியின் வீட்டுப்பக்கமே அடி யெடுத்து வைக்கவேண்டியது இல்லை. ஆகவே கண சுப்பன் தானுங் குடல்தெறிக்க ஓடினன். அந்த மாட்டின் ஓட்டத்தை இவனுற் பிடிக்க முடியவில்லை. அது கட் டவிழ்த்துவிட்டு எத்தனை நாளாயிற்ருே அல்லது திங்கள் களாயிற்ருே? இவன் வெகு தொலை தன்பின்னுலேயே ஓடி வருவதை மாடு கண்டால் தன் ஓட்டத்தை நிறுத்தி விட்டுப் புல்மேயும். அண்மையில் நெருங்கிவிட்டான் என் ருலோ மீண்டும் ஓடத்தொடங்கிவிடும். "ஐயோ பாவம். மாடு சாதுவானதுதான். எதையோ கண்டு வெருண்டு ஓடுகிறது. இது பொல்லாத மாடு அன்று" என்று சொல்லிக்கொண்டும் "வாவாவா" என்று சொல்லிக் கொண்டும் கணசுப்பன் கிட்டே நெருங்குவான். அந்தப் பொல்லாத மாடு இவன் கை அதன்கழுத்தில் படுகிற வரையில் சாதுபோல் நிற்கும். பிறகு ஓடத்தொடங்கி விடும். இவ்வாறு காலைமுதல் மாலைவரையில் கணசுப்பன் மாட்டிற்குப் பின்னுல் ஓடி அலுத்துப்போய்விட்டான். மாலை யில் மாட்டுக்குப் பருத்திக்கொட்டை தவிடு புண்ணுக்கு முதலியவற்றின் நினைப்பு வந்துவிட்டது. ஆகவே அது கணசுப்பனுடைய கைக்கு அகப்பட்டுவிட்டது.

கணசுப்பன் எண்ணம்

மாடு கைக்கு அகப்பட்டதும் திருச்சினுப்பள்ளி எத்தன், 'இனி என் வாழ்நாளில் உன்னை மேய்ப்பதற்கு ஓட்டிக்கொண்டு வரப்போகிறதில்லை. உன்னைத் தலை வெட்டியிடம் தள்ளிவிடுகிறேன். அவன் செய்யும் வேலையை நான் செய்கிறேன். என்ன வெட்கக்கேடு! நான்கு கீரைப் பாத்திகளுக்குத் தண்ணீர் இறைப்பதற்கு எத்தனை நாழிகை செல்லப்போகிறது?' என்று தனக்குத்தானே மாட்டைப்பார்த்து நினைத்துக்கொண்டான். மாட்டை மரத்தில் கட்டிவிட்டுத் தான்பட்ட தொல்லை வெளியாகா

மல் கைகால்களை நன்ருய்க் கழுவிக்கொண்டு கையில் இருந்த சிறிது உணவைப் புசித்து நீர் அருந்தினன் களிப்புடன் இருப்பவனைப்போல் நடித்துக்கொண்டு மாட்டைக் குடிசையை நோக்கி ஒட்டிக்கொண்டு புறப்பட்டான்.

தலைவெட்டியின் செய்தி

இதனிடையில் நாம் தஞ்சாவூர் எத்தனை தலைவெட்டியைப்பற்றிச் சிறிது உசாவுவோம். அவன் நீர்பாய்ச்ச வேண்டிய பாத்திகள் நான்கைந்துதான். இஃதென்ன அரைநாழிகை வேலை என்று எண்ணிக் கையேற்றத்தைப் பிடித்துத் தண்ணீர் இறைக்கத்தொடங்கினன். பகல் பதினைந்து நாழிகை ஆகியும் இரண்டு பாத்திகள் கூட நிரம்பவில்லை. எத்தனுடைய கைகள் சிவந்து போயின. அவனுக்குக் களைப்பு மிகுதியாகிவிட்டது. மறுபடியும் முயன்று முயன்று விரைவாகத் தண்ணீரை மொண்டு இறைத்தான். அந்த நான்கைந்து பாத்திகளிலும் நீர் நின்றது. ஆனல் கால்அங்குல உயரங்கூட ஒவ்வொரு பாத்தியிலும் நீர் நிரம்பவில்லை. 'இஃதென்ன புதுமை! என்ன காரணம்' என்று தன்னுல் கூடியமட்டும் ஆராய்ந்து பார்த்தான். ஒன்றும் இவனுக்குப் புலப்படவில்லை.

கிழவியின் சூது

இஃது அந்தப் பொல்லாத கிழவியின் சூழ்ச்சி வேலை. அவள் இந்தப் பாத்திகளின்கீழ் ஒருவருக்குந் தெரியாதபடி ஒரு சுரங்கம் வைத்து உட்போக்காகத் தண்ணீரை ஓடச்செய்து, அவளுடைய வீட்டிற்கு அரைநாழிகை வழிக்கு அப்பாலிருந்து நாற்பதுகாணி நிலத்தை நீர் நிரம்பச் செய்துவந்துகொண்டிருக்கிருள். இச் செய்தி தலைவெட்டிக்கே புலப்படவில்லையென்ருல் இவள் எவ்வளவு சூழ்ச்சியாக இந்தக் கள்ளவழியை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதை நம் நண்பர்கள் ஊகித்துப் பார்த்துக் கொள்ளலாம். இவள் இந்த இரண்டு எத்தர்களையும் விடக் கெட்டிக்காரி என்பதற்கு ஐயம் என்ன ? பொழுது

போவதற்கு நான்கு நாழிகை இருக்கும்போது கிழவி தன்னுடைய தோட்டத்திற்கு வந்தாள். "போதும் குழந்தாய்! வெகுநேரம் வேலைசெய்துவிட்டாய். இனிமேல் நாளைக்கு இறைத்துக்கொள்ளலாம். இன்றைக்கு இவ்வளவோடு நிறுத்திவிட்டு வா" என்று சொன்னாள்.

தலைவெட்டியின் போக்கு

தலைவெட்டியும் 'இவ்வளவாவது அருளுடன் சொன்னாளே!' என்று களிப்படைந்தான். வேலையை நிறுத்திவிட்டுக் கைகால்களைக் கழுவிக்கொண்டான். திண்ணையில் உட்கார்ந்து பாக்கு வெற்றிலை போட்டுக்கொண்டான். அப்பொழுது அவன் நினைத்ததாவது; 'நாம் சிறிது ஏமாந்துபோனோம். நாம்பாட்டுக்கு மாட்டை ஓட்டிக்கொண்டு போயிருக்கலாம். அவ்வாறு ஓட்டிக்கொண்டு போகாமல் தண்ணீர் இறைக்கத் தொடங்கியது தவறு. இருக்கட்டும் நாளைக்கு அவனைத் தண்ணீர் இறைக்கச் செய்துவிட்டு நாம் மாட்டை ஓட்டிக்கொண்டுபோய் விடுவோம்.' இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டு நகைமுகத்துடன் இருந்தான். எத்தர்கள் நகைமுகத்தோடு இருந்தால்தானே எத்திப் பிழைக்கலாம்? இந்தச் சமயத்தில் திருச்சினுப்பள்ளி எத்தன் மாட்டை ஓட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

இருவரும் உரையாடுதல்

திருச்சினுப்பள்ளி எத்தனைக் கண்டதும் தலைவெட்டி, "என்ன அண்ணா! இன்றையபொழுது எப்படிப் போயிற்று?" என்று வினவினான். அதற்குக் கணசுப்பன், "அடே அப்பா! அந்தச் செய்தியை ஏன் கேட்கிறாய்? அக் குளம் உண்டே அஃது எத்தகைய அருமையான இடத்தில் அமைந்திருக்கிறது தெரியுமா? குளுகுளு என்று நல்ல தென்றல் வீசுகிறது. நாவல் பழமோ ஒவ்வொன்று கோழிமுட்டை மாதிரி பெரியது பெரியதாக இருக்கிறது! மாட்டைக் கொண்டுபோய்க் காலமே அவிழ்த்துவிட்டேன். அது தெய்வமே என்று தனக்குத் தானே மேய்ந்துகொண்டிருந்தது. சுகமாக நான் தூங்கிக்

கொண்டிருந்தேன். சிலவேளை பழங்களைப் பறித்துத் தின்றேன். பாட்டி கொடுத்த சாப்பாட்டையும் சாப்பிட்டேன். அந்தக் குளக்கரையும் தென்றலும் சாப்பாடும் எவ்வளவு இனிமையாக இருந்தது தெரியுமா? இன்று விழித்த முகத்தில் தினமும் விழிக்கவேண்டும் அண்ணா! குள்ளிதான் கைக்குழந்தையா, என்ன சாது! என்ன சாது! நானும் எவ்வளவோ மாடுகளைப் பார்த்திருக்கிறேன். குள்ளியைப்போல் சாதுவான மாட்டை நான் உண்மையாகக் கண்டதில்லை. நல்லது; உன்னுடைய செய்தி என்ன சொல்," என்றான்.

தலைவெட்டியின் பெரும்பொய்

அதற்குத் தலைவெட்டி, "அதென்னடா! நீயாவது குளம் வரையில் நடந்துபோய் வந்தாய். நான் கொல்லையில் போய்க் கையேற்றத்தைப் பிடித்து இரண்டு சால் ஊற்றினேன். பாத்தி அவ்வளவும் நிறைந்துபோய்விட்டது. பாத்தியாவது பாத்தி! ஒவ்வொன்றும் உள்ளங்கை அவ்வளவு இருக்கும். அரைநாழிகை வேலை என்னுடைய வேலை. அப்புறம் நன்றாகத் தூங்கினேன். பாட்டி இரண்டு மூன்று தோசைகள் கொடுத்தாள். தின்றேன். ஒருவேலையும் இன்றி வெற்றிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். வா; உட்கார். நீயும் இரண்டு வெற்றிலைபோட்டுக்கொள்," என்றான்.

உண்டுகளித்து உறங்குதல்

குள்ளியைத் தோட்டத்தில் கட்டினார்கள். இருட்டு கிறவரையில் திண்ணையில் உட்கார்ந்து இருவரும் கதை பேசிக்கொண்டு இருந்தார்கள். கிழவி காலையிற் சொன்னபடி இவர்களுக்கு முதல்தரமான சமையல்செய்து வயிறு நிறைய உணவளித்தாள். ஒவ்வொருவனுக்கும் தான் தனிமையில் தன் வேலையில் பட்ட தொல்லை மிகுதியாக இருந்தபடியால் மற்றவன் சொன்னசொல் பொய்யாக இருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்ப்பதற்கு நேரமே இல்லாமல் போய்விட்டது. மறுநாள் தங்கள் வேலையை

மாற்றிக்கொள்ளுவதாக ஏற்பாடு செய்துகொண்டார்கள். அடுத்த நாள் வேலை எளிதாக இருக்கும் என்னும் எண்ணத்தின் களிப்பினுலேயே முதல்நாள் பட்ட தொல்லை அவ்வளவையும் மறந்துவிட்டு நன்ருக உறங்கினுர்கள்.

ஏமாற்றம்

மறுநாள் பொழுது விடிந்தது. வழக்கப்படி கிழவி இவர்களுக்குப் பழையதுபோட்டு வேலைக்குப் போகச் சொன்னுள். தலைவெட்டி, மாட்டின்பின் காட்டிற்குச் சென்ருன். கணசுப்பன் ஏற்றத்திடம் சென்ருன். ஒவ்வொருவரும் தங்கள் தொழிலிற் புகுந்தவுடனே தங்கள் தங்கள் ஏமாற்றத்தைக் கண்டுகொண்டார்கள். மாலையில் மறுபடி இருவரும் ஒன்று கூடியபோது, தலைவெட்டி கணசுப்பனைப்பார்த்து, "என்ன அண்ணு! என்னை நீ இப்படி மோசஞ்செய்யலாமா?" என்ருன். அதற்குப்பதில் கணசுப்பனும், "என்ன அண்ணு! என்னை நீ இப்படி மோசஞ் செய்யலாமா?" என்ருன்.

எத்தர்கள் முடிபு

அப்புறம் இரண்டு எத்தர்களும் 'தாங்கள் ஒருவரை ஒருவர் மோசஞ்செய்து கொள்ளக்கூடாது. எப்பொழுதும் உண்மையாகவும் ஒற்றுமையாகவும் நடக்கவேண்டும்' என்றும், 'தங்கள் இருவரையும் மோசஞ்செய்த கிழவியை எப்படியாவது மோசஞ்செய்து அவள் வைத்திருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட வேண்டும்' என்றும் மறைமுகமாகப் பேசித் தங்களுக்குள் முடிவுசெய்து கொண்டார்கள்.

எண்ணத்தைக் கிழவி அறிதல்

எத்தர்களுக்குள் நடந்த உரையாடலைக் கிழவி ஒற்றுக்கேட்டாள். 'நல்லது நீங்கள் அவ்வளவு குணசாலிகளா? எனக்குள் நானும் ஏற்பாடு செய்துகொள்ளுகிறேன்,' என்று தனக்குள் தானே எண்ணமிட்டுக் கொண்டாள்.

கிழவியின் எத்து

கிழவியோ பழங்கிழவி. இந்த இரண்டு எத்தர்களையும் தவிர இன்னும்பல எத்தர்கள் வந்தபோதினும் அவரவர்களுக்குத் தகுந்த பேச்சைப்பேசி வஞ்சிக்கக் கூடியவள். மறுநாள் பொழுதுவிடிந்ததும், மற்றைநாட்களைக் காட்டிலும் மிகுந்த அன்பை எத்தர்களிடம் காட்டினாள். அவர்களைப்பார்த்து, "எனக்குப் பிற்காலம் என்னுடைய பொருளெல்லாம் உங்களுக்குச் சேரவேண்டியதுதானே. உங்களுக்காக நான் எவ்வளவு பொருள் தேடிவைத்திருக்கிறேன் பாருங்கள்," என்று சொல்லி எத்தர்களைத் தன்னுடைய பொருள் அறைக்கு அழைத்துக்கொண்டு சென்றாள். தனது பெரிய மரப்பெட்டியைத் திறந்தாள். அந்தப் பெட்டி நான்கடி நீளமும் மூன்றடி அகலமும் உள்ளதாகவும் நான்குபக்கமும் கெட்டியான பட்டையடிக்கப்பெற்றதாகவும் பழங்கால முறைப்படி செய்ததாகவும் இருந்தது. அதில் ஒருபக்கத்தில் மொகராக்களும் பவுன்களும் மற்றொரு பக்கத்தில் ரூபாய்களும் காசுகளுமாக வைக்கப் பட்டிருந்தன. திட்டமாக இருபதினாயிரரூபா இருக்கலாம்.

எத்தர்கள் பணிவு

இவ்வளவு பணத்தைக் கிழவி காட்டினவுடனே 'எப்பொழுதாவது இலக்குப்பார்த்து இவளை மோசஞ்செய்து கொண்டுபோக' எண்ணியிருந்த எத்தர்கள் இவளிட்ட வேலை எவ்வளவுதான் வருத்தமாக இருந்தபோதிலும் கிழவியின் மனதை முற்றிலும் கவரக் கருதி முன்னரைவிடப் பத்துமடங்கு அன்புடனும் பணிவுடனும் வேலைசெய்து வந்தார்கள். கிழவி எத்தர்களிடம் நன்றாக வஞ்சித்து வேலை வாங்கினபோதிலும் உணவுக்கு மட்டும் எத்தகைய குறைவும் இல்லாமல் நன்றாக இட்டு வந்தாள். தன் சொந்தப்பிள்ளைகளைப் போலவே பாராட்டிவந்தாள். இவ்வாறு பத்துப்பதினைந்து நாட்கள் சென்றன.

கிழவியின் சூழ்ச்சி

ஒருநாள் பகல் பதினைந்து நாழிகைக்குக் கிழவி எத்தர்கள் இருவரும் வேலைக்குப்போயிருக்குஞ் சமயம்

பார்த்து, தன்னுடைய காசு பணங்கள் அவ்வளவையும் பெட்டியைவிட்டு அப்புறப்படுத்தி ஓரிடத்தில் புதைத்து விட்டாள். அதற்குப்பதிலாக உடைசல்களான கற்களை யும் கனத்த ஏனங்களையும்போட்டு எப்பொழுதும்போல் பெட்டியைப் பூட்டிவைத்திருந்தாள். அப்புறம் ஒருநாள் மாலையில் சாப்பிட உட்காருமுன் எத்தர்களைப்பார்த்து, "என்னுடைய குழந்தைகாள்! என்னுடன் உங்கள் வாழ் நாட்களைக்கழிக்க நீங்கள் உறுதி செய்துவிட்டபடியால், சிறிது சிறிதாக என்னுடைய நடவடிக்கைகளெல்லாம் உங்களுக்குத் தெரியவரும். நான் சுக்கிலபட்சம் முடிய என் பொருள்களை வீட்டில் பெட்டியில் வைத்து வைப்பது பழக்கம். கிருட்டிணபட்சத்திலோ இந்தக் காட்டிற் சிற்சில வேளைகளில் கள்ளர்கள் வருவார்கள். அதற்காகப் பெட் டியைக் கிணற்றில் போட்டுவைப்பேன். நேற்றிரவெல் லாம் நாய் குலைத்தது. கள்ளர்கள் இந்த வழியாகச் சென் ருர்கள்போல் தெரிகிறது. ஆகையால் சாப்பிடுவதற்கு உட்காருவதற்கு முன், நானும் ஒருகை பிடிக்கிறேன். நீங்கள் இருவரும் ஒலியுண்டாகாமல் நம்முடைய பெட்டியைத் தூக்கி ஒரு கயிறுகட்டித் தண்ணீரில் மெதுவாக இறக்கி விடவேண்டும் என்ருள்.

எத்தர்கள் முடிவு

எத்தர்களும் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டார் கள். பெட்டியை மெதுவாக வெகு தொல்லைப்பட்டுத் தூக்கிக் கிழவி உதவியுடன் கிணற்றில் ஒலியுண்டா காமல் போட்டுவிட்டார்கள். அவர்கள் பெட்டியில் பணந் தான் இருக்கிறது என்று நம்பினுர்களே தவிர வேறு எதுவும் இருக்கும் என்று சிறிதும் எண்ணவே இல்லை. அவ்வாறு எண்ணும்படியான அளவுக்கு அவர்களுடைய மூளை வேலைசெய்யவும் இல்லை. ஏனெனில் அவர்கள் முன் பார்த்தாற்போன்ற அதே பூட்டு, அதே பெட்டி முதலிய அடையாளங்களால் முற்றிலும் நம்பிவிட்டார்கள். பிறகு நன்ருகச் சாப்பிட்டுவிட்டு உறங்கினுர்கள். 'இனிமேல் ஆகவேண்டியது யாதிருக்கிறது? பெட்டியை எப்படியா

வது அடித்துக்கொண்டு ஓடிவிட்டால் கிழவியை மோசம் பண்ணினதற்கு ஐயமும் உண்டோ' என்று எண்ணி விட்டார்கள்.

எத்தர்கள் பெட்டியைத் தூக்குதல்

மறுநாள் பகலில் வீட்டில் இருந்த தலைவெட்டி வெகு கெட்டிக்காரத்தனமாய் கிழவிக்குத் தெரியாமல், அவள் திறவுகோல் வைத்திருந்த இடத்தைப்பார்த்து அதனை எடுத்துக் கைவசப்படுத்திக்கொண்டான். அன்றிரவு கணசுப்பன் மாட்டை ஓட்டிக்கொண்டு வந்ததும், அன்று இரவே பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார்கள். ஆனால் இவர்கட்கு உறக்கம் எவ்வாறு வரும்? மறைமுகமாக நள்ளிரவில் இரண்டுபேரும் கிணற்றின் கரைக்குச் சென்றார்கள். கணசுப்பன் கிணற்றின்மேலே நின்று கயிற்றைத் தன்னுடைய கையில் பிடித்துக்கொண்டான். தலைவெட்டி மெதுவாகக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் இறங்கினான். இறங்குவதற்குமுன் "பெட்டி மிகு கனமாக இருக்கும். நான் பெட்டியைத் தூக்கி அடியில் முண்டுகிறேன். அப்போது கயிற்றைப்பிடித்து அசைக்கிறேன், நீ மேலே பெட்டியைத் தூக்கிவிடு," என்று சொல்லிவிட்டு இறங்கினான். தண்ணீரில் மூழ்கினதும் ஒரே முழுக்கில் பெட்டியின் பூட்டைத் திறந்துபார்த்தான். கிழவி செய்த மோசம் நன்றாகத் தெரிந்தது. மூச்சுவிடுவதற்குத் தண்ணிருக்கு மேலே வந்தான். ஆனால் உள்ள செய்தியைத் தன்னுடைய நண்பனிடம் சொல்லவில்லை. ஒருவர்மேல் ஒருவருக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கும்போது எவ்வாறு சொல்லமுடியும்? வெளியே வந்த தலைவெட்டி கணசுப்பனைப் பார்த்து, "அண்ணே! பெட்டி வெகுகனமாக இருக்கிறது; விரைவாகக் கொண்டுவருகிறேன். ஒருமுழுக்கில் பாதிதான் தண்ணீரில் எழும்பிற்று. கயிற்றைக் கெட்டியாகப் பிடி," என்று சொல்லி மறுபடியும் முழுகினான். பெட்டியைத் தலைகீழாகத் திருப்பி அதிலிருந்த கற்களையும் ஏனங்

களையும் கொட்டிவிட்டான். பெட்டி தண்ணீருக்குமேலே வந்துவிட்டது. அதனுடைய கனம் குறைந்ததாகக் காட்டாமலிருக்கத் தலைவெட்டி அதன்மேலே உட்கார்ந்து கொண்டு, "அண்ணு! நம்முடைய வறுமை இன்றோடு ஒழிந்தது. நான் முன்னமே சொன்னபடி பெட்டியின் கீழே போய் ஒரு முண்டு முண்டுவேன். அதற்கு அடையாளமாகக் கயிற்றையும் ஆட்டுவேன். அப்பொழுது நீ பெட்டியை மிகு விழிப்புடன் மேலே தூக்கு. பெட்டியின் கயிறு அறுந்து விழுந்தால் எனக்குக் கபாலமோட்சம் நேர்ந்துவிடும். ஆகவே கருத்துடன் இரு," என்று சொல்லிவிட்டுத் தண்ணீருக்குள் போவதற்குப் பதிலாகப் பெட்டியை ஒலி செய்யாமல் திறந்தான். பெட்டியைத் தூக்கின பிறகு தன்னைக் கயிறுவிட்டுத் தூக்குவானோ மாட்டானோ என்ற ஐயம் தலைவெட்டிக்குத் தோன்றியபடியால், பெட்டிக்குள் தானே உட்கார்ந்து பெட்டியை நன்றாக மூடிக்கொண்டு கயிற்றை அசைத்தான்.

கணசுப்பன் ஓட்டம்

'ஆம் பெட்டி வெகு கனமாக இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டான். அதை மெதுவாக இழுத்துக் கரை சேர்த்ததும் ஒரே தூக்காகத் தூக்கித் தன் தலைமேல் வைத்துக்கொண்டு, 'தலைவெட்டி எங்கே பங்கு கேட்க வந்து விடுவானோ' என்னும் அச்சத்தால் கணசுப்பன் ஒரே ஓட்டமாக ஓடினான். தலைவெட்டி அந்தப் பெட்டியில் இருந்தது இவனுக்குச் சிறிதேனும் தெரியாது. ஐயப்படுவதற்கு எள்ளளவுகூட இடமில்லை.

தலைவெட்டியின் எண்ணம்

அவ்வாறு தன்னைத் தூக்கிக்கொண்டு பணம் எடுத்துப் போகிறோம் என்னும் அவாவினால் கணசுப்பன் ஓடும்போதெல்லாம் பெட்டியில் தங்கியிருந்த தலைவெட்டி தனக்குள்ளேயே, 'நான் நல்ல முடிவுசெய்து இந்தப் பெட்டியிற் புகுந்திராவிட்டால் என் கதி என்னவாயிருக்கும்? காலையிலே கிழவி வந்து கிணற்றுக்குள் என்னைப்

பார்த்தால் என்ன நினைத்துக் கொள்ளுவாள்? அப்புறம் நான் நல்லவன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு வாய் ஏது? இப்பொழுதோ காலால் நடப்பதற்குப் பதிலாக மற்றொருவன் தலையில் சென்று கொண்டிருக்கிறேன். இன்றை இரவு எனக்கு நரவாகனம் (மனித வாகனம்) கிடைத்திருக்கிறது. நடந்த மட்டும் நடக்கட்டும்,' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

கணசுப்பன் ஓட்டம்

கணசுப்பன் 'எங்கு தலைவெட்டி ஓடிவந்து தன் பங்கைக் கேட்கப் போகிறானோ' என்னும் அச்சத்தால் பத்துநாழிகை வழித்தொலைவைப் பொழுதுவிடியுமுன் நடந்துவிட்டான். பொழுது விடியுஞ் சமயத்தில் திரும்பிப் பார்த்தான். யாரோ ஓர் ஆள் தன்னைத் தொடர்ந்து வருவதுபோல் கணசுப்பனுக்கு ஒரு தோற்றம் காணப் பட்டது. நின்று நன்ருகப் பார்த்தான். அந்தக் காட்டிலே ஆள் ஏது? எல்லாம் இவனுடைய மனமயக்கந் தான். இவ்வாறு மனமயக்கத்தால் பொய்த்தோற்றம் உண்டான உடனே தொலைவைப் பார்க்காமல் மேலும் விரைவாக ஓடினுன். ஓடும்போது, "வந்துவிட்டானே சண்டாளன். தன்னுடைய பங்கைக் கேட்கப்போகிருனே," என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே ஓடினுன்.

இவன் இவ்வாறு இயம்பியதும் தலைவெட்டிக்கு நகைப்புப் பொறுக்கமுடியவில்லை. "ஏன் அண்ணு இவ்வளவு விரைவு! சிறிது மெதுவாகப் போ," என்று தலையின் மேல் இருந்தபடியே சொன்னுன். பேச்சொலி மட்டும் கணீர் என்று காதில் விழுந்தும் ஆளைக்காணவில்லை. கணசுப்பன் சுற்றிப் பார்த்தான். அப்பொழுதுகூடத் தலைமேல் இருக்கும் பெட்டியில் இருப்பான் என்று ஐயமுறுவதற்கு அவனுக்கு அறிவு தோன்றவில்லை. பாட்டியின் மொகராவும் பவுனும் பெட்டியில் இருப்பதாகவும் அதை முற்றிலும் தான் எடுத்துக்கொண்டு தலைவெட்டிக்குத் தெரியாமல் ஓடிப்போகவேண்டும் என்னும் எண்ணமுந்தான் மேலிட்

டிருந்தது. 'என்னவோ ஏதோ எங்கேயாவது ஒரு செடியின் கீழ் வெவியே இருப்பதற்கு உட்கார்ந்திருப்பான். எப்படியாவது தப்பி ஓடிவிடவேண்டும்' என்று கணசுப்பன் மறுபடியும் விரைவாக ஓடினன். அவ்வாறு அவன் இரட்டிப்பு விரைவுடன் ஓடும்போது தலைவெட்டி தன்னுடைய நகைப்பை அடக்கமுடியாதவனாக, "என்ன அண்ணு இப்படி ஓடுகிருய்? வயிற்றை வலிக்கிறதே. நில்லு அண்ணு! பெட்டியைக் கீழே இறக்கு அண்ணு!" என்ருன். உடனே கணசுப்பன் கீழே வைத்துத் திறந்து பார்த்தான். அதற்குள்ளே தலைவெட்டி குண்டுக் கானைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தான். தான் இதுவரையில் கிணற்றுக்குள் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பதாக நினைத்த தலைவெட்டி தன் தலையின்மீதே சவாரி செய்து கொண்டு வந்ததைக் கணசுப்பன் அப்பொழுது தான் அறிந்தான். "என்ன அண்ணு! நீ இப்படி என்னை மோசஞ் செய்யலாமா?" என்ருன்.

அதற்குத் தலைவெட்டியும், "என்ன அண்ணு! நீ இப்படி என்னை மோசஞ் செய்யலாமா? நான் மட்டும் பெட்டியில் ஏறி உட்கார்ந்திராவிட்டால் என்கதி கிணற்றிலேயே முடிந்திருக்குமே!" என்ருன்.

மீண்டும் உடன்படிக்கை

அப்புறம் ஒருவருக் கொருவர் ஏதோ ஒருவகையாகச் சமாதானஞ் செய்து கொண்டு, மறுபடி மூன்ருந் தடவையும், இனி ஒருவரையொருவர் மோசஞ் செய்கிறதில்லையென்று உடன்பாடு செய்துகொண்டார்கள். ஆனல் இவர்களுக்குள் உடன்பாடும் உண்டோ? ஒருவனை ஒருவன் ஒரு தடவையாவது வஞ்சிக்காத காலமும் உண்டோ? ஆகவே இவர்கள் மிகுவிரைவில் 'இனிமேல் நாம் கூடியிருப்பதில் எத்தகைய பலனும் இல்லை. ஒருவனுக்கு ஒருவன் கேடு செய்யாமல் இருக்கமுடியாது. பிறருக்குக் கெடுதி செய்தலே நமது தொழில்' என்று அறிந்துகொண்டு ஒருவனை விட்டு ஒருவன் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்

குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு எவ்வாறு இருந்தார்களோ நமக்குத் தெரியாது. ஒருநாளும் வாழ்ந்திருக்க மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. எத்திப் பிழைத்து இவ் வுலகத்தில் வாழ்ந்தவர்களும் உண்டோ? இல்லை என்பது கருத்து.

---

௭௭. மதிவல்லவன்

வறுமை

ஓர் ஊரிலே மதிவல்லவன் என்னும் பெயருடைய மனிதன் ஒருவன் இருந்தான். அவன் நுண்ணுணர்வும் சூழ்ச்சித் திறனும் உடையவன். அவன் காலம் ஒத்து வராதபடியினால் யாதோர் அலுவலுங் கிடைக்காமல் வறுமையினால் மிகுந்த துன்பப்பட்டுக் கொண்டிருந்தான்.

கணவன் மனைவி உரையாடல்

ஒருநாள் இரவில் மதிவல்லவனுடைய மனைவி தன்னுடைய கணவனைப் பார்த்து, "என் ஆருயிர்த் தலைவனே! வறுமையின் கொடுமை பொல்லாததாக இருக்கிறதே:

'நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.'

என்று பெரியோர்கள் கூறியிருப்பதில் எவ்வளவு உண்மையிருக்கிறது? இன்று முழுவதும் உணவில்லாமையால் நம்முடைய குழந்தைகள் தூங்கவில்லை. பசிநோயால் வருந்துகின்றன. இதற்கென்ன செய்வது?" என்று மனந் தளர்ந்து கூறினாள். மதிவல்லவன் தன்னுடைய மனைவியைப் பார்த்துப், "பெண்ணே! நான் செய்யாத முயற்சியில்லை. இவ் வூரில் உள்ள பெரிய மனிதர்களிடத்திலெல்லாம் நான் பலமுறையும் போய்த் திரிந்து வருகிறேன். என்னுடைய பொல்லாத காலத்தினால் எவ்விடத்திலும் ஒரு வேலை கிடைக்கவில்லை. என்னுடைய எழுத்தாணி

அசைவதற்கு மட்டும் சிறிது இடங்கிடைக்குமானல் நாம் பெருஞ் செல்வர்களாகிவிடலாம். அவ்வளவுக்குக்கூட நல்ல காலம் அகப்படவில்லையே! நான் என்ன செய்வேன்?" என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

அரசன் அறிதல்

அவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்த நேரம் நள்ளிரவாகையால் அவ்வூர் அரசன் நகர் சுற்றிச் சோதனை செய்து கொண்டு வந்தான். உள்ளே கணவனும் மனைவியும் பேசிக்கொண்டிருந்த செய்திகளைக் கேட்டான். பிறகு தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பிப்போய் விட்டான். மறுநாள் பொழுது விடிந்தது.

ஊதியம் இல்லாத வேலை

அரசன் தன்னுடைய ஆட்களை அனுப்பி மதிவல்லவனை அழைப்பித்தான். அவனைப் பார்த்து, "நீ நேற்று இரவில் உன்னுடைய எழுத்தாணி சிறிது அசையவும் இடங்கிடைக்கவில்லை என்றல்லவா உன்னுடைய மனைவியிடஞ் சொல்லி வருத்தப்பட்டாய். நான் உனக்கோர் அலுவலுக்குக் கட்டளை தருகிறேன். ஆனல் அவ் வலுவலினல் உன்னுடைய எழுத்தாணி மட்டும் அசையுமேயல்லாமல் உனக்கொரு காசும் ஊதியங்கிடைக்கமாட்டாது. அதற்கு உடன்பாடாயின், என்னுடைய இராணுவத்தில் உள்ள யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், ஆடுகள், மாடுகள் ஆகிய விலங்குகள் ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு எவ்வளவு இலத்தியும் சாணமும் புழுக்கைகளும் போடுமோ அவைகளுக்கு நீ தனித்தனி கணக்கு வைப்பதனலே உன்னுடைய எழுத்தாணியை ஓயாமல் அசைத்துக் கொள்ளலாம்," என்று சொன்னன்.

வேலையை ஒப்புக் கொள்ளுதல்

மதிவல்லவன் அரசன் கூறியதற்கு இணங்கினன். அரசனை வணங்கிக் கட்டளைப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினன். திரும்பும் போது அவ்வூரில்

உள்ள ஒரு செல்வனிடஞ் சென்று நிகழ்ந்த செய்திகளைச் சொன்னான். கட்டளைப் பத்திரத்தையும் அவனுக்குக் காண்பித்து ஆறு திங்கள் தவணையில் தருவதாகச் சொல்லி அவனிடத்தில் ஆயிரம் வராகன் கடன் வாங்கிக் கொண்டு விட்டிற்குத் திரும்பினான். உடனே மதிவல்ல வன் குடிக் கூலிக்கு ஒரு பெரிய வீட்டைப் பிடித்துக் கொண்டான். நல்ல ஆடையணிகளை அணிந்துகொண் டான். ஊர்திகள் முதலானவைகளையும் உரிமையாக வைத்துக்கொண்டான். அதனால் மக்கள் பலரும் மதிவல்லவனை நன்குமதித்து எப்பொழுதும் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். "கைத்துடையான் காற் கீழ் ஒதுங்குங் கடன்ஞாலம்," என்பது பெரியோர் உரை யன்றோ?

கீழ்வேலைக்கு ஆட்கள்

பிறகு மதிவல்லவன் அந்தப் பட்டணத்தில் வேலை யில்லாமல் இருந்த சிலரைக் கூப்பிடச் செய்து தான் அரசனிடத்தில் பெற்ற கட்டளைப் பத்திரத்தை அவர் களுக்குக் காட்டினான். தனக்குக் கிடைத்திருக்கிற இந்தப் பெரிய அலுவலுக்குக் கீழ் அலுவலாளர்கள் பலர் வேண்டுமென்றும், அவ்வாறு அலுவலுக்கு வருகிறவர் கள் மூன்று திங்கள்கள் வரையில் ஊதியமில்லாமல் வேலை செய்யவேண்டியதென்றும், பிறகு தகுந்த நன்கொடை வழங்கப்படும் என்றும் சொல்லிச் சிலரைத் தன்கீழ் அலுவலாளர்களாக வைத்துக் கொண்டான்.

வேலையைத் தொடங்குதல்

பிறகு மதிவல்லவன் தன் கீழ்அலுவலாளர்களை அனுப்பி அரசனுடைய யானைப்படை, குதிரைப்படை முதலியவற்றிற்குத் தீனி முதலியன போடும் அதிகாரிகளை அழைப்பித்தான். அவர்கள் வந்து மதிவல்லவனைக் கண்டு வணங்கி நின்றார்கள். மதிவல்லவன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் நெடுங்காலமாக இவ் வேலையில் மிகுந்த ஆதாயம் அடைந்திருக்கிறீர்களென்பதை நான்

நன்ருக அறிந்திருக்கிறேன். நாளைக்கு யானைக்கூடம் குதிரை லாயம், மாட்டுத் தொழுவம், ஆட்டுப்பட்டி முதலிய இடங்களை ஆராய்ச்சி செய்வதற்காக நான் வருவேன். நீங்கள் யானை குதிரை முதலானவை இடுகிற இலத்திகள் சாணம் முதலியவற்றை எடுக்காமலும் ஒன்ருேடு மற்ருென்றைக் கலக்கவிடாமலும் போட்டது போட்டபடியே அங்கங்கே கிடக்கும்படி மிகுந்த விழிப்புடன் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்," என்று வற்புறுத்தி அனுப்பினுன். அவர்கள் அவ்வாறே செய்து யாது விளையுமோ என்று காத்துக்கொண்டிருந்தார்கள். மதி வல்லவன் மறுநாட்காலையில் தன் சிவிகையில் ஏறிக் கொண்டு தன் உதவி அலுவலாளர்களோடும் தராசு நிறுக்குங் குண்டு முதலியவைகளோடுஞ் சென்ருன். இலத்தி முதலியவைகளைத் தனித்தனியே நிறுத்து ஒரு தரத்துக்கு இவ்வளவு எடையானுல், ஒரு நாளைக்கு இவ் வளவு ஒரு திங்களுக்கு இவ்வளவு இதனுல் ஒரு விலங்கு திங்களுக்குத் தின்னும் தீனி இவ்வளவு அதற்கு விலை இவ்வளவு என்று சொல்லிக் கணக்கிட்டான். பிறகு மதி வல்லவன் அந்த அதிகாரிகளைப் பார்த்து, "நீங்கள் யானை குதிரை ஆடு மாடு முதலியவைகளுக்குத் திங்கள் தோறும் கொடுக்கும் தீனிகளுக்கும் வைக்குங் கணக்கு களுக்கும் உள்ள மாறுபாடுகளையும் நான் ஆராய்ந்து பார்க்கவேண்டியதாக இருக்கிறது. நல்லது; நீங்கள் போங்கள்," என்று சொல்லி அச்சுறுத்தி அனுப்பிவிட் டான். அவர்கள் நெடுங்காலமாக அந்த விலங்குகளுக் காகக் கொடுத்துவரும் தீனிகளில் ஒருபகுதியைக் களவாக மறைத்து நல்ல ஆதாயம் அடைந்தவர்களானபடியினுல் உள்ளங் கலங்கினுர்கள். 'நம்முடைய புரட்டுக் கணக்கை அரசன் அறிந்தால் தொல்லை விளையுமே!' என்று அஞ்சி னுர்கள்.

கைக்கூலி கொடுத்தல்

பை பையாகப் பணம் கொடுத்ததன்றி இனிமேல் அடையும் ஊதியத்தில் மதிவல்லவனுக்குப் பங்கும் தருவ

தாக, ஒவ்வொருவரும் தனித்தனியே உடன்படிக்கையும் எழுதி மறைமுகமாகக் கொடுத்தார்கள்.

அரசனுக்கு அறிவித்தல்

ஒருநாள் அரசனிடத்திற்கு மதிவல்லவன் தனியே சென்றுன். அவனுடைய ஊழியக்காரர்கள் நெடுங்கால மாக அரசனுக்குத் தீமைசெய்து வருஞ்செய்தியை அவர் கள் தனக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை, அதன்படி அளித்த கைக்கூலி முதலியவைகளைக் கொண்டே மெய்ப் பித்தான். இதனைக் கண்டு அரசன் அந்த ஊழியக்காரர் களைத் தக்கவாறு தண்டித்தான். மதிவல்லவனுடைய அறிவைப் பலகாலும் வியந்து பாராட்டினுன். அவன் கடன் வாங்கியிருந்த தொகைக்கு இரட்டிப்பாக அவனுக்கு நன்கொடை வழங்கியதும் அல்லாமல் அவனுடைய கீழ் அலுவலாளர்களுக்கும் வேண்டிய மட்டில் பொருள் கொடுத்தான்.

வேறு வேலை

மேலும் மதிவல்லவனுடைய அறிவுத் திறமையை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று அரசன் எண்ணினுன். 'பொருள் வருவாய்க்குச் சிறிதும் இடமில்லாத வேருெரு அலுவலை இவனுக்குக் கொடுத்து, அதில் இவனுடைய அறிவுத் திறமையைப் பார்ப்போம்' என்று தனக்குள் முடிவு செய்துகொண்டு, மதிவல்லவனைப் பார்த்து, "ஓ மதிவல்லவனே! இப்போதிருக்கும் அலுவலையொழித்து வேருெரு அலுவலை உனக்குக் கொடுக்கிறேன். அந்த வேலையிலும் உனக்கு ஊதியங்கிடையாது. உன் எழுத் தாணியை மட்டும் ஓயாமல் அசைத்துக்கொள்ளலாம். அவ் வேலை யாதெனில் நம்முடைய அரண்மனை வாசலில் கட்டியிருக்கும் மணியைக் காலமுறைப்படி அடித்து, அதனை ஏட்டில் அப்போதைக்கப்போது இத்தனை என்று எழுதிக்கொள்வதனுல் உன் எழுத்தாணியை நீ அசைத் துக்கொள்ளலாம். இவ் வேலையை நீ இன்றுமுதல் பார்த்து வருவாயாக," என்று சொல்லிக் கட்டளைப் பத்

திரமும் வழங்கினன். மதிவல்லவன் அரசனை வணங்கி அதனை யேற்றுக்கொண்டு அன்றுமுதல் அந்த வேலையைப் பார்த்துக்கொண்டு வந்தான்.

பொருள்தேட முயற்சி

அதில் ஒரு காசளவும் அவனுக்குப் பயன் கிடைக்கவில்லை. அதன் பிறகு அவன் அரசனுடைய மனைவிமார்கள் ஐந்து பேரில் ஒருத்தியிடத்தில் இருந்த தாதியை வரவழைத்து, "நான் உன் தலைவியின் இடத்தில் அரசன் நாள்தோறும் இரவில் வருங்காலத்துக்குச் சற்று முன்னகவும், இருந்துவிட்டு மற்றெரு தேவி வீட்டிற்குப் போவதற்குச் சிறிது காலம் பின்னகவும் மணியடிக்கிறேன். அவ்வாறு செய்வதனல் ஏனைய மனைவிமார்களிடத்தில் இருப்பதைவிட உன் தலைவியின் இடத்தில் அரசன் அதிகநேரம் தங்கியிருப்பதற்கு இடமுண்டாகும். நான் மணியை அடித்தால் அல்லவா அவளை விட்டு மற்றெரு தேவியின் இடத்திற்கு அவர் எழுந்துபோவார். உன் தலைவியினிடத்தில் இச்செய்தியைப் பற்றிக் கூறி எனக்கேதேனும் பொருளாதாயம் உண்டாக்கினல் உனக்கு நான் அதிற் சிறிது தருகிறேன்," என்று சொன்னன். அத் தாதி அதற்கு உடன்பட்டாள். அச் செய்தியைத் தன்னுடைய தலைவியிடஞ் சொன்னள்.

அரசியால் ஆதாயம்

மதிவல்லவன் இச் செய்தியைச் சொன்ன நாள்முதல் அவ்வாறே மணியடித்து வந்தபடியால், அரசன் அந்தத் தேவி வீட்டிற்குப்போயிருக்குங்காலம் முன்னிலும் சிறிது அதிகமாக இருந்தது. நாளுக்கு நாள் மேலுஞ் சிறிது அதிகரித்து வந்தது. இதனல் அரசன் மற்றைத் தேவிமார் வீட்டில் இருப்பதைப் பார்க்கினும் இங்கு அதிக நேரம் இருக்கும்படியாக நேரிட்டது. அக்காரணத்தினல் அரசனுக்கு அத் தேவியிடத்தில் மிகுந்த அன்புண்டாயிற்று. அவள் மணியடிக்கும் மதிவல்லவனுக்கு வேண்டிய பொருளும் விலை உயர்ந்த ஆடை அணிகலன்களும்

நன்கொடையாக வழங்கிவந்தாள். சில திங்கள்கள் பொறுத்து மதிவல்லவன் மற்றைத் தேவிமார்களிடத்திலும் அவ்வாறே நடந்து அவர்களுக்கும் உதவி காட்டி ஒவ்வொருவரிடத்திலும் வேண்டிய நன்கொடைகள் பெற்று வந்தான். சில ஆண்டுகளுக்குள் மதிவல்லவனுக்கு அளவிறந்த பொருள்கள் சேர்ந்துவிட்டன. அவ்வூரில் உள்ளவர்கள் எல்லோரும் தன்னை இரண்டாவது அரசனாக எண்ணுமாறு பெரிய செல்வனாகவாழ்ந்து வந்தான்.

அரசன் செய்தி அறிதல்

இவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் அப் பட்டணத்தில் உள்ள செல்வன் ஒருவன் வீட்டிலே திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்திற்கு அரசன் போயிருந்தான். அப்போது அவ் விட்டு மணமகளுக்கு அணிந்திருந்த மணியணிகளில் பெரும்பாலானவை தன்னுடையவைகளாக இருப்பதை அரசன் கண்டான். அவனுக்கு ஐயம் உண்டாகிவிட்டது. அவ் வீட்டுக்காரனைத் தனியே அழைத்து, இரண்டொரு நகைகளைச் சுட்டிக்காட்டி, “இவைகள் என்ன விலை?” என்று கேட்டான். அதற்கு அவன், “அரசே! இவை உம்முடைய அரண்மனை வாசலில் மணியடிக்கும் மதிவல்லவனுடையவை. நான் என் வீட்டுத் திருமணத்திற்கு இரவலாக வாங்கி வந்தேன். ஆகையால் அவற்றின் விலை எனக்குத் தெரியாது,” என்று கூறினன். அரசன் தன்னுடைய அரண்மனைக்குச் சென்ற பிறகு மதிவல்லவனை அழைப்பித்தான். அவனைப் பார்த்து, “நான் நேற்று இன்ன கனவான் வீட்டுத் திருமணத்திற்குப் போயிருந்தேன். மணப்பெண்ணுக்குப் பூட்டியிருந்த சில மணியணிகள் மிக விலை உயர்ந்தவைகளாக இருந்தபடியால் அவைகளின் விலையென்னவென்று விட்டுக்காரனைக் கேட்டேன். அவன் உனக்குத் தெரியும் என்று சொன்னன். ஆகையால் அவனுக்கு இரவல் தந்த நகைகளில் இரத்தினசடைப்பில்லை என்ன விலைக்கு வாங்கினய்?” என்று கேட்டான். மதி

வல்லவன் அரசனை வணங்கி, "அரசே! வீட்டுக்குப் போய்வரும்படி உடன்பாடு கொடுத்தால் வீட்டிற்குப் போய்விட்டு வந்து சொல்லுகிறேன்," என்று அரசனிடத்தில் உடன்பாடு பெற்றுக்கொண்டு தன்னுடைய வீட்டிற்கு விரைந்து சென்றான். தான் அரசனுடைய தேவிமார்களிடத்திலே நன்கொடையாகப்பெற்ற அணிகலன்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து அரசன் முன்பு வைத்து வணங்கி எழுந்து நின்றான். அவை தனக்குக் கிடைத்த விவரத்தைச் சிறிதும் ஒளிக்காமல் கூறினான். "இவற்றினுடைய விலை தேவரீருக்குத் தெரியுமே தவிர அடியேனுக்குச் சிறிதுந் தெரியாது," என்று சொன்னான். அரசன் மதிவல்லவனுடைய நுண்ணுணர்வைக் கண்டு மிகுந்த வியப்படைந்தான். எவருக்கும் தீமையில்லாமல் இவ்வாறு 'இவ்வேலையிலும் பொருள் தேடிவிட்டானே' என்று மகிழ்ந்தான்.

வேறொரு வேலை

அரசன், 'நல்லது; இன்னும் ஒருதரம் இவனை ஆராய்ந்து பார்ப்போம்' என்று தனக்குள் முடிவு செய்தான். மதிவல்லவனை நோக்கி, "நீ நம்முடைய ஆளுகைக்கு உட்பட்ட எல்லா நாடுகளுக்குஞ்சென்று அங்கங்குள்ள மனிதர், விலங்கு, பறவை முதலியவற்றில் ஆண் இத்தனை பெண் இத்தனை என்றும் மரம் மலை முதலியவை இத்தனையென்றும் கணக்கெடுத்து ஒவ்வொன்றின் மொத்தம் இவ்வளவு என்று சொல்லவேண்டும். இந்த வேலையிலும் உனக்கு ஊதியம் இல்லை. உன் எழுத்தாணியை மட்டும் ஓயாமல் அசைத்துக்கொள்ளலாம்," என்று கட்டளையிட்டான். அதனைக்கேட்ட மதிவல்லவன் அரசனை வணங்கி, "அரசே! அடியேன் தேவரீர் கட்டளையைத் தலைமேற் கொண்டு செய்வதற்கு யாதுந் தடையில்லை. அவ்வாறே செய்கிறேன்," என்று சொல்லி அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டான்.

கணக்கெடுக்கத் தொடங்குதல்

மறு நாள் சில துணையாட்களோடு ஓர் ஊருக்குச் சென்று அங்கு ஒரு வீட்டில் உள்ள மனிதர் ஆடு மாடு கோழி முதலியவற்றின் கணக்கெடுக்கப் போனான். அவ் வீட்டார் அஞ்சி யோடி வந்து மதிவல்லவனைப் பார்த்து, "ஐயா! இதுவரையிலுஞ் செய்யாத காரியத்தை இப் போது அரசன் செய்வதற்குக் காரணம் யாது? சற்றே அருள்புரிந்து சொல்லவேண்டும்," என்று சொல்லி வேண் டிக்கொண்டார்கள். அதற்கு அவன், "இஃது அரசாங் கச் செய்தியாதலால் ஒருவருக்குந் தெரிவிக்கக் கூடாது," என்று சொன்னான்.

பொய்யான செய்தி

'இக் குடிகள் யாவருக்கும் எவ்வகையான துன்பமும் நேரிடாதபடி அவர்களுடைய உயிரைத் தன்னுயிர்போல் பாதுகாத்துவரும் அரசனிடத்தில் இவர்களுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ பார்ப்போம். வேற்றரசன் படை யெடுத்துவந்தால் இவர்கள் உண்மையில் தங்களுடைய அரசனுக்காகப் போர்க்களத்திற்கு வந்து உயிரை விடு வார்களா? அல்லது அச் சமயத்தில் வஞ்சிப்பார்களா, இதனைக் கண்டறிவோ'மென்று அவர்களைப் பார்த்து, "நீங்கள் இந்தச் செய்தியை வேறொருவர் காதிலும் போடக் கூடாது," என்று வற்புறுத்திவிட்டு, அவர்களைப் பார்த்து, "நம்முடைய அரசனோடு வேறுநாட்டு அரசன் ஒருவன் நான்கு திங்களுக்குப்பின் போருக்கு வருவதாகக் கடிதம் அனுப்பியிருக்கிறான். படைக்குப் போரிடும் திறமை யும் ஆற்றலும் இல்லாவிட்டாலும் பெருங்கூட்டமாகிய தோற்றப்பொலிவால் பெருமையுண்டாகுமாகையால் நம் முடைய அரசன் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட நாடு களிலுள்ள எல்லா ஆண் பிள்ளைகளும் அக்காலத்தில் ஒருவர் தவறாமல் போருக்கு வரவேண்டுமென்றும், பெண் கள் எல்லோரும் போர் வீரர்களுக்கு வேண்டிய உணவு களைச் சமையல் செய்யவேண்டுமென்றும், ஆடு கோழிகள் முதலியவை உணவுக்குப் பயன்படவேண்டும் என்றும்

ஒன்றுவிடாமல் கணக்கெடுத்து மொத்தம் காட்டும்படி கட்டளையிட்டிருக்கிறான்," என்று சொன்னான்.

இரு பகுப்பினர்

மதிவல்லவன் கூறியதைக் கேட்டவர்கள் மனங்கலங்கினார்கள். மதிவல்லவனைத் தனியே அழைத்துக்கொண்டு போய், "எங்கள் வீட்டுக் கணக்கை உம்முடைய ஏட்டில் பதியாமல் விட்டுவிட்டால் உமக்குத் திங்கள்தோறும் இவ்வளவு தொகை தருகிறோம்," என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். இவ்வாறே ஒவ்வொரு சிற்றூருக்குஞ் சென்று ஆங்காங்குள்ள ஆண், பெண், கால் நடைகள் முதலிய எல்லாவற்றையுங் கணக்கெடுத்து வருகையில், அரசனிடத்தில் அன்புள்ளவர்கள் இத்தனை பெயர்கள், அன்பில்லாதவர்கள் இத்தனை பெயர்கள் என்பதையும் ஏட்டில் குறிப்பிட்டுக்கொண்டான். சிலர் உள்ளபடி கணக்கைக் கொடுத்துவிட்டார்கள். சிலர் கொடுக்காமல் கைக்கூலி கொடுத்துவிட்டார்கள்.

அரசன் உசாவல்

இவ்வாறிருக்கையில் அரசன் ஒருநாள் மதிவல்லவனைக் கூப்பிட்டு, "நாம் சொன்னபடி கணக்கெடுத்து முடிந்ததா?" என்று கேட்டான். மதிவல்லவன் அரசனை நோக்கி, "அரசே! பறக்கும் பறவைகளையெல்லாம் ஒன்று விடாமல் கணக்கெடுத்துவிட்டேன். காக்கைகளில் ஆண் இரண்டு லட்சம் பெண் இரண்டரை லட்சம். முட்டையுருவாய் இருப்பவை ஒரு லட்சம்," என்று மேலுஞ் சொல்லிக் கொண்டே போனான். அரசன், "நல்லது, அஃதிருக்கட்டும்; மனிதர்களுள் ஆண் பெண் எத்தனை?" என்று கேட்டான். அதற்கு மதிவல்லவன், "அரசே! அதில் தீராத ஓர் ஐயம் வந்திருப்பதால் அதன் பொருட்டுத் தங்களோடு தனியே பேசி முடிவு செய்யவேண்டுமென்று விட்டிருக்கிறேன்," என்றான். அரசன் மதிவல்லவனைப் பார்த்து, "அஃதென்ன ஐயம்?" என்று கேட்டான். மதிவல்லவன் அரசனைப் பார்த்துத், "தங்களுடைய தேவியர்களில் பாண்டியனுடைய மகள் ஆணா பெண்ணா என்ப

தைத் தெரிவித்தால் உடனே கூட்டி மொத்தத்தைச் சொல்லுகிறேன்," என்று சொன்னான். பாண்டியன் மகள் அலியென்னுஞ் செய்தி தன் ஒருவனுக்கு மட்டுந்தெரியுமே யல்லாமல் மற்றைத் தேவிமார்களுக்கும் இச் செய்தி தெரியாதாகையால் அரசன் மிகவும் நாணமுற்றான். 'இவனுடைய கணக்கு முழுவதும் சரியாகவே இருக்கும்' என்று தனக்குள்ளே முடிவு செய்தான். அவனுடைய அறிவாற்றலுக்காக மிகுந்த களிப்படைந்தான்.

ஓர் உண்மை

மதிவல்லவன் அரசனைப் பார்த்து, "அரசே! நான் தேவரீருடைய கட்டளையின்படி கணக்கெடுத்துக்கொண்டு வருகையில் ஓர் அருமையான உண்மை தெரியவந்தது. அது யாதெனில், தங்களுடைய அரசாட்சிக்கு உட்பட்ட குடிகள் யாவரும் அரசராகிய தங்களிடத்தில் அன்புடையவர்கள் என்று எண்ணவேண்டாம். வேற்றரசர் படையெடுத்து வருவார்களானால் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை இப்போதே அறிந்துகொண்டு அதற்கேற்றபடி முன் பாதுகாப்பாக இருக்கவேண்டியது கடமையல்லவா?" என்று கூறி இன்ன இன்ன ஊரில் இன்ன இன்ன குடிகள் அன்பற்றவர்கள் என்பதை அக் குடிகளின் வாய்மொழியைக் கொண்டே மெய்ப்பித்தான். தன் குடிகளின் பலாபலத்தை அறிந்துகொண்டிருப்பது அரசனுக்கு இன்றியமையாததாகையால் மதிவல்லவனுடைய சூழ்ச்சித் திறமையை அரசன் வியந்தான். 'இவன் உண்மையானவனாகவும் நல்ல அறிவுத்திறமை உடையவனாகவும் இருக்கிறான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. எத்தகைய வழியிலும் வரும்படி வராத வேலையைக் கொடுத்தாலுங்கூட வரும்படி தேடிவிடுகிறான். மேலும் அந்த வேலையினால் நமக்கும் மிகுந்த நன்மையை உண்டாக்குகிறான். இத்தகைய இயல்புடையவன் நம்மிடத்தில் வேலையில் இருந்தால் நமக்குப் பலவகையான நன்மைகளை உண்டாக்குவான்' என்று மதிவல்லவனைத் தனக்கு அமைச்சனாக ஏற்படுத்திக்கொண்டான்.

முடிவுரை

ஒருவனுக்கு அறிவுத் திறமை ஒன்று மட்டும் நன்ருக அமைந்திருக்குமாஞல் அவன் எப்படியும் முன்னுக்கு வந்து சிறப்படைவான் என்பதற்கு இந்த மதிவல்லவனுடைய கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

௨அ. மணிபத்திரன்

சூழ்ச்சிக்காரன்

முன் காலத்தில் சண்பகாபுரம் என்னும் பட்டணத்தில் மணிபத்திரன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டுத் தன்னூரைவிட்டுத் தொலை நாட்டிற்குப்போய்ச் சிலகாலம் தங்கிவரவேண்டியவனுக இருந்தான். அவனிடத்தில் பதினுயிரம் வராகன் பொருள் இருந்தது. தொலைநாட்டிற்குப் போகும்போது அப் பொருளை என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அந் நாளில் இந் நாளைப்போலப் பொருட்காப்பு நிலையங்கள் இல்லை. பொருள் வைத்திருப்பவர்கள் அதை நிலத்தில் புதைத்து வைப்பதுதான் பெரும்பாலான வழக்கம். மேலும் அக் காலத்தில் பொருள் பொன்னும் வெள்ளியுமாக இருந்ததேயல்லாமல் இந் நாளைப்போலத் தாளாக இல்லை. ஆகவே அவைகளைப் புதைத்து வைத்தாலும் நீண்ட காலத்திற்குக் கெடாமல் இருக்கும்.

மணிபத்திரன் தன்னுடைய பொருளை நிலத்தில் புதைத்து வைத்துச் செல்லவிரும்பவில்லை. தகுந்த மனிதர்களிடத்தில் கொடுத்து வைத்துவிட்டுப் போக வேண்டும் என்று எண்ணிஞன். அவனுடைய ஊரில் இருந்த மனிதர்களிடத்தில் அவனுக்கு நம்பிக்கையில்லை. ஆகவே அடுத்த ஊருக்குப் போய் அங்காவது நம்பிக்கையான மனிதர்களைக் கண்டுபிடிப்போம் என்று எண்ணி

னன். அவ்வூரையடைந்து கடைத்தெருவிற்குச் சென்றுன். அங்குப் பலசரக்கு வாணிகஞ்செய்யும் ஒரு வணிகனுடைய கடைக்குப் பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அந்த வணிகன் மிகுந்த சூழ்ச்சிக்காரன். உலாவிக்கொண்டிருக்கும் மணிபத்திரனுடைய உள்ளக் கருத்தை ஒருவாறு உணர்ந்துகொண்டான். அவனிடத்தில் உள்ள பொருளைத் தகுந்த சூழ்ச்சியால் கைப்பற்றவேண்டும் என்று எண்ணினன்.

கபட நாட்கம்

அப்பொழுது அந்த ஊரில் உள்ள ஒரு கிழவியினுடைய வேலைக்காரி அந்த வணிகனுடைய கடைக்கு நெய் வாங்குவதற்கு வந்தாள். கடையில் இருந்த ஆள் வழக்கம்போல் பணம் வாங்கிக்கொண்டு நெய் கொடுத்து அனுப்பினன். அவ் வேலைக்காரி சிறிது தொலை சென்ற பிறகு வணிகன் தன்னுடைய கூலியாளைப் பார்த்து, "அடே பையா! அந்தக் கிழவி வீட்டு வேலைக்காரி என்ன வாங்கினுள்? நீ எப்படிக் கொடுத்தாய்?" என்று கேட்டான். கூலியாள் வணிகனைப் பார்த்து, "ஐயா! அவள் ஒரு பணம் கொடுத்து நெய் கேட்டாள். நான் ஐந்து பலம் கொடுத்து அனுப்பினேன்," என்று மறுமொழி கூறினன். அதனைக் கேட்ட வணிகன், "சிவ சிவ" என்று சொல்லிக் காதுகளை மூடிக்கொண்டான். பிறகு அந்த ஆளைப் பார்த்துச் சினந்து, "நீ என்ன காரியஞ் செய்தனை? இவ்வாறு வாணிகஞ் செய்தால் பிறகு நம்மிடத்திற்கு எவர் வாணிகஞ் செய்யவருவர்? பிறகு எவ்வாறு வாணிகம் நடக்கும்? நாம் பணத்துக்கு ஆறரைப் பலம் வீதம் வாங்கியிருக்கிறோம். அரைப் பலம் ஊதியம் வைத்துக் கொண்டு பணத்துக்கு ஆறு பலம் கொடுக்கக்கூடாதா? வாணிகம் செய்யும் நாம் பிறர் பொருளை நம்முடைய பொருள்போல் எண்ணிச் சாமான் கொடுத்து அனுப்ப வேண்டாமா? திருவள்ளுவ நாயனர், 'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின்,' என்று சொல்லியிருப்பதை நீ அறியாயா? மிகுதியாக

அவாக்கொள்ளலாமா? 'காணியாசை கோடி கேடு' என்னும் பழமொழி தெரியாதா? இனிமேல் நீ இவ்வாறு வாணிகஞ் செய்வாயானால் உன்னை வேலையில் இருந்து விலக்கிப் போடுவேன்," என்று மணிபத்திரன் கேட்கு மாறு உரத்துச் சொல்லி நடித்துக் காட்டினான். பிறகு ஓர் ஆளை அனுப்பி அக் கிழவியின் வேலைக்காரியை அழைத்து ஒரு பலம் நெய்யையும் அவளுக்குக் கொடுத் தனுப்பச் செய்தான்.

மணிபத்திரன் ஏமாற்றம்

இந் நடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்த மணிபத் திரன் மிகுந்த வியப்படைந்தான். 'இவனைப் போல் தகுதியும் தருமசிந்தையும் பேரவா இன்மையும் உடைய வர்களை நாம் எங்குங் கண்டதும் கேட்டதும் இல்லை. இவ் வணிகன் பிறர் பொருளைக் கைப்பற்றுதற்குக் கனவிலும் கருதமாட்டான். நாம் எண்ணி வந்த காரியம் இங்கேதான் நிறைவேறவேண்டும்; நம்முடைய பொருளை இவனிடத் தில் வைத்துப்போனால் யாதும் கெடுதியில்லாமல் மறுபடி யும் அடையலாம்' என்று முடிவுசெய்தான்.

மோசக்காரக் கிழவி

இஃதிவ்வாறாக, வேலைக்காரி வாங்கிக் கொண்டுவந்த நெய்யைக் கிழவி பார்த்தாள். அஃது அன்று காலையில் வாங்கிக்கொண்டு வந்ததைக் காட்டிலும் சிறிது அதிகமா யிருப்பதைக் கண்டாள். வேலைக்காரியைப் பார்த்து "நெய் மிகுதியாக இருக்கிறதே என்ன செய்தி?" என்று உசாவினாள். அவள் நடந்த செய்திகளையெல்லாஞ் சொன்னாள். அந்தக் கிழவி அறிவு நுட்பம் உடையவள். வேலைக்காரியைப் பார்த்து, "அப்பொழுது அங்கே புதிய வர்கள் யாராவது இருந்தார்களா?" என்று உசாவினாள். வேலைக்காரி கிழவியைப் பார்த்து, "வேறு ஊரான் ஒருவன் கடைக்கு வெளியே உலாவிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் செல்வனைப் போல் தெரிந்தது," என்று சொன்னாள். 'இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது'

என்று கிழவி ஒருவாறு ஊகித்துணர்ந்தாள். வேலைக்காரியைப் பார்த்துப் பிறருடைய பொருள் அணுவளவு கூட நமக்குவேண்டாம். இந்த நெய்யைக் கடைக்காரனிடம் கொண்டுபோ. வழக்கம்போல் ஐந்து பலமே தரச் சொல்லிக் கேள். அவ்வாறு கொடுத்தால் வாங்கிக் கொண்டுவா. இல்லையென்றால் பணத்தை வாங்கிக் கொண்டு வந்துவிடு," என்று சொல்லிக் கண்டித்து அனுப்பினாள். அவ்வாறே அந்த வேலைக்காரி கடைக்காரனிடம் போய்த் தன் தலைவியாகிய கிழவி சொன்ன செய்தியைக்கூறி வழக்கம்போல் ஐந்து பலமே தருமாறு கேட்டாள். ஐந்து பலம் கொடுப்பதற்குக் கடைக்காரன் இணங்கவில்லை. ஆகவே அவள் பணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி வந்துவிட்டாள்.

மணிபத்திரன் வியப்பு

இந் நிகழ்ச்சியை அங்கு உலவிய வண்ணம் பார்த்துக் கொண்டிருந்த மணிபத்திரன் கண்டு மிகுந்த வியப்படைந்தான். 'நாம் இந்தக் கடைக்காரனே பிறர் பொருளை விரும்பாத நற்குணச் செல்வன் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். இவனினும் அந்தக் கிழவி பிறர் பொருளை விரும்பாத உத்தமி என்று தெரிகிறது. இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்ப்போம்' என்று முடிவுசெய்தான். வேலைக்காரியைப் பின் தொடர்ந்து அக் கிழவியின் வீட்டுப் பக்கம் போய் அங்கு உலவிக்கொண்டு மேலும் என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

போலித் துறவி

அந்தச் சமயத்தில் ஒரு பொய்க்கோலத் துறவி பிச்சைக்காக அக் கிழவி வீட்டிற்கு வந்தான். கிழவியானவள் மணிபத்திரன் தன் வீட்டிற்குப் பக்கத்தில் உலவிக் கொண்டிருத்தலைக் கண்டாள். அவனுடைய தோற்றத்தால் அவன் ஒரு பெருஞ் செல்வன் என்று அறிந்து கொண்டாள். அவனிடம் இருக்கும் பொருளைத் தான் கவர்ந்து கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும்

என்று எண்ணியவளாய் நடிக்கத் தொடங்கினுள். போலித் துறவி பிச்சைக்கு வந்திருப்பதைப் பார்த்தவுடன் தன் வேலைக்காரியைப் பார்த்து, "இந்தப் பரதேசிக்கு ஒரு முறம் நிறைய அரிசியும் அதற்குவேண்டிய சமையற் பொருளும் நாலணுப் பணமும் கொடுத்து அனுப்பு. நெடு நேரம் நிற்கவைக்காதே. பிச்சைக்கு வந்த பரதேசிகளைத் தலைவாசலில் நீண்ட நேரம் காத்துக்கொண்டு நிற்க வைப்பது தீவினைக்கு இடமாகும். அவர்கள் காரியத்தை முன்னே முடித்துவிட்டுப் பிறகு நம்முடைய வேலையைப் பார்த்தல்வேண்டும். பரதேசிகளுக்கு இடாமல் நாம் சாப்பிடுவது ஆகாது. 'ஐயமிட்டுண்' என்று ஔவை யார் கட்டளையிட்டிருக்கவில்லையா? கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் பொருளெல்லாம் எளியவர்களுக்கு உதவி செய்வதற்கே யல்லாமல் வேறெதற்கும் அன்று. அவர்களுக்குச் செய்யும் தருமம் ஒன்றே நமக்கு மறுமைக் குத் துணையாய் வரும். மற்றவையொன்றும் வரமாட் டாது," என்று அக் கள்ளக் கிழவி மணிபத்திரன் காதில் விழுமாறு தன் வேலைக்காரிக்குக் கட்டளையிட்டாள். வேலைக்காரி தன்னுடைய தலைவியின் கட்டளைப்படியே முறத்தில் அரிசியும் அணு நான்கும் மற்றைப் பொருள் களும் போலித் துறவிக்குக் கொடுக்க வந்தாள். அப் போலித் துறவி இதனைக் கண்டு மிகுந்த வியப்படைந் தான். 'நாள்தோறும் இந்தக் கிழவி வீட்டுக்குப் பிச்சைக்கு வருகிறேம். ஒருநாளாவது ஒருபிடி அன்னமும் போடாத இவ் வுத்தமி இன்றைக்கு இவ்வாறு கொடுப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். இதனை அறிய வேண்டு' மென்று நாற்புறமும் மெதுவாகப் பார்வையைச் செலுத்தினுன். பக்கத்தில் உலாவும் வணிகனைக் கண் டான். 'இவன் பொருள் உடையவன்போல் காணப்படு கிருன். இவனுடைய பொருளைக் கைப்பற்றுவதற்காகத் தான் இந்தக் கிழவி இவ்வாறு வேடிக்கைகள் செய்கிருள்' என்று உணர்ந்து கொண்டான். 'நல்லது; நாம் இதற்குத் தக்க சூழ்ச்சி செய்து அப் பொருளைக் கைப்பற்றுவோம்' என்று முடிவு செய்தான். வேலைக்காரியைப் பார்த்து,

" அம்மா! இவைகளெல்லாம் எனக்கேன்? ஒரு பிடி சோறு எனக்குப் போதுமானது. நான் வீடுகள் தோறும் போய் அங்கங்கு ஒரு பிடி சோறு வாங்கிச் சாப்பிட்டு விட்டுக் கடவுளையெண்ணிக் காலத்தைப் கழித்துக் கொண்டிருக்கிறேன். இந்த அரிசிக்கும் உப்புப் புளி மிளகாய்க்கும் நான் விருப்பம் வைப்பேன் ஆனால் உலகப் பற்றானது சிறிது சிறிதாக என்னைவந்து மூடிக்கொள்ளும். அம்மா! இவைகளெல்லாம் எனக்கு வேண்டியதில்லை. ஒருபிடி சோறு போடு," என்று சொல்லி அவ்விடத்தி லேயே வாங்கிச் சாப்பிட்டு விட்டுக் கையைத் துடைத்துக் கொண்டு போய்விட்டான்.

மணிபத்திரன் மடமை

இக் கபட நாடகத்தையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த மணிபத்திரன் முன்னையினும் மிகுந்த வியப்படைந் தான். அவன் அறிவற்ற பேதையாகையால் போலித் துறவி உண்மையான துறவியென்றே நம்பிவிட்டான். 'கிழவியைவிட இப் பரதேசி மிக நல்லவன். உலகப்பற்று ஒழிந்தவன். பொருளில் ஆசையற்றவன். இப் பரதேசியி னிடத்தில்தான் நம்முடைய பொருளை அடைக்கலப் படுத்தி வைக்கவேண்டும்' என்று இறுதியில் முடிவுசெய் தான். அத் துறவியின் பின்னே சென்றான். பரதேசி தானிருக்கும் மடத்திற்குப் போய்த் தன்னுடைய இருப் பிடத்தில் அமர்ந்தான். மணிபத்திரன் அவ்விடம் போய் அப் பரதேசியினுடைய அடிகளில் விழுந்து பணிந்தான். எழுந்து கைகட்டிக்கொண்டு நின்றான். "அடிகாள்! அடியேனுடைய விண்ணப்பத்தைச் செவியேற்றருளுதல் வேண்டும். நான் தொலை நாட்டிற்குப் போய்ச் சில காலம் அங்கிருந்து விட்டு வரவேண்டியதாக இருக்கிறபடியால் என்னிடத்தில் உள்ள பதினாயிரம் வராகனையும் யாரிடத் திலே வைத்துவிட்டுப் போனால் மறுபடியும் கெடுதியில்லா மல் அப் பொருள் சரியாகச் சேரும் என்று நெடுநாளாகத் தேடிக் கொண்டிருந்தேன். தேவரீர் பிறருடைய பொருளை விரும்பாத தூயமெய்ஞ்ஞானச் செல்வரென்றும், உலக

வைராக்கியம் பெற்றவரென்றும் நான் கண்டபடியால் என்னுடைய பொருளைத் தங்களிடத்தில் வைத்துவிட்டுப் போகலாம் என்று மனோதிடங் கொண்டிருக்கிறேன். தேவரீர் திருவுளத்தில் திருவருள் சுரந்து என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றியருளுதல் வேண்டும்," என்று சொல்லி மிகுந்த பணிவோடு வேண்டிக்கொண்டான்.

போலித் துறவியின் பொய்ந் நடிப்பு

இதனைக் கேட்டு அந்தப் போலித் துறவியானவன் இரண்டு காதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டான். "சிவ சிவ, ஆட்கொல்லியாகிய பணத்தின் செய்தியைப் பற்றி என்னிடத்தில் பேசவேண்டாம். நான் பொருளைக் கையாலுந் தொடமாட்டேன். தொட்டால் உலகப்பற்று மிகுதிப்படும். நான் மண், பெண், பொன் என்னும் மூன்றிடத்தும் உண்டாகிற அவாக்களை அடியோடு ஒழித்துத் தலைமூழ்கிவிட்டு அல்லல் அற்றிருக்கிறேன். இந்தத் தொல்லை மறுபடியும் எனக்கு எதற்கு? இதனால் ஆகவேண்டிய பயன் எனக்கு ஒன்றுமில்லை. இப்பொழுது எனக்குப் பொருள் துரும்பைப் போல் இருக்கிறது. நான் ஓட்டையும் பொன்னையும் ஒரே தன்மையாகப் பார்க்கிறேன். இத்தகைய மேலான பக்குவநிலையில் இருக்கிற நான் உன்னுடைய பொருளைப் பார்க்கவும்மாட்டேன் தொடவும் மாட்டேன்," என்றுகூறி மறுத்துவிட்டான். போலித் துறவியின் பொய்ந் நடிப்பை மணிபத்திரன் உண்மையென்று நம்பினான். மனவருத்தமடைந்து கண்ணீர் விட்டழுதான். போலித் துறவியின் கால்களை உறுதியாகப் பிடித்துக் கொண்டு, "அடிகாள்! இப் பொருள் நான் மிகவும் பாடுபட்டுத் தேடியது. உங்களிடத்திலல்லாமல் வேறெவரிடத்திலும் வைத்துப் போவதற்கு என்னுடைய மனமானது இணங்கவில்லை. தேவரீர் என் குறைக்கு இரங்காவிட்டால் நான் உம்மை விட்டுப்போக மாட்டேன்," என்று கூறித் துறவியின் முன் வீழ்ந்து கிடந்தான். இதனைப் பார்த்த போலித் துறவி 'நம்முடைய

நல்வினையே நல்வினை. பொருள் வந்தால் இப்படி வலிய வந்து சேருவதும் உண்டோ?' என்று எண்ணிப் பெருங் களிப்படைந்தான். பிறகு மணிபத்திரனைப் பார்த்து, "நீ படுகிற துன்பத்தைப் பார்த்தால் என் மனம் பொறுக்க வில்லை. மனித உடலை எடுத்தவர்கள் பிறருக்கு உதவி செய்துதான் தீரவேண்டும். ஆகவே உன்னுடைய விண்ணப்பத்தை அடியோடு மறுக்க முடியவில்லை. இந்த மடத்தில் உனக்குப் பிடித்தமான இடத்தில் புதைத்து வைத்துவிட்டுப் போய் மறுபடியும் உனக்கு விருப்பமான போது வந்து எடுத்துக்கொள்," என்று சொன்னான். மணிபத்திரன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டான். ஒரு பக்கத் தில் தன்னுடைய பொருளைப் புதைத்து வைத்துவிட்டுப் போலித் துறவியிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றான். வெளி நாட்டுக்குப் போய் ஆகவேண்டிய வேலைகளையெல் லாம் முடித்துக் கொண்டு சில காலம் பொறுத்துத் திரும்பி வந்தான்.

பொருள் மறைதல்

போலித் துறவியின் மடத்திற்குப் போய்த் தான் புதைத்து வைத்த இடத்தில் தோண்டிப் பார்த்தான். முன்பே பரதேசி அப்பொருளை அப்புறப்படுத்தி விட்ட படியால் மணிபத்திரன் தான் புதைத்த விடத்தில் பொருளைக் காணமல் பரதேசியைப் பார்த்து, "அடிகாள்! நான் புதைத்து வைத்த இடத்தில் பொருளைக் காணேமே?" என்று கேட்டான். துறவியானவன் மணி பத்திரனைப் பார்த்து, "நான் அதனைக் கையால்கூடத் தொடமாட்டேன் என்று அப்போதே சொல்லவில்லையா? நீ புதைத்த இடத்தைக்கூட நான் பார்க்கவில்லையே. நன்ருகத் தேடிப்பார். புதைத்த இடத்தை நீ மறந்தாலும் மறந்திருக்கலாம்," என்று சொன்னான். மணிபத்திரன் அதை மெய்யென்று நம்பிப் பலவிடங்களில் தேடிப் பார்த்தான். எங்கும் அகப்படவில்லை. போலித் துறவி யிடம் மேலுங் கேட்பதற்கு அஞ்சினான். மனவருத்தங்

கொண்டவனுய்க் கிழவியின் வீட்டுப் பக்கம்போய் வாடிய முகத்துடன் உலாவிக் கொண்டிருந்தான்.

கிழவியின் சூழ்ச்சி

கிழவியானவள் மணிபத்திரனைப் பார்த்தாள். அவனைத் தன் வீட்டிற்கு வரவழைத்து, "நீ முன்பு இங்கு வந்தபோது இருந்ததைப் போல் மகிழ்ச்சியாக இராமல் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறதே! காரணம் யாது?" என்று கேட்டாள். மணிபத்திரன் தான் பரதேசியிடம் மோசம்போன வரலாறு முழுவதையுஞ் சொல்லியழுதான். கிழவியானவள் மணிபத்திரனைப் பார்த்து, "நான் அப் பொருள் முழுவதையும் உனக்கு மீட்டுத் தந்தால் நீ எனக்கு யாது கொடுப்பாய்?" என்று கேட்டாள். "ஆயிரம் வராகன் தருகிறேன்" என்று மணிபத்திரன் உறுதிமொழி கூறினுன். கிழவி, "அப்படியானுல் நான் இன்று மாலையில் பரதேசியிருக்கும் மடத்துக்குப் போகிறேன். நீ ஏறக்குறைய ஐந்து மணிக்கு அங்கு வருவாயானுல் உன் பொருளை நீ பெறுவதற்கு வழி செய்கிறேன்," என்று சொன்னுள். மணிபத்திரன் இதனைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். "அவ்வாறே மடத்திற்கு வருகிறேன்," என்று சொன்னுன்.

போலித் துறவி ஏமாறுதல்

கிழவியானவள் தன்னிடத்தில் இருந்த மணியணிகளையெல்லாம் ஒரு தாம்பாளத்தில் எடுத்து வைத்துத் துணியால் மூடினுள். பிறகு தன்னுடைய வேலைக்காரியைப் பார்த்து, "நான் பரதேசி மடத்துக்குப் போகிறேன். நீ சிறிது நேரம் சென்ற பிறகு அங்கு வந்து, "அம்மா! ஊருக்குப் போன உன்னுடைய மகன் வந்துவிட்டார். உன்னை உடனே அழைத்துக் கொண்டுவரச் சொன்னுர்," என்று விரைவாக ஓடிவந்து என்னிடத்திற் சொல்வாயாக," என்று கூறிவிட்டுத் தான் தாம்பாளத்தையெடுத்துக்கொண்டு பரதேசியிடஞ் சென்ருள். பரதேசியைப் பார்த்து வணங்கினுள். "அடிகாள்! என்னுடைய

அருமைப் புதல்வன் காசிப்பட்டணத்திற்குப் போய் இரண்டு ஆண்டுகளாயின. இதுவரையிலுங் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். இப்போது மூன்று திங்கள்களாகக் கடிதமும் வரவில்லை. நான் போய்ப்பார்த்து அவனை இங்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும். இந்த அணிகலன்களைத் தகுந்தவர்களிடத்தில் அடைக்கலமாக வைத்துவிட்டுப் போய் வரவேண்டும் என்று எண்ணுகிறேன். தங்களைப் பார்க்கினும் நம்பிக்கையுள்ளவர்கள் வேறு யாரும் இவ்வூரில் இல்லை. தேவரீரே இந்த அணிகலன்களை வைத்திருந்து காப்பாற்றித் தரவேண்டும்," என்று சொன்னாள். தாம்பாளத்தின்மேல் மூடியிருந்த துணியை விலக்கிக் காட்டினாள். அதனைப் பார்த்த மாத்திரத்தில் உள்ளம் பூரித்தது. 'நமக்கு ஏதோ நல்ல காலம் இருக்கிறது. சுக்கிர தசையிருந்தால் இவ்வாறு இருக்கவேண்டும்' என்று மனங்களித்தான். கிழவியைப் பார்த்து, "அம்மா! நல்லது; அப்படியே ஆகட்டும். உனக்கு விருப்பமான இடத்தில் புதைத்து வைத்து வேண்டியபோது வந்து எடுத்துக்கொண்டு போகலாம்," என்று சொல்லிக் கொண்டிருக்கையில், மணிபத்திரன் வந்து, "அடிகாள்!" என்று சொல்லி வணங்கி நின்றான். போலித் துறவியானவன் அவனைப் பார்த்து ஒன்றும் அறியாதவன் போல், "நீ யார்?" என்று கேட்டான். அதற்கு மணிபத்திரன், "நான் மணிபத்திரன் என்னும் வணிகன்; தங்களிடத்தில் வைத்துப்போன பதினாயிரம் வராகனையும் வாங்கிக்கொண்டு போவதற்கு வந்தேன்," என்று சொன்னான். போலித் துறவி இதனைக் கேட்டுத் திடுக்கிட்டான். 'இஃதென்ன வம்பாக முடிந்தது? நாம் இவன் கொடுத்த அற்பத் தொகையான பதினாயிரம் வராகனுக்கு அவாக்கொண்டால் இலட்சக்கணக்காக விலைமதிக்கத்தக்க இந்த அணிகலன்களையெல்லாம் இழந்து போகும்படியாக நேரிடலாம்' என்று எண்ணியவனாய் மணிபத்திரனைப் பார்த்து, "அப்பா! உன்னுடைய பொருள் அதோ புதைக்கப்பட்டிருக்கிறது. தோண்டியெடுத்துக் கொண்டுபோ," என்று சொன்னான். மணி

பத்திரன் மிகுந்த மகிழ்ச்சியோடு போய்த் தன்னுடைய பொருளைத் தோண்டி யெடுத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது வேலைக்காரி ஓடிவந்து, "அம்மா! உன்னுடைய செல்வப் புதல்வர் ஊரில் இருந்து வந்துவிட்டார். உன்னைப் பார்க்க மிகுந்த விருப்பமாக இருக்கிறார். உடனே கூப்பிட்டுக்கொண்டு வரச்சொன்னார்," என்று சொன்னாள். கிழவியானவள் போலித் துறவியைப் பார்த்து, "அடிகாள்! என்னுடைய மகன் வந்து சேர்ந்துவிட்டான். நான் இனிமேல் ஊர்ப்பயணம் போய் அவனை அழைத்துக் கொண்டு வரவேண்டியது இல்லை," என்றுகூறி விட்டு அணிகலன்கள் வைத்திருந்த தாம்பாளத்தைத் துணியால் மூடியெடுத்து வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டுக் களிகொண்டவளைப் போல் அங்கு நின்று கூத்தாடினாள்.

விழுந்தவன் நகைப்பது வெட்கத்தால்

கிழவி தான் மேற்கொண்ட சூழ்ச்சி வெற்றிபெற்றது என்னுங் களிப்பால் கூத்தாடத் தொடங்கியதும் மணிபத்திரனும்கூட ஆடினான். அதைக் கண்ட பரதேசி 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய்விட்டதே' என்னும் பெருந்துக்கம் உள்ளுக்குள்ளே இருந்தாலும் அதனை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் தானும் அவர்களோடு சேர்ந்து ஆடினான். அதைக் கண்ட வேலைக்காரி பரதேசியைப் பார்த்து, "அடிகாள்! எங்கள் தலைவி தொலைநாட்டிற்குப் போயிருந்த தன் புதல்வர் வந்துசேர்ந்ததைக் குறித்துக் களிப்பு மேலீட்டால் கூத்தாடுகிறாள். இவ்வணிகர் தாமிழந்த பொருளை மீண்டும் அடைந்துவிட்ட களிப்பினால் ஆடுகிறார். தாங்கள் ஏன் வீணாகக் கால்நோவ ஆடுகிறீர்கள்?" என்று கேட்டாள். அதற்குப் போலித் துறவியானவன், "'விழுந்தவன் சிரிப்பது வெட்கத்தால்,' என்னும் பழமொழியைக்கேட்டதில்லையா?" என்று சொன்னான். பிறகு மணிபத்திரன் தான் கூறியபடியே கிழவிக்கு ஆயிரம் வராகன் கொடுத்துவிட்டுத் தன்னுடைய ஊருக்குப் போய்ச்சேர்ந்தான்.

முடிவுரை

'வெளுத்ததெல்லாம் பால்' என்று நம்புகிறவர்கள் பலவகையான தொல்லைக்கு உள்ளாவார்கள்; சூழ்ச்சிக் காரர்கள் எவ்வளவு சூழ்ச்சி செய்தபோதினும் அவர்கள் முன்னுக்கு வரமாட்டார்கள் என்பனபோன்ற நல்லறிவுக் கருத்துக்கள் பல இக் கதையால் பெறப்படுகின்றன.

---

௬௯. கடல்நீர் உப்பான கதை

வணிகனும் பணியாளர்களும்

முன் காலத்தில் பெரிய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பொருள்தேடும் பொருட்டுத் தொலை நாடுகளுக்குச் செல்லவேண்டும் என்று முடிவுசெய்தான். துணைவர்களாகச் சிலரைச் சேர்த்ததோடு பெரிய கப்பல் ஒன்றையும் ஏற்பாடு செய்தான். பிறகு தன்னுடைய துணைவர்களைப் பார்த்து, "நண்பர்களே! நாம் கப்பலில் புறப்பட்டு எத்தகைய தொல்லையையும் பொருட்படுத்தாமல் வெகு தொலைவில் உள்ள நாட்டிற்குச்சென்று பொருள் தேடப்போகிறோம். நீங்கள் எனக்காக வேலை செய்வதற்கு வருகிறீர்கள். ஆயினும் இச் சமயத்தை நீங்களும் நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது முறைமையாகும். நாம் செல்லும் நாடு செல்வப் பெருக்கிலே சிறந்த நாடு. எவன் அறிவுத்திறமையோடு வேலை செய்கிறானோ அவன் மிகு விரைவில் பெரும் பொருள் தேடிக் குவித்துச் செல்வனாகிவிடலாம். செல்வங்கொழிக்கும் சிறந்த நாட்டிற்குப் போய்ச் சும்மா ஏன் வரவேண்டும்? ஆகவே நீங்கள் எல்லோரும் உங்கள் உங்கள் ஆற்றலுக்குத் தகுந்தபடி இங்கிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டுபோய் அவ்விடத்தில் சொந்தமாக வாணிகஞ்செய்து அதனால் கிடைக்கும் ஊதியத்தை நீங்களே அடையலாம். நீங்கள் அவ்வாறு செய்வதனால் எனக்கு எத்தகைய கேடும் இல்லை. நீங்கள் அவ்வாறு

செய்வதற்கு நான் எத்தகைய தடையுஞ் செய்யேன். மேலும் உங்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும் அவ்வப்பொழுது கூறுவேன். அது மட்டுமன்று. உங்களில் யார் மிகுந்த உழைப்போடும் ஊக்கத்தோடும் வேலைசெய்து கெட்டிக்காரன் என்று பெயர் பெறுகிருனே அவனுக்கு நான் திரும்பி வரும்போது நன்கொடையும் வழங்கப்போகிறேன். ஏனெனில் முயற்சியைத் தூண்டுவது நல்லது. நாம் புறப்படுவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் உள்ளன. அதற்குள் நான் சொன்னவாறு செய்வதற்கு நீங்கள் தகுந்த ஏற்பாட்டைச் செய்துகொள்ளுங்கள். இன்றிலிருந்து மூன்ரும் நாள் விடியற்காலையில் நாம் புறப்பட வேண்டும்," என்று சொல்லி முடித்தான்.

ஒரு சிறுவன்

வணிகன் கூறியதைக்கேட்டு அவனுடைய துணைவர்கள் மிகுந்த களிப்படைந்தார்கள். கப்பலைவிட்டுக் கரைக்குச் சென்று தமக்குள்ள பொருளைத் தமக்கு விருப்பமானபடி சொந்த வாணிகத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஒரு சிறுவன் மிகுந்த வறியவனுக இருந்தான். அவனுக்கு ஒரு காசுக்குக்கூட வழியில்லை. தன்னுடைய நண்பர்கள் எல்லோரும் பலவகையான பொருள்களைக் கொண்டுவந்து கப்பலை நிரப்புவதைப் பார்த்தான். 'போகிற இடத்தில் இருந்து பொருள்தேடிக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நமக்கு நல்வினை இல்லையே!' என்று உள்ளம் வருந்தினன். அச் சிறுவனுக்கு அத்தை ஒருத்தி இருந்தாள். ஆயினும் அவளும் வறியவள்தான். என்ருலும் அறிவுத்திறமையும் சூழ்ச்சியும் மிகுந்தவள். சிறுவன் தன்னுடைய கிழ அத்தையிடம்போய், "என் அருமை அத்தையே! என்னுடைய நண்பர்கள் அனைவரும் வேண்டிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு வேறு நாட்டிற்குப் போகிருர்கள். நான் வெறுங் கையனுகச் செல்வதற்கு மிக வெட்கமாக இருக்கிறது. இந்தச் சமயத்தில் எனக்கு ஏதாவது பொருள் கொடுத்து உதவி செய்யவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

அத்தை அளித்த அரும்பொறி

அத்தையானவள் சிறுவனைப் பார்த்து, 'தம்பி! உனக்கு நல்வினையில்லாததற்கு நான் என்ன செய்கிறது? உன்னுடைய தந்தை இவ்வாறுதான் வறுமையால் வருந்திக்கொண்டிருந்தான். நீயும் அவனைப்போலவே துன்பப்படுவதற்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறாய். என்னுடைய நிலைமையைப் பார்த்தால் உன்னுடைய நிலைமையே மிகவுஞ் சிறந்தது என்று சொல்லலாம். என்னிடத்தில் இப்பொழுது பொருள் இல்லையே; நான் என்ன செய்கிறது?" என்று சொல்லிக் கையை விரித்தாள். சிறுவன் அவளைப் பார்த்து, "என்னுடைய நண்பர்கள் என்னைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள். மேலும் நான் சும்மா போனால் அவர்கள் என்னைப் பார்த்து மிக இழிவாக எண்ணமாட்டார்களா? நான்தான் அவர்களுடைய முகத்தில் எவ்வாறு விழிக்கிறது?" என்று சொன்னான்.

அவனுடைய உரைகளைக்கேட்ட அத்தை, அவனைப் பார்த்துத், "தம்பி! நான் உனக்குப் பொன்னையும் பொருளையும் கொடுத்து மகிழ்ச்சியை உண்டாக்கப் போகிறதில்லை. ஆனாலும் புதுமையான பொருள் ஒன்று தருகிறேன். அதை மட்டும் நீ செம்மையாகப் பயன்படுத்தினால் நல்ல பயன் பெறலாம்," என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே சென்றாள். சிறுவன் 'நம்முடைய அத்தை என்னவோ கொடுப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றாளே!' என்ன கொடுக்கப் போகிறாளோ என்று எண்ணமிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். உள்ளே போனவள் ஒரு பொறியை (இயந்திரத்தை)த் தூக்கிக்கொண்டு வந்தாள். சிறுவனைப் பார்த்து, "அப்பா! குழந்தாய்! இந்தப் பொறி பார்வைக்கு நன்றாக இல்லையென்று இகழாமல் இதனை நீ அறிவோடு கையாளுவாயானால் உனக்கு வேண்டிய பொருளையெல்லாம் இது கொடுக்கும்," என்று சொன்னாள்.

பயன்படுத்திக் காட்டுதல்

சிறுவன் தன்னுடைய அத்தையைப் பார்த்து, "நான் இதனை எவ்வாறு பயன்படுத்துவது?" என்று

கேட்டான். அவள் சிறுவனைப் பார்த்து, "அப்பா, அது வெகுபுதுமையானது. இதோ காண்பிக்கிறேன்; பார். இப்பொழுது உனக்கு என்னவேண்டும் சொல். உடனே வரவழைத்துக்கொடுக்கிறேன்," என்று சொன்னாள். உடனே சிறுவன் தன்னுடைய அத்தையைப் பார்த்து, "நான் இன்று காலைமுதல் எதுவுஞ் சாப்பிடவில்லை. பசி மிக அதிகமாக இருக்கிறது; இப்பொழுது சிறிது உணவு வரவழைத்துக் கொடுத்தால் நல்லது," என்று சொன்னான். உடனே அவள் அந்தப் பொறியை ஒரு பலகையின்மேல் வைத்து, மெல்லிய குரலாக, "ஓ பொறியே! பொறியே!! சுவாகா!!! சுடச் சுடச் சில தோசைகள் உண்டாக்கிக் கொடுக்கவேண்டும்," என்று சொன்னாள். உடனே அப் பொறி சுழன்றது. அப்பொழுதுதான் செய்ததுபோன்ற புதிய தோசைகளை உண்டாக்கத் தொடங்கியது. வேண்டிய அளவு சேர்ந்த பிறகு, "வீரப்பொறியே போதும் போதும் நிற்கலாம்," என்றாள். அதுவுஞ் சட்டென்று நின்றுவிட்டது. பையன் அந்தப் புதுமையைக் கருத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தத் தோசையை வேண்டிய அளவு புசித்து மன நிறைவு அடைந்தான். பொறி அசையும்படி சொல்ல வேண்டிய சொற்களையும் அது நிற்கும்படி சொல்ல வேண்டிய சொற்களையும் அத்தையிடங்கேட்டு உருப்போட்டு ஒருக்காலும் மறவாதபடிக்கு மனதில் பதிய வைத்துக்கொண்டான். அந்தப் பொறியை எடுத்துக் கொண்டு அவளிடஞ் செலவு பெற்றுப் புறப்பட்டான். அவன் கொண்டுசென்ற பொறியைப் பார்த்துச் சிறுவனுடைய தோழர்கள் நகைத்தார்கள். சிறுவன் அவர்கள் நகைத்ததை ஒரு பொருட்படுத்தவில்லை. 'இப் பொறியின் பெருமை தெரியாமல் இவர்கள் நகைக்கிறார்கள். நகைத்தால் நகைக்கட்டும்' என்று பேசாமல் இருந்தான். பொறியை ஒரு மூலையில் மறைவாக வைத்துவிட்டு 'இதனால் எவ்வாறு மிகுதியாகப் பொருள் தேடலாம்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

தொலை நாடு செல்லுதல்

குறிப்பிட்ட காலத்தில் கடற்பயணந் தொடங்கியது. எண்ணிய நாட்டிற்கு எல்லோரும்போய்ச் சேர்ந்தார்கள். சிறுவன் தன்னுடைய தலைவனிடம் போய்த் தான் தன்னுடைய தொழிலை நடத்துவதற்கு உடன்பாடு கொடுக்க வேண்டும் என்று கேட்டான். தலைவன், சிறுவனைப் பார்த்து, "நல்லது; அப்படியே ஆகட்டும்; நீ என்ன செய்யப்போகிறாய்? நீ எதுவுஞ் செய்வதற்குத் தக்கபடி வந்திருப்பதாக எனக்குத் தெரிவிக்கவில்லையே?" என்று கேட்டான். அதற்குச் சிறுவன், "எல்லாம் நாளடைவில் தெரியும். ஆயினும் என் வேலையில் தங்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி செய்கிறேன். இப்பொழுது உங்களுக்கு வேண்டிய பொருளைச் சொன்னால் நாளை இந்நேரத்திற்குத் தருகிறேன்," என்று சொன்னான். தலைவன் 'பையனுடைய பேச்சை ஆராய்ந்து பார்ப்போம்' என்று எண்ணினான். பையனைப் பார்த்து, "நான் கொண்டு வந்த எலுமிச்சம் பழங்கள் ஆய்விட்டன. நீ நாளைக்கு நூறு எலுமிச்சம் பழங்கள் கொண்டுவா. நான் அதனுடைய விலையைக் கொடுத்து விடுகிறேன்," என்று சொன்னான்.

எலுமிச்சம் பழம் உண்டாக்குதல்

பையன் தன்னுடைய பொறியை எடுத்துக்கொண்டு தனிமையான ஓரிடத்திற்குச் சென்றான். அப் பொறியை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப், "பொறியே! பொறியே!! சுவாகா!!! நல்ல எலுமிச்சம் பழம் கொடுக்கக் கடவாய்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான். அப் பொறி நல்ல எலுமிச்சம் பழங்களை உண்டாக்கிற்று. நூறு பழங்கள் ஆகிறவரையில் சும்மா இருந்தான். பிறகு "ஓ வீரப் பொறியே! போதும் போதும் நிற்கலாய்," என்று சொன்னான். பொறி நின்றுவிட்டது. பிறகு பழங்களை யெடுத்துக் கொண்டு தன்னுடைய தலைவனிடஞ் சென்றான். தலைவன் பையனுடைய ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தான். எலுமிச்சம் பழத்தை எடுத்துக்கொண்டு அதற்குரிய விலையைக் கொடுத்து அனுப்பினான். மேலும்

ஒரு திங்கள்வரை பையன் தன்னுடைய சொந்தத்தில் வாணிகஞ் செய்வதற்கு உடன்பாடுங் கொடுத்து அனுப்பினான்.

தொழில் தொடங்குதல்

பையன் அவ்வூர்க் கடைத்தெருவுக்குப் போய் ஓர் இடத்தை வாடகைக்குப் பிடித்தான். "இந்த இடத்தில் யார் எந்தப் பொருளை வேண்டினாலும் மறுநாளைக்குள் உண்டாக்கிக் கொடுக்கப்படும். விலையும் பக்கத்து விலைக்குப் பாதிவிலை தான்" என்று எல்லோருக்குந் தெரியும்படியாக அறிக்கைப் பலகை ஒன்றுந் தொங்கவிட்டான். 'தன்னிடம் யாரேனும் பொருள் வாங்குவதற்கு வரமாட்டார்களா' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அரிசி உண்டாக்குதல்

மறுநாட் காலையில் ஒருவன் சரக்கு வாங்குவதற்காகக் கடைத்தெருவுக்கு வந்தான். பையனுடைய விளம்பரப் பலகையைப் பார்த்தான். உள்ளே போய்ப் பையனைப் பார்த்து, "இங்கே பாதிவிலைக்குச் சரக்குக் கொடுக்கிறது உண்மைதானா?" என்று கேட்டான். பையன் 'தன்னிடமுஞ் சரக்குக் கொள்வதற்கு ஆள் வந்தது' என்று களிப்படைந்தான். "ஆம் உண்மைதான். உங்களுக்கு என்ன தேவையோ அதனைச் சொன்னீர்களால் உண்டாக்கி வைக்கிறேன். நாளைக்கு வந்து வாங்கிக்கொண்டு போகலாம்," என்று சொன்னான். அதற்கு அவன், "எனக்குப் பத்து வண்டி அரிசி வேண்டும். பணத்தை உடனே கொடுத்து விடுகிறேன்," என்று சொன்னான். அதற்குச் சிறுவன், "நல்லது; நாளைக்கு வண்டி கொண்டு வாருங்கள்," என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு உடனே அரிசி உண்டாக்கத் தொடங்கினான். பத்துவண்டி அரிசியையும் பொறியினால் உண்டாக்கினான். மறுநாள் வண்டி வந்தவுடனே தடையில்லாமல் பத்துவண்டி அரிசியையும் அளந்துவிட்டான். அரிசியைப் பெற்றுக்கொண்டவன் உரிய விலைக்கு மேலேயே கொடுத்துவிட்டுச் சென்றான்.

இதனால் சிறுவனுடைய பெயர் ஊரெங்கும் பரவியது. வாணிகம் நன்றாகச் செழித்தோங்கியது.

தலைவன் எண்ணம்

பணஞ்சேர்க்க வழியுண்டாகவே 'தான் பெற்றுக் கொண்ட ஒரு திங்கள் கெடுவும் கழிந்துபோனால் என்ன செய்கிறது' என்று பையனுக்கு மனவருத்தம் உண்டாயிற்று. இவன் மிகுதியாகப் பணஞ் சேர்ப்பதைப் பார்க்கவே இவனுடைய தலைவனுக்கும் பொறாமையுண்டாயிற்று. தனக்காகவே வேலை செய்யச் சொல்லிச் சிறுவனை மடக்கி விடவேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தான்.

சிறுவனுடைய நேர்மை

சிறுவனை அவனுடைய தலைவன் தனக்காக வேலை செய்யுமாறு மடக்கிக்கொள்ளப் போகிறான் என்னுஞ் செய்தி எங்கும் பரவவே பலர் சிறுவனிடத்தில் இரக்கங் கொண்டார்கள். 'அந்தோ! இச்சிறுவன் பொருள் தேடித் தன்னுடைய தலைவனுக்குக் கொடுத்துவிட வேண்டுமாமே! இத்தகைய முறைகேடான காரியம் எங்குண்டு?" என்று எண்ணினார்கள். சிறுவனைப் பார்த்து, எங்கேனும் காணாமல் ஓடிப் போகுமாறு அறிவுரை கூறினார்கள். சிறுவன் அவர்களுடைய பேச்சுக்கு இணங்கவில்லை. "அத்தகைய காரியத்தை நான் செய்யமாட்டேன். நூறு வரட்டும் நூறு போகட்டும். தலைவனுடைய பணியில் இருந்து நீங்குவதற்கு வழியுண்டானால் ஆகட்டும். இல்லையானால் ஊழ்வினைப்படி நடக்கட்டும்," என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்தான்.

அமைச்சன் ஏற்பாடு

பையனுடைய ஆற்றலை அந் நாட்டு அமைச்சன் கேள்விப்பட்டான். ஒருநாள் சிறுவனிடம் வந்து, "அப்பா! உன்னுடைய செய்தியைக் கேள்விப்பட்டு வந்தேன். எனக்கு ஓர் உதவி செய்வாயானால் மிகுந்த நலமாக இருக்கும். இந் நாட்டுப் போர்வீரர்கட்கு உடுப்பிற்காகப் பிற

நாட்டிற்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். அஃது இன்னும் வந்து சேரவில்லை. அரசரோ சினங்கொள்வார் போல் தெரிகிறது. இரண்டாயிரம் உடுப்புக்கள் கட்டாயமாக உடனே தேவையாக இருக்கிறது. அவைகளை உடனே உண்டாக்கிக் கொடுப்பாயானல் அரசரிடம் உன்னைப் பற்றிச் சொல்லி உன்னை அரசாங்க ஒப்பந்தக்காரனாக ஏற்பாடு செய்துவிடுகிறேன். பிறகு உன்னை உன்னுடைய தலைவன் ஒன்றுஞ் செய்ய முடியாது," என்று இனிய மொழிகளைச் சொன்னான். அதனைக் கேட்டுச் சிறுவன் மனமகிழ்ந்தான். "அப்படியே ஆகட்டும்," என்று ஒப்புக்கொண்டு அந்த உடுப்புவேலையை நிறைவேற்றினான். அமைச்சன் வியப்படைந்தான். தான் முன்பு கூறியபடி, "அரசனுக்குச் சரக்கு ஒப்பந்தக்காரன்," என்று அவனுக்கு உறுதியான வேலை கொடுத்து அனுப்பிவிட்டான்.

கப்பல்காரன்

இவ்வளவு வேலையும் ஒருதிங்கள் கெடு முடிவதற்குள்ளேயே நடந்துவிட்டது. இதனைக் கேட்டுக் கப்பல்காரன் மிகுந்த சினங்கொண்டான். 'இவனை இவ்வாறு தனியாக விட்டு வைத்தபடியினால் அல்லவோ இவ்வாறு நேர்ந்தது. யானை தன்னுடைய தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்வதைப்போல நாமே நம்மைக் கெடுத்துக் கொண்டோம். இனிமேல் அவனை நம்முடைய அதிகாரத்திற்கு உட்படுத்த முடியாதே! அவனைக் கெடுப்பதற்கு ஏதாவது வழிதேடவேண்டும்' என்று முடிவுசெய்தான். சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள் சிறுவன் கதவை மூடாமல் பக்கத்து வீட்டிற்குப் போயிருந்தான். அப்பொழுது கப்பல்காரன் சிறுவனுடைய வீட்டிற்குள் நுழைந்து எல்லா இடங்களினுந் தேடிப்பார்த்தான். ஒன்றும் அகப்படாமல் திரும்பி வெளியே வந்து கொண்டிருந்தான். அப்பொழுது மூலையில் என்னவோ இருக்கிறதாகத் தெரிந்தது. அங்கே போய்ப் பார்த்தான். அவ்விடத்தில் தான் முன்னே பார்த்திருந்த புதுமையான பொறி இருத்தலைக் கண்டான். 'இதனாலேதான் பையன்

கொழுத்துப் போனான். இதனை நாம் எடுத்துக்கொண்டு போய்விட்டால் பையனுடைய கொட்டம் அடங்கிப் போய் விடும். நாம் இலட்சாதிகாரியாக மாறிவிடலாம்,' என்று முடிவு செய்து அதனை எடுக்கச் சென்றான்.

அடிபடுதல்

இந்தச் சமயத்தில் வெளியே போயிருந்த சிறுவன் திரும்பி வந்துவிட்டான். அவன் தன்னுடைய தலைவன் நோக்கம் இன்னதென்று தெரிந்து கொண்டு, பொறியைப் பார்த்துக், 'கட்டைத் தடிகள் கொடுக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். உடனே தடிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பொறியில் இருந்து வெளிப்பட்டுத் தலைவன் மேல் விழுந்து நன்றாகப் புடைத்து முதுகைக் குருதி வெள்ளமாகச் செய்துவிட்டன. மேலும் அடிகள் ஓயாமல் விழுந்துகொண்டேயிருந்தன. கப்பல்காரனுடைய பாடு பெருந்திண்டாட்டம் ஆகிவிட்டது. அவன் சிறுவனைப் பார்த்து, "அப்பா விட்டுவிடு; உன்னுடைய காலிலே விழுகிறேன்," என்று சொல்லிப் பலவாறு கெஞ்சினான். பையன் வேடிக்கை பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கவே, "கெட்ட பையலே பார்! உன்னை என்ன செய்கிறேன் என்று. உனக்கு இவ்வளவு ஆணவமா?" என்று பிறகு அச்சுறுத்தியும் பார்த்தான். பிறகு சிறுவன் உள்ளம் இரங்கினான். அவன் கப்பற்காரனைப் பார்த்து, "இனி மேல் பிறர் பொருளின்மேல் அவாக்கொண்டு பேயாய்ப் பறந்து களவு செய்வதற்கு முயலாதே. இப்பொழுது உன்னை விட்டு விடுகிறேன்," என்று சொல்லிக் கதவைத் திறந்து அவனை வெளியே போகவிட்டான்.

வஞ்சனை

நன்கு உதைபட்டுத் திரும்பிய கப்பல்காரன் மிகுந்த சினங்கொண்டான். தன்னுடைய எண்ணத்தை எவ்வாறாயினும் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தான். அதற்கு வேறொரு சூழ்ச்சியை எண்ணினான். அடுத்துக் கெடுப்பதுதான் தக்கது என்று முடிவு செய்

தான். முன் நடந்த செய்திகள் மறந்து போகட்டும் என்று சில நாள் சும்மாவிருந்தான். அது மறந்து போனவுடன் ஒருநாள் சிறுவனிடஞ் சென்று, "போனவெல்லாம் போகட்டும். இனிமேல் நாம் பகையின்றி ஒற்றுமையாக இருப்போம்," என்று சொல்லிச் சூழ்ச்சியாக அவனை நட்புச் செய்து கொண்டான். "நம்முடைய நண்பர்களுக்கு ஒரு நாளைக்கு விருந்து செய்து வைக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அன்றைக்குப் பழைய நண்பனாகிய நீயும் வந்து சேரவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்," என்று சொன்னான். கபடமற்ற சிறுவன் கப்பல்காரன் சொல்லுவதை உண்மையென்று நம்பினான். "அப்படியே ஆகட்டும்," என்று ஒத்துக்கொண்டான்.

மதுவால் மயங்குதல்

கப்பல்காரன் கேட்டுக்கொண்டபடியே சிறுவன் அவனுடைய இல்லத்திற்குச் சென்று பலவகை உணவுகளைச் சாப்பிட்டான். சாராயத்தையுங் கண்டபடி குடித்துத் தன்னிலை தனக்குத் தெரியாமல் மயங்கிப் போய்க் கிடந்தான். அச் சமயம் பார்த்துக் கப்பல்காரன் சிறுவனுடைய வீட்டுச் சாவியைப் பிடுங்கிக் கொண்டு அவ் வீட்டிற்கு ஓடினான்.

பொறியை எடுத்துக்கொண்டு கப்பலேறுதல்

யாருக்குந் தெரியாமல் சிறுவனுடைய வியத்தகு பொறியைத் தூக்கிக்கொண்டு கப்பலுக்கு ஓடினான். உடனே கப்பலைச் செலுத்திக் கொண்டு சொந்த ஊரை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

சிறுவன் தெளிதல்

மாலையிற் சிறுவன் மயக்கந் தெளிந்து எழுந்து பார்த்தான். ஒருவரையுங் காணவில்லை. 'என்னவோ மோசம் நடந்திருக்கிறது' என்று எண்ணிக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குப் போய்ப்பார்த்தான். பொறியைக் காணவில்லை.

'தன் தலைவனாகிய கப்பல்காரன்தான் இதனைத் திருடிக் கொண்டு போயிருக்கவேண்டும்' என்று எண்ணினான். ஊரார்கள் பலரைத் தனக்கு உதவியாக அழைத்துக் கொண்டு கப்பல் இருந்த இடத்திற்கு வந்து உசாவினான். கப்பல் புறப்பட்டுப் போய்விட்டதைக் கண்டான். 'இனி மேல் என்ன செய்கிறது? நாம் கொடுத்து வைத்தது இவ்வளவுதான். தெய்வத்திருவருளால் சிறிது பணஞ் சேர்ந்திருக்கிறது. இதைக்கொண்டு நாம் காலத்தைத் தள்ளலாம்,' என்று உறுதி செய்துகொண்டு அவ் வூரி லேயே நிலையாகத் தங்கி வாழ்க்கை நடத்தத் தொடங் கினான்.

உப்புண்டாக்குதல்

பொறியைக் களவு செய்துகொண்டு புறப்பட்ட வணிகன் மிகுந்த களிப்படைந்தான். 'இனிமேல் செல்வத் தில் நமக்கு ஒப்பானவர்கள் ஒருவரும் இல்லை'யென்று சொல்லுமாறு பெரும்பொருள் சேர்த்துக் கொண்ட பிறகு 'இந்தப் பொறி ஒருவருக்கும் பயன்படாமல் போகும்படி சுக்கல் சுக்கலாக உடைத்துவிடுவேன். முன்பு அந்தக் கெட்ட பையல் என்னை அடித்தானே அப்போது இந்தப் பொறி அசையும்படி சொன்ன சொற்களும் நினைவில் இருக்கின்றன' என்று இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே போனான். அப்படிப் போகும்போது பசியுண் டாகியது. வேலைக்காரனை அழைத்துச் சாப்பாடுகொண்டு வருமாறு கட்டளையிட்டான். வேலைக்காரன், "நாம் புறப் பட்ட பரபரப்பில் உப்புக்கொண்டு வருவதற்கு மறந்து விட்டோம். ஓர் உப்புக்கல்கூட இப்பொழுது இல்லை," என்றான். தலைவன் அதனைக் கேட்டு, "நீ இப்போது அதைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. எதுவேண்டு மானாலும் அதனை உண்டாக்கிக் கொடுக்க எனக்குத் தெரியும். இப்பொழுது நான் உப்பு உண்டாக்குகிறேன் பார்," என்று சொன்னான். பிறகு பொறியை ஓர் உயர்ந்த இடத்திலே தூக்கிவைத்துப், "பொறியே பொறியே சுவாகா சிறிது உப்புக் கொடுக்கவேண்டும்," என்று

வேண்டிக் கொண்டான். பொறி உடனே உப்பை வெளிப் படுத்தத் தொடங்கியது. வேண்டிய அளவு உப்புச் சேர்ந்த பிறகு பொறியை நிறுத்தப் பார்த்தான். அதனை நிறுத்துவதற்குச் சொல்லவேண்டிய சொல்லைச் சொல்லு வதற்கு அவனுக்கு மறந்து போய்விட்டது.

பொறியை உடைத்து விடுதல்

இதற்குள் உப்புக் கப்பல் நிறையக் குவிந்துவிட்டது. அதை எப்படியாவது நிறுத்திவிடவேண்டும் என்று எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. 'ஆகவே உப்பு இன்னும் மிகுதிப் பட்டுக் கப்பலை அமிழ்த்திவிடாமல் இருப்பதற்கு அந்தப் பொறியை உடைத்துவிடுதலே தக்கது' என்று முடிவுசெய்து அதனை இரண்டாக உடைத்துவிட்டான். ஆயினும் உப்புண்டாவது குறைய வில்லை. இப்பொழுது இரண்டு துண்டங்களும் உப்பைச் சொரியத் தொடங்கிவிட்டன. உப்பின் பளுவைத் தாங்க முடியாமல் கப்பல் கடலில் அமிழ்ந்து போய்விட்டது. பொறியைக் களவு செய்துவந்த கப்பற்காரனும் அவ னுடைய வேலைக்காரர்களும் கடலிலே அமிழ்ந்தி மடிந்து போனார்கள்.

முடிவுரை

அந்தப் பொறித் துண்டங்கள் இரண்டும் இன்றைக் குங்கூட உப்பைச் சொரிந்துகொண்டுதான் இருக்கின்றன. அதனாலேதான், இந்த உலகத்து மக்களுக்கு நாள்தோ றும் வேண்டிய உப்பையெடுத்துங்கூட மேன்மேலும் உப்பு உண்டாகிக் கொண்டு இருக்கிறது.

---

௫௦. எதற்கும் அஞ்சாத இளவரசன்

நாடு சுற்றல்

முன்காலத்தில் கலியாணபுரம் என்னும் பட்டணத்தில் கலியாணராசன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய மகன் மிகுந்த வீரனுகவும் எதற்கும் அஞ்சாதவனுகவும் மிகுந்த ஆற்றலும் சுறுசுறுப்பும் உள்ளவனுகவும் இருந்தான். அவனுக்குத் தன்னுடைய வீட்டிற்குள்ளேயே அடைந்துகிடப்பதற்குச் சிறிதும் விருப்பம் இல்லே. பற்பல நாடுகளேயும் சுற்றி ஆங்காங்குள்ள வேடிக்கைகளேயெல்லாம் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று எண்ணினன். தன்னுடைய தாய் தந்தையர்களிடத்திலே விடைபெற்றுக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டான். ஆங்காங்குள்ள புதுமைகளேயெல்லாம் பார்த்துக்கொண்டே சென்முன். அவனுக்கு இராப்பகல் இரண்டும் ஒரே தன்மையாக இருந்தபடியால் இரவில் ஓரிடத்தில் தங்குவதென்றும் பகலில் நடப்பதென்றும் வழக்கம் வைத்துக்கொள்ளாமல் இரவும் பகலும் ஒரே தன்மையாகப் போய்க்கொண்டிருந்தான்.

அரக்கன் வீடு

இவ்வாறு அவன் சென்றுகொண்டிருக்கும்போது வழியிலே ஓர் அரக்கனுடைய மாளிகை இருந்தது. அம் மாளிகை வழியாகப் போகையில் அவனுக்குக் களேப்பு மிகுதியாக இருந்தபடியினல் அவ்வீட்டு வாயிலிலே சிறிது நேரம் உட்கார்ந்தான். அவ் வீட்டு முற்ற வெளியைப் பார்த்தான். அங்கு மிகப்பெரிய யானேயளவான கோலி, பந்து முதலிய அரக்கனுடைய விளேயாட்டுப்பொருள்கள் இருந்தன. அவற்றைக் கண்டவுடனே இளவரசன் பந்தடித்து விளேயாடவேண்டும் என்றுவிரும்பினன். எழுந்தோடி அவற்றை யெடுத்துக்கொண்டு விளேயாடலானன். விளேயாடும்பொழுதும் அடிக்கும்பொழுதும் குறித்த விடம்போய் விழும்போதும் கைகொட்டி நகைப்பான்.

அப்பொழுது அந்த வீட்டிலே குடியிருந்த அரக்கன் உள்ளே படுத்திருந்தான். அவன் இளவரசனுடைய கூச்சலைக்கேட்டு வெளியே எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு அற்ப மனிதன் தன்னுடைய விளையாட்டுக் கருவிகளை யெடுத்து விளையாடுகிறதைக் கண்டான். "அடா! புழுவே! நீயாவது என்னுடைய கருவிகளையெடுத்து விளையாடவாவது? யார் உனக்கு இவ்வளவு வலிமை கொடுத்தது?" என்று சொல்லிக் கத்தினன். அரக்கனுடைய இரைச்சலைக்கேட்ட இளவரசன் 'யார் இப்படிக் கூச்சலிடுகிறது?' என்று நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்தான். கடைசியில் வீட்டுக்குள் இருக்கும் அரக்கன்தான் கூச்சலிடுகிருன் என்று உணர்ந்தான். அந்த அரக்கனைப் பார்த்து, "ஏ அறிவற்ற முழுமகனே! வீணாக ஏன் கூச்சலிடுகிருய்? உலகத்தில் நீ ஒருவன்தான் வல்லமையுடையவன் என்று எண்ணிக்கொண்டாயோ? என்னைப் பார்க்கினும் நீ மிகவும் கெட்டிக்காரன்தானே? நான் எத்தகைய முடிக்கமுடியாத காரியத்தையும் செய்து முடிப்பேன். நீ பலவான் ஆனால் எழுந்து வெளியே வா; ஒரு கை பார்ப்போம். வீட்டுக்குள் இருந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு வீணாகத் துள்ளாதே," என்று சொன்னன். அதனைக்கேட்டு அந்த அரக்கன், "அவ்வளவு பலசாலியான நீ யாரடா?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தான். தன்னுடைய பெரிய பந்தைத் தூக்கி அவன் எளிதாக விளையாடுவதைப் பார்க்கவே அவனுக்கு மேலும் வியப்பு அதிகமாய்விட்டது. இளவரசனைப் பார்த்து, "மனிதப் பயலே! நீ ஆற்றலுடையவன் என்ருல் தேவமரத்தில் இருந்து பழம் ஒன்று கொண்டுவந்துவிடு; பார்க்கலாம்," என்று சொன்னன். காரணம் இவன் பலமுறை முயன்றும் அந்தப் பழத்தைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது.

இளவரசன் விடை

அரக்கன் கூறியவைகளைக் கேட்ட இளவரசன், "அந்தப் பழம் உனக்கேன்?" என்று கேட்டான். அதற்கு

அரக்கன், "எனக்குத் தேவையில்லை. என் மனையாட்டி அதன்மேல் விருப்பங்கொண்டிருக்கிறாள். அதற்காக நான் இவ் வுலகமெல்லாம் சுற்றிப் பார்த்தேன். அஃது இருக்கும் இடத்தைக்கூட என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை," என்று சொன்னான். இதனைக்கேட்ட இளவரசன், "இதிலிருந்தே நீ கையாலாகாத சோம்பேறி யென்பது நன்றாகப் புலப்படுகிறது. நான் வெகு விரைவாக அந்த மரத்தைக் கண்டு பிடித்துப் பழத்தைக் கொண்டு வருகிறேன் பார்," என்று சொன்னான்.

தேவமரத்தின் செய்தி

இளவரசன் இயம்பியதைக் கேட்ட அரக்கன், "நீ அவ்வளவு எளிதாக எண்ணிவிடாதே. அந்த மரம் இருக்கிற தோட்டத்தை நுனியில் இருப்புச் சலாகைகள் நாட்டிய பெரிய மதில் ஒன்று சூழ்ந்துகொண்டிருக்கிறது. அம் மதிலைச் சுற்றிக் கொடிய காட்டுவிலங்குகள் நெருங்கி அத் தோட்டத்துக்குள் எவரும் நுழையாதபடி காவல் காத்துக் கொண்டிருக்கின்றன," என்று சொன்னான். இளவரசன், "ஆனாலும் என்ன? அவை எனக்கு எளிதில் உள்ளே போக வழிவிட்டுவிடும்," என்றான். அவ் வரக்கன், "உன்னுடைய விருப்பப்படியே அத் தோட்டத்திற்குள் நுழைந்து அங்குள்ள தேவமரத்துப் பழத்தை நீ பார்ப்பதாக இருந்தாலும் அதைக் கைக்கொள்ள உன்னால் முடியாது. ஏனெனின் அம் மரத்தில் ஒரு வளையம் இருக்கிறது. அவ் வளையத்துக்குள்ளாகவே கையை நுழைத்துப் பழம் பறிக்கவேண்டும். அது மிகவும் முடியாத காரியம்," என்றான்.

தேவமரத்தைத் தேடிச் செல்லுதல்

அரக்கன் கூறியதைக் கேட்டு எதற்கும் அஞ்சாத இளவரசன், "அத்தகைய அருமையான பொருளைப் பெறுவதாலாகிய பெருமை முதலாவதாக எனக்கே கிடைக்கும்," என்று சொல்லி அந்த அரக்கனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். காடு மலை முதலியவை

களைக் கடந்து நெடுந்தொலை சென்றான். அவ்வாறு பல காத தூரங்கடந்து சென்ற பின்பு அஞ்சத்தக்க ஒரு காட்டின் நடுவே அந்த அரக்கன் சொன்ன வியக்கத்தக்க தோட்டம் இருந்தது.

தோட்டத்துக்குள் நுழைதல்

இளவரசன் அங்கே போய்ப் பார்த்தபோது அதைச் சுற்றிக் காவல் காத்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான விலங்குகளும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. அவன் அவைகளைக் கடந்து போனபோதும் அவைகளின் உறக்கம் தெளியவில்லை. இதுதான் சமயம் என்று அவன் அத் தோட்டத்தின் மதிலின்மேல் ஏறி மெதுவாக இறங்கி உள்ளே சென்றான்.

பழம் பறித்தல்

தோட்டத்தின் நடுவில் தேவமரம் இருந்தது. அதில் பழங்கள் பழுத்துக் குலுங்கிக்கொண்டிருந்தன. இளவரசன் அதனைப் பார்த்தவுடனே மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அதன்மேல் ஏறிப் பழம் பறிக்கப் பார்த்தான். பழத்துக்காகக் கையை நீட்டுகிற வழியிலே கூரிய கத்திபோலக் கங்கணம் ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அந்தக் கங்கணம் பார்ப்பதற்கு அஞ்சத்தக்கபடியாக இருந்ததால் எவரும் பழம் பறிப்பதற்குக் கையை நீட்டவேமாட்டார்கள். ஆயினும் இளவரசன் அதற்கு அஞ்சாமல் அதன் வழியாகக் கையை நுழைத்துப் பழத்தைப் பறித்துக்கொண்டான். பறிக்கையில் கையை அறுத்துவிடுவதற்குப் பதிலாக அந்தக் கங்கணம் அவனுடைய கையில் காப்பாக மாட்டிக்கொண்டுவந்துவிட்டது. உடனே அவனுடைய உடலில் அளவற்ற வலிமை உண்டாகிவிட்டது. அவன் மிகுந்த களிப்புடன் மரத்தில் இருந்து கீழே இறங்கினான்.

திரும்பி வருதல்

இறங்கி வெளியே போவதற்கு வழி பார்க்கையில் அத் தோட்டத்து வாயில் தானே திறந்து அவனுக்கு

வழி விட்டது. அதன் வழியே அவன் வெளிப்பட்டுப் போனபோது அவ் வாயிலிலே காவல் காத்துக்கொண்டிருந்த பெரிய சிங்கம் அவனுக்குப் பணிந்து அவனுக்கு ஆட்பட்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றது. இவ்வாறு எதற்கும் அஞ்சாத இளவரசன் அந்த அரக்கன் கொண்டுவரச்சொன்ன அருமையான பழத்தை எளிதாகவே தேடிக்கொண்டுபோய் அவன் கையிற் கொடுத்தான்.

அரக்கனுக்கும் இளவரசனுக்கும் போர்

நெடுநாளாகத் தான் முயன்றும் தனக்குக் கிடைக்காதிருந்த அந்த அருமையான பழத்தை அவ்வளவு எளிதாக இளவரசன் தேடிக்கொண்டுவந்து கொடுக்கவே அரக்கன் மிகுந்த களிப்படைந்தான். அதை வாங்கித் தன் மனைவியினிடத்திலே கொண்டுபோய்க் கொடுத்தான். அவ்வரக்கி நுண்ணுணர்வு மிக்கவள். அப் பழத்தின் வரலாறு முழுவதும் அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனைக் கொண்டுவந்து கொடுத்த தன்னுடைய கணவன் கையில் கடகம் இல்லாமலிருப்பதைக் கண்டு, "இதனை நீ கொண்டுவந்ததாக எனக்குத் தோன்றவில்லை. நீ கொண்டுவந்தானால் உன்னுடைய கையிலே கடகம் இருக்கவேண்டுமே," என்று சொன்னாள். அதனைக்கேட்ட அரக்கன், "அக் கங்கணத்தை இதோ எடுத்துக்கொண்டு வருகிறேன்," என்று சொல்லிவிட்டு அச் சிறுவனிடத்திற்கு ஓடினான். அவனிடமிருந்து அவ்வளையலை எளிதில் பிடுங்கிக்கொள்ளலாம் என்பது அவனுடைய எண்ணம். அவன் இளவரசனிடம் வந்து அவன் கையில் இருந்த வளையலைக் கொடுக்கும்படி கேட்டான். இளவரசன் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி மறுத்தான். "நீ கொண்டுவந்த பழத்தோடு கூடவே இந்த வளையலும் இருக்கவேண்டும். இதனைக் கொடுக்க நீ இணங்காமற் போனால் உடனே நான் உன்னைக் கொன்றுவிடுவேன்," என்று சொல்லி அச்சுறுத்தினான். எதற்கும் அஞ்சாதவன் இந்த மிரட்டலுக்கா அஞ்சப்போகிறான்?

இரண்டுபேருக்கும் சிறிது நேரம் சொற்போர் நடைபெற்றது. பிறகு மற்போரும் மூண்டது. இளவரசன் அந்தக் கங்கணத்தால் மிகுந்த வல்லமை பெற்றிருந்தானுகையால் எவ்வளவு நேரம் போராடியும் அவனே வெல்ல அரக்கனுல் முடியவில்லை.

சூழ்ச்சி செய்தல்

அதனைக்கண்ட அரக்கன் 'நாம் இவனை மோசம் செய்துதான் ஆகவேண்டும்' என்று முடிவு செய்தான். இளவரசனைப் பார்த்து, "குழந்தாய்! நாம் இவ்வளவு நேரமாகப் போராடி மிகக் களைப்புற்றிருக்கிறோம். ஆற்றுக்குப்போய் நீராடிச் சாப்பிட்டுவிட்டுவந்து மறுபடியும் போராடுவோம்," என்று சொன்னுன். சூதுவாதறியாத இளவரசன் அதற்கு இணங்கினுன். அரக்கனேடு ஆற்றுக்குப்போய் நீராடினுன். நீராடும்போது தன்னுடைய ஆடையணிகலன், கங்கணம் முதலியவைகளைக் கரையிலே களைந்து வைத்தான். இளவரசனேடு நீராடிக்கொண்டிருந்த அரக்கன் திடீரென்று போய்க் கரையில் இருந்த கங்கணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டம்பிடித்தான். ஆயினும் அதனுல் அந்தக் கடகம் அரக்கனுக்கே உரிமையானதாக முடிந்துவிடவில்லை. இளவரசனுக்கு அடிமைப்பட்டிருந்த சிங்கமானது அரக்கனைத் துரத்திக்கொண்டு போய் அவன் கையில் இருந்த கங்கணத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்து தன்னுடைய தலைவனுகிய இளவரசன் கையில் கொடுத்துவிட்டது. அரக்கனுல் சிங்கத்தை வெல்ல முடியவில்லை. அக் கொடிய அரக்கனுடைய தொல்லை அவ்வளவோடு ஒழியவில்லை. மறுபடியும் ஆற்றங்கரைக்குத் திரும்பிவந்து அங்கொரு மரத்தடியில் ஒளிந்துகொண்டிருந்தான். இளவரசன் கரையிலேறி ஆடையணிகலன்களை அணிந்துகொள்ளுகிற சமயத்தில், அங்கொரு மரத்தடியில் ஒளிந்துகொண்டிருந்து இளவரசனுக்குத் தெரியாமல் அவனுக்குப் பின்னே போய் அவனுடைய இரண்டு கண்களையும் குத்திவிட்டான். அரக்கன் விரும்பிய தேவமரத்தின் பழத்தை இளவரசன்

கொண்டுவந்து கொடுத்ததற்கு இளவரசனுக்குக் கிடைத்த கைம்மாறு இதுதான் நாம் எப்போதும் தீயவர்களுக்கு உதவி செய்தால் நமக்குத் தீமை நேருவது திண்ணம்.

கொல்லுவதற்குச் சூழ்ச்சி

இளவரசன் இரண்டு கண்களுந் தெரியாமற் றடுமாறினான். அப்போது அரக்கன் அவனுக்கு நன்மை செய்பவன்போல் அவனிடம்போய்ச் சில நன்மொழிகளைக் கூறினான். மெல்லக் கையைப் பிடித்து ஒரு செங்குத்தான குன்றின் முடிக்கு அழைத்துக்கொண்டுபோனான். 'இங்கிருந்து இவன் ஓரடி நகருவானானால் கீழே விழுந்து இறந்துபோவான். காப்பை நாம் எளிதாகக் கைப்பற்றிக்கொள்ளலாம்,' என்று எண்ணினான். அவனை அங்கேயே விட்டுவிட்டுத் தான் அப்புறம் சென்றான். தலைவனிடத்திலே அன்புள்ள சிங்கமானது தன்னுடைய தலைவனுக்கு எத்தகைய இடுக்கணும் நேராதபடி அவனைப் பாதுகாத்துக்கொண்டிருந்தது. சிறிது நேரம் பொறுத்து அரக்கன் வந்து பார்த்தான்.

அரிமாவின் உதவி

தன்னுடைய சூது இளவரசனிடத்தில் பயன்படாமற் போனதைக் கண்டு, 'இந்தச் சிறிய மனிதனை நம்மால் கொல்ல முடியவில்லையல்லவா' என்று மிகுந்த சினங் கொண்டான். அவனைக் கீழே தள்ளிவிட எண்ணி மிக உயரமான இடத்திற்குக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோனான். நல்ல குணம் உள்ள அந்தச் சிங்கம் தன தலைவனை விடாமற் பின்தொடர்ந்து சென்றது. அரக்கன் இளவரசனைக் கீழே தள்ளப்போகிற சமயத்தில் அந்த அரக்கனையே தள்ளிவிட்டது. உடனே அவன் உருத் தெரியாமல் அழிந்துபோனான்.

கண் தெரிதல்

பிறகு அந்தச் சிங்கம் ஒரு கெடுதியும் உண்டாகாமல் தன் தலைவனை மெல்லக் கையைப் பிடித்து அண்மை

யில் இருந்த ஓராற்றங்கரைக்கு அழைத்துக்கொண்டு சென்றது அங்கே ஒரு மரத்தடியில் உட்கார வைத்து ஆற்றின் நீரைத் தன் வாலால் எடுத்து அவன் முகத்தின்மேல் தெளித்தது. இரண்டொரு நீர்த்துளிகள் இமையின் மேல் பட்டவுடனே இளவரசனுக்குக் கண்கள் நன்ருகத் தெரியலாயின. கண் தெரிந்தவுடன் அவன் பார்த்தபோது எங்கிருந்தோ வந்த கண் தெரியாத பறவையொன்று அவ் வாற்றிலே மூழ்கிக் கண்ணைப் பெற்று ஒரு மரத்தில் உட்கார்ந்தது. அதனைக் கண்டு இளவரசன் 'கடவுளுடைய அருள் எவ்வளவு வியக்கத் தக்கதாக இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டு தானும் எழுந்து போய் அந்த ஆற்றில் முழுகினன். மூழ்கியெழுந்து கரைமேல் வந்தபோது உடலில் சிறந்த அழகும் ஆற்றலும் உண்டானதன்றிக் கண் மிகத் தெளிவாக நெடுந்தொலை பார்க்கும்படியாகத் தெரிந்தது.

பாழ் மாளிகை

பிறகு இளவரசன் தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் நீக்கினதற்காகக் கடவுளைப் பலவாறு போற்றி வணங்கிவிட்டு அங்கிருந்து எழுந்து அப்புறஞ் சென்ருன். சிங்கமும் பின் தொடர்ந்து போயிற்று. போகும் வழியில் ஓர் அரண்மனை எவருடைய சாபத்தினலோ அழிந்து கிடந்தது. அதே சாபத்தால அவ் வரண்மனை வாயிலிலே பெண் ஒருத்தி உடல் கறுத்துப் பார்ப்பதற்கு மிகவும் விகாரமாய் உட்கார்ந்திருந்தாள். அவள் இந்த இளவரசனைப் பார்த்து, "ஓ இளவரசனே! ஒரு கொடிய பொல்லாதவனல் எனக்கு நேரிட்டிருக்கிற சாபத்தை விடுவித்து என்னைக் காப்பாற்றுவாயாக," என்று சொல்லிக் கூவியழைத்தாள். அதைக் கேட்ட இளவரசன் அவளிடம் போய், "பெண்ணே! அப்படியே ஆகட்டும், அதற்காக நான் செய்யவேண்டியதென்ன?" என்று கேட்டான். அதற்கு அவள் "மூன்று இரவு இந்த மாளிகையின் முற்றத்தில் காத்திருக்கவேண்டும். அப்பொழுது உங்களை யார் வந்து என்ன செய்தபோதினும் சிறிதும் அஞ்சாமல் எவ்

வளவு கொடுமைப் படுத்தினாலும் துணிச்சலோடு பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும். எவ்வாறு வருத்தினாலும் அவர்கள் உங்களைக் கொல்வதற்கு மட்டும் முடியாது. மூன்று இரவுகள் அந்தக் கொடியவர்கள் செய்யும் கொடுமையைப் பொறுத்து ஈடுகொடுத்து வருவீர்களானால் எனக்கு இந்தச் சாபம் நீங்கிவிடும்," என்று சொல்லியழுதாள்.

பூதங்களோடு போர்

அதனைக் கேட்டு இளவரசன், "அப்படியே ஆகட்டும் நீ வருத்தப்படாதே! கடவுளுடைய திருவருளினால் நான் உன்னைச் சாபத்தில் இருந்து விடுவிக்கிறேன்," என்று சொல்லிவிட்டு அந்த மாளிகையின் கூடத்திலே போய் உட்கார்ந்தான். 'இரவு என்ன நடக்கிறதோ பார்ப்போம்' என்று காத்துக்கொண்டிருந்தான். 'இரவு பதினைந்து நாழிகை வரையில் ஒன்றும் நடைபெறவில்லை. எல்லாம் அமைதியாகவே இருந்தது. பிறகு திடீரென்று பெருங் கூச்சல் கேட்டது. பல கொடிய பூதங்கள் நான்கு பக்கங்களினும் இருந்து வந்து அம் மாளிகைக்குள் புகுந்தன. பெரிதாகத் தீ வளர்த்துக்கொண்டு அதைச் சுற்றிக் குதித்துக் குதித்து விளையாடத் தொடங்கின. இளவரசன் அங்கே வந்திருந்த செய்தி முதலில் அவைகளுக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து அவைகளில் ஒன்றுக்குத் தலைநோய் உண்டாயிற்று. அதைக் கண்டு அது, "ஒகோ இஃதென்ன புதுமை! ஒரு நாளும் இல்லாதபடி எனக்குத் தலைநோய் உண்டாகிறது? யாரோ ஒரு புது மனிதன் இம் மாளிகைக்குள் வந்திருக்கவேண்டும்," என்று கூவிக்கொண்டு ஓடிற்று. அதைக் கேட்டு அங்கிருந்த பூதங்களெல்லாம் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு எழுந்து அம் மாளிகைக்குள் ஓடின. அக் கூச்சலைக் கேட்டால் எப்படிப் பட்டவர்களும் நடுநடுங்கிப் போவார்கள். இளவரசன் மட்டும் சிறிதும் மனங்கலங்காமல் இருந்தான். உடனே பூதங்கள் இளவரசன்மேல் விழுந்து அடிப்பதும் கடிப்பதும் இழுப்பதும் பறிப்பதும் தள்ளு

வதுங் கிள்ளுவதுமாகப் பலவகையான தொல்லைகளைக் கொடுத்தன. என்ன செய்தபோதிலும் இளவரசன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தான். இவ்வாறாகப் பொழுது விடிந்தது. எல்லாம் மறைந்துபோயின. இளவரசன் இரவு முழுவதும் பூதங்களோடு போராடியபடியினால் களைப்படைந்து வீழ்ந்துவிட்டான்.

தெளிவடைதல்

பொழுது விடிந்ததும் மாளிகையில் இருந்த பெண் எழுந்து வந்தாள். இளவரசன் களைத்து வீழ்ந்திருப்பதைப் பார்த்தாள். ஓர் ஏனத்தில் அமிர்த தீர்த்தத்தைக் கொண்டு வந்து தெளித்தாள். அந்த அமிர்த தீர்த்தம் இறந்து போனவர்களையும் உயிர்ப்பிக்கக் கூடியது. இளவரசனுக்கு அப்பொழுதே களைப்புத் தீர்ந்ததுடன் புதிய ஆற்றலும் உள்ளக் கிளர்ச்சியும் உண்டாயின. "தெய்வத் திருவருள் உமக்கு நன்றாக அமைந்திருக்கிறது. மற்றை இரண்டு இரவுகளையும் நீர் போக்கி வெற்றியடைந்து நலம் பெறவேண்டும்," என்று அந்தப் பெண் வாழ்த்துரை கூறினாள்.

மறுநாள் இரவு

மறுநாள் இரவும் அந்தக் கொடிய பூதங்கள் வந்து இளவரசனோடு போராடின. அன்றிரவும் செய்த தொல்லைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு இரவைக் கழித்துவிட்டான். மறுநாள் காலையில் மாளிகைப் பெண் இளவரசனுடைய களைப்பைப் போக்கிவிட்டாள்.

மூன்றும் நாள் இரவு

இனிமேல் அவன் தொல்லைப்பட வேண்டியதாக எஞ்சியிருப்பது ஒரே ஓர் இரவுதான். அன்று இரவு அந்தக் கொடிய பூதங்களெல்லாம் வந்து அவனைப் பார்த்து, "நீ இன்னுமா உயிரோடிருக்கிறாய்? இதோ நொடிப் பொழுதில் உன்னைக் கொன்று போடுகிறோம்," என்று பெருங் கூச்சலிட்டு அவன்மேல் வீழ்ந்து பலவாறு

பிடுங்கின. எதற்கும் அவன் சலிப்படையாமல் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தான். பொழுதுவிடிகிற வரையில் பூதங்கள் போர் செய்துவிட்டுக் காலையில் ஓடிப்போயின.

முடிவு

பூதங்களெல்லாம் போனபிறகு இளவரசன் சிறிதும் கைகால்களை அசைக்கக்கூட முடியாமல் கீழே விழுந்துவிட்டான். மாளிகைப் பெண் காலையில் எழுந்து அமிர்த தீர்த்தநீரைக் கொண்டுவந்து கொடுத்தாள். அப்பொழுதே அவனுடைய களைப்பு முழுவதும் நீங்கிப்போயின. முன்னிலும் பன்மடங்கு பேராற்றலோடு எழுந்திருந்தான். மாளிகைப் பெண்ணினுடைய விகாரம் முழுவதும் நீங்கிப் போய்விட்டது. அவள் மிகுந்த பேரழகுடையவளாய்த் தெய்வப் பெண்ணைப்போல அவனுக்கெதிரே நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து அவன் மிகுந்த களிப்படைந்தான். பிறகு அவள் ஒரு கத்தியை அவனுடைய கையிலே கொடுத்து, "இதனை நீங்கள் மூன்று முறை சுழற்றவேண்டும்," என்று கூறினாள். அவன் அவ்வாறே சுழற்றினான். அம் மாளிகையைப் பிடித்திருந்த பீடைகளெல்லாம் உடனே நீங்கிப் போய்விட்டன. அச் சிறு மாளிகை அளவற்ற பொருள்கள் நிறைந்த பெரிய நகரமாகிவிட்டது. கோட்டைவாயிலிலே தேர் யானை குதிரை காலாட்படை முதலியவை நிறைந்திருந்தன. ஒலிக் கருவிகள் பல முழங்கின. பலபேர் வந்து இளவரசனுக்கும் இளவரசிக்கும் வாழ்த்துரை கூறினார்கள். அன்றைக்கே அவ் விருவருக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அன்று முதல் எதற்கும் அஞ்சாத இளவரசன் தானே அந் நகரத்து அரசனாய் அரசாட்சியை ஏற்றுக் கொண்டு சிறப்பாக வாழ்ந்திருந்தான்.

ருக. முட்டாளுந் தட்டானும்

பயிர்த்தொழிலாளி

ஓர் ஊரில் பயிரிடுங் குடியாகிய ஓர் எளியவன் இருந்தான். அவன் கூரிய அறிவற்றவனாக இருந்தாலும் சிறந்த உழைப்பாளியாக இருந்தான். அவனுக்குள்ள நிலம் மிகச் சிறிதாக இருந்தபடியால் அந்த நிலத்தை நன்றாக உழுது எரு முதலியனபோட்டு அதில் தினைப்பயிர் விதைத்தான். ஆடுமாடு முதலியன மேய்ந்து அழிக்காமல் நாற்புறமும் வேலியிட்டுப் பாதுகாத்தான்.

ஐராவதம்

இவ்வாறிருக்கையில் அமராவதிப் பட்டணத்தையாளும் தேவேந்திரனுடைய வெள்ளையானையானது இத் தினைப் பயிர் நன்றாக ஓங்கி வளர்ந்து பசுமையாக விளங்குவதைக் கண்டு நாள்தோறும் நள்ளிரவில் தெய்வலோகத்தில் இருந்து இறங்கிவந்து அத் தினைப்பயிரை வயிறார மேய்ந்துவிட்டுச் சென்றுகொண்டிருந்தது. அந்த ஏழைக் குடியானவன் தன்னுடைய பயிர் தலையெடுக்காமல் நாளுக்கு நாள் அழிந்து வருவதைக்கண்டு மிகுந்த வருத்தம் அடைந்தான். "அந்தோ! நான் இந்த ஆண்டு முழுவதும் என்னுடைய மனைவி மக்களை எவ்வாறு காப்பாற்றப் போகிறேன்? இந்தப் பயிர்த்தொழிலையே உறுதியாக நம்பியிருந்தேனே காட்டு விலங்குகளோ ஆடுமாடுகளோ இவ்வாறு வந்து அழிக்கின்றனவே. நான் என்ன செய்வேன்? எவ்வாறு பிழைப்பேன்? தெய்வமே நீதான் காப்பாற்ற வேண்டும்," என்று சொல்லிக்கொண்டு அந்தத் தினை வயலைச் சுற்றிச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தான். அப்போது பருத்த உரல்போன்ற யானையின் காலடி அவ் வயலில் எங்கும் பதிந்திருத்தலைக்கண்டான். "ஓகோ! இவ்வூரில் உள்ள உரல்களே நம்முடைய பயிரை இவ்வாறு மேய்ந்து அழித்திருக்கின்றன. பயிர் முதிர்ந்து விளைந்து அறுத்தபின் நன்றாக உண்ண இருக்கும் இவ்வுரல்களுக்கு

இவ்வளவு பரபரப்பா? இவைகளுக்கு வந்த பஞ்சம் என்ன? ஒரு நாளேனும் பட்டினிகிடக்கின்றனவா? 'உரலுக்குக் கருப்பென்ன உழக்காவதுபோட்டு இடியார்களா?'' என்னும் பழமொழி பொய்யா? நல்லது; எனக்கு இத்தகைய அழிவையுண்டாக்கும் இக் கள்ள உரல்களை இன்றே கண்டுபிடிக்கிறேன்,'' என்று அன்று இரவில் வீடுவிடாய்த் தவருமல் நுழைந்து உரல்களையெல்லாம் தடவிப்பார்த்தான். ஒன்றிலும் தினைப்பயிரைக் காணவில்லை. மன வெறுப்புடன் விட்டிற்குத் திரும்பிவந்தான். 'இக் களவை இரவில் ஒளித்திருந்து கண்டுபிடிக்கிறேன்' என்று முடிவு செய்துகொண்டு இரவில் சாப்பிட்டுவிட்டு வயலுக்குச் சென்ருன். அங்குப் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தடியில் ஒருவருக்குந் தெரியாமல் பதுங்கிக்கொண்டு கண்ணுறங்காமல் விழித்தபடியே பார்த்துக்கொண்டிருந்தான். அன்று நள்ளிரவில் தேவேந்திரனுடைய வெள்ளையானை சுவர்க்கலோகத்தில் இருந்து இறங்கிவந்து வழக்கப்படியே அத் தினைப் பயிரைக் கொள்ளையோ கொள்ளை என்று மேய்ந்துகொண்டிருந்தது.

தேவலோகத்திற்குச் செல்லுதல்

யானையைப் பார்த்த குடியானவன் அதனைப் பிடிக்க விரைந்தோடினுன். வெள்ளையானையானது இவனைப் பார்த்த அளவில் மேலெழுந்து ஓடத்தொடங்கிற்று. அவன் யானையை நெருங்கியபோது வால்மட்டும் எட்டினபடியால் அதைப்பற்றியாவது இழுத்துக் கீழே தள்ளலாம் என்று வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அவ் வெள்ளையானை அக் குடியானவனை அப்படியே தூக்கிக் கொண்டு மேலே எழும்பிப்போயிற்று. அவ்வாறு போகையில் குடியானவன் வாலை விட்டுவிட்டால் கீழே விழுந்து இறந்துபோவோம் என்னும் அச்சத்தினுல் விடாமல் உறுதியாகப் பிடித்துக்கொண்டு சென்ருன். அந்தயானை தேவலோகத்திற்குப்போய் அவனை ஓரிடத்தில் உதறிவிட்டுத் தன்னுடைய இருப்பிடம் போய்ச்சேர்ந்தது. தேவர்கள் அவனைப் பார்த்து, "மனிதனுகிய நீ இங்கு ஏன் வந்தாய்?''

என்று கேட்டார்கள். குடியானவன், "தேவேந்திரனைப் பார்த்துப் பேசவேண்டும். அவர் எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டான். தேவர்கள் குடியானவனை அழைத்துக்கொண்டுபோய்க் கற்பக மரநிழலில் தேவர் கூட்டங்கள் புடைசூழவும் அரம்பையர்கள் நடிக்கவும் துந்துமிகள் இசை முழக்கவும் அரியணையில் இருந்து அரசு செய்யும் இந்திரனிடத்தில் விட்டார்கள். தேவேந்திரன் குடியானவனைப்பார்த்து, "மண்ணுலகில் வாழும் மனிதனாகிய நீ இங்கு எவ்வாறு வந்தாய்? ஏன் வந்தாய்? விரைவாகச் சொல்வாயாக," என்று கண்கள் சிவக்க மிகுந்த சினத்துடன் கேட்டான்.

குடியானவன் சினம்

குடியானவன் நல்ல விவேகமற்றவன். இந்திரனுடைய சினத்தை அவன் ஒரு பொருளாக மதிக்கவில்லை.

"நன்றறி வாரில் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர்."

என்று திருவள்ளுவநாயனார் கூறியிருக்கிறார் அன்றோ? தேவேந்திரனுடைய பெருஞ் செல்வச் சிறப்புக் குடியானவனுக்கு ஒரு பொருளாகத் தோன்றவில்லை. தேவேந்திரனை மிகப்பொதுவான ஒரு மனிதனைப்போலவே எண்ணிக்கொண்டு தேவேந்திரனைப் பார்த்து, "நிலவுலகத்திலே என்னுடைய தினைப்பயிரை மேய்ந்து அழித்த உன்னுடைய வெள்ளையானையின் வாலைப்பற்றிக்கொண்டு இவ்விடத்திற்கு வந்தேன். எதற்காக வந்தேன் என்றால் என்னுடைய பயிரை உன்னுடைய யானை மேய்ந்துவிட்டதற்கு உன்னிடம் பொருளிழப்புத் தொகை பெற்றுக்கொண்டு போவதற்காக வந்தேன்," என்று சொன்னான். மேலும் தேவேந்திரனைப் பார்த்து, "யானை வைத்திருப்பவர்கள் அதற்கு வேண்டிய அளவு தீனிபோட வேண்டாமா? வேண்டிய தீனிபோட்டுக் காப்பாற்றுவதற்கு முடியாதவர்கள் பெருமைக்காக ஏன் யானை வைத்திருக்கவேண்டும்? நீ ஏறுவதற்கு யானை வைத்துக்கொண்டிருந்தால் நான்

என்னுடைய பயிரை உன்னுடைய யானைக்குத் தீனியாகக் கொடுத்து என் வாழ்வைக் கெடுத்துக்கொண்டிருக்க வேண்டுமோ? யானை ஏறுகிறவன் நீ; அதற்குத் தீனி போடுகிறவன் நான்; இதுமிக நன்றாக இருக்கிறது. என்னுடைய மனைவிமக்கள் பட்டினியால் வருந்தினால் நீ காப்பாற்றுவாயா? எனக்கு ஏற்பட்டிருக்கிற அழிவுக்கு வழி காட்டினால் ஒழிய நான் இவ் விடத்தைவிட்டுப் போக மாட்டேன்,'' என்று சொன்னான்.

இந்திரன் பொருள் அளித்தல்

தேவேந்திரன் குடியானவனுடைய அறிவின்மைக்கும் அஞ்சாமைக்கும் புன்மொழிக்கும் வியப்படைந்து குலுங் கக்குலுங்க நகைத்தான். "அப்பா! சினங்கொள்ளவேண் டாம். உனக்கு ஏற்பட்டுள்ள பொருளழிவை நான் ஈடு செய்து தருகிறேன்,'' என்று கூறியதோடு அவனுக்கு இன்னுரைகள் பல இயம்பினான். தன்னுடைய வீரர்களைப் பார்த்து, ''நீங்கள் இம் மனிதனுக்கு ஒரு மரக்கால் பொன் வராகன் கொடுத்து நிலவுலகத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டு வாருங்கள்,'' என்று கட்டளையிட்டான். அவ் வாறே தேவர்கள் ஒரு மரக்கால் நிறையப் பொன்வராகன் கொடுத்து அவனை மண்ணுலகில் கொண்டுவந்து விட்டுப்போனார்கள்.

தட்டான் வஞ்சனை

அக் குடியானவன் எப்போதும் தினைப்பயிர் விளைத்து அதனையே மாறி மற்றைப் பண்டங்களையும் வாங்கிப் பொதுவாக வயிறு வளர்த்து வாழ்க்கை நடத்தியவனாகை யால் அந்தப் பொன்வராகனுடைய அருமைபெருமை அவனுக்குச் சிறிதுந்தெரியவில்லை. ஆகவே அவன் தன் னுடைய நண்பனான ஒரு தட்டானிடத்தில் அவற்றைக் கொண்டுபோய்க் காண்பித்தான். அத் தட்டான் மிகவும் வஞ்சகனானபடியாலும், அந்தக் குடியானவன் ஒன்று மறியாத பேதையென்று சிறுபிள்ளைமுதல் அறிந்திருந்த படியாலும் அவனை வஞ்சித்து அப் பொருளைக் கைப்

பற்ற எண்ணினன். அவ்வராகன் வந்தவரலாறு எல்லா வற்றையும் அவன் வாய்மொழி மூலமாகக் கேட்டுணர்ந் தான். குடியானவனைப் பார்த்து, "அந்தோ! நீ இவ்வளவு தொலை போயும் பயனடையவில்லையே. இந்திரன் உன்னை வஞ்சித்துவிட்டான். இவ்வராகன்களில் சிலவற்றைத் தவிர மற்றவைகளெல்லாம் பதர் வராகன்கள். நான் அவ்வுண்மையை உனக்குக் காட்டுகிறேன். பார்," என்று சொல்லி அந்தக் குடியானவனை ஒரு மரத்தடிக்கு அழைத் துக்கொண்டு போனன். அவனைக் கீழே இருக்கச்சொல்லி விட்டுத்தான் அம் மரத்தின்மீது வராகன் மூட்டையோடு ஏறினன். மூட்டையை அவிழ்த்துக் கீழேயிருந்த ஒரு கல்லின்மீது கொட்டினன். அவ்வராகன்களில் நாலைந் தைத்தவிர மற்றவைகளெல்லாம் கல்லின்மேல் நில்லாமல் தெறித்துப் பக்கங்களிலே சிதறிப்போயின. உடனே தட்டான் மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்தான். குடி யானவனைப் பார்த்து, "நண்பனே! இதோ கல்லின்மேல் நின்றனவே இவைதாம் கெட்டி வராகன்கள். பக்கங்களில் சிதறிப்போயிருக்கும் இவைகள் யாவும் பதர்கள். கல்லின் மேல் விழுந்திருக்கும் கெட்டி வராகன்களை நீ எடுத்துக் கொண்டுபோய் விற்று உனக்கு வேண்டிய பொருள்களை வாங்கு. நீ மிகவும் எளியவனானபடியால் உன்னையெது வுங் கேட்பதற்கு எனக்கு மனம்வரவில்லை. நீ நன்றாக வாழ்ந்திருந்தால் அதுவே எனக்குப் போதுமானது. பய னற்ற இந்தப் பதர்களை நான் எடுத்துக்கொண்டுபோனால் உமிக்குப்பதிலாக என் கொம்மட்டியில் போடலாம்," என்றுகூறி அவற்றை வாரி ஒரு பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டு குடியானவனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான். இவ்வாறு அந்தப் பொருளின் பெரும்பகுதி அவனுக்குப் பயன்படாமல் ஒழிந்துபோய் விட்டது. குடியானவன் தனக்குக் கிடைத்த சில வராகன் களை விற்று அதனல் கிடைத்த பொருளைக்கொண்டு ஆண்டு முழுவதும் தனக்கு வேண்டிய பொருள்களை வாங் கிக் களிப்புற்றிருந்தான்.

தட்டானுக்குப் பேரவா

ஒருவனுக்கு ஒரு பொருள் கிடைத்துவிடுமாயின் அவன் மேலும்மேலும் அதில் அவாக்கொண்டு வெறி பிடித்தவனாகிவிடுவான். தட்டான் குடியானவனை மோசஞ் செய்துகொண்டுபோன அந்தப் பொருளோடு மனநிறைவு அடையவில்லை. அதனை விற்று ஏராளமான பொருள் குவித்தும் மேலும் பொருளில் பேரவாக்கொண்டு திரிந்தான். "ஆசைக்கோ ரளவில்லை" என்று பெரியோர்கள் கூறியமொழி வீணாகப்போமோ? தட்டான் குடியானவனிடம் போய், "நண்பனே! நாம் இருவரும் கூட்டுப்பயிர் செய்வோம். அப்போது முன்போலவே தெய்வலோகத்து வெள்ளையானை வந்து அப் பயிரை மேயும். அப்போது நாமிருவருமே அதன் வாலைப்பிடித்துக்கொண்டு விண்ணுலகத்திற்குப் போவோம். எனக்குப் பொன்வராகனுடைய நோட்டம் மிக நன்றாகத் தெரியுமாகையால் நல்ல வராகன்களாகப் பார்த்து அளந்து வாங்கிக்கொண்டு வந்து இருவரும் பங்கிட்டுக்கொண்டு நலமடையலாம்," என்று கூறினான்.

கூட்டுப்பயிரிடுதல்

குடியானவன் கள்ளங்கபடு அற்றவனாகையால் தட்டான் கூறியதற்கு இணங்கினான். இருவருமாகச் சேர்ந்து கூட்டுப்பயிர் செய்தனர்.

விண்ணுலகஞ் செல்லுதல்

ஒருநாள் நள்ளிரவில் விண்ணுலகத்து வெள்ளையானை வந்து அப் பயிரை மேய்ந்தது. அவ் விருவரும் அதற்காகப் பதுங்கிக் காத்துக்கொண்டு இருந்தமையால் குடியானவன் முன்னே விரைந்தோடினான். அவன் போவதற்கு முன்னரே அது மேலெழுந்துவிட்டபடியால் அவன் தனக்கு எட்டியவாலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். பின்னே ஓடின தட்டானுக்கு வால் எட்டாதபடியால் தொங்கிக்கொண்டிருந்த குடியானவனுடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அவர்கள் இரு

வரையுந் தூக்கிக்கொண்டு யானை விண்வழியாகச் சென்றது. பேராவாக்கொண்ட பேயாகிய அந்தக் கொடிய தட்டான் வாயை மூடிக்கொண்டு சும்மா போகவில்லை.

இருவரும் கீழே விழுதல்

அவன் தன்னுடைய நண்பனாகிய குடியானவனைப் பார்த்து, "அண்ணே! உனக்குத் தேவர்கள் பொன்வராகன் அளந்து கொடுத்த மரக்கால் எவ்வளவு பெரிது இருக்கும்? நம்முடைய மரக்காலைப்போல் சிறிதா? அல்லது பெரிதா?" என்று கேட்டான். குடியானவன் அறிவற்ற முழுமகனாகையால் வாலைப் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு கைகளையும் விட்டுவிட்டு, "இவ்வளவு பெரிது இருக்கும்," என்று கைகளால் அளவு காட்டினான். உடனே இருவரும் கீழே விழத்தொடங்கினார்கள். தட்டான் கீழும் குடியானவன் மேலுமாக நிலத்தில் விழுந்தார்கள்; கீழே விழுந்த தட்டான் அப்பொழுதே இறந்தொழிந்தான். குடியானவன் மேலே விழுந்தபடியாலும், அவன் கள்ளங் கபடற்ற நெஞ்சமுடையவனாகையாலும் கடவுளுடைய திருவருளால் உயிர்பிழைத்தான். கள்ளங்கபடுள்ளவர்களும் பேராவா உடையவர்களும் விரைவிலே மாண்டொழிவார்கள் என்பதற்குத் தட்டானே சிறந்த எடுத்துக் காட்டாயினான்.

௫௨. காலம் வேண்டும்

அரசனும் அமைச்சனும்

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவன் ஒருநாள் தன் அமைச்சனோடு உப்பரிகையின்மேல் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது தன்னுடைய அமைச்சனைப் பார்த்து, "இவ்வுலகத்தில் கடவுளால் படைக்கப்பட்டுள்ள எல்லா உயிர்த்தொகைகளும் அவற்றின் முயற்சியினால் அல்லவா பிழைக்கின்றன? என்வரையிலும் நானும் விடா முயற்சியினால் அன்றோ பகைவர்களையெல்லாம் வென்று அவர்களிடத்திலே திறைபெற்றுத் தனியரசு புரிந்து வருகிறேன்," என்றான். இதனைக்கேட்ட அமைச்சன் நகைத்து, "முயற்சியே எல்லாக் காரியவெற்றிகளுக்கும் காரணமாயிருந்த போதினும் காலானுகூலப்படிதான் அம் முயற்சி கைகூடும். திருவள்ளுவநாயனார் 'காகம் கோட்டானைப் பகலில் வெல்லும். அதுபோல் அரசர்கள் தங்கள் பகைவரை வெல்வதற்குக் காலம்வேண்டும்,' என்று சொல்லியிருக்கிறார்," என்று சொன்னான். இதனைக்கேட்ட அரசன் "காலானுகூலம் என்பதும் ஒன்று இருக்கிறதா? இஃதென்ன வீண்பேச்சு? என்னுடைய நடைமுறையில் அப்படி ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகையால் நான் அதனை ஒருபோதும் நம்பமாட்டேன்," என்று சொன்னான்.

வறிஞனிடத்தில் ஆராய்ச்சி

இவ்வாறு இரண்டுபேரும் உரையாடிக்கொண்டிருக்கையில் அவ்வூரிலே நார்க்கயிறு திரித்து விற்று மிகச் சிறுமையாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் பிறவி வறிஞன் ஒருவன் அத் தெருவழியே சென்றுகொண்டிருந்தான். அரசன் அவனை அமைச்சனுக்குச் சுட்டிக்காட்டி, "அமைச்சனே! இதோ சென்றுகொண்டிருக்கும் இவ் வெளியவனை இன்னும் ஒரு திங்களுக்குள் என் முயற்சியினால் குபேரனாக்கிவிடுகிறேன் பார்," என்று சொன்னான். அவ்வெளியவனை அழைத்து அவனிடத்தில் ஐந்நூறு

பொன்கொடுத்து, "இதைக்கொண்டு உன் தொழிலைப் பெருக்கி நன்றாக வாழ்ந்திரு" என்று விடைகொடுத்து அனுப்பினான். அப்போது அமைச்சன், "இப் பொருள் ஒன்றினாலேயே அவன் சிறப்படைந்துவிடமாட்டான். அவன் சிறப்படைவதற்குக் காலானுகூலமும் ஒத்திருக்க வேண்டும்," என்றான். "நல்லது; பார்ப்போம்," என்று அரசன் சும்மா இருந்தான்.

எளியவன் பொன்னையிழத்தல்

ஐந்நூறு பொன்னையும் பெற்றுக்கொண்ட எளியவன் மலடி பிள்ளை பெற்றதைப்போல் பெருங்களிப்படைந்தான். அதில் பத்துப் பொன்னை யெடுத்துக்கொண்டு மற்றதைத் தன் தலையில் கட்டியிருந்த கந்தைத்துணியில் முடிந்து தலையிலே சுற்றிக்கொண்டு கடைக்குச் சென்றான். அந்தப் பத்துப் பொன்னுக்கும் நார் வாங்கி வீட்டுக்கு அனுப்பி விட்டு அதில் மிகுந்த சில்லறைக்கு உணவுப்பொருள் வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். வழியில் பருந்து ஒன்று வந்தது. அவன் கையில் இருந்த உணவுப் பொருளைப் பறிப்பதற்கு முயன்றது. முடியாமற்போகவே அவன் தலையில் இருந்த கந்தையைத் தட்டிக்கொண்டு சென்றது. அவ் வெளியவன் 'கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமற்போயிற்றே!' என்று பலவாறு வருந்தினான். வீட்டிற்கு வந்து தன் மனைவியினிடத்திலே நடந்ததைச் சொன்னான். மீண்டும் வழக்கம்போல் சிறுமையாகவே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான்.

மீண்டும் அரசன் உதவி செய்தல்

பிறகு ஒருநாள் அரசனும் அமைச்சனும் அவ் வெளி யவனுடைய நலத்தைக் கண்டறிய அவன் இருப் பிடத்திற்கு வந்தார்கள். உசாவி நடந்ததை உணர்ந்து கொண்டார்கள். அரசன் "ஆயினும் ஆகட்டும்; இன்னும் ஐந்நூறு பொன் கொடுத்துப்பார்ப்போம்," என்று மறுபடி யும் முன் கொடுத்ததுபோலவே கொடுத்து, "இதை யாவது பாதுகாப்பாகப் பயன்படுத்தி முன்னுக்கு வருவா

யாக," என்று சொல்லிவிட்டு அமைச்சனேடு அரண்மனைக்கு வந்துசேர்ந்தான். அப்போதும் அமைச்சன் முன் கூறியபடியே கூறினுன். அவ் வெளியவன் அதனை எவ்விடத்திலும் வைக்காமல் மிகக்கருத்தாக இருந்தான். தன் மனைவியினிடத்திலுஞ் செய்தியைக் கூறவில்லை. தன் வீட்டில் இருந்த தவிட்டுப்பானையில் ஒருநாள் அந்தப் பொன்முடிப்பை வைத்துவிட்டுக் கடைக்குச் சென்ருன். அச்சமயத்தில் ஒருவன் தவிடு வாங்குவதற்கு அவ் வெளியவன் வீட்டுப்பக்கம் வந்தான். "தவிடு இருக்கிறதா?" என்று கேட்டான். எளியவனுடைய மனைவி 'தவிட்டை வெகு நாளாகச் சேர்த்து வைத்திருக்கிருேமே. இதை யாரும் வாங்குவாரில்லையே விற்ருலும் செலவுக்குப் பயன் படுமே' என்று எண்ணினள். அத் தவிட்டுப்பானையை அப்படியே எடுத்துக்கொண்டு வந்து அவனுக்கு முன்னே வைத்தாள். தவிடு அந்தப் பானை நிறைய இருந்தது. வாங்கவந்தவனிடம் தவிட்டைக்கொண்டு போவதற்குக் கூடை முதலிய யாதும் இல்லை. ஆகவே அவன் அந்த எளியவன் மனைவியைப் பார்த்து, "அம்மா! பானைக்கு விலை கொடுத்துவிடுகிறேன். தவிட்டைப் பானையோடு கொடுத்துவிடு," என்று கேட்டான். அவளுடைய கணவன் அரசன் கொடுத்த பொன்முடிப்பைத் தவிட்டைக் கிண்டி அதற்குள்ளே வைத்து மூடியிருந்தானுகையால் பொன் முடிப்பு இருப்பதை அவளால் தெரிந்கொள்ள முடியவில்லை. தவிடு வாங்கவந்தவன் கேட்டபடியே பானையோடு எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டாள். அவன் தவிட்டை எடுத்துக்கொண்டுபோய்க் கடையில் பார்த்தான். தவிடு வெகுநாளாகச் சேர்த்துவைக்கப்பட்டிருந்த காரணத்தினுல் கெட்டுப்போயிருந்தது. ஆகவே அதனை எவரும் வாங்கவில்லை. பானையோடு ஒரு மூலையில் போட்டு வைத்தான்.

வறியவன்வந்து வருந்துதல்

பிறகு கடைக்குப் போயிருந்த வறியவன் விரைவாக வீட்டிற்கு வந்து தவிட்டுப்பானையைத் தேடிப்பார்த்தான்.

அதனைக் காணுமல் மிகுந்த திகிலடைந்தான். தன்னுடைய மனைவியைப் பார்த்துத், "தவிட்டுப்பானை எங்கே?" என்று கேட்டான். அவள், "அதனை விற்றுவிட்டேன்," என்று மறுமொழி கூறினள். இதனைக்கேட்ட அவன், "அடி பாவி! அரசன் கொடுத்த ஐந்நூறு பொன்னையும் அப் பானையில் வைத்திருந்தேனே," என்று கதறினன். அவள், "என்னேடு ஏன் சொல்லாமற் போனீர்கள்?" என்று அவளும் கதறினள். இருவரும் வருந்திப் பிறகு ஒருவாறு தேறினர்கள். வழக்கம்போலவே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஈயத்துண்டு

மறுபடியும் அரசனும் அமைச்சனும் அவ் வெளியவனுடைய வீட்டிற்கு வந்தார்கள். அவ் வெளியவனைக் கண்டு நடந்த செய்தியை உணர்ந்தார்கள். அமைச்சன் கூறியது சரியாக முடிந்ததே என்று அரசன் மிகுந்த நாணமடைந்தான். பிறகு அமைச்சன் அங்கோரிடத்தில் கிடந்த ஈயத்துண்டு ஒன்றை எடுத்து அந்த எளியவனுடைய கையிலே கொடுத்து, "உனக்குக் காலானுகூலம் ஒத்திருந்தால் இதனுலேயே நீ முன்னுக்கு வருவாய்," என்று சொல்லிவிட்டு அரசனை அழைத்துக்கொண்டு திரும்பி அரண்மனைக்குப் போய்விட்டான். அன்று இரவு அவ்வூர்ச் செம்படவன் ஒருவன் மறுநாட்காலையில் வலை வீசுவதற்காக வலையை ஆராய்ந்து பார்க்கையில் அதில் கட்டியிருந்த ஈயக்குண்டு இல்லாமையால் உடனே அதனைச் செய்யவேண்டியவனுனன். உடனே ஈயந்தேட எண்ணினன் "ஈயம் இருக்கிறதா?" என்று வீடுவீடாகக் கேட்டுக்கொண்டு வந்தான். அவனுக்கு ஈயம் எங்கும் அகப்படவில்லை. பிறகு இந்த எளியவன் வீட்டிற்கு வந்து கேட்டான். அப்பொழுது அந்த எளியவன் தன்னிடம் அமைச்சன் கொடுத்துவிட்டுப்போன ஈயத்துண்டைக் கொடுத்தான். அதனைப் பெற்றுக்கொண்ட வலைஞன், அந்த எளியவனைப்பார்த்து, "நீ சமயத்தில் உதவி செய்தபடியால் நான் உனக்குக் கைம்மாருக நாளைக்கு முதலில்

வலைவிசினவுடன் அகப்படும் மீனைத் தருகிறேன்,'' என்று வாக்குறுதி வழங்கிவிட்டுப்போனான்.

மாணிக்கமீன்

பிறகு அந்த ஈயத்துண்டினால் தன் வலைக்குக் கட்ட வேண்டிய குண்டுகளைச் செய்துகட்டினான். மறுநாட் காலையில் வலைவிசினான். விசினவுடன் முதலில் ஒரு பெரிய மீன் அகப்பட்டது. உடனே அம் மீனை அவ் வெளியவனுக்குக் கொடுத்தனுப்பினான். மகிழ்ச்சியோடு அம் மீனைப் பெற்றுக்கொண்ட எளியவன் சமைக்கும் பொருட்டு அதனை அறுத்தான். அதன் வயிற்றிலே ஒரு மாணிக்கம் இருந்தது. அது மாணிக்கம் என்று அவன் அறியாவிடினும் அதனுடைய ஒளியினால் அதனைப் பராமுகஞ் செய்யாமல் பாதுகாப்பாக வைத்திருக்க எண்ணினான். அதனைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும்போது பக்கத்து விட்டில் இருக்கும் இரத்தினவணிகனுடைய மனைவி அவன் விட்டிற்கு நெருப்பு எடுப்பதற்கு வந்தாள். அவ் வெளியவன் கையில் வைத்திருக்கும் மாணிக்கத்தைப் பார்த்துவிட்டுத் தன் கணவனுக்கு அச் செய்தியைத் தெரியப்படுத்தினாள். அவன் உடனே அவ் வெளியவன் விட்டிற்கு வந்தான். சூழ்ச்சியாகக் கவர்ந்துகொண்டு போய்விடவேண்டும் என்று எண்ணங்கொண்டவனாய், "அந்தக் கல்லை எனக்குக்கொடு,'' என்று கேட்டான். அப்போது அவ் வறியவன் சிறிது நிதானித்தான். 'இவன் இரத்தினவணிகனாகையாலும், இஃது உயர்ந்த இரத்தினமாகையாலும் இதனுடைய அருமையை அறிந்துகொண்டு கேட்கிறான்' என்று எண்ணினான். வணிகனைப்பார்த்து, "இதன்விலை இலட்சம் வராகன். அதனைக்கொடுத்தால் இதனைத்தருகிறேன்,'' என்று சொன்னான். அந்த மாணிக்கம் ஐம்பது லட்சம் வராகன் பெறும் என்பது இரத்தின வணிகனுக்குத் தெரியுமாகையால், அவன் கேட்டபடியே இலட்சம் வராகன் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டான். பிறகு அவ் வறியவன் அந்த இலட்சம் வராகனைக் கொண்டு தன் வணிகத்தைப் பெருக்கிக்கொண்டான்.

தன்னுடைய வீட்டையும் சிறந்த மாளிகையாகக் கட்டிக் கொண்டு அதில் சிறப்புடன் வாழ்ந்திருந்தான்.

அரசனும் அமைச்சனும் வருதல்

பிறகு அரசனும் அமைச்சனும் ஒன்றுகூடி அந்த எளிய மனிதனைப் பார்ப்பதற்காக வந்தார்கள். அவனுடைய வீடு அழகான உப்பரிகையாக மாறிவிட்டபடியாலும் அவனுடைய வணிகம் பெருகி அவன் குபேரச் செல்வம் உடையவனாகி விட்டபடியாலும் அடையாளந் தெரியவில்லை. அரசனும் அமைச்சனும் மயங்கினார்கள். அவனுடைய பெயரினால் தெரிந்துகொண்டு வீட்டிற்குப்போய் அவனைக் கண்டார்கள். அவன் இவர்களை வரவேற்றுப் போற்றினான். தன்வீட்டில் விருந்து சாப்பிடுமாறு வேண்டிக்கொண்டான். விருந்து சாப்பிடுவதற்கு அவர்களும் உடன்பட்டார்கள் மிகுசிறப்பாக அவர்களுக்கு விருந்தளித்தான். பிறகு எல்லோரும் தோட்டத்திற்குப் போய்க் களிப்புடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

பழையபொருள் மீளுதல்

வறியவனுடைய பிள்ளைகள் அங்கிருந்த மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த காற்றாடியை எடுத்துத் தருமாறு தொல்லை செய்தார்கள். உடனே அவன் ஓர் ஏவலாளியை மரத்தின்மீது ஏறச்சொன்னான். இதற்குள் அரசனும் அமைச்சனும் ஏறிவந்த வண்டியிற் பூட்டிய எருதுகளுக்குத் தவிடு வேண்டுமென்று வண்டிக்காரன் வந்து கேட்டான். வணிகன் உடனே மற்றோர் ஏவலாளியைத் தவிடு வாங்கிவரும்படி பணங்கொடுத்துக் கடைக்கு அனுப்பினான். மரத்தில் ஏறியவன் ஒரு கந்தைத் துணியில் மாட்டித் தொங்கிக்கொண்டிருந்த காற்றாடியைக் கந்தைத் துணியோடு இழுக்கும்போது அது மிகப்பளுவாக இருந்தபடியால், யாரோ கல்லைத் துணியிற் கட்டிப் போட்டிருக்கிறார்கள்; அக் கந்தையில் இக் காற்றாடி அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அக் கந்தைத்துணியுடன் கொண்டுவந்து வைத்தான். தவிட்டுக்குப் போனவன்

மொத்தமாக வாங்கப்போனபடியால் கெட்டுப்போயிருக்கிறதென்று விலையாகாமலிருந்த அத் தவிட்டைப் பானையோடு உடையவன் கொடுக்கப் பெற்றுக்கொண்டு அந்தப் பானையை அவர்கள்முன் கொண்டுவந்து வைத்தான். அந்த வாணிகன் கந்தைத்துணியும் தவிட்டுப்பானையும் தன்னுடையன என்று எளிதாக உணர்ந்துகொண்டான். அரசனைப்பார்த்து, "அரசே! தாங்கள் முதலில் கொடுத்த ஐந்நூறு பொன்னில் நார் வாங்கின பத்துப்பொன் போக மிகுதி நானூற்றுத்தொண்ணூறு பொன் இந்தக் கந்தைத் துணியிலும், இரண்டாவது கொடுத்த ஐந்நூறு பொன் இந்தத் தவிட்டுப்பானையிலும் இருக்கின்றன. சரியாக எண்ணிப்பார்த்துத் தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள்," என்று சொன்னான். அரசன் அவ்வாறே எண்ணிப்பார்த்தான். பொன் சரியாக இருந்தது. அரசன் 'நாம் கொடுத்த பொன் இவன் முன்னுக்கு வருவதற்குப் பயன்படவில்லை. காலானுகூலத்தினாலேயே இவன் முன்னுக்கு வந்திருக்கிறான். அமைச்சன் கூறியது உண்மையாக முடிந்துவிட்டது' என்று தெளிந்தான். அமைச்சனை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

---

௫௩. பூவண்ணனும் பூதமும்

பூவண்ணன்

ஒரு சிறிய பட்டணத்தில் பூவண்ணன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் வெளியூரில் இருந்து சரக்குகளை வாங்கிக்கொண்டு வந்து அந்தப் பட்டணத்திலே விற்று அதனால்வரும் ஊதியத்தைக் கொண்டு காலந்தள்ளிக்கொண்டிருந்தான். அவன் சரக்குகளைப் பெரும்பாலும் இரவுநேரத்தில் ஆயக்காரனுக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகக் கொண்டுவந்து விற்று மிகுந்த ஊதியந் தேடிக்கொண்டிருந்தான். அவ்வாறு செய்வதால் ஆயக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பொருளும் பூவண்ணனையே சேர்ந்து வந்தது.

பூதந் துரத்துதல்

இவ்வாறு நீண்ட காலமாக நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் நள்ளிரவில் பூவண்ணன் வெளியூரிலிருந்து சரக்குகளை எடுத்துக்கொண்டு கள்ளவழியாகப் பட்டணத்துக்குள் நுழைந்தான். அப்பொழுது அங்கிருந்த ஒருபெரிய ஆலமரத்தினின்றும் ஒரு பூதங் கீழே குதித்துப் பூவண்ணனைத் துரத்திக்கொண்டு வந்தது. பூவண்ணன் மிகுவிரைவாக ஓடினான். எவ்வளவோ விரைவாக ஓடியும் தலைமேல் உள்ள மூட்டையின் சுமையாலும் பருத்துச் சரிந்த தொந்தியின் பாரத்தாலும் மிகக் களைப்படைந்தான். மிக இடுக்கண் வந்த சமயத்தில் எத்தகையோருக்கும் ஒரு சூழ்ச்சி தோன்றுதல் இயற்கை. அவ்வாறே பூவண்ணனுக்கும் ஒரு சூழ்ச்சி தோன்றிற்று.

பூவண்ணன் சூழ்ச்சி

விரைவாக ஓடிய பூவண்ணன் திடீரென்று நின்றான். தன்னைத் துரத்திவரும் பூதத்தைப் பார்த்துக் கையைத் தட்டிக் கலகலவென்று நகைத்தான். "நீயா, துரத்திக்கொண்டு வருகிறாய்? அந்தோ நான் தெரியாமல் வீணே கால்கள் நோவ இவ்வளவு தொலை ஓடிவந்தேனே!" என்று இகழ்ச்சியாகச் சொன்னான். பூவண்ணன் புகன்றதைக் கேட்ட பூதந் திடுக்கிட்டு, 'நமக்கு இரையாகத் தக்க இவன் இவ்வாறு நம்மிடத்தில் அச்சமில்லாமல் நகைத்துப் பேசுகிறானே. இதன் காரணத்தை அறிவோம்' என்று எண்ணிற்று. அவ் வணிகனைப் பார்த்து, "நீ யார் என்று என்னை எண்ணிக்கொண்டு இப்படி ஓடி வந்தாய்?" என்று கேட்டது.

ஆயக்காரன் செய்தி

பூவண்ணன் பூதத்தைப் பார்த்து, "இந்தப் பட்டணத்தில் உள்ள ஆயக்காரன் என்று எண்ணி இவ்வளவு தொலை அஞ்சியோடி வந்தேனேயல்லாமல் நீ துரத்திக்கொண்டு வருகிறாய் என்று முன்னரே தெரிந்திருந்தால், ஓரடிகூட அப்புறம் எடுத்து வைத்திருக்கமாட்டேன்,"

என்று சொன்னன். பூதம் பூவண்ணனைப் பார்த்து, "அந்த ஆயக்காரன் அவ்வளவு கொடியவனு? என்று வியப்புடனும் அச்சத்துடனும் கேட்டது. பூவண்ணன் பூதத்தைப் பார்த்து, "அந்த ஆயக்காரனுடைய கொடுமைக்கும் ஆற்றலுக்கும் அளவேது? அவ்வாறு இல்லாவிட்டால் யாருக்கும் அஞ்சாத நான் இவ்வளவு திகில் கொண்டு இவ்வளவு தொலை ஓடிவருவேனே?" என்று சொன்னன். பூதம் பூவண்ணனைப் பார்த்து, "அப்படியானல் அந்த ஆயக்காரனை எனக்குக் காட்டு. நான் அவனைப் பார்க்கவேண்டும்," என்று கூறியது. பூவண்ணன் பூதத்தைப்பார்த்து, "நீ இவ்வாறு வந்தால் அவனைப் பார்க்கமுடியாது; நான் என்னுடைய இந்தச் சரக்கை வீட்டிலே கொண்டுபோய் வைத்துவிட்டு மறுபடியும் இந்தக் கோணியைக் கொண்டுவருகிறேன். நீ கோணிக்குள் இருந்து கொள்ளலாம். அப்படியில்லாமல் இப்படியே உன்னை அழைத்துக்கொண்டுபோனல் அவன் உடனே உன்னைக் கொன்றுபோடுவான்," என்று சொன்னன். பூதம் அதற்கு இணங்கியது. பூவண்ணன் சரக்கைக் கொண்டுபோய் விட்டிற் சேர்த்துவிட்டு வெறுங்கோணியை எடுத்துக்கொண்டு மீண்டும் வந்து சேர்ந்தான்.

பூதமும் ஆயக்காரனும்

பூவண்ணன் சொல்லியபடியே பூதம் கோணிக்குள் நுழைந்துகொண்டது. பூவண்ணன் நன்ருகக் கோணியைக் கட்டித் தலைமேலே தூக்கிவைத்துக்கொண்டு ஆயக்காரன் இருக்கும் இடம்போய்ச் சேர்ந்தான். ஆயக்காரன் பூவண்ணனைக் கண்டதும், "நீயார்? இந்த மூட்டையில் என்ன இருக்கிறது? இதற்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் போகப்பார்க்கிருயோ?" என்று பல கேள்விகளைக் கேட்டான். பூவண்ணன் ஆயக்காரனுக்கு எத்தகைய மறுமொழியும் கூருமல் தன்பாட்டில் போகத் தொடங்கினன். அவ்வளவில் ஆயக்காரனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. பூவண்ணன் தலையில் இருந்த மூட்டையைக் கிழே தள்ளினன். காலால் பலதரம் உருட்டி

உருட்டி உதைத்தான். கோணியைத் தன்னுடைய கையில் இருந்த எழுத்தாணியால் கண்டபடி குத்திப் பார்த்தான். பூவண்ணனைப் பார்த்து, "உள்ளே என்ன இருக்கிறது?" என்று கேட்டான். பூவண்ணன் "இது புளிமூட்டை; உள்ளே புளியிருக்கிறது," என்று சொன்னான். ஆயக்காரன் அது புளியோ அல்லவோ என்பதை நன்ருக உணர்ந்துகொள்ளுமாறு மேலும் எழுத்தாணியால் மூட்டைமுழுவதையும் நன்ருகக் குத்திப் பார்த்தான். பிறகு, "மூட்டைக்குரிய சுங்கவரிப்பணத்தைக் கொடுத்துவிட்டுப்போ," என்ருன். பூவண்ணன் வரிப் பணத்தைக் கொடுத்துவிட்டு மூட்டையைச் சிறிது தொலை தூக்கிக்கொண்டுபோய் அதனை அவிழ்த்துப் பூதத்தை வெளியே விட்டான்.

பூதத்தின் உதவி

பூதம் பூவண்ணனைப் பார்த்து, "அப்பா! நீ சொன்ன யாவும் உண்மையே. அந்த ஆயக்காரன் மிகப் பொல்லாதவன். அவன் என்னை உதைத்து எழுத்தாணியால் குத்தியபடியால் என் உடலெல்லாம் சல்லடைக் கண்போலாகிவிட்டது. அவனை நினைத்தால் இன்னம் என்னுடைய உள்ளம் நடுங்குகின்றது. கருப்பம் கலங்குகிறது. நீ என்னைத் தூக்கிக்கொண்டு வராமல் இன்னுஞ் சிறிதுநேரம் அவ்விடத்திலேயே வைத்துக்கொண்டு இருந்திருப்பையேயானல் நான் செத்தேபோயிருப்பேன். நீ அந்தச் சமயத்தில் செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். எனக்கு உயிர்ப்பிச்சை தந்த உனக்குஇம் மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் நன்கொடையாக வழங்கினலும் அந்த உதவிக்கு ஒப்பாகமாட்டாது. ஆயினும் நான் உனக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும். இந்த நகரத்து அரசன் மகளை நான்போய்ப் பிடித்துக் கொள்ளுகிறேன். எவ்வளவு வல்லமையுள்ள மந்திரவாதிகள் வந்து ஓட்டினலும் போகமாட்டேன். நீ வந்து, "ஆயக்காரன்," என்று கூறிய அளவில் விட்டுவிட்டுப் போய் விடுகிறேன். நீ அரசனிடம் வேண்டியபொருள் பெற்று

நலமாக வாழ்ந்திரு," என்று கூறிவிட்டுப்போய் அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது.

பூவண்ணன் புகழ்பெறுதல்

அரசனுடைய மகளைப் பேய்பிடித்துக்கொண்டது என்று நாடெங்குஞ் செய்தி பரவிவிட்டது. மந்திரத்தில் வல்லவர்கள் பலர் அரண்மனைக்குச்சென்று பேயோட்டுவதற்கு முயன்றார்கள். எவ்வளவோ முயற்சி செய்தும் பேய் போகவில்லை. அரசன் மிகுந்த துன்பம் அடைந்தான். "என்னுடைய மகளைப் பிடித்திருக்கும் பேயை ஒட்டுகிறவர்களுக்குப் பதினாயிரம் பொன் தருகிறேன் என்று எங்கும் பறையறைந்து தெரியப்படுத்தினான். பூவண்ணன் அரசனிடஞ்சென்று தான் பேயோட்டுவதாகக் கூறினான். அரசன் அவ்வாறே செய்யுமாறு கட்டளையிட்டான். பூவண்ணன் அரசன் மகள் இருக்கும் இடத்திற்குப்போய், "ஆயக்காரன்," என்று சொன்னான். அவ்வளவில் பூதம் அரசனுடைய மகளை விட்டுவிட்டு நீங்கிப் போய்விட்டது. அரசன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்தான். தான் முன்னே சொல்லியிருந்தபடி பதினாயிரம் பொன்னையல்லாமல் மேலும் வேண்டிய நன்கொடைகளையும் கொடுத்து அனுப்பினான். பூவண்ணன் அந்தப் பொருளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

மேலும் பூதம்

பிறகு அந்தப் பூதம் வேறொரு அரசன் மகளைப் போய்ப் பிடித்துக்கொண்டது. பூவண்ணன் பேயோட்டுவதில் வல்லவன் என்று எங்கும் புகழ் பரவிவிட்டபடியால் அந்த அரசனும் பூவண்ணனை அழைத்துப் பேயை ஓட்ட வேண்டுமென்று வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். பூவண்ணன் அங்குஞ்சென்று "ஆயக்காரன்," என்று சொன்னான். பூதம் மிகுந்த சினங்கொண்டு, "நீ இங்கு ஏன் வந்தாய்? நமக்குள்ள உடன்படிக்கை முன்னரே முடிந்து போய்விட்டதே," என்று சொல்லி மிகுந்த சினங்கொண்டது. பூவண்ணன் நல்ல அறிவுள்ளவனாகையால்,

"ஆயக்காரன் உன்னைத் தேடிக்கொண்டு வருகிறான். அச் செய்தியை உன்னிடம் கூறுதற்காகவே இங்கு வந்தேன்," என்று சொன்னான். அதனைப் பூதங்கேட்டு, "நல்ல காரியஞ்செய்தாய். இனிமேல் நான் இருக்கும் இடத்திற்கு வராதே; வருவாயானால் உன்னைக் கொன்றுபோடுவேன்," என்று சொல்லிவிட்டு நீங்கி வேறொரு நாட்டிற்குப்போய் அந்நாட்டு அரசன்மகளைப் பிடித்துக்கொண்டது. பூவண்ணன் இந்த அரசனிடத்திலும் பெரும் பொருள் பெற்றுக் கொண்டு போய்ச் சிறப்பாக வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்தான்.

மேலும் பேயோட்டச் செல்லுதல்

எல்லா நாடுகளினும் பூவண்ணன் பூதம் ஓட்டுவதில் வல்லவன் என்று பெயர் பரவிவிட்டது. மூன்றாவது அரசனும் பூவண்ணனை அழைத்துப் பலவாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஓர் அரசன் தன்னைப் பலவாறு கெஞ்சும்போது பூவண்ணனால் மறுத்துரைக்க முடியவில்லை. அந்த அரசன் மகளிடமும்போய், "ஆயக்காரன்," என்று சொன்னான். இவனைக் கண்டதும் பூதம் மிகுந்த சினங்கொண்டது. இவனைக் கொல்வதற்காக வந்தது. பூவண்ணனுக்குத் திடீர் என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. "ஆயக்காரன் இறந்துபோனான்; அந்தச்செய்தியை உனக்குத்தெரிவிப்பதற்காகவே வந்தேன்," என்று சொன்னான். இதனைக் கேட்டுப் பூதஞ் சினந் தணிந்தது. என்னுடைய பீடை ஒழிந்தது. நீ இவ்வரசனிடத்தில் வேண்டிய பொருள் பெற்றுக்கொண்டு போய் வாழ்ந்திரு," என்று கூறியது. பூவண்ணன் பூதத்தைப் பார்த்து, "நீ எனக்கு ஒரு வரந்தரவேண்டும். நீ இனிமேல் இந்த நாட்டில் யாரையும் பிடிக்காதே. நூறு யோசனைக்கு அப்புறம் உள்ள வேறு நாடுகட்குப்போய் வேண்டியவர்களைப்பிடி. இந்த நாட்டில் கண்டவர்களைப் பிடிப்பதனால் எனக்குத் தொல்லையுண்டாகிறது," என்று சொன்னான். பூதம் அவ்வாறே செய்வதாக உறுதிமொழி கூறிவிட்டுப் போய்விட்டது.

முடிவுரை

பிறகு பூவண்ணன் அந்த அரசனிடமும் திரண்ட பொருள் பெற்றுக்கொண்டு தன்னூருக்குப் போய்க் குபேரனைப்போல் வாழ்ந்திருந்தான். பூவண்ணன் தன்னுடைய அறிவுநுட்பத்தால் பூதத்திடம் இருந்து உயிர் தப்பிய தன்றிப் பெரும் பொருளையும அடைந்து நலம்பெற்றான். தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார், "அறிவுடையார் எல்லாம் உடையார்," என்று கூறிய பொன்மொழியில் எவ்வளவு சீரிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன என்பதை எண்ணிப்பாருங்கள்.